Join / Telegram : @Tamil_Books_Library



விகடன்
பிரசுரம்

# வேடிக்கை பார்ப்பவன்

நா. முத்துக்குமார்

Join / Telegram : @Tamil_Books_Library

# வேடிக்கை பார்ப்பவன்

நா.முத்துக்குமார்

விகடன்
பிரசுரம்

Join / Telegram : @Tamil_Books_Library

Title :

VEDIKKAI PAARPAVAN

© N. MUTHUKUMAR

ISBN: 978-81-8476-611-0

விகடன் பிரசுரம்: **845**

நூல் தலைப்பு:

**வேடிக்கை பார்ப்பவன்**

நூல் ஆசிரியர்:

**© நா.முத்துக்குமார்**

ஓவியங்கள்:

**செந்தில்**

அட்டை வண்ணப்படம்:

**கே.ராஜசேகரன்**

அட்டை வடிவமைப்பு:

**கே.பாண்டியன்**

முதற்பதிப்பு : **செப்டம்பர், 2014**

பதிப்பாளர்:

**பா.சீனிவாசன்**

முதன்மை உதவி ஆசிரியர்:

**அ.அன்பழகன்**

வடிவமைப்பு:

**ப.ஷங்கர்**

Join / Telegram : @Tamil_Books_Library

இந்தப் புத்தகத்தின் எந்த ஒரு பகுதியையும் பதிப்பாளரின் எழுத்துபூர்வமான முன் அனுமதி பெறாமல் மறுபிரசுரம் செய்வதோ, அச்சு மற்றும் மின்னணு ஊடகங்கங் களில் மறுபதிப்பு செய்வதோ காப்புரிமைச் சட்டப்படி தடை செய்யப்பட்டதாகும். புத்தக விமரிசனத்துக்கு மட்டும் இந்தப் புத்தகத்திலிருந்து மேற்கோள் காட்ட அனுமதிக்கப்படுகிறது.

**விகடன் பிரசுரம்**

757, அண்ணா சாலை, சென்னை-600 002.

எடிட்டோரியல் பிரிவு போன்: 044-28524074 /84

விற்பனை பிரிவு போன்: 044-42634283 / 84

e-mail: books@vikatan.com

Join / Telegram : @Tamil_Books_Library

# *பதிப்புரை*

***த****ன் வரலாற்று நூல் வரிசையில் முக்கியமான இடத்தைப் பிடிக்கப்போகும் நூல் இது!*

*வேடிக்கை பார்ப்பது என்பது பொழுதுபோக்கு - அது ஒரு பாம்பாட்டியையோ அல்லது கழைக்கூத்தாடியையோ பார்க்கும் வரை. ஆனால், நா.முத்துக்குமார் வித்தியாசமாக வேடிக்கை பார்த்திருக்கிறார். இந்த சமூகத்தில் தன்னைச் சுற்றி நடந்தவற்றை புதிய கோணத்தில் கூர்ந்து பார்த்து அதன் தாக்கத்தை, வலியை, சுகத்தை, இன்பத்தை இந்த நூலில் பகிர்ந்துகொண்டு இருக்கிறார்.*

*விகடனில் வெளிவந்து விற்பனையில் சாதனை படைக்கும் ‘அணிலாடும் முன்றில்’ மூலமாக நமக்கு சிறந்த உரைநடையாளராக அறிமுகமான முத்துக்குமார் ‘வேடிக்கை பார்ப்பவன்’ மொழிநடையில் அடுத்தக்கட்ட பாய்ச்சலை நிகழ்த்தியிருக்கிறார்.*

*வடிவத்திலும், உத்தியிலும், மொழி நடையிலும் என சுயசரிதை வரலாற்றில் இது ஒரு சாதனை.*

*இந்தக் கட்டுரைகளில் தான் சிறுவனாக இருந்தபோது தன்னை பாதித்த நிகழ்ச்சிகள், திரைப்படத் துறையில் முன்னுக்கு வரப் பாடுபட்ட தருணங்கள், பச்சையப்பன் கல்லூரியில் தமிழ் படித்த அனுபவங்கள், முதல் கவிதை எழுதியது, பின்னர் கவி மேடைகளுக்குத் தலைமை தாங்கியது, பத்திரிகைத் துறையில் பணி ஆற்றியது, உதவி இயக்குனராகப் பணி ஆற்றியது, பணி ஆற்றிக் கொண்டே சில காலம் படித்தது, பிரபலமான நண்பர்களைப் பற்றி எனப் பரவலாக தன் அனுபவங்களை வாசகர்கள் கண்முன் படம்பிடித்துக் காட்டுகிறார்.*

*ஆனந்த விகடனில் ‘வேடிக்கை பார்ப்பவன்’ என்ற தலைப்பில் தொடராக வந்து வாசகர்களின் வரவேற்பைப் பெற்ற கட்டுரைகள் இப்போது நூல் வடிவில் உங்கள் கைகளில்.*

Join / Telegram : @Tamil_Books_Library

## வாசகர் உரை

விகடன் வாசகர்களுக்கு வணக்கம். என் பெயர் கருணாகர பாண்டியன். மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் மானுடவியல் துறை முன்னாள் பேராசிரியர்.

சிறுகதை மன்னன் புதுமைப்பித்தனின் நண்பர் எழுத்தாளர் தொ.மு.சி.ரகுநாதனின் மருமகன். அனைத்தையும் தாண்டி எட்டயபுரத்தில் பாரதியின் பக்கத்து வீட்டுக்காரன்.

ஆம் நண்பர்களே, இப்படிச் சொன்ன பிறகுதான் 'ஆனந்த விகடன்' அலுவலகத்தில் நா.முத்துக்குமாரின் தொலைபேசி எண்ணைக் கொடுத்தார்கள்.

விகடனில் வெளிவந்த 'அணிலாடும் முன்றிலி'ன் 'அண்ணி' பற்றிய கட்டுரையைப் படித்துவிட்டு கண்ணீருடன் அவருடன் பேசினேன். என்னை வளர்த்ததும் என் அண்ணிதான். அந்தக் கட்டுரை மதுரையிலிருந்து என்னை எட்டயபுரம் வரை பயணிக்க வைத்து என் அண்ணியின் மடியில் படுத்து அழ வைத்தது. அந்த நெகிழ்வுதான் கவிஞருடன் என்னை பேச வைத்தது.

'அணிலாடும் முன்றிலு'க்குப் பிறகு அதே விகடனில் 'வேடிக்கை பார்ப்பவன்' வாரா வாரம் புதன் மாலை விகடன் வரும் வரை மதுரையின் புத்தகக் கடையில் தவமிருந்து கடை வாசலிலேயே வாசித்துவிட்டு முதல் விமர்சனம் கவிஞருக்கு சொல்வதில் எனக்கு அலாதி ஆனந்தம்.

முதல் முறையாக ஒரு எழுத்தாளரின் நூலுக்கு வாசகரின் அணிந்துரை. ஆஹா அது ஒரு தனி ஆனந்தம். தன் சுயசரிதையை சொல்லவந்த கவிஞர் என் சுயசரிதைக்குள் என்னை இழுத்துச் சென்றுவிட்டார். இன்னும் சொல்லப்போனால் அது நம் சுயசரிதையும்கூட.

நிகழ்காலமும், கடந்த காலமும், எதிர்காலமும் கைகோர்க்கும் ஒரு புள்ளியில் பயணிக்க விரும்பினால் இந்தப் புத்தகத்தை வாசிக்கலாம்.

பல்லாயிரக்கணக்கான விகடன் வாசகர்கள் சார்பாக கவிஞருக்கு நன்றி.

- பேராசிரியர் கருணாகர பாண்டியன்

Join / Telegram : @Tamil_Books_Library

# என்னுரை

**எ**ல்லாம் எழுதிய பிறகும் ஏதும் எழுதாததைப் போல் தோன்றுகிறது. இதுதான் வாழக்கைபோலும்.

காற்றில் படபடக்கும் காகிதத்தின் வரிகளைப்போல்; மடபள்ளியில் இருந்து அரை நிமிடம் பெருமாளுக்கு திறந்து காட்டும் பிரசாதத்தைப்போல்; கடந்து செல்லும் ரயிலுக்கு கையாட்டும் சிறுவனைப்போல் இந்தக் கட்டுரைகளில் என் வாழ்க்கையின் சிறு பகுதியை வரைந்திருக்கிறேன்.

இந்தத் தொகுப்புக்கு வண்ணம் சேர்த்த ஓவியர் செந்தில்; எழுத்துச் சோம்பேறியான என்னை எழுதவைத்த அண்ணன் ரா.கண்ணன்; தன் வேலைகளுக்கிடையே எனக்காக நேரம் ஒதுக்கி நான் சொல்லச் சொல்ல ஆர்வமுடன் இதை ஆவணப்படுத்திய அண்ணன் ‘ஆச்சார்யா’ இயக்குநர் ரவி; என்னை நானாக்கிக்கொண்டிருக்கும் தந்தையாகி வந்த தனயன் மகன் ஆதவன் நாகராஜன் அனைவருக்கும் என் நன்றி.

இந்தத் தொடர் வந்த காலத்தில் ஒவ்வொரு வாரமும் தங்கள் விமர்சனம் மூலம் என்னை உயிர்ப்பித்துக்கொண்டிருந்த விகடன் வாசகர்களுக்கு தனிப்பட்ட அன்பு.

என்றென்றும் அன்புடன்

நா.முத்துக்குமார்

Join / Telegram : @Tamil_Books_Library

*இந்த நூல்...*

*என் எல்லா கிறுக்குத்தனங்களோடும்*

*என்னைப் பொறுத்துக்கொண்டிருக்கும்*

*மனைவி ஜீவலட்சுமிக்கு...*

Join / Telegram : @Tamil_Books_Library

## உள்ளே...

1. ஒப்புதல் வாக்குமூலம்

2. வெந்து தணிந்தது காடு

3. TN 00 E – 1111

4. நட்சத்திரங்களின் தேசம்

5. பசி என்னும் பெருந்தீ

6. வாணவேடிக்கை

7. வயதென்னும் ரயில் வண்டி

8. பள்ளித் தலமனைத்தும்...

9. எமக்குத் தொழில் கவிதை

10. புன்னகைக்க மறந்த கதை

11. இவன், இவனான கதை!

12. தீராத விளையாட்டு

13. வீடென்பது யாதெனில்...

14. நிலாக் காலம்

15. சாலைகளின் பாடல்

Join / Telegram : @Tamil_Books_Library

16. கனவின் கைப்பிடியில்

17. குறுக்கு வெட்டுத் தோற்றம்

18. முன்பனிக்காலம்

19. பின்பனிக்காலம்

20. இவன் நானாகும் அத்தியாயம்

21. இளவேனிற் காலம்

22. பச்சையப்பனில் இருந்து ஒரு தமிழ் வணக்கம்

23. பௌர்ணமி காலம்

24. பசித்த புலியின் வேகம்

25. துப்பறிந்த காலம்

26. குட்டிப் புத்தரின் கேள்வி

27. இவன் அவனாகும் அத்தியாயம்

28. பட்டாம்பூச்சி விற்ற கதை

29. அவையிடத்து முந்தியிருப்பச் செயல்

30. ஆனந்த யாழின் அடிநாதம்

Join / Telegram : @Tamil_Books_Library




## ஒப்புதல் வாங்குமூலம்.

இவன் தோட்டத்தில்
புல்லும் இருக்கிறது
பனியும் இருக்கிறது
ஒன்று சேர்த்து
பனித்துளி செய்யத் தெரியவில்லை

இவன் வானத்தில்
வெயிலும் இருக்கிறது
மழையும் இருக்கிறது
ஒன்று குழைத்து
வானவில் வரையத் தெரியவில்லை

இவன் கடலில்
அலையும் இருக்கிறது
கரையும் இருக்கிறது
ஒன்று கலந்து
கடந்துபோகத் தெரியவில்லை

இவன் எதிரே
இன்பமும் இருக்கிறது
துன்பமும் இருக்கிறது
இரண்டையும் இணைத்து
வாழ்ந்து பார்க்கத் தெரியவில்லை

Join / Telegram : @Tamil_Books_Library

2

# வெந்து தணிந்தது காடு

*முன்னை இட்ட தீ முப்புரத்திலே*
*பின்னை இட்ட தீ தென்னிலங்கையில்*
*அன்னை இட்ட தீ அடிவயிற்றிலே*
*யானும் இட்ட தீ மூள்க மூள்கவே !*

*-பட்டினத்தார்*

ஒரு மிகப் பெரிய பொருட்காட்சிசாலையாக இந்தப் பிரபஞ்சத்தையும், அதை வேடிக்கை பார்த்தபடி வழி தப்பிய சிறுவனாக தன்னையும், இவன் அடிக்கடி கற்பனை செய்துகொள்வான்.

இவன் எதை வேடிக்கை பார்க்க வந்திருக்கிறான்? சின்னஞ்சிறிய இந்தக் கண்களைக்கொண்டு எதைத்தான் முழுமையாகப் பார்த்துவிட முடியும்! பார்வை என்பது கண் சார்ந்தது மட்டுமா என்ன?

Join / Telegram : @Tamil_Books_Library



ஜன்னல் கம்பிகள் வழியாக வேடிக்கை பார்க்கும் சிறுவனுக்கு வாசலில் கடந்துபோகும் கோயில் யானையின் பிரமாண்டம் ஒரே பார்வையில் வசப்படுமா? மலையின் அழகை அளந்துவிடத் துடிக்கும் சிட்டுக்குருவியின் சிறகுகள்தானோ இவன்?

உறக்கம் தொலைந்த அகாலங்களில், இவன் மொட்டைமாடிக்கு வந்து நட்சத்திரங்களை வேடிக்கை பார்த்துக்கொண்டிருப்பான். இவனுக்கு அதன் மொழி தெரியாது. இருந்தாலும் பேசிக் கொண்டிருப்பார்கள்.

தோட்டத்தில் முளைத்த புல்லை, புல்லின் நுனியில் தேங்கும் பனித்துளியை, பனித்துளியில் பிரதிபலிக்கும் பரந்த மேகங்களை வேடிக்கை பார்த்தபடி வாழ்ந்து கொண்டிருப்பவன் இவன். இயற்கையை மட்டுமா? இவனையே இவன் தள்ளி நின்றுதான் வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கிறான்.

இவனுக்கு கதைகள் என்றால் ரொம்பப் பிடிக்கும். கருவில் இருந்தபோதே கதை கேட்டு வளர்ந்தவன். சந்தனமாக மேடிட்டிருந்த தன் வயிற்றைத் தடவியபடி இவன் அம்மா இவனுக்கு கதைகள் சொல்வாள். கர்ப்பக்கிரகத்தில் ஒருக்களித்துச் சுருண்டபடி மொழிகள் ஏதுமற்ற அந்த அமானுஷ்ய இருட்டின் கதகதப்பில் தொப்புள்கொடி வழியாக அந்தக் கதைகள் இவனுக்குள் விரியும்.

Join / Telegram : @Tamil_Books_Library



ஒருநாள் இவன் அம்மா இவனுக்கொரு கதை சொன்னாள். உலகம் பிறந்த கதை. பிரபஞ்சம் பெரிதாக வெடித்து, ஒரு நெருப்புப் பந்து உலகமாக விழுந்ததாம். விழுந்தது, எரிந்ததாம். பின்பு, அணைந்ததாம். அப்புறம் தான் உயிர்கள் பிறந்ததாம். இவன் தொப்புள்கொடியை இறுகப் பற்றிக்கொண்டான். இந்த உலகமெனும் நெருப்புப் பந்துக்குள்ளா நான் பிறக்கப் போகிறேன்? பிரசவத்துக்கு மருத்துவர்கள் சொன்ன தேதி தள்ளிப்போன பின்னும் இவன் வெளியே வராமல் உள்ளிருப்புப் போராட்டம் தொடங்கினான்.

மீண்டும் அம்மா ஒரு கதை சொன்னாள். சொல்லும் போதே அவளுக்கு மூச்சுத் திணறிக்கொண்டிருந்தது. ''என்ன சத்தம் இது?'' என்று இவன் மொழியில் கேட்டான். ''மூச்சுத் திணறுகிறது. நாம் உயிர் வாழ காற்று அவசியம்'' என்றாள். “காற்று என்றால் என்ன?'' என்றான். ''இந்த உலகத்தில் நெருப்பைப் போலவே காற்றும் ஒன்று. அதுதான் நம் உயிர் வாழ்வின் சுவாசம்'' என்று அம்மா சொல்ல, இவன் உள்ளிருப்புப் போராட்டத்தை நிறுத்தி தன் தாய்க்கு சுவாசம் அளித்தான். அப்போதும் எல்லாக் குழந்தைகளையும் போலவே தலை வழியாக வெளியே வராமல், தன் இரு கால்களை நீட்டி இந்தப் பூமியை எட்டி உதைத்தான்.

Join / Telegram : @Tamil_Books_Library

இப்படித்தான் நண்பர்களே... நெருப்பும் காற்றும் நிலமும் இவனுக்கு அறிமுகமானது. தண்ணீர் இவனுக்கு அறிமுகமானது தனிக் கதை.

இவன் அம்மா, இவன் பெண்ணாகப் பிறப்பான் என்று நினைத்தாள். பெண்ணாகப் பிறந்திருந்தால் இவன் இன்னமும் சந்தோஷப்பட்டிருப்பான். ஆணாகப் பிறந்து தொலைத்தான். பெண் பிள்ளைகள் இல்லாத வீட்டில், சுருட்டை முடியுடன் பிறந்த ஆண் குழந்தைகளுக்குக் குடுமி போட்டு, ரிப்பன் கட்டி, பூக்கள் சூட்டி அலங்கரித்து அழகு பார்ப்பதில்லையா! அப்படித்தான் இவன் அம்மாவும் இவனை அலங்கரித்தாள். தன் தலைக்கு மேல் கட்டப்பட்டிருந்த அந்த சிவப்பு ரிப்பனை கண்ணாடியில் பார்த்து ரசித்துவிட்டு, இவன் தன் நகர்வலத்தைத் தொடங்கினான்.

நகர்வலம் என்றால் நீங்கள் நினைக்கும் நகரத்தைச் சுற்றிவரும் வலம் அல்ல: இது நகரும் வலம். ஏன் என்றால், இவன் வசித்தது ஒரு கிராமம். அந்தக் கிராமத்தில் குட்டைகள், ஏரிகள், நதிகள் என்று தண்ணீர் தன் வெவ்வேறு வடிவங்களில் வாழ்ந்துகொண்டிருந்தது. அருகில் இருந்த குட்டையின் நீருடன் அறிமுகமாக விரும்பி, இவன் அதனுடன் உரையாடத் தொடங்கினான்.

“இன்னும் ஆழமாகப் பேசலாமே!” என்றது அது.

இவன் உள்ளே இறங்கினான். பிள்ளையைக் காணோமென இவன் அம்மா தேட, உறவுகள் தேட, ஊரும் தேடியது. ஏதோ ஓர் உள்ளுணர்வில், வீட்டுக்கு அருகிலிருந்த குட்டையைத் தேடி வந்த இவன் அம்மா, தண்ணீரில் சிவப்பு ரிப்பன் மிதப்பதைப் பார்த்து உள்ளே குதித்து, இவனை வெளியே தூக்கினாள். வயிற்றை அமுக்கி, குடித்த நீரையெல்லாம் வெளியே துப்பவைத்தபோது, இவன் ஆகாயத்தையே பார்த்துக்கொண்டிருந்தான். வானத்தில் அசைந்தபடியே ஒரு மேகம் சொன்னது, ‘'என் செல்லமே! பஞ்சபூதங்கள் உனக்காகப் படைக்கப்பட்டிருக்கின்றன. நீ செய்ய வேண்டிய வேலைகள் நிறைய இருக்கின்றன. அவ்வளவு சீக்கிரமாக சாக மாட்டாய்."

இவனுக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது. அன்று காலை, அம்மா இவனை எழுப்பினாள். பல் தேய்த்துவிட்டாள். குளிப்பாட்டினாள். உணவூட்டினாள். இவனைப் பள்ளிக்கு அழைத்துச்செல்லும் மாட்டுவண்டியில் ஏற்றி அமரவைத்துக் கையாட்டினாள். மதிய உணவு இடைவேளையில், இவனுக்குப் பிடிக்காத கீரை சாதத்தைத் திறந்து பார்த்து பசியோடு அந்த டிபன் பாக்ஸை இவன் மூடிய நேரத்தில் செத்தும்போனாள்.

“உங்க அம்மா செத்துட்டாங்க... உன்னைக் கூட்டிட்டுப் போக ஆள்

Join / Telegram : @Tamil_Books_Library

*வந்திருக்கு" - ஸ்கூல் ஆயா வந்து சொன்னபோது, இவனுக்கு சந்தோஷமாக இருந்தது. மேக்ஸ் ஹோம்வொர்க்கை இவன் செய்யவில்லை. அடுத்த பீரியடின் அடியில் இருந்து இவன் தப்பித்துக்கொண்டதாக நினைத்தான்.*

*இவனைவிட்டு தள்ளி நின்று, இவன் வாழ்க்கை இவனை வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பதை இவன் அறியவில்லை.*

*வீட்டை நெருங்குகையில் இவன் பால்ய சிநேகிதன் இவனிடம் ஒடிவந்து, "உங்க வீட்டுல பாம்பு பூந்துருச்சு. அதான் கூட்டமா இருக்கு!" என்று சொல்ல, "இல்லடா, அவங்கம்மா செத்துட்டாங்க. அதான் எல்லாரும் வந்திருக்காங்க!" என்று இன்னொரு நண்பன் சொல்ல, பாம்பையும் மரணத்தையும் நினைத்து இவன் குழம்பி நின்றான்.*

*ஏனென்று புரியாமல் எல்லோருடனும் அழுது முடித்து, சாவுக்கு வந்திருந்த சொந்தக்காரக் குழந்தைகளுடன் இவனும் விளையாடிக்கொண்டிருந்தான். ஆற்றங்கரை மணலைச் சேர்த்து அந்தப் பிஞ்சுக் கைவிரல்கள் வடித்த கோபுரம் அழகாக இருந்தது. ஒரே ஒரு குறை, அதை வண்ணங்களால் அலங்கரிக்க வேண்டும். சட்டென்று இவனுக்கொரு யோசனை தோன்றியது. இவன் தந்தை ஓர் ஆசிரியர். வீட்டில் ஏழைக் குழந்தைகளுக்கு இலவசமாக வகுப்பு எடுப்பார். அதனால் இவன் வீட்டில் கலர்கலராக சாக்பீஸ்கள் இருக்கும். வேகமாக வீட்டுக்கு ஓடினான். பலகையில் இறந்துகிடந்த அம்மாவையும்' அழுதுகொண்டிருந்த உறவினர்களையும் தாண்டி, அம்மா சீதனமாகக்கொண்டு வந்த தேக்குமரப் பீரோவைத் திறந்து, வண்ண வண்ண சாக்பீஸ்களை கால்சட்டையில் நிரப்பிக்கொண்டு ஆற்றங்கரையை அடைந்தான்.*

Join / Telegram : @Tamil_Books_Library



இப்போது கோபுரம் முழுமை பெற்றுவிட்டது. அதன் அழகை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கையில், யாரோ ஓர் உறவினர் இவனைத் தேடிவந்து அழைக்க, இவன் தலை மொட்டையடிக்கப்பட்டு எங்கேயோ கூட்டிச் செல்லப்பட்டான்.

அது சுடுகாடு என்றும்; அன்று இவன் தீ வைத்தது இவன் தாயின் தலை மீது என்றும் இவன் அறிந்தானில்லை. அதன் பிறகு பல நாட்கள் தன் பால்ய வயது தோழர்களிடம் இவன் பெருமையாகச் சொல்லிக்கொள்வான். “எங்க அம்மா தலைல நான்தான் நெருப்பு வெச்சன். எப்படி எரிஞ்சுச்சி தெரியுமா!”

இப்போது யோசித்துப் பார்க்கையில், இவனுக்கு ஒன்று புரிகிறது. ‘நெருப்பு’ என்றால், நெருப்பு மட்டுமல்ல; நெருப்புக்குள்ளும் நீர் இருக்கிறது. அந்த நீர்... கண்ணீர்!

Join / Telegram : @Tamil_Books_Library




# TN00E – 1111

*குளத்தில் சிறுநீர் கழிக்கும் சிறுவன்*

*பூமியில் இருந்தபடி ஆகாயத்தை அசைக்கிறான்!*

*- ஜென் கவிதை*

***ச****னி, ஞாயிறு தவிர்த்து, தினமும் காலையில் இவனும் இவன் மகனும் பள்ளிக்குக் கிளம்புவார்கள். மகன் படிக்கும் பள்ளியில் அவனை இறக்கி விட்டுவிட்டு, இவன் தன் பள்ளிக்குப் புறப்பட்டுப் போவான். இன்றுவரை மகனது நம்பிக்கையில் இவனும் ஒரு மாணவன்தான். தேர்ட் ஸ்டாண்டர்ட் 'எ' செக்ஷன் படிக்கிறான். அதுவும் பல வருடங்கள் அதே தேர்ட் ஸ்டாண்டர்டில் ஃபெயிலாகி ஃபெயிலாகி 'கே' செக்ஷனில் இருந்து இப்போதுதான் 'எ' செக்ஷன் வந்திருக்கிறான்.*

*பள்ளிக்குச் செல்லும் வழியில் இவர்களது உரையாடல் இப்படித் தொடங்கும்.*

*"அப்பா... ஹோம்வொர்க் பணணிட்டீங்களா?"*

*"அய்யோ மறந்திட்டேன் ராஜா!"*

*"போச்சு. நல்லா மாட்டிக்கிட்டீங்க... உங்க வேணு மிஸ் உங்களை பெண்டு எடுக்கப்போறாங்க!"*

*"அதுசரி... நீ ஹோம் வொர்க் பண்ணிட்டியா?"*

*"நான் நேத்தே பண்ணிட்டேம்பா. எங்க பானு மிஸ் வெரி குட் சொல்லுவாங்க."*

*"என்னடா பண்ணலாம்? அப்பாவுக்கு பயம்மா இருக்குடா!"*

*"போற வழியில் ஏதாவது பார்க்ல உட்கார்ந்து எழுதிட்டுப்*

Join / Telegram : @Tamil_Books_Library

போங்கப்பா. இல்லன்னா ஸ்டாண்ட் அப் ஆன் தி பெஞ்ச்ல ஏத்தி, ஸ்கேலால புட்டாச்சுல அடிப்பாங்க!"

இவன், மகன் பார்க்கும்படி தன் புட்டாச்சைத் தடவிக் கொள்வான்.

"நீ சொல்றதும் கரெக்ட்தான்டா!"

"பார்த்துப்பா.. இந்த வருஷமும் ஃபெயிலாயிடப்போறீங்க!"

இதற்குள் மகன் படிக்கும் பள்ளி வந்து, இவனுக்காக ஓர் ஆறுதல் பார்வையை வீசிவிட்டு டாட்டா காட்டியவாறு மகன் உள்ளே செல்வான்.

இப்போது இவன் யோசித்துப்பார்க்கிறான். இந்த பானு மிஸ்ஸும், வேணு மிஸ்ஸும் எப்படி இவன் வாழ்க்கைக்குள் நுழைந்தார்கள்?

இரண்டு வருடங்களுக்கு முன்பு கோடை விடுமுறைக்காக குடும்பத்துடன் பெங்களூரு சென்றிருந்தான். நண்பர் ஒருவரின் வீட்டில் தங்கியிருந்தார்கள். பார்க், தீம் பார்க், வாட்டர் தீம் பார்க் என்று ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விளையாட்டு. கம்பனின் வார்த்தைகளில் சொல்வதென்றால், 'அலகிலா விளையாட்டு'. இவனது மகனுடன் நண்பரின் குழந்தைகளும் சேர்ந்துவிட, வானர சேனை ஊருக்குள் வந்ததுபோல் இருந்தது. மனிதன் குரங்கிலிருந்துதான் பிறந்தான் என்ற டார்வின் தியரியின் வெளிச்சத்தை அப்போதுதான் முழுமையாகக் கண்டுகொண்டான். மூத்த குரங்குகளுக்கு வேடிக்கை பார்ப்பதைத் தவிர வேறு என்ன வழி?

விடுமுறை முடிந்து சென்னை வந்து. வீட்டைத் திறக்க சாவியைத் திணிக்கையில். இவன் மகன் இவனை மிரட்சியுடன் பார்த்தான்.

"வேணாம்பா... நாம திரும்பவும் பெங்களூருக்கே போயிடலாமே!"

"ஏன்டா?"

"நாளைக்கு ஸ்கூல் திறக்குறாங்க. இந்த வருஷம் பானு மிஸ் கிளாஸ் டீச்சரா வரப் போறாங்களாம். போன வருஷம் எனக்கு ஈ.வி.எஸ். எடுத்தவங்க. ரொம்ப ஸ்ட்ரிக்ட்டுப்பா. நான் ஸ்கூலுக்குப் போகவே மாட்டேன்" என்றபடி இவன் கைகளை இறுகப் பிடித்துக்கொண்டான். அந்தக் கைப்பிடியில் இருந்த அச்சமும் பதட்டமும் இவனை பல வருடங்களுக்கு முன்னே கூட்டிச்சென்று, இவன் தான் படித்த பள்ளியின் வாசலில் தன் தகப்பனின் கைவிரல் பிடித்து அழுதபடி கெஞ்சிய அந்தக் காலத்தில் நிறுத்தியது.

"சரிடா... இனிமே நீ ஸ்கூலுக்குப் போக வேணாம்" என்று சமாதானப்படுத்தி வீட்டுக்குள் கூட்டிச்சென்றான்.

Join / Telegram : @Tamil_Books_Library



இரவு உணவு முடிந்து படுக்கை அறையில் மகனுக்கு கதை சொல்லும் படலம் தொடங்கியது. பொய்யில் தோய்ந்த ஒரு பேருண்மையை மகனுக்கு இவன் சொல்லத் தொடங்கினான்.

“உன்னை மாதிரிதான்டா அப்பாவும் தினமும் ஸ்கூலுக்குப் போறேன்.”

மகன் ஆச்சர்யத்துடன், “அப்படியா! உங்க மிஸ் பேரு என்ன?”

“என் மிஸ் பேரு இருக்கட்டும். உங்க மிஸ் பேரு என்ன?"

“பானு மிஸ்.”

“அப்ப எங்க மிஸ் பேரு வேணு மிஸ்.”

“வேணு மிஸ் எப்படி இருப்பாங்க?”

Join / Telegram : @Tamil_Books_Library



“முதல்ல உங்க பானு மிஸ் எப்படி இருப்பாங்கனு சொல்லு.”

“நல்லா அழகா இருப்பாங்க! கலர் கலரா சேலை கட்டிட்டு வருவாங்க. மழை பேஞ்சா தானே குடை பிடிப்பாங்க? எங்க பானு மிஸ், மழை இல்லேன்னாலும் டெய்லி குடை பிடிச்சுட்டு வருவாங்க.”

“நல்ல மிஸ்ஸா இருக்காங்களே...”

“நல்ல மிஸ்தான்ப்பா. ஆனா, டெய்லி டெய்லி படிக்கச் சொல்வாங்க. ஹோம்வொர்க் எழுதச் சொல்வாங்க."

“நல்ல விஷயம்தானப்பா... படிச்சாதான நீ பெரியாளா ஆக முடியும்?”

“சரிப்பா... உங்க வேணு மிஸ் பத்தி சொல்லுங்க?"

“ம்... பெருசா கொண்டை போட்டிருப்பாங்க.. அதைவிட பெருசா கண்ணாடி போட்டிருப்பாங்க. அதையும்விட பெருசா கைல ஒரு ஸ்கேல் வெச்சிருப்பாங்க. எப்பவுமே கோவமா இருப்பாங்க. சிரிக்கவே மாட்டாங்க!"

“சிரிக்கவே மாட்டாங்களா... செம காமெடிப்பா. வேற என்ன பண்ணுவாங்க?”

“ஹோம்வொர்க் பண்ணலைனா, ஸ்டாண்ட் அப் ஆன் தி பெஞ்சுல ஏத்தி ஸ்கேலால புட்டாச்சுலயே அடிப்பாங்க."

“புட்டாச்சுல அடிப்பாங்களா? உட்காரும்போது வலிக்குமே...

Join / Telegram : @Tamil_Books_Library

பாவம்பா நீங்க. உங்க வேணு மிஸ்ஸைவிட எங்க பானு மிஸ் ரொம்ப நல்லவங்க. நாளையில இருந்து நான் ஸ்கூலுக்குப் போறேம்ப்பா” என்று சொல்லிவிட்டு இவன் புட்டாச்சியைத் தன் பிஞ்சு விரல்களால் தடவிவிட்ட படி மகன் தூங்கிப்போனான்.

அன்றிலிருந்து தினமும் பானு மிஸ்ஸின் சாதனைகளும், வேணு மிஸ்ஸின் வேதனைகளும் இவன் படுக்கை அறையின் சுவற்றில் ஓவியங்களாக வியாபிக்க ஆரம்பித்தன.

ஒரு ஞாயிறு அதிகாலையில் பாடல் பதிவை முடித்துவிட்டு இவன் வீட்டுக்கு வந்து படுத்தான். உறக்கத்தின் ஆழத்தில் யாரோ எழுப்புவதுபோல் இருந்தது. விருப்பமின்றி கண் இமைகளைப் பிரித்தான். எதிரில் இவன் மகன்.

“அப்பா ஹாலுக்கு வாங்க... யாரு வந்திருக்காங்க பாருங்க?”

“யாருடா?”

“வந்து பாருங்கப்பா” என்று இவன் கையைப் பிடித்து ஹாலுக்கு அழைத்துச் செல்ல, ஹாலில் நாற்பது வயது மதிக்கத் தக்க ஒரு பெண் அமர்ந்திருந்தார்.

“யாரு தெரியுதாப்பா?”

தூக்கக் கலக்கத்துடன் ‘யாருடா?” என்றான். “உங்க வேணு மிஸ்ஸுப்பா” என்று மகன் சொல்ல, இவன் தூக்கம் கலைந்தேபோனது. வந்த பெண்ணை உற்றுப்பார்த்தான். பெரிதாக கொண்டை போட்டு, அதைவிடப் பெரிதாக கண்ணாடி போட்டு, அதையும்விடப் பெரிதாக கையில் ஒரு ஸ்கேலைப் பிடித்தபடி, இவன் தன் மகனுக்கு கதையில் சொன்ன அதே வேணு மிஸ்.

“முத்துக்குமரன்... நேத்து ஏன் ஸ்கூலுக்கு வரல? ஸ்டாண்ட் அப் ஆன் தி பெஞ்ச்” என்று வேணு மிஸ் அதட்ட, “பாரும்மா நேத்து ஸ்கூலுக்குப் போகாம நம்மளை ஏமாத்திட்டு அப்பா எங்கேயோ போயிருக்காரு” என்று மகன் எடுத்துக்கொடுக்க, இவன் மனைவி, வேணு மிஸ்ஸின் கையில் காபி டம்ளரை கொடுத்து கோபத்தைத் திசை மாற்றிக்கொண்டிருந்தாள்.

இது கனவா, நிஜமா என்று கையைக் கிள்ளிப் பார்ப்பதற்குப் பதிலாக, இவன் தன் புட்டாச்சியைத் தடவிக்கொண்டிருந்தான்.

Join / Telegram : @Tamil_Books_Library

*“நாளையிலிருந்து ஒழுங்கா ஸ்கூலுக்கு வரணும். ஓ.கே.?” என்றபடி வேணு மிஸ் விடைபெற, இவன் வேணு மிஸ்ஸுடன் லிஃப்ட்டை நோக்கி நடந்தான். லிப்ட்டுக்காகக் காத்திருந்த இடைவேளையில், “இங்க பாருங்க மேடம். நீங்க யாருன்னே எனக்குத் தெரியாது. நான் ஒரு கவிஞன். சினிமாவில நான் எழுதின பாட்டெல்லாம்கூட நீங்க கேட்டிருப்பீங்க. என் பையன் நல்லாப் படிக்கணுங்கிறதுக்காக, வேணு மிஸ்னு சும்மா பொய்யா ஒரு கதை சொன்னேன். அதுக்காக இப்படிக் கிளம்பி வந்துடுறதா?” என்றான் கோபத்துடன்.*

*லிஃப்ட் வந்து நின்று உள்ளே ஏறியதும், அந்தப் பெண் இவனைப் பார்த்து சொன்னாள். “இங்க பாரு முத்துக்குமரன், உண்மையிலேயே நான் உன் வேணு மிஸ்தான். நீ கவிஞனா இருக்கலாம். ஆனா, நீ சொல்ற ஒவ்வொரு வார்த்தைக்கும் ஓர் உயிர் இருக்கு. நீ சொல்லும்போதே அது கை காலு முளைச்சு வளர ஆரம்பிச்சிடுது. இப்பவும் நீ என் ஸ்டூடன்ட்தான். அதே தேர்ட் ஸ்டாண்டர்ட் ‘எ’ செக்ஷன்ல படிக்கிற மக்கு ஸ்டூடன்ட். இனிமேலாவது உன் பையனுக்கு இந்த மாதிரி அபத்தமான கதைகளைச் சொல்லாதே. ஏன்னா... கதைகள் பொய்தான். ஆனா, அது சொல்லப்படும் போதும், மத்தவங்களால கேட்கப்படும்போதும், கை-கால் முளைச்சு நிஜமா மாறிடுது” என்றபடி பார்க்கிங்கில் தன் ஸ்கூட்டியைத் தேடி அதில் ஏறி காணாமல்போனாள். இவன் அதை அதிர்ச்சியுடன் பார்த்தபடி நின்றுகொண்டிருந்தான். அந்த ஸ்கூட்டியின் எண் இவன் தன் மகனுக்கு கதையில் சொன்ன அதே* TN 00 E 1111.

*இப்போதெல்லாம் இவன் தன் மகனுக்கு கதை சொல்லும் போது மிகவும் எச்சரிக்கையாக இருக்கிறான். காட்டைவிட்டு இவன் வீடு மிகத் தொலைவில் இருந்தாலும் சிங்கம், புலி, யானை, நரி, கரடி வரும் கதைகளைச் சொல்வதே இல்லை!*

Join / Telegram : @Tamil_Books_Library




# நட்சத்திராங்களின் தேசம்

*என் தகப்பன் எனக்கு எப்படி வாழ வேண்டும் என்று*

*நேரடியாகச் சொல்லித்தரவில்லை. அவன் வாழ்ந்தான்.*

*அதை உடனிருந்து நான் பார்த்துக்கொண்டிருந்தேன்!'*

*- கேப்ரியேல் கார்ஸியா மார்க்வெஸ்*

அம்மா இறந்த பிறகு, இவன் அப்பாவின் கைகளை இறுகப் பற்றிக்கொண்டான். இந்த உலகை பகலில் சூரியன் வழிநடத்துகிறது; இரவில் சந்திரன் வழிநடத்துகிறது; பகலிலும் இரவிலும் வழிநடத்துவது தகப்பனின் கை விரல்களே என்பதை இவன் அறிந்துகொண்ட காலம் அது. இவன் தந்தையின் விரல்கள், இவனை பல்வேறு திசைகளுக்கு அழைத்துச் சென்றன. இந்த உலகம் இவனுக்கு ஆச்சர்யமாக இருந்தது; அதிசயமாக இருந்தது; அதிர்ச்சியாக இருந்தது; அச்சமாக இருந்தது; தன் தந்தையின் கை விரல்களைப் பற்றியிருந்ததால், எல்லாமே அனுபவமாக இருந்தது.

10-ம் வகுப்பு வரை இவன் வாழ்ந்தது ஒரு குடிசை வீட்டில். தென்னங்கீற்று வேயப்பட்ட அந்தக் குடிசை வீட்டின் முன்புறம், சாணி மெழுகிய இரண்டு மண் திண்ணைகள் இருக்கும். அதற்கு முன்புறம் ஒரு முருங்கைமரம். முருங்கை மரத்தைப் பற்றிப் படர்ந்து பூசணிக்கொடி ஒன்று குடிசையின் மேல் மஞ்சள் பூக்களை விரித்திருக்கும். அப்பாவின் சைக்கிளை நிறுத்திய பிறகு, இரண்டு ஆட்கள் நடந்துபோகும் அளவுக்கு ஒரு ஹால். இடது பக்கம் ஒரு சமையலறை. ஈர விறகுகள் புகையும் கொடி அடுப்பும், அதனால் எழுந்த கரி படர்ந்த சுவரும் அதன் மிச்சங்கள். அந்தக் கரிச் சுவற்றில் பால் கணக்கு, தயிர் கணக்கு, சலவைக் கணக்கு என்று சாக்பீஸால் கிறுக்கப்பட்டிருக்கும். வலது பக்கம் படுக்கையறை.

Join / Telegram : @Tamil_Books_Library

படுக்கையறை என்பது, பேருக்குத்தான். அந்த அறை முழுக்க மூட்டை மூட்டையாகப் புத்தகங்களை இவன் அப்பா குவித்துவைத்திருந்தார். கட்டிலிலும், கட்டிலுக்கு அடியிலும், அலமாரியிலும், பரணிலும்... என கிட்டத்தட்ட ஒரு லட்சம் புத்தகங்கள்.

அந்த வீட்டுக்குக் கதவு உண்டு; தாழ்ப்பாள் கிடையாது. இரவானதும் மாவு அரைக்கும் ஆட்டுரலை தன் பலம் கொண்டு நகர்த்தி, கதவுக்குத் துணையாக இவன் அப்பா முட்டுக்கொடுப்பார். அதுதான் அந்த இரவுக்குக் காவல். புத்தகங்களைத் திருட யாரும் வர மாட்டார்கள் என்று அப்போதே இவன் அப்பாவுக்கு அபார நம்பிக்கை.

இவன் வீட்டுக்கு, நிறைய சிறு பத்திரிகைகள் வரும். எல்லாவற்றுக்கும் இவன் அப்பா சந்தா கட்டி வரவழைத்துக் கொண்டிருந்தார். கணையாழி, கொல்லிப்பாவை, அஃக், கசடதபற, ஞானரதம், ழ, பிரக்ஞை, இனி, புதிய நம்பிக்கை, மன ஓசை, புதிய கலாச்சாரம், தீபம், சதங்கை, முன்றில், சுட்டி, சோவியத் நாடு, யுனெஸ்கோ கூரியர், கலைமகள், அமுதசுரபி, ஓம் சக்தி, செம்மலர், தாமரை... என பல்வேறு வண்ணங்கள், பல்வேறு விவாதங்களைச் சுமந்துவரும் அந்த இதழ்களை இவன் புரிந்தும் புரியாமலும் படித்துக் கொண்டிருந்தான்.

அந்தக் காலம் குழந்தைகள் இலக்கியத்துக்கான பொற் காலம். அம்புலி மாமா, ரத்னபாலா, கோகுலம், பூந்தளிர், பாலமித்ரா, லயன் காமிக்ஸ், முத்து காமிக்ஸ் என குழந்தைகளுக்காக எத்தனை எத்தனை இதழ்கள். இவன் தனிமையின் வெற்றிடத்தை புத்தகங்கள் நிரப்பின.

இப்படித்தான் மெல்ல மெல்ல தன் தாயின் வாசனையை மறந்து, இவன் புத்தகங்களின் வாசனைக்குள் நுழைந்தான். இவன் அப்பா இரவு முழுவதும வாசித்துக்கொண்டிருப்பார். நாளிதழ். வார இதழ். மாத இதழ், சிற்றிதழ் என அனைத்து இதழ்களிலும் வந்திருந்த அரிய செய்திகளைக் கத்தரித்து, ஒரு பெரிய நோட்டுப் புத்தகத்தில் தேதி குறிப்பிட்டு ஒட்டி வைப்பார். அதற்குத் தேவையான பசையுடனோ அல்லது பழைய சோற்றுடனோ அருகில் இருந்து இவன் உதவி செய்வான். 'இரட்டைத் தலையுடன் பிறந்த குழந்தை', 'எட்டு கால்களுடன் பிறந்த ஆட்டுக்குட்டி' போன்ற அந்தச் செய்திகள். அன்று அவர்களுக்குப் பொக்கிஷமாகத் தெரிந்தன. பின்நாட்களில் வரப்போகும் இணையத்திலும்' அவற்றின் தேடுதளங்களிலும் இந்தச் செய்திகள் உடனுக்குடன் புகைப்படத்துடன் கிடைக்கப்போகும் சாஸ்வதங்களை அவர்கள் அறிந்தார்களில்லை. ஒற்றையடிப் பாதைகளை, தேசிய நெடுஞ்சாலைகள் தனக்குள் உள்வாங்கிக்கொண்டதைப் போல்தான், இவற்றை இவன் நினைத்துப் பார்க்கிறான்.

ஒரு கோடை விடுமுறையில். இவன் தன் நண்பர்களுடன் கில்லி,

Join / Telegram : @Tamil_Books_Library

கோலிகுண்டு பம்பரம் என்று விளையாடிக் கொண்டிருக்கையில், இவன் அப்பா அழைத்து, இவன் வாழ்வின் மிகப் பெரும் ஜன்னல் ஒன்றைத் திறந்துவைத்தார். அன்று அவர், இவன் கையில் கொடுத்தது... அந்த விடுமுறையில் அவசியம் படிக்க வேண்டிய 10 புத்தகங்களுக்கான பட்டியல். தன் நினைவில் இருந்து இன்று இவன் அதை வரிசை மாற்றி எழுதுகிறான். அந்தப் புத்தகங்கள்...





Join / Telegram : @Tamil_Books_Library

1. உ.வே.சா. எழுதிய ‘என் சரித்திரம்’

2. பகத்சிங் எழுதிய ‘நான் ஏன் நாத்திகன் ஆனேன்?’

3. மகாத்மா காந்தியின் ‘சத்திய சோதனை’

4. லியோ டால்ஸ்டாயின் ‘போரும் அமைதியும்’

5. தஸ்தாவஸ்கியின் ‘குற்றமும் தண்டணையும்’

6. ‘உலகம் சுற்றிய தமிழர்’ ஏ.கே. செட்டியாரின் ‘பயணக் கட்டுரைகள்’

7. ஜான் ரீட் எழுதிய ‘உலகைக் குலுக்கிய பத்து நாட்கள்’

8. சுத்தானந்த பாரதியார் மொழிபெயர்த்த ‘ஏழை படும் பாடு’

9. ராபின்சன் குருசோவின் ‘தன் வரலாறு’

10. ஹெமிங்வேயின் ‘கடலும் கிழவனும்’



Join / Telegram : @Tamil_Books_Library

பட்டியலோடு புத்தகங்களையும் அப்பா கொடுத்த பின், இவன் முதலில் ராபின்சன் குருசோவைப் பிரித்தான். அன்றிலிருந்து கப்பல் மூழ்கி ஆளில்லா தனித் தீவில் ராபின்சன் குருசோ கரை ஒதுங்கியதுபோல், இவனும் புத்தகங்களின் தீவுக்குள் மூழ்கிப்போனான். இன்றுவரை குறைந்தபட்சம் நான்கு மணி நேரமாவது படிக்காமல் இவனுக்குத் தூக்கம் வருவது இல்லை. திடீரென்று நள்ளிரவில் விளக்கின் வெளிச்சத்தால் இவன் மனைவி எழுந்து, "என்னங்க... மூணு மணியாச்சுங்க. காலையில படிக்கலாம் தூங்குங்க" என்று செல்லமாக அதட்டிய பின்பும், இவன் ஹாலுக்குச் சென்று தூக்கக் கலக்கத்துடன் படித்துக்கொண்டிருப்பன். அப்போதெல்லாம், இறந்துபோன இவன் அப்பாவின் நிழல் பின்தொடர்ந்துகொண்டிருப்பதாக உணர்வான்.

என்ன படித்தாலும் இவனும் சிறுவன்தானே! இவன் வயதொத்த இவனுடன் பள்ளியில் படித்த இவன் நண்பர்களின் தந்தைகளும், இவன் தந்தையைப் போலவே அரசாங்க வேலையில்தான் இருந்தார்கள். அவர்கள், வந்த சம்பளத்தைச் சேமித்தார்கள்; வட்டிக்கு விட்டார்கள்; வசதியாக வாழ்ந்தார்கள். நண்பர்களின் அழைப்பின் பேரில் ஞாயிற்றுக்கிழமைகளில், அவர்களது வீடுகளுக்குச் செல்லும் போதெல்லாம், இவன் தன் தந்தையைப் பற்றி நினைத்துக் கொள்வான். தன் தந்தை, தான் வாங்கும் சம்பளத்தில் எல்லாம் புத்தகங்கள் வாங்கி, அந்தக் கடனின் வட்டியை அடைக்க மேலும் கடன் வாங்கியதால்தானே நாம் இன்னும் குடிசை வீட்டிலேயே வாழ்ந்து கொண்டு இருக்கிறோம் என்று இவனுக்கு வருத்தமாக இருக்கும்.

ஒரு நாள், தூங்கும்போது தயங்கித் தயங்கி அப்பாவிடம் தன் வருத்தத்தைத் தெரிவித்தான். "என் ஃப்ரெண்ட்ஸ் எல்லாம் நம்ம வீட்டுக்கு வர்றேன்னு சொல்றாங்கப்பா... ஆனா, இந்த ஓலை வீட்டுக்குக் கூட்டிட்டுவர எனக்குக் கூச்சமா இருக்குப்பா...

அந்த இருட்டிலும் இவன் கண்களை உற்றுப் பார்த்தபடி அப்பா சொன்னார். "மேலே நிமிர்ந்து பாரு." இவனும் பார்த்தான். கூரையின் விரிசல் வழியே நட்சத்திரங்கள் தெரிந்தன.

இவன் அறியாமையின் கண்கள் திறக்கும்படி இவன் தகப்பன் இவன் கண்களைப் பார்த்தபடி சொன்னார். "உன் ஃப்ரெண்ட்ஸைக் கூட்டிட்டு வர்றதா இருந்தா, நைட்ல கூட்டிட்டு வா. இப்பிடி வீட்ல படுத்துக்கிட்டே நட்சத்திரங்களை அவங்களால பார்க்க முடியுமா?"

இந்தச் சம்பவம் நடந்து 30 வருடங்கள் முடிந்திருக்கும்.

சமீபத்தில் இவன் மகனிடம் இவன் உரையாடிக் கொண்டிருந்தான்.

"தாத்தா நெறைய கடன் வாங்குனார்டா. அதெல்லாம் அப்பாதான் அடைச்சேன்."

Join / Telegram : @Tamil_Books_Library

மகன் கேட்டான்.


“தாத்தா எதுக்குப்பா கடன் வாங்குனாரு?”

“தாத்தா நெறைய புக்ஸ் படிப்பார்டா. அத வாங்கத்தான் கடன் வாங்குனாரு...”

“நல்ல விஷயம்தானப்பா... நீங்களும் நெறைய புக்ஸ் படிங்க. உங்க கடனை எல்லாம் நான் அடைக்கிறேன்!”

இவன் சட்டென தன் மகனின் கண்களைப் பார்த்தான். அந்தக் கண்களில் நட்சத்திரங்கள் தெரிந்தன!

Join / Telegram : @Tamil_Books_Library





# பசி என்னும் பெருந்தீ

அவன், குதிகாலிட்டு உட்கார்ந்தான்; சப்பணமிட்டு உட்கார்ந்தான்; ஒரு காலை நீட்டி உட்கார்ந்து பார்த்தான்; வயிற்றோடு முழங்காலைச் சேர்த்து ஒட்டி உட்கார்ந்து பார்த்தான். இப்படியும் அப்படியுமாக எப்படி உட்கார்ந்தாலும் பசித்தது!'

'வெயிலோடு போய்' சிறுகதைத் தொகுப்பில்...
- ச.தமிழ்ச்செல்வன்

இவன் ஊரில் எல்லோரும் பட்டுத் தறி நெய்பவர்கள். இவன் அப்பாவும், இன்னொரு போலீஸ்காரரும் மட்டுமே அரசாங்க வேலைக்குச் செல்பவர்கள். இவனது தந்தை தமிழாசிரியராக இருந்தபோதிலும், மூன்று மைல் தள்ளி இருந்த அய்யன்பேட்டை என்ற குறுநகரத்தில் அப்போதுதான் ஆரம்பித்திருந்த ஆங்கிலப் பள்ளியில் இவனைக் கொண்டு போய்ச் சேர்த்தார். இந்த முரணை, இவனால் இன்று வரை விளங்கிக்கொள்ள முடியவில்லை. ஒருவேளை, திருமணத்துக்கு முன்பு சென்னையில் நர்சரிப் பள்ளி ஒன்றில் டீச்சராக இருந்த இவன் அம்மாவின் வற்புறுத்தலில் சேர்த்திருப்பாரோ?

Join / Telegram : @Tamil_Books_Library



எழுபதுகளின் இறுதியில் காஞ்சிபுரத்தைச் சுற்றியிருந்த கிராமங்களின் பெற்றோர்களுக்கு, ஆங்கிலப் பள்ளி என்பது பெருங்கனவு. இவன் தந்தையும் தாயும் இவனுக்காக அந்தக் கனவைக் கண்டார்கள்.

அதை, 'பள்ளி' என்ற ஒற்றை வார்த்தைக்குள் அடக்கிவிட முடியாது. தாகூரின் 'சாந்தி நிகேதன்' போல அது ஒரு திறந்தவெளி சொர்க்கம். அந்தப் பள்ளியின் சுவரில், விவேகானந்தரும் கார்ல் மார்க்ஸும் அருகருகே புகைப் படமாகிப் புன்னகைப்பார்கள்.

அந்தப் பள்ளியை, நடராஜ் மாஸ்டர் நடத்தி வந்தார். இசை, ஓவியம், கலை, கலாசாரம், கவிதை, இலக்கியம் என, வகுப்பறையில் ஒவ்வொரு ஜன்னலாக அவர் திறந்து வைத்துக்கொண்டிருக்க, அந்தச் சின்னஞ்சிறிய ஜன்னல்களில் இவன் பென்னாம் பெரிய வானத்தைப் பார்த்தான். எல்லாவற்றுக்கும் மேல், இவனுக்கு மிகவும் பிடித்தமான காதோரத்துக் கருங்குழலில் ஒற்றை மஞ்சள் ரோஜா வைத்திருக்கும் திலகவதி மிஸ்தான் இவன் வகுப்பாசிரியை.

மூன்றாம் வகுப்பு படிக்கும்போதே இவன் கவிதை என்ற பெயரில் கிறுக்கத் தொடங்கியிருந்தான். அருவி, ஆட்காட்டிக் குருவி, ஆரஞ்சு மேகம் என இவன் எழுதிய கிறுக்கல்களை வகுப்பறையில் வாசித்துக்காட்டி, திலகவதி மிஸ் இவனை, இவன் தகுதிக்கு மீறி

Join / Telegram : @Tamil_Books_Library

*உற்சாகப்படுத்துவார்கள்.*

*நிலவிலும் கறை உண்டுதானே! அப்படி அந்தப் பள்ளியில் இவனுக்குப் பிடிக்காத விஷயம் ஒன்று இருந்தது. இவன் தினமும் மாட்டுவண்டியில்தான் பள்ளிக்குச் செல்வான். அது பள்ளிக்குச் சொந்தமான மாட்டுவண்டி. காலை எட்டு மணிக்கே, இவன் கிராமத்துக்கு வந்து இவனை ஏற்றிக் கொண்டு, சுற்றியுள்ள நத்தப்பேட்டை, வையாவூர் முத்தியால்பேட்டை... என வெவ்வேறு கிராமங்களில் படிக்கும் மாணவர்களை ஏற்றிக்கொண்டு, இவன் பள்ளி இருக்கும் அய்யம்பேட்டையை அந்த வண்டி அடையும்போது மணி 10 ஆகிவிடும்.*

*வழக்கமாக, அந்த வண்டியை வயசான ஒரு தாத்தா ஓட்டி வருவார். அன்று, அவருக்குப் பதிலாக 25 வயது மதிக்கத்தக்க ஓர் இளைஞர் ஓட்டிக்கொண்டு வந்தார். இவன் வண்டியில் ஏறியதுமே, “தாத்தா வரலியா... நீங்க வந்திருக்கீங்க?” என்று கேட்டான். “அவரு வேலையை விட்டு நின்னுட்டாரு. இனிமே இந்த காருக்கு நான்தான் டிரைவர். கார்ல கியரு கிடையாது. வாலுதான் கியரு” என்று மாட்டின் வாலைத் தூக்கிக் காட்டினார். மாடும் ஆமோதித்து இளம் பச்சை நிறத்தில் சாணி போட்டது. முதல் பார்வையிலேயே அவரை இவனுக்குப் பிடித்துப்போனது.*

*ஆங்கிலப் பள்ளியில் படிக்கும் மாணவர்கள் என்பதால், அவருக்குத் தெரிந்த பட்லர் இங்கிலீஷில்தான் மாணவர்களுடன் உரையாடுவார்.*

*“வாட் இஸ் யுவர் நேம்?”*

*“என்.முத்துக்குமரன்.”*

*“மை நேம் சேகர். கூப்புடு சேகர் அண்ணா.”*

*“ஓ.கே.சேகரண்ணா.”*

*முதல் நாள் அவருடன் மாட்டுவண்டியில் பயணித்தது இனிமையாக இருந்தது, பள்ளிக்கூடத்துக்கு வந்துசேரும் முன்பு வரை. அந்தப் பயணம் இப்போதும் இவனுக்கு ஞாபகம் இருக்கிறது.*

*வழி நெடுகக் கிராமங்கள். காலைக் கதிரொளியில், பச்சை வயல்வெளிகளில் நாற்று நடும் பெண்களின் முகங்கள். தூரத்துப் பனை மரத்தில் தச்சு வேலை செய்யும் மரங்கொத்திப் பறவைகள். கிளிகள் பறக்கும் பெருமாள் கோயில் கோபுரத்தின் பின்னணியில், புழுதிபடர்ந்த வீதிகளில், வண்ண வண்ண பட்டு நூல்களை மூங்கில் கழைகளில் நீட்டிக்கட்டி சாயம் போடும் சாதாரண, எளிய கிராமத்து மனிதர்கள். வழிதோறும் இவன் ரசித்துக்கொண்டே வந்தான்.*

Join / Telegram : @Tamil_Books_Library

ஒவ்வொரு கிராமத்திலும், இவன் பள்ளியில் படிக்கும் மாணவர்களை ஏற்றியபடி வண்டி விரைந்தது. சேகரண்ணன், ஒவ்வொருவரிடமும் தன் பழைய பட்லர் இங்கிலீஷை புதிய தொனியில் கேட்டார்.

"வாட் இஸ் யுவர் நேம்?"

"கே.என்.ராமசாமி."

"மை நேம் சேகர். டெல் சேகரண்ணா."

"ஓ.கே.சேகரண்ணா."

இவன் பள்ளிக்குச் சற்று முன்பு, பெரிய ஏரி ஒன்று இருந்தது. அதன் கரையெங்கும் கருவேல மரங்கள். அதன் கிளைகளெங்கும் கரிச்சான் குருவிக் கூடுகள். அந்த இடத்தில் வண்டி நின்றது.

சேகரண்ணா இவர்களைப் பார்த்துக் கேட்டார். "சேகரண்ணாவுக்குப் பசிக்கும்ல. டேஸ்ட்டு பாக்க உங்க டிபன் பாக்ஸைக் குடுங்க."

இவர்கள் தயங்கியபடியே அதிர்ச்சியுடன் அவரவர் டிபன் பாக்ஸ்களை எடுத்து நீட்டினார்கள்.

"இட்லி குடுத்திருக்காங்களா? ரெண்டு எடுத்துக்கிறேன்டா. பூரி கொண்டுவந்திருக்கியா? அண்ணனுக்கு ரொம்பப் புடிக்கும்டா! தயிர் சாதமா? நாளைலேர்ந்து உங்க அம்மா கிட்ட சாம்பார் சாதம் குடுக்கச் சொல்லு. அண்டர்ஸ்டாண்டு?" என்றபடி சேகரண்ணன் இவர்களது டிபன்பாக்ஸில் இருந்து தனக்கான உணவை எடுத்துச் சாப்பிட்டார். சாப்பிட்டு முடித்து கருவேலங்காட்டில் சிறுநீர் கழித்துவிட்டு, பீடி நாற்றத்துடன் கரிய மீசையை முறுக்கிவிட்டபடி, "இந்த விஷயத்தை யார்கிட்டயாவது சொன்னிங்க... அவ்வளவுதான். ஐ கில் யூ. அண்டர்ஸ்டாண்டு?"



Join / Telegram : @Tamil_Books_Library

அவர் மீசையை முறுக்கிய விதத்தைப் பார்த்ததுமே இவர்களுக்கு 'அண்டர்ஸ்டாண்டு' ஆனது. கிட்டத்தட்ட ஆறு மாதங்கள் இது தொடர்ந்தது. இவர்கள் டிபன் பாகஸில் இருந்த ஐந்து இட்லிகளில் இரண்டு இட்லிகள் யாரிடமும் சொல்லாமல் அவருக்குப் படையல் ஆனது.

ஒருநாள் காலையில் இவன் ஆயா. உப்புமா கிளறிக் கொண்டிருந்தபோது பக்கத்து வீட்டு மாமி வந்து, "ஏரில மீன் ஏலம் எடுத்திருக்கோம். இன்னிக்கு ஒரு நாளு புள்ள மீன் குழம்பு எடுத்துட்டுப் போகட்டும்மா!" என்று டிபன்பாக்ஸை இவன் கையில் கொடுக்க, இவன் அதை எச்சில் ஊறப் புத்தகப் பையில் வைத்துக்கொண்டான். இவனுடைய ஆயா சைவம் என்பதால், இவன் வீட்டில் அதிகபட்சமாக ஆறு மாதங்களுக்கு ஒருமுறை சமைக்கப்படும் அசைவமே, முட்டைதான். அதுவும் ஆயா வெளியூர் போயிருக்கும் அபூர்வத் தருணங்களில் மட்டுமே அந்த வரம் இவனுக்கு கிடைக்கும். மீன் என்று காகிதத்தில் எழுதிக்கொடுத்தாலே சாப்பிட்டுவிடும் ஆசைகொண்ட இவன், பள்ளி வண்டிக்காகக் காத்திருந்த நேரத்தில் ஆவலுடன் டிபன் பாக்ஸை பிரித்துப் பார்த்தான். மீன் குழம்புச் சோற்றுடன், வறுத்த மீன் துண்டுகள் நான்கு இருந்தன.

சேகரண்ணன் இரண்டு துண்டுகளை எடுத்துச் சாப்பிட்டாலும், மீதி இரண்டு துண்டுகள் இவனுக்கு மிஞ்சும் என்ற அபார நம்பிக்கையோடு வண்டியில் ஏறினான். அதே ஏரிக்கரை. அதே கருவேலங்காடு. அதே கரிச்சான் குருவிக் கூடுகள். சேகரண்ணன், வழக்கம்போலவே முதலில் இவன் டிபன் பாக்ஸைக் கேட்டார்.

"டேஸ்ட்டுகுட்ரா குமாரு!"

இவன், கைகள் நடுங்கியபடியே தன் டிபன் பாக்ஸை நீட்டினான்.

"அடடே... மீன் குழம்பாடா.. அண்ணனுக்கு ரொம்ப ரொம்பப் புடிக்கும்டா."

இவன் கண்கள் பார்க்கப் பார்க்க, அந்த டிபன் பாக்ஸ் காலியாகும் வரை அவர் கபளீகரம் பண்ணிக்கொண்டிருந்தார். சாப்பிட்டு முடித்து, தண்ணீர் குடித்து, மற்ற பிள்ளைகளைப் பார்த்து "இன்னிக்கு இந்த டேஸ்ட்டே போதும். அவனுக்கும் பசிக்கும்ல. லஞ்ச் டயம்ல எல்லாரும் ஷேரு பண்ணிச் சாப்பிடுங்க" என்றபடி மாட்டின் வாலை முறுக்கினார். வண்டி வேகமாக ஓடத் தொடங்கியது.

முதல் பீரியடில் இருந்தே, இவனை அந்த மீனின் முள் துரத்தத் தொடங்கியது. பொறுத்துப் பொறுத்துப் பார்த்து, இன்டர்வெல் கேப்பில், ஹெட்மாஸ்டர் அறை முன் நின்றான். நடராஜ் மாஸ்டர் இவனைப் பார்த்துக் கேட்டார்.

Join / Telegram : @Tamil_Books_Library

“என்னப்பா... என்ன விஷயம்?”

இவன் அழத் தொடங்கினான்.

“சார்... இத நான் சொன்னேன்னு சொல்லக் கூடாது.''

“மொதல்ல விஷயத்தைச் சொல்லுப்பா.”

முதலிலிருந்து இவன் விஷயத்தைச் சொன்னான்.

அடுத்த நாள் காலையில் அந்த மாட்டு வண்டியில் சேகரண்ணன் இல்லை. வேறு ஏதோ ஓர் அண்ணன். அன்று பார்த்து இவன் டிபன் பாக்ஸில் பழைய சோறும் நார்த்தங்காய் ஊறுகாயும்.

பத்து வருடங்கள் கழித்து இவன் வாலிபன் ஆனான். இவன் முகத்திலும் மீசையும் முகப்பருக்களும் முளைத்தன. கல்லூரி படிக்கையில் வகுப்பை கட் அடித்துவிட்டு இவனுக்குப் பிடித்த நடிகரின் படத்துக்கு நண்பர்களுடன் முதல் நாள் முதல் ஷோ, கியூ வரிசையில் நின்று கொண்டிருந்தான். இவன் வரிசையில் ஏழெட்டு பேர்களுக்கு முன் நின்றுகொண்டிருப்பவர் சேகரண்ணன்தானா? ஆம். அதே மீசை, அதே அம்மை தழும்பு முகம். டைட்டில் போட்டு நண்பர்களின் விசில் சத்தங்களுடன் படத்தின் காட்சிகள் தொடர்ந்தபோதும் சேகரண்ணனே இவன் ஞாபகத்துக்கு வந்துகொண்டிருந்தார்.

இடைவேளையில் சிறுநீர் கழித்துவிட்டு நிமிர்ந்து பார்க்கையில் தூரத்தில் பிடி குடித்தபடி சேகரண்ணன். இவன் அவர் அருகில் சென்று, “வணக்கம்ணே.. எப்பிடியிருக்கீங்க?” என்றான்.

அவருக்கு, இவனை அடையாளம் தெரியவில்லை.

“நல்லாயிருக்கேன். தம்பி யாருன்னு தெரியலயே...”

“நான்தான்னே முத்துக்குமரன். கன்னிகாபுரம். உங்க வண்டியிலதானே தினமும் ஸ்கூலுக்கு போவோம்...''

அவர் இவன் முகத்தை ஒருமுறை கூர்ந்து பார்த்துவிட்டு, கண்களைத் தாழ்த்திக் கொண்டார். மௌனம் ஒரு காற்றைப் போல, இவர்களிடையே வீசிக்கொண்டிருந்தது.

இவன் வார்த்தைகளைக் கோர்த்துக் கோர்த்து பேசத் தொடங்கினான்.

“என்னை மன்னிச்சிருங்கண்ணே... என்னாலதான் உங்க வேலை போச்சு. ஏதோ ஒரு ஆத்திரத்துல ஹெட் மாஸ்டர் கிட்ட சொல்லிட்டேன்...

“அய்யோ... நீதான் தம்பி என்னை மன்னிக்கணும். படிக்கிற புள்ளைங்க சோத்த புடுங்கித் திங்கறது ரொம்பப் பெரிய பாவம். ஏதோ

Join / Telegram : @Tamil_Books_Library

என் பசிக்குச் செஞ்சிட்டேன். சம்பளம் கம்மி. என்னை நம்பி வீட்லயும் ஆறு உசிரு இருந்திச்சு. உங்களுக்குத் தெரியாது தம்பி, அந்த ஒருவேளைதான் எனக்கு சாப்பாடு. அதுக்கு அப்புறம் நைட்ல தண்ணி ஆம் குடிச்சிட்டுப் படுத்துடுவேன். வேலை போனப்புறம் கொளுத்து வேலை, ரோடு போடறதுன்னு சமாளிச்சிட்டேன். இப்ப ஒரு ஷூ கம்பெனில வாட்ச்மேன் வேலை. பசி இல்லை; கஷ்டம் இல்லை. ஆனா, உங்களுக்கு செஞ்ச பாவம் என்னைத் துரத்திட்டே இருக்கு. இப்ப ரோட்ல எங்கேயாவது, ஸ்கூல் படிக்கிற பசங்களைப் பார்க்கும் போதெல்லாம் ஒரு குச்சி ஐஸோ, சாக்லேட்டோ வாங்கிக் குடுத்துத்தான் என் பாவத்துக்குப் பிராயச்சித்தம் பண்ணிட்டு இருக்கேன்...''



“மச்சான், படம் போட்டுட்டான்டா...'' - நண்பர்கள் அழைக்க, இவன் அவரிடமிருந்து விடைபெற்றான்.

திரையரங்கின் இருட்டில் இவன் அமர்ந்திருந்த நாற்காலியைத் தேடிக் கண்டுபிடித்த சேகரண்ணன், இவன் முன்பு வந்து நின்றார். அவரது கைகளில் ஒரு கோன் ஐஸும் பாப்கார்ன் பாக்கெட்டும்.

“அய்யோ இதெல்லாம் எதுக்குண்ணே?''

“என் திருப்திக்காக. வாங்கிக்குங்க தம்பி.''

இவன் நண்பர்களிடம் பாப்கார்ன் பாக்கெட்டை கொடுத்து விட்டு, கோன் ஐஸை டேஸ்ட்டு பார்த்தான். அதில் மீன் குழம்பு வாசம் அடித்தது!

Join / Telegram : @Tamil_Books_Library




# வாணவேடிக்கை

*சமூகம் என்பது நான்கு பேர்.*

*- ஜெயகாந்தன்*

*தலைகீழாக 5, 4, 3, 2, 1, 0 என்று கவுன்ட் டவுன் சொல்லி, ராக்கெட்டை விண்ணுக்கு அனுப்புவதைப் போலத்தான் தினமும் இவன் தன் மகனை பள்ளிக்கு அனுப்புவதும்.*

*திருவாளர் மகனார் திருப்பள்ளி எழுச்சி முடிந்து, நீராடி, உண்டு, உடுத்தி, பள்ளிக்குக் கிளம்புகையில், வீடு போர்க்களமாக மாறி இருக்கும். அரை மணி நேரத்துக்குள் அவனை ஹோம்வொர்க் எழுதவைத்து, குளிக்கவைத்து உணவு ஊட்டித் தயார்ப்படுத்தும் மனைவியைப் பார்த்து இவனுக்கு ஆச்சர்யமாக இருக்கும்.*

*“பேசாம நைட்டே யூனிஃபார்ம் போட்டுப் படுக்க வெச்சிடேன். உனக்கும் ஈஸியா இருக்கும்; ஸ்கூலுக்கும் சீக்கிரம் போலாம்” என்று இவன் தன் மனைவியைக் கிண்டல் செய்வான்.*

*மேற்சொன்ன காலைப் பரபரப்பில் யாராவது நண்பர்களைச் சந்திக்கவேண்டி இருந்தால், இவன் வீட்டுக்கு அருகில் உள்ள பூங்காவுக்கு வரச் சொல்வான். அன்றும் அப்படித்தான். ஒரு நண்பருக்காக பூங்காவில் காத்திருந்தான்.*

*காலைச் சூரியனின் இளமஞ்சள் வெளிச்சம், பூங்காவின் இலைகளில் வழிந்துகொண்டிருந்தது. ‘வானகமே, இளவெயிலே, மரச்செறிவே...’ என்று கொஞ்ச நேரம் பாரதியாகி மனசுக்குள் கவிதை பாடி, மீண்டும் இவனானான்.*

*வெவ்வேறு தோற்றமும், வயதும்கொண்ட ஆண்களும் பெண்களும்,*

Join / Telegram : @Tamil_Books_Library

மஞ்சள் வெயிலில் நனைந்தபடி நடைப் பயிற்சியில் இருந்தார்கள். இன்னொரு பக்கம் சிறுவர்களுக்கு ஒரு மாஸ்டர் கராத்தே கற்றுக்கொடுத்துக்கொண்டிருந்தார். மற்றோர் இடத்தில் மேட் விரித்து தியான வகுப்பு. பூங்காவின் மைதானத்தில் முதிர் இளம் ஆண்கள் தொப்பையுடன் பேட்மிட்டன் விளையாட்டு. மாநகரத்துக்கு வந்த புதிதில் தெருக்களிலும் பூங்காக்களிலும் வயதான ஆண்கள் இப்பிடி விளையாடுவதைப் பார்த்து இவனுக்கு ஆச்சர்யமாக இருக்கும். சின்னப்பசங்கதானே விளையாடுவாங்க? இவன், தன் கிராமத்தில் பெரிய மனிதர்கள் விளையாடிப் பார்த்ததே இல்லை.

சிறு வயதில் முதன்முதலில் பஞ்சாயத்து தொலைக்காட்சிப் பெட்டியில் கிரிக்கெட் பார்த்தபோது கவாஸ்கரையும் கபில்தேவையும் பார்த்து, 'இவ்வளவு வயசாகியும் வெளையாடிட்டு இருக்காங்களே! வீட்ல திட்ட மாட்டாங்களா!' என்று இவன் ஆச்சர்யப்பட்டிருக்கிறான். போகப்போக அது பழகிவிட்டது.

மண்ணில் உதிர்ந்துகிடந்த பாதாம் மரத்தின் பேரிலை ஒன்று, வெயிலில் தகதகப்பதையும், அதில் ஓர் எறும்பு ஊர்ந்துசெல்வதையும் இவன் பார்த்துக்கொண்டிருந்தபோது, "சார், வணக்கம்" என்ற குரல் கேட்டு நிமிர்ந்தான்.

"என் பேரு கல்யாணராமன். பேங்க்ல வேல செய்றேன். வாராவாரம் விகடன்ல நீங்க வேடிக்கை பார்க்கிறதை நானும் வேடிக்கை பார்த்துட்டுத்தான் இருக்கேன். கொஞ்சம் பேசலாமா?" என்றபடி சிமென்ட் பெஞ்சில் இவன் பக்கத்தில் அமர்ந்தார். அவருக்கு 50 வயது இருக்கும்; தோற்றத்தில் பழைய நடிகர் பாலையா போல் இருந்தார்.

"சொல்லுங்க சார்" என்றான்.

"நல்லாதான் எழுதுறீங்க. ஆமா... என்ன எழுதுறீங்க, சுயசரிதையா?''

"அப்படியும் வெச்சுக்கலாம் சார்."

"அப்படியும் வெச்சுக்கலாம்னா... அனுபவக் கட்டுரைகளா?''

"கட்டுரைன்னும் சொல்ல முடியாது... என் தொண்டையில நிறைய மீன் முள் சிக்கிக்கிட்டு இருக்கு. அதை ஒண்ணு ஒண்ணா எடுக்கிற முயற்சின்னு சொல்லலாம்!

"அப்ப சிறுகதை எழுதுறீங்க!"

"நம்ம வாழ்க்கையே ஒரு சிறுகதைதானே சார். "நெருநலுளனொருவனின்றில்லையென்னும் பெருமையுடைத் திவ்வுலகு' னு வள்ளுவரே சொல்லியிருக்கார்.

Join / Telegram : @Tamil_Books_Library

“அப்படினா?”

“நேத்து இருந்தான்! இன்னைக்கு இல்ல. அதுதான் இந்த உலகத்தோட பெருமை. இதைவிட ஒரு சிறந்த சிறுகதை இருக்க முடியுமா சார்?”

“அது சரி... ‘உடல் வளர்த்தேன்; உயிர் வளர்த்தேன்’னு சொன்னது யாரு?”

“திருமூலர்.”

“அதான் டெய்லி ஒரு மணி நேரம் பார்க்ல வாக்கிங் போயிட்டு இருக்கேன்.”

இதற்குள் இவன் அலைபேசியில் நண்பரின் அழைப்பு. ‘போக்குவரதது நெரிசலில் மாட்டிக்கொண்டிருப்பதால், வருவதற்கு 20 நிமிடங்கள் ஆகும்’ என்று நண்பர் சொல்ல, கல்யாணராமன் அடுத்தகட்ட உரையாடலுக்கு ஆயத்தமானார்.

“சார் உங்களை டிஸ்டர்ப் பண்ணலயே?”

“ஐயோ.! அதெல்லாம் இல்ல சார். சும்மாதான் ஒரு ஃப்ரெண்டுககாக வெயிட் பண்ணிட்டு இருக்கேன்” என்றான் இவன்.



“அப்ப கொஞ்சம் பேசலாம். இப்படி இலக்கியம் பேசி ரொம்ப நாளாச்சு. ‘எழுத்து’ங்கிறது என்ன சார்?''

இவன் யோசித்துக் கொண்டிருப்பதைப் பார்த்து, அவரே தொடர்ந்தார்.

Join / Telegram : @Tamil_Books_Library

“ஒரு நம்பிக்கையை நெஞ்சுல விதைக்கணும். ‘விதைத்தவன் உறங்கினாலும் விதை உறங்குவதில்லை’ எங்கேயோ படிச்சது. அப்படியே புல்லரிக்குது பாருங்க. இன்னொண்ணு சொல்றேன். ‘வேர்வை சிந்து... வேர் ஊன்றுவாய்!’ உழைப்போட அருமையை எவ்வளவு அழகாச் சொல்லி இருக்கான் பாருங்க. இப்படி நீங்களும் வாசகர்களுக்கு தன்னம்பிக்கையைக் கொடுக்கணும்.”

“கொடுத்துருவோம் சார்.”

“இப்படி நம்பிக்கை, உழைப்பு, காதல்னு கலந்துகட்டி எழுதணும். நீங்க காதலிச்சிருக்கீங்களா?”

“ஸ்கூல் டேஸ்ல ஒன் சைடா சார். அதுவும் சொல்லாத காதல்!”

“சொல்லாத காதல்னா?”

“தூரத்துல இருந்து பார்க்கிறது, தூங்காம நெனைச்சுக்கிறது, பேசாமத் தவிக்கிறது.”

“அடப் பாவமே! எழுத்தாளன்னா அடிக்கடி காதலிக்கணும் சார். அடுத்த வாரமே காதலைப் பற்றி எழுதுறீங்க. காதலிக்கலைனாலும் பரவாயில்ல, கற்பனையா ஒரு கதை சொல்லுங்க சார். ஒரு பொண்ணும் நீங்களும் தீவிரமா லவ் பண்றீங்க. கோயில்ல பார்த்தீங்க, பஸ் ஸ்டாண்ட்ல பேசுனீங்க, கவிதையாத் தொடருது உங்க காதல். அப்ப திடீர்னு குடும்பக் கட்டாயத்துல அந்தப் பொண்ணை சிங்கப்பூர் மாப்பிள்ளைக்குக் கல்யாணம் பண்ணிவெச்சிடுறாங்க. கல்யாண ரிசப்ஷன்ல நினைவுப் பரிசு கொடுத்துட்டு, நீங்க நடந்து போறீங்க. உங்க கண்ணுலயும் ஒரே ஒரு நீர்த்துளி, அவ கண்ணுலயும் ஒரே ஒரு நீர்த்துளி. ‘அந்தக் கண்ணீர்த் துளிகூட ஒன்றுசேர முடியாமல் கீழே விழுந்து கரைந்தது’னு முடிங்க சார். படிக்கிறவனும் அழுதுருவான்ல.”

கல்யாணராமன் சார், இவனுக்கு டைவர்ஸ் வாங்கிக் கொடுத்துவிடுவார் என்று தீர்மானமாகத் தெரிந்தது.

“என் வொய்ஃபும் விகடன் படிக்கிறாங்க சார்” என்றான்

“அப்ப காதல் வேணாம். சென்டிமென்ட் பக்கம் வாங்க. ஒரு வாரம் கோயில் வாசல்ல உக்காந்து பிச்சை எடுக்குறீங்க...''

இவன் இடைமறித்து, “சார் எங்க குடும்பம். மிடில் க்ளாஸ்தான். ஆனா, கோயில் வாசல்ல பிச்சை எடுக்கிற அளவுக்கு நான் கஷ்டப்படல” என்றான்.

“ஒரு வாரம்தானே சார். உங்க தட்டுல யாருமே காசு போடல. பக்கத்துல இருக்கற ஒரு தொழுநோயாளி அம்மா உங்களுக்கு சாப்பாடு வாங்கித் தர்றார். எவ்வளவு நெகிழ்ச்சியா இருக்கும்?”

Join / Telegram : @Tamil_Books_Library

“சார், இந்தப் பிச்சை எடுக்கற மேட்டர் மட்டும் வேணாம்...’’

“அப்ப ஒண்ணு பண்ணுவோம். ரயில்வே ஸ்டேஷன் சிமென்ட் பெஞ்ச்ல உக்காந்து இருக்கீங்க. பக்கத்துல ஒரு பூவரசு மரம், தூரத்துல ஒரு இளம் தாய் அழுதிட்டு இருக்கா. அவ கண்ணுல, பல பெண்களோட கண்ணீரை நீங்க பார்க்கறீங்க. ‘அந்த அழுகை எப்ப கோபமா மாறும்?’னு கேட்கிறீங்க.”

“இத வேணா டிரை பண்றேன் சார்” என்றான்.

“இப்படித்தான் சார், ‘எழுத்து’ங்கிறது ஒரு நம்பிக்கை, ஒரு தேடல், ஒரு நட்பு, ஒரு பரிவு, ஒரு காதல், ஒரு காமம், ஒரு துரோகம்...’ என்று ஏகப்பட்ட ‘ஒரு’க்களை அவர் தொடர்ந்துகொண்டிருக்க, அவரிடம் இருந்து ஒரே ஒரு ‘ஒரு’வை மட்டும் கடன் வாங்கி ‘ஒரு நிமிஷம் சார்’ என்று நண்பரின் அலைபேசி அழைப்பை எடுத்துப் பேசி, அமர்ந்திருந்த இடத்துக்கு வரச்சொன்னான்.

கல்யாணராமன் சாரைப் பார்த்து “சார், நான் ஒரு கவிதை சொல்லலாமா?” என்றான்.

“தாராளமா...” என்றார்.

“எழுத்தாளர் சுந்தர ராமசாமி எழுதிய கவிதை சார் இது. என் ஞாபகத்தில் இருந்து சொல்றேன்.”

“சொல்லுங்க சார்...”

உன் கவிதையை நீ எழுது

எழுது உன் காதல்கள் பற்றி கோபங்கள் பற்றி

எழுது உன் ரகசிய ஆசைகள் பற்றி

நீ அர்ப்பணித்துக்கொள்ள விரும்பும் புரட்சி பற்றி எழுது

உன்னை ஏமாற்றும் போலிப் புரட்சியாளர்கள் பற்றி எழுது

சொல்லும் செயலும் முயங்கி நிற்கும் அழகு பற்றி எழுது

நீ போடும் இரட்டை வேடம் பற்றி எழுது

எல்லோரிடமும் காட்ட விரும்பும் அன்பைப் பற்றி எழுது

எவரிடமும் அதைக் காட்ட முடியாமலிருக்கும்

தத்தளிப்பைப் பற்றி எழுது

Join / Telegram : @Tamil_Books_Library



எழுது உன் கவிதையை நீ எழுது

அதற்கு உனக்கு வக்கில்லை என்றால் ஒன்று செய்

உன் கவிதையை நான் ஏன் எழுதவில்லை என்று

என்னைக் கேட்காமலேனும் இரு”

கல்யாணராமன் சார் கொஞ்ச நேரம் மௌனமாக இருந்தார். சட்டென 'சாரில்' இருந்து தம்பிக்கு மாறி, “ரொம்ப ரொம்ப நல்ல கவிதை தம்பி. அப்படியே அலேக்காத் தூக்கி என் பார்வையை மாத்திப் போட்ருச்சு. உண்மைதான்... அவங்க அவங்க வாழ்க்கையை, அவங்க அவங்க அனுபவத்தை, அவங்க அவங்கதான் எழுதணும்” என்று

Join / Telegram : @Tamil_Books_Library

நெகிழ்ச்சியுடன் சொல்லியபடி, அவரது தோளில் மாட்டியிருந்த ஜோல்னா பையில் இருந்து வாட்டர் பாட்டில் ஒன்றை எடுத்து பிளாஸ்டிக் கப்பில் ஊற்றி இவனிடம் நீட்டினார்.

"குடிங்க தம்பி" என்றார்.

"என்னது சார்?" என்றான்.

"அருகம்புல் ஜூஸ் தம்பி. உடம்புக்கு நல்லது. அடுத்த வாரத்திலேர்ந்து தெம்பா வேடிக்கை பார்க்கலாம். அப்ப நான் கிளம்பறேன். மறுபடியும் சந்திக்கலாம்" என்று விடைபெற்று நடந்து போனார்.

இவன், அவர் செல்வதையும், தூரத்தில் இவன் நண்பர் வருவதையும் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தான்.

Join / Telegram : @Tamil_Books_Library



7

# வயதென்னம் ரயில் வண்டி

*அந்த மாபெரும் வெற்றிடத்தில்*

*முன்னும் இல்லை, பின்னும் இல்லை.*

*பறவையின் பாதை கிழக்கையும் மேற்கையும்*

*அழித்துவிடுகிறது.*

*- ஜென் தத்துவம்*

**பா**ண்டியன் எக்ஸ்பிரஸ் புறப்படுவதற்கு 10 நிமிடங்களே இருந்தன. எக்மோர் வந்து இறங்கி, ஸ்டேஷன் வாசல் சங்கீதாவில் சப்பாத்தி குருமாவும் தயிர்சாதமும் வாங்கிக் கொண்டு, பிளாட்ஃபார்ம் கண்டுபிடித்து, இவன் வண்டியை அடைவதற்கு இரண்டு நிமிடங்களே மிச்சம் இருந்தன.

நடைபாதைக் கடையில், வாழைப்பழமும் தண்ணீர் பாட்டிலும் வாங்கிக்கொண்டு திரும்புகையில், ஒரு ராட்சஸ உலோகப் பாம்பாக, இவன் வண்டி தண்டவாளத்தில் ஊர்ந்துகொண்டிருந்தது. நகரத் தொடங்கியிருந்த வண்டியின் கூடவே ஓடி, இவன் பெட்டியைத் தேடி இருக்கையில் அமர்ந்தான். அதிர்ஷ்டவசமாக இந்த முறை இவனுக்கு ஜன்னல் இருக்கை கிடைத்திருந்தது.

பேருந்தோ, புகைவண்டியோ, ஜன்னல் ஓர இருக்கை என்பது இவனது தீராக் காதல். ஆனால், தொண்ணூறு சதவிகிதப் பயணங்களில் வேறு யாரோ அங்கு அமர்ந்து, வண்டி கிளம்பியதுமே தூங்கி வழிந்துகொண்டிருப்பார்.

பார்ப்பதற்கு நிறையக் காட்சிகளும், படிப்பதற்கு கொஞ்சம்

Join / Telegram : @Tamil_Books_Library

புத்தகங்களும், பழகுவதற்கும் பேசுவதற்கும் எதிரில் அன்பான மனிதர்களும் வாய்த்தால் வாழ்க்கை முழுவதும், இந்த ஜன்னல் ஓரத்து இருக்கையிலேயே வசித்துவிட இவனுக்குச் சம்மதம். ஆயினும்...

போய்க்கொண்டும் வந்துகொண்டும்

இருக்கும் பேருந்துகள்

திருவிழாவுக்குத் திருவிழா

வெளியே வரும் தேர் — என்னும்

கவிஞர் விக்ரமாதித்யனின் கவிதையைப் போல எப்போதாவது வந்தால்தான் ஊர்வலம். எப்போதும் வந்தால் அதில் என்ன ஆச்சர்யம்! தினம் தினம் வந்து கொண்டிருந்தால் வானவில்லை யார் அண்ணாந்து பார்ப்பார்கள்?

இந்தப் பயணம்கூட மதுரையில் ஒரு நண்பரின் திருமணத்தில் கலந்துகொள்வதற்காக கடைசி நேரத்தில் முடிவானதுதான். சாவகாசமாக இவனது லெதர் பேக்கை இருக்கைக்கு அடியில் வைத்துவிட்டு, நிமிர்ந்தபோதுதான், இரண்டு விஷயங்களைக் கவனித்தான். ஒன்று, ரயில் வழக்கமாகச் செல்லும் திசையில் இல்லாமல் பின்பக்கமாக எதிர் திசையில் சென்றுகொண்டிருந்தது. இரண்டு, இவனைத் தவிர, அந்தப் பெட்டியில் யாருமே இல்லை!

எல்லோரும் கடைசி நேரத்தில் வண்டியைத் தவறவிட்டு விட்டார்களா? அது எப்படிச் சொல்லிவைத்தாற்போல் எல்லோரும் தவறவிடுவார்கள். இவன் இருக்கையைவிட்டு எழுந்து, எல்லா இருக்கைகளையும் சென்று பார்த்தான். அந்தப் பெட்டியிலேயே யாரும் இல்லை. ‘பாண்டியன் எக்ஸ்பிரஸில்தான் ஏறியிருக்கிறோமா?’ என்று இவனுக்குச் சந்தேகம் வந்தது. பிளாட்ஃபார்ம் எண் பார்த்து, பெயர்ப் பலகை பார்த்து, எதிரில் சென்றுகொண்டிருந்த டி.டி.ஆர். ஒருவரிடம் விசாரித்துத்தானே வண்டியில் ஏறினான்?!

குழப்பத்துடன் மீண்டும் இவன் இருக்கைக்கு வந்தபோது, எதிர் இருக்கையில் ஒருவர் அமர்ந்திருந்தார். இவனைப் பார்த்து புன்னகையுடன் “வணக்கம்” என்றார். இவனும் வணக்கம் சொல்லிவிட்டு, “சார் இது பாண்டியன் எக்ஸ்பிரஸ் தானே? இந்தப் பெட்டியில் யாருமே இல்லையே...” என்றான்.

“இந்தப் பெட்டியில் மட்டுமில்லை, இந்த ரயில் முழுக்கவும் யாரும் கிடையாது. ஏன்னா, இது ‘கால ரயில்’”” என்றார் அவர்.

இவன் அச்சத்துடன், “கால ரயிலா? அப்படின்னா எந்த ஊருக்குப் போகுது?” என்றான்.

Join / Telegram : @Tamil_Books_Library



அவர் மீண்டும் புன்னகைத்தபடி, “எந்த ஊருக்கும் போகாது. இது கடந்தகாலத்துக்கும், எதிர்காலத்துக்கும் மாறி மாறிப் பயணிக்கிற வண்டி. இப்ப நாம இருக்கிறது நிகழ்காலப் பெட்டி” என்றார்.

இவனது அச்சம் அடிவயிற்றில் அமிலமாகவும், கை, கால்களில் நடுக்கமாகவும் உருமாறத் தொடங்கியிருந்தது. நடுக்கத்துடன், “சார் நீங்க யாரு?” என்றான். இவன் குரல் இவனுக்கே கேட்கவில்லை.

“நானா ...? கடவுள்!” என்றார் அதே சிரிப்புடன்.

இப்போது அச்சத்துடன் திகிலும் இனம்புரியாத ஒரு பரபரப்பும் இவனை ஆட்கொண்டது. அவரை மேலும் கீழும் பார்த்தான். அவரது தோற்றத்தை வர்ணிக்க மனசுக்குள் வார்த்தைகளைத் தேடிக்கொண்டிருந்தபோது, அவரே தொடர்ந்தார்.

“என்னை வர்ணிக்க வீணா முயற்சி பண்ண வேண்டாம். பல நூற்றாண்டுகள், பல கவிஞர்கள், என் தோற்றத்தை வெவ்வேறு விதமாக வர்ணிச்சுப் பார்த்துட்டாங்க. நான் இருப்பதில் இல்லாதவன்; இல்லாதவற்றில் இருப்பவன். எனக்கு முதலும் இல்லை... முடிவும் இல்லை.”

இப்போது இவனுக்கு அவரை ‘சார்’ என்று அழைப்பதா, ‘ஐயா’ என்று அழைப்பதா அல்லது ‘சாமி’ என்று அழைப்பதா... என்று குழப்பமாக இருந்தது.

“என்னை எதுக்கு இந்த வண்டியில ஏத்துனீங்க?” என்றான் பொதுவாக.

“ஏன்னா நீ ஒரு கவிஞன். எனக்கு குழந்தைகளையும் கவிஞர்களையும் ரொம்பப் பிடிக்கும்!”

Join / Telegram : @Tamil_Books_Library

இவன் கொஞ்சம் பயம் குறைந்து, அவரை பக்தியுடன் பார்த்தான்.

“நீ கவிஞன்கிறது மட்டும் காரணம் இல்லே. சாதாரணமா எல்லாரும் எப்போ கடந்தகால நினைவுகளுக்குப் போவாங்க?” என்று கேட்டார்.

பதற்றத்தில் இவனுக்கு ஒன்றும் தோன்றவில்லை. அவரே பதில் சொன்னார். “எல்லோருக்கும் கல்யாண வீடு, மரண வீடு, பண்டிகை, விழாக்கள்... போன்றவற்றில் உறவினர்களையோ, பால்ய கால நண்பர்களையோ சந்திக்கும்போது, பழைய கால ஞாபகம் பளிச்னு நினைவுக்கு வரும்.”

சரிதான் என்று இவனும் ஆமோதித்தான்.

“ஆனா நீங்க கவிஞர்கள், படைப்பாளிகள் என்ன பண்றீங்க? ஒவ்வொரு நாளும் கூடுவிட்டுக் கூடு பாயிற மாதிரி, கடந்தகால நினைவுகளுக்குப் போயிட்டு வர்றீங்க. அந்த அனுபவக் கிடங்குகள்தான் உங்க படைப்புகளுக்கான கச்சாப்பொருள்!”

இவன் பிரமிப்புடன் கேட்டுக்கொண்டிருந்தான்.

“அப்படி ஒவ்வொரு முறையும் நீங்க கடந்த காலத்துக்குப் பயணிக்கிறப்போ, காட்சிகள் சரியாப் பிடிபடாம' வார்த்தைகள்ல கொண்டு வரக் கஷ்டப்படுறதை நான் பார்த்துக்கிட்டுத்தான் இருக்கேன். அதுக்காகத்தான் இந்தக் கால ரயில். கவிஞர்களுக்காகவே தயாரிக்கப்பட்டது. ஏன்னா... கவிஞர்கள் காலத்தின் கண்ணாடிகள்!''

இவன் பிரமிப்புடன், “இந்த ரயில்ல என்ன விசேஷம்?” என்று கேட்டான்.

“இடது பக்கம் போனா ஒவ்வொரு பெட்டியும் கடந்த காலத்துக்குக் கூட்டிட்டுப் போகும். முதல் பெட்டியில் ஐந்து வயது வரை உன் மனசுல பதிந்த காட்சிகளைப் பார்க்கலாம். அடுத்த பெட்டி ஐந்தில் இருந்து பத்து வயசு வரை... இப்படி உன் நிகழ்கால வயசு வரைக்கும் உன் மனசுல இருக்கிற கடந்தகாலக் காட்சிகளை நீ திரும்பவும் பார்க்கலாம். வா போகலாம்” என்றபடி கடவுள் எழுந்து நடக்க, இவன் பின்தொடர்ந்தான்.

முதல் பெட்டிக்குள் நுழைந்தார்கள். முதல் ஐந்து வயது வரை ஞாபகங்கள், கலைடாஸ்கோப் புக்குள் நுழைந்த வளையல் துண்டுகளைப் போல, இவனுக்கு வெவ்வேறு தோற்றங்களைக் காட்டின. சிறுகுழந்தையாகத் தவழ்ந்தபடி ஒரு கட்டெறும்பின் பின்னால் சென்றுகொண்டிருக்கிறான். அந்த எறும்பு, தாழ்வாரத்தைக் கடந்து

Join / Telegram : @Tamil_Books_Library

சுவரில் ஏறுகிறது. இவனும் சுவரில் ஏற முயற்சித்து தலைகுப்புற விழுந்து அழுகிறான். யாரோ ஒரு பாட்டி ஓடிவந்து இவனைத் தூக்கி, வெற்றிலைக் கறையுடன் முத்தம் கொடுக்கிறார். அந்தப் பாட்டியை இவன் எங்கோ பார்த்திருக்கிறான். இது இவன் வீடுதானா? முதலில் இது இவனேதானா? ஏதோ ஒரு கோயில் திருவிழா. பட்டுப்பாவாடை சட்டையுடன் ஒரு சிறுமி ஓடுகிறாள். இவன், அவளது கொலுசு வேண்டும் என்று அடம்பிடிக்கிறான். முதுகில் சுளீர் என்று அடி விழுகிறது. வித்தைகாட்டுபவன் ஒரு கரடியுடன் நுழைகிறான். கதவுக்குப் பின்பக்கம் ஒளிந்தபடி, அந்தக் கரடியையும், அது செய்யும் வித்தைகளையும் இவன் பயத்துடன் பார்த்துக்கொண்டிருக்கிறான்.

இப்படி ஒவ்வொரு காட்சியாக கொலாஜ் ஓவியம்போல் எதிரே தெரிந்துகொண்டிருக்க, இவன் அம்மா இறந்துபோன நான்காம் வயதை அவசரமாகக் கடந்தபடி, "அடுத்த பெட்டிக்குப் போகலாம்" என்றான் கடவுளைப் பார்த்து. இவன் எண்ணத்தைப் புரிந்துகொண்ட கடவுள், "அவ்வளவு சீக்கிரம் எந்த வலியையும் தாண்டிப் போய்விட முடியாது" என்று சொல்லியபடி இவனை அடுத்த பெட்டிக்கு அழைத்துச் செல்கிறார்.

**ந**ண்பர்களுடன் ஆற்றங்கரையில் கபடி விளையாடிக் கொண்டிருக்கிறான். மூச்சைப் பிடித்தபடி கோட்டைத் தொடுகையில், கீழே விழ இவன் முட்டி பெயர்ந்து ரத்தம் கொட்டுகிறது. நண்பர்கள் மண்ணை அள்ளி, ஊதி ஊதி காயத்தின் மேல் பூசுகிறார்கள். மண்ணின் நிறத்தையும் தனக்குள் உள்வாங்கியபடி ரத்தம் கொட்டிக்கொண்டே இருக்கிறது.

வேறு ஒரு காட்சியில் நீச்சல் தெரியாத இவனை, பையன்கள் கிணற்றில் தள்ளிவிடுகிறார்கள். தண்ணீரைக் குடித்தபடி மூச்சுத் திணறி, மேலே வந்த இவன் தலைமுடியை, செந்தில் பிடித்து இழுத்து படிக்கட்டில் அமரவைக்கிறான். கிணற்றின் செங்கல் பொந்தில் இருந்து, ஒரு பாம்பு எட்டிப் பார்க்கிறது. பள்ளி உணவு இடைவேளையில் கே.எஸ். சித்ராவுடன் அப்பா அம்மா விளையாட்டு விளையாடுகிறான். மண்ணில் நீர் குழைத்துச் செய்த இட்லிகளை, அவள் ஆலம் இலைகளில் எடுத்துக் கொடுக்க, இவன் ருசித்துச் சாப்பிட்டு, "அப்புறம் என்ன பண்ணணும்?" என்கிறான். "அப்புறம் என்ன? அப்பா, அம்மாவுக்கு முத்தம் கொடுக்கணும்" - இவன் மூளைக்குள் முதல் காதலும் முதல் காமமும் எட்டிப் பார்க்கின்றன. கடவுள் ஒரு கள்ளச் சிரிப்பை தன் முகத்தில் தவழவிட்டபடி, இவனை அடுத்த பெட்டிக்கு அழைத்துச் சென்றார்.

இப்போது 10-ம் வகுப்பு படிக்கிறான். பள்ளியின் மைதானத்தில் அசோக மரத்தடியில், இவனுடன் அகஸ்டின் செல்லபாபு, கே.கண்ணன், பாலாஜி... எல்லோரும் அமர்ந்து பொதுத் தேர்வுக்காகப் படித்துக்கொண்டிருக்கிறார்கள்.

இவன், ‘I owe to thee, my country… I owe to thee, my country’ என்று மக்கடித்துக்கொண்டிருக்கிறான். அதைப் பார்த்த பாலாஜி, இவன் தலையில் நங்கென்று குட்டியபடி. ‘இப்படியா மக்கடிக்கிறது? எதையும் புரிஞ்சுக்கிட்டுப் படிக்கணும். அப்பத்தான் தெளிவா மனசுல பதியும். உதாரணத்துக்கு $H_2$ன்னா என்ன? ஹைட்ரஜன். $O_2$ ன்னா என்ன? ஆக்ஸிஜன். ரெண்டும் சேர்ந்தா $H_2O$ வரும். அதாவது வாட்டர். நாம குடிக்கிற தண்ணி. இப்பப் படி $H_2 + O_2 = H_2O$’. இவன் சொல்லிப் பார்க்கிறான். மனதுக்குள் உடனே பதிகிறது.

கடவுளுடன் இந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருக்கும் போதே, இவன் கண்களில் நீர் வந்துவிட்டது. இந்த பாலாஜிதான் பின்னாட்களில் 10ம் வகுப்பு முடித்து, பாலிடெக்னிக் சேர்ந்து, திருமணம் முடித்து, அடுத்த ஆறாவது மாதத்தில் ஒரு விபத்தில் சிக்கி இறந்துபோனவன்.



Join / Telegram : @Tamil_Books_Library

“டேய் பாலாஜி, இந்தப் பெட்டியிலயே இரு. அடுத்த பெட்டிக்குப் போனா... நீ செத்துப் போயிருவ” என்று இவன் உரக்கக் கத்தினான். கடவுள் இவன் தோளில் கை வைத்து, “இந்தக் காட்சியை நீ தள்ளியிருந்து வேடிக்கை பார்க்கத்தான் முடியும். நீ சொல்றது அவனுக்குக் கேட்காது. அப்புறம் இன்னொரு விஷயம்... இது ஏற்கெனவே போடப்பட்ட இருப்புப் பாதை. இங்க யாரோட மரணத்தையும் யாராலயும் தடுக்க முடியாது. வா, அடுத்த பெட்டிக்குப் போகலாம்!” என்றார்.

அடுத்தடுத்த பெட்டிகளின் காட்சிகளில் இவன் மனம் ஒன்றாமல் ஏனோ பாரமாகவே இருந்தது.

பிரசன்னா பஸ் சர்வீஸ் புழுதி கிளப்பியபடி வருவது, முதன்முதலில் இவன் கல்லூரிக்குள் நுழைந்தது, இவன் எழுதிய முதல் காதல் கடிதம் கொடுக்கப்படாமல் காத்திருந்தது, கல்லூரி முடித்து சினிமா ஆசையில் சென்னை வந்தது, பாலு மகேந்திரா சாரிடம் உதவி இயக்குநராக உலகப் படங்கள் பார்த்துத் திரிந்தது, எழுத்தாளர் சுஜாதா இவனுடைய ‘தூர்’ கவிதையை ஒரு மேடையில் வாசித்துக் காட்டிப் பரவசப்பட்டது, அறிவுமதி அண்ணனுடன் கவியரங்குகளில் கைதட்டல்கள் வாங்கியது, சீமான் அண்ணன் அறிமுகப்படுத்த முதல் பாடல் பதிவானது, இவன் மனைவியைப் பெண் பார்க்கச் சென்றது, அப்போது தான் பிறந்த அணில் குஞ்சைப் போலிருந்த இவன் மகனை ஒரு நர்ஸ் உள்ளங்கையில் கிடத்தியபோது தன் ரத்தச்சூட்டை உணர்ந்தது... என ஒவ்வொரு காட்சியிலும் இவன் திண்டாடிக் கொண்டிருந்தான்.

கடந்தகாலத்தில் நுழைவது இவ்வளவு இன்பமா அல்லது இத்தனை துன்பமா? இல்லை இன்பம் கலந்த துன்பமா? இவனுக்குச் சொல்லத் தெரியவில்லை.

“நாம நிகழ்காலத்துக்கே திரும்பிவிடலாம்” என்றான் கடவுளிடம்.

நிகழ்காலப் பெட்டிக்கு வந்ததும், “இந்தப் பக்கம் இருப்பது எதிர்காலப் பெட்டிகள். நாற்பது வயசுக்குப் பிறகு, உனக்கு என்ன நடக்கப்போகுதுனு தெரிஞ்சுக்க விருப்பமா? வண்டியை எதிர்ப்பக்கம் விடச் சொல்றேன்!” என்றார் கடவுள்.

“வேண்டாம். நாளைக்கு என்ன நடக்கப் போகுதுனு தெரிஞ்சுக்கிட்டா, வாழ்க்கையில சுவாரஸ்யம் இருக்காது. வண்டியை நிறுத்தச் சொல்லுங்க. நான் இறங்கிக்கிறேன்!” என்றான்.

வண்டி நின்றது. இவன் இறங்கி ஸ்டேஷன் பெயர்ப் பலகையை வாசித்தான். விழுப்புரம் ஜங்ஷன்.

Join / Telegram : @Tamil_Books_Library

"தினமும் புதுசு புதுசா ஏதாவது படைச்சுக்கிட்டே இரு. அதுதான் உன்னைத் தக்கவைக்கும்!" என்றார் கடவுள்.

இவன் புன்னகையுடன் அவருக்குக் கையாட்டி விடை கொடுத்துவிட்டு, அடுத்த மதுரை வண்டிக்காகக் காத்திருக்கத் தொடங்கினான்!

Join / Telegram : @Tamil_Books_Library




## பள்ளித் தலமனைத்தும்...

*“உண்மையில், பள்ளிக்கூடம் எனக்கு அவ்வளவு பிடிக்கும் என்று நான் நினைக்கவே இல்லை. திடீரென என் உலகம் மிகவும் பெரிதாகிவிட்டது. வீட்டைவிட்டு தினமும் வெளியே செல்வதற்கு இப்படி ஓர் அற்புதமான உபாயம் இருக்கும் என்று நான் நினைக்கவே இல்லை. ஒவ்வொரு நாளும் அடுத்த நாள் பள்ளிக்குச் செல்வதை நினைத்துக்கொண்டே தூங்கப் போவேன்!”*

*- மனுஷ்ய புத்திரன்*

ஐந்தாம் வகுப்பு முடித்து காஞ்சிபுரத்தில் அந்திரசன் மேல்நிலைப் பள்ளியில் இவன் ஆறாம் வகுப்பு சேர்ந்தான். சென்னை கிறிஸ்துவக் கல்லூரியைக் கட்டிய ஆண்டர்சன் என்கிற வெள்ளைக்காரர், 1837-ம் ஆண்டு கட்டிய கிறிஸ்துவ மிஷினரி பள்ளி அது. பெருந்தலைவர் காமராஜர் ஆட்சிக் காலத்தில், கல்வித் துறை இயக்குநராக இருந்த நெ.து.சுந்தர வடிவேலு படித்த பள்ளி. களிமண்ணாக உள்ளே நுழைந்த இவனை கவிஞனாக வனைந்து வெளியே அனுப்பியதில் அந்தப் பள்ளிக்கும் பெரும் பங்கு உண்டு.

பள்ளி தொடங்கிய முதல் நாளன்று அப்பாவுடன் சைக்கிளில் சென்ற பயணம், நேற்று நடந்ததுபோல் இப்போதும் இவன் நினைவில் நிற்கிறது. காக்கி டவுசர், வெள்ளைச் சட்டை, சிவப்பு டை அணிந்து, ஷூ மாட்டி சைக்கிளின் பின் இருக்கையில் அமரும் வரை குதூகலமாகத் தான் இருந்தான்.

இவன் கிராமத்தைத் தாண்டியதும், அப்பா, “நானும் இந்த ஸ்கூல்லதான்டா படிச்சேன். எங்க காலத்துல ரொம்ப ஸ்டிரிக்ட்டா

Join / Telegram : @Tamil_Books_Library

இருந்திச்சு. இங்கிலீஷ்ல கேள்வி கேப்பாங்க. சமாளிச்சிடுவியா?” என்று கேட்டார்.

இவன் மனதுக்குள் ‘ஏ’-வில் இருந்து ‘இஸட்’ வரை, ஆங்கில எழுத்துகளைச் சொல்லிப் பார்த்துக்கொண்டான். ‘என்ன கேள்வி கேட்டாலும் இந்த 26 எழுத்துக்குள்ளதான கேப்பாங்க’ என்று நினைத்தபடி, தலையாட்டினான். ஆனால், வடக்கு மாடவீதி, செட்டித் தெரு, ரங்கசாமி குளம், தேரடி வீதி, மூங்கில் மண்டபம் என்று ஒவ்வோர் இடத்தையும் சைக்கிள் கடந்துகொண்டிருந்த போது முன்பு படித்த கிராமத்துப் பள்ளியைப் பிரிந்த ஏக்கமும், புதிதாகச் சேரப்போகும் பள்ளியின் சூழல் குறித்த அச்சமும், இவனை பொன் வண்டாக்கி, கழுத்தில் நூல் கட்டி, அடிவயிற்றுப் பயத்துடன் அந்தரத்தில் பறக்கவிட்டுக் கொண்டிருந்தது.



இவன் பள்ளி இருந்த தாலுகா அலுவலக வளாகத்துக்குள்,

Join / Telegram : @Tamil_Books_Library

அப்பாவின் சைக்கிள் நுழைந்தது. இந்தப் பக்கம் வட்டாட்சியர் அலுவலகம். அதற்குப் பக்கத்தில் காவல் நிலையம். காவல் நிலையத்துக்கு முன்பாக, விபத்துக்குள்ளான நசுங்கிய கார்கள் மழையில் துருப்பிடித்துக்கிடந்தன. கூடவே மோட்டார் சைக்கிள்களும் மிதி வண்டிகளும். அந்த இரும்புக் குவியலில் நசுங்கிக்கிடந்த ஒரு காரில், பலூன் போன்ற ஹாரனை இவனைப் போலவே யூனிஃபார்ம அணிந்த ஒரு வளர்ந்த பையன் 'பீம்... பாம்' என்று அடித்துக்கொண்டிருந்ததைப் பார்த்து, இன்டர்வெல் கேப்பில் விளையாடுவதற்கு நல்ல இடம் கிடைத்தது என்று இவன் சந்தோஷப்பட்டான்.

காவல் நிலையத்துக்கு அருகில் இருந்த நீதிமன்ற வாசலில் கைகளில் விலங்குடன் லுங்கி கட்டிய ஒரு கைதி குத்துக்காலிட்டு அமர்ந்திருக்க, அந்தக் கைதியின் வாயில் பீடி ஒன்றைச் செருகி, கான்ஸ்டபிள் ஒருவர் பற்ற வைத்துக் கொண்டிருந்தார். அந்தக் கைதி இரண்டு இழுப்பு, இவர் இரண்டு இழுப்பு என்று சாவகாசமாகப் பேசியபடி பிடி குடிப்பதைப் பார்க்கையில் இவனுக்கு ஆச்சர்யமாக இருந்தது. இவன் கிராமத்தில் நண்பர்களுடன் விளையாடும் திருடன் போலீஸ் ஆட்டத்தில், திருடன் எப்போதுமே போலீஸுக்கு எதிரி. 'இப்படியும் நடக்குமா?!' என்று இவன் மீண்டும் ஆச்சர்யப்பட்டான்.

நீதிமன்றத்துக்கு இடது பக்கம் தீயணைப்பு நிலையம். பக்கத்தில் கருவூலம். இவற்றுக்கு மத்தியில் இவன் பள்ளி இருந்தது. வாசலில் இறக்கி விட்டுவிட்டு அப்பா சொன்னார். 'பத்திரமாப் போயிட்டு வா. சாயங்காலம் கேட்ல வெயிட் பண்றேன்!'

**மி**கப் பெரிய இரும்பு கேட்டைக் கடந்து இவன் உள்ளே நுழைந்தான். எதிரில் தெரிந்த கட்டடத்தின் சுவற்றில் பாதி அளவுக்கு தாடி வைத்திருந்த ஒருவரின் ஓவியத்தை வரைந்திருந்தார்கள். அதற்கு கீழே இருந்த வாசகத்தை இவன் எழுத்துக் கூட்டிப் படித்தான். 'வருத்தப்பட்டு பாரம் சுமப்பவர்களே என்னிடத்தில் வாருங்கள். இளைப்பாறுதல் தருவேன்'. இவனுக்கு அந்த வாசகம் பிடித்திருந்தது. இவனை அறியாமல் முதுகில் மாட்டியிருந்த புத்தகப் பையை ஒருமுறை தொட்டுப் பார்த்துக்கொண்டான்.

அந்த ஓவியத்தில் வரைந்திருந்த நபரின் முகத்தில் ஒரு பெண் சாயல் இருந்தது. தீட்சண்யமான கண்களுடன் அந்த முகத்தில் தெரிந்த ஏதோ ஒரு கனிவு, இவனுக்கு இவன் தாய் முகத்தை ஞாபகப்படுத்தியது. அவர்தான் 'யேசு' என்றும், 'கிறிஸ்துவர்களின் கடவுள்' என்றும் பின்னாட்களில் இவன் அறிந்துகொண்டான். அந்த ஓவியத்துக்குக் கீழே ஒரு பலகையில், 'இது என் பள்ளி. என் பள்ளி என்னால் பெருமை அடைய வேண்டும்' என்று எழுதியிருந்தது. இவன் கர்த்தரின் கரங்களைப் பிடித்தபடி உள்ளே நடந்துபோனான்.

Join / Telegram : @Tamil_Books_Library

பர்மாவில் இருந்து தேக்கு மரங்களை கப்பல்களில் கொண்டுவந்து சுண்ணம் அரைப்போரும், சுண்ணாம்பு இடிப்போரும் இரவு பகல் உழைக்க, ஆண்டர்சன் துரை என்கிற வெள்ளைக்காரன் கட்டிய கட்டடம் இவன் முன் விரிந்தது. ஆங்கிலேயன் கட்டிய பள்ளி என்பதால், ஆங்கிலம் இவனுக்கு விரோதியாக இருந்தது. அச்சமும் பயமும் இவன் பாடங்களாக இருந்தன.

பள்ளிக்கூடத்தைப் பற்றி நினைக்கையில் வகுப்பறைகளை விட, வெளியே இருக்கிற மரங்களும் மைதானமும்தான் இவன் நினைவுக்கு வருகின்றன. இவன் பள்ளி மைதானத்தில் நட்டுவைத்த குடைகள் போல அசோக மரங்கள் வரிசையாக நின்றிருக்கும். அசோக மரத்து பழங்களுக்கும் நாவல் பழங்களுக்கும் ஆறு வித்தியாசங்கள் கண்டுபிடிக்கச் சொன்னால், ஆண்டவனால் கூட கண்டுபிடிக்க முடியாது. இரண்டின் நிறமும் வடிவமும் ஒரே கிளையில் கருவானவையோ என வியக்கவைப்பவை. மீசை வைத்து பென்னாம்பெரிய மிதி வண்டியில் வரும் பெரிய வகுப்பு மாணவர்கள், முதல் நாள் பள்ளியில் நுழைந்த அன்று நாவல் பழம் என்று ஏமாற்றி, அசோகப் பழங்களைக் கொடுத்து இவனிடம் இருந்து காசு பறித்தார்கள். முதல்முறையாக வகுப்பறை சொல்லித்தராத வணிகவியல் இவனுக்கு அறிமுகமானது.

ஒருமுறை, கள்ளச் சாராய கேன்களைக் கையகப்படுத்தி காவல் நிலையத்தின் வாசலில் வைத்து தீ ஊற்றி எரித்தார்கள். அந்தக் காற்றின் வாசம் வேதியியலை இவனுக்கு அறிமுகப்படுத்தியது.



இப்படி இப்படி, ஐந்து பைசாவுக்கு பத்து கடலைகள் கொடுக்கும் பாட்டிக் கடை கணிதத்தையும், உடைந்த அரச மரக் கிளைப்

Join / Telegram : @Tamil_Books_Library

பொந்திலிருந்து அவ்வப்போது பகலில் எட்டிப் பார்த்து, திரும்பவும் பொந்துக்குள் நுழையும் ஆந்தை விலங்கியலையும், ஆசிரியர்களிடம் நல்ல பெயர் எடுக்க, கிராமத்து மாணவர்கள் கிளிப் பச்சை நிறத்துடன் ஒடித்து வந்து நீட்டும் மூங்கில் கழிகள் தாவரவியலையும், படம் வரைந்து பாகம் குறித்த கழிவறைகள் உயிரியலையும், மேற்கூரைக் கண்ணாடிச் சட்டகத்தில் இருந்து உள் நுழைந்து, கரும்பலகையில் எழுதிக்கொண்டிருக்கும் சந்திரசேகர் மாஸ்டரின் முதுகில் விழுந்து, c=3x108 m/sec வேகத்தில் பயணிக்கும் சூரிய வெளிச்சம் இயற்பியலையும், பள்ளிக்குப் பின்புறம் பாலித்தீன் கவர்கள் மிதந்தோடும் செங்கழு நீரோடையின் பின்னணியில் ஒன்றில் இருந்து ஒன்று கிளை பிரியும் ஒற்றையடிப் பாதைகள் புவியியலையும், முன்புக்கும் முன்பு பத்தாம் வகுப்புத் தேர்வில் ஃபெயிலானதால் தூக்குப் போட்டு இறந்த பழைய மாணவன் ஒருவனைப் பற்றிய வதந்திகள் வரலாற்றையும், ‘As I am suffering from fever’ என்று தொடங்கி எழுத்துப் பிழைகளோடு எழுதப்படும் விடுமுறைக் கடிதங்கள் ஆங்கிலத்தையும் அறிமுகப்படுத்தின.

எல்லோருக்கும் போலவே இவனுக்கும் இவன் பள்ளி, வகுப்பறைக்கு வெளியேதான் பாடங்களைக் கற்றுத்தந்தது. ஆயினும் என்ன? கற்றுத்தர மட்டுமா பள்ளிகள்? பள்ளியைப் பற்றி நினைக்கையில், ப்ளஸ் டூ படிக்கையில் இதே ஆனந்த விகடனில் இவன் எழுதிய கவிதைதான் இவனுக்கு ஞாபகம் வருகிறது. ‘பள்ளி’ என்ற தலைப்பிலான அந்தக் கவிதை,

தண்டவாளத் துண்டு
காற்றில் ஒலி எழுப்ப
ஆரம்பம் அதன் இயக்கம்.

நீராருங் கடலுடுத்த
பாடத் துவங்குகையில்
டியூஷன் எடுத்த களைப்பில்
கொட்டாவி விடும் ஆசிரியர்கள்.

மர பெஞ்சில் பெயர் செதுக்கி
முத்திரை பதிக்கும் மாணவர்கள்.
இன்ஸ்பெக்ஷனுக்காய் வாங்கிய
கட்டுரை நோட்டு

Join / Telegram : @Tamil_Books_Library

*அடுத்த மாதம் எடைக்கு வர*

*அட்டையுடன் காத்திருக்க*

*பாடத்தில் இல்லாத*

*பாலியல் கல்வி*

*பாத்ரூமில்.*

*யாரும் மெனக்கெடாமலே*

*வருடந்தோறும் உருவாகிறார்கள்*

*சில அறிவாளிகளும் முட்டாள்களும்.*

இவன் அறிவாளியா... முட்டாளா என்று இவனுக்குத் தெரியாது. சில வருடங்களுக்கு முன்பு, இவன் பள்ளியில் நடந்த தமிழ் மன்றத் தொடக்க விழாவுக்குச் சிறப்பு விருந்தினராக இவனை அழைத்திருந்தார்கள். துருப்பிடித்த பள்ளியின் இரும்புக் கிராதிக் கேட்டினைத் திறந்து இவனை வரவேற்றார்கள். முன்பு ஒவ்வொரு முறை அதைக் கடந்து உள்ளே நுழையும்போதும் அடிவயிற்றில் இருந்து மேலெழும் ஒரு பயம் தன் பழைய பாசத்துடன் மேலே வந்தது. பரிசுத்த ஆவியின் பெயரால் இவன் பள்ளிக்குள் நுழைந்தான். காலை பிரார்த்தனை நேரத்தில் ‘ஜபம் செய்வோம்’ என்ற குரல் கேட்டு எத்தனை முறை மண் தரையில் முட்டி போட்டிருப்பான். அந்த மண் துகள்கள் இன்று எங்கு போய் உதிர்ந்தன?

‘இதோ 10-ம், 12-ம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வு எழுதப் போகும் மாணவர்களை ‘உமது பாதங்களில் ஒப்படைக்கிறோம் எமது ராஜ்ஜா... அவர்கள் படித்தது மனதில் பசுமரத்தில் அடித்த ஆணிபோல் பதியவும், அவர்களால் நமது பள்ளி மென்மேலும் உயரவும் ஆசீர்வதியும் எம் ராஜ்ஜா...’ என்கிற பால்பாண்டி மாஸ்டரின் குரலும், அதை தொடர்ந்து ஒலிக்கிற ‘ஆத்துமமே என் முழு உள்ளமே...’ என்ற பாடலும் காற்றின் அலைகளில் கரையாமல் ஒலிக்கின்றன.

பள்ளியின் அப்போதைய தலைமை ஆசிரியரும், சிறந்த சிறுகதை எழுத்தாளருமான அ.எக்பர்ட் சச்சிதானந்தம், நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்க, இவன் தமிழ் ஆசிரியர்களான புலவர் வே.கணேசன், சாலமன் ஜெயக்குமார் வாழ்த்துரை வழங்க விழா முடிந்தது.

**மா**ணவர்கள் விடைபெற்றுப் போன பின் மாலையில், இவன் படித்த ஒவ்வொரு வகுப்பிலும் மீண்டும் நுழைகிறான். ஆதிக் கருவறையின் இருளும் ஒளியும் கலந்த அறைகள். 8-ம் வகுப்பு ‘அ’ பிரிவில் நுழையும்போது மட்டும், இவனை அறியாமல் தேகம்

Join / Telegram : @Tamil_Books_Library

சில்லிடுகிறது. அதோ இவன் அமர்ந்து எழுதிய பர்மா தேக்கு மேஜை. மீண்டும் இவன் பால்ய வயதுக்குள் சென்று, காக்கி கால் சட்டையும், வெள்ளைச் சட்டையும் அணிந்து அமர்கிறான். பிரில் இங்க் கரை படிந்த பழைய மேஜையில் இவன் எப்போதோ உணவு இடைவேளையின்போது, காம்பஸ் முனைகளால் கிறுக்கிய N.M.K. என்ற எழுத்துகள் இன்னும் அழியாமல் இருக்கின்றன. ஒரு கணம் இனம்புரியாத உணர்வுக்குள் மூழ்கித் திரும்புகிறது மனது. இதோ இவன் தொலைத்த பால்யத்தின் மிச்சம். பதின் வயதுகளின் ஒரு துண்டு. இவன் கடவுளாக இருந்தபோது இவனுக்குள் இருந்த சாத்தான் உரித்த பாம்புச் சட்டை.

**எ**ல்லோரும் வழியனுப்ப, பள்ளியைவிட்டு வருகையில் தாலுகா ஆபிஸ் மைதானத்தில் அதே பழைய காசியண்ணன், கொஞ்சம் முதிர்ந்த தோற்றத்துடன் ஐஸ் விற்றுக்கொண்டு இருந்தார். எத்தனையோ முறை அவரிடம் கடன் சொல்லி குச்சி ஐஸும் சேமியா ஐஸும் வாங்கிச் சாப்பிட்டிருக்கிறான்.

காரை விட்டு இறங்கி இவனை அறிமுகப்படுத்திக் கொண்டான். அவர் முன் நிழலாடிய பல பிஞ்சு முகங்களில் இவன் முகமும் பெயரும் ஞாபகத்துக்கு வரும் என்று எப்படி இவன் எதிர்பார்க்க முடியும்?

“அண்ணே ஒரு சேமியா ஐஸ் குடுங்கண்ணே” என்றான்.

“அதெல்லாம் இப்ப யாரு தம்பி கேக்கிறாங்க? மேங்கோ, ஆரஞ்சு ரெண்டுதான் இருக்கு. உனக்கு என்ன வேணும்"? என்றார்.

“ஒரு மேங்கோ குடுங்கண்ணே...” என்று கூறி 100 ரூபாயை நீட்டினான்.

கொடுத்த ரூபாயைத் திருப்பித் தந்துவிட்டு, “சினிமாவுல பாட்டெல்லாம் எழுதறனு சொல்ற. அண்ணன மறக்காம வந்து ஐஸ் கேட்ட பாரு. அது ஒண்ணே போதும் தம்பி. காசு பணமெல்லாம் வேணாம்” என்று சொல்லிவிட்டு தன் முன் இருந்த ஐஸ் பெட்டிக்குள் குனிந்தார். அதில், ‘காலம்’ கட்டிக் கட்டியாக உறைந்து கிடந்தது!

Join / Telegram : @Tamil_Books_Library

9

# எமக்குத் தொழில் கவிதை

*முதலாளிமார்கள்*

*விரல் எல்லாம் மோதிரங்கள்*

*மனசெல்லாம் தந்திரங்கள் !*

*-கவிஞர் விக்ரமாதித்யன்*

ஒவ்வொரு கோடை விடுமுறையின் போதும், இவனுக்குள் கோடீஸ்வரக் கனவு ஒன்று பூக்கத் தொடங்கும். ஒன்பதாம் வகுப்பு படிக்கையில் தெற்கு மாட வீதி கிளை நூலகத்தில் இவன் வாசித்த 'நீங்களும் கோடீஸ்வரர் ஆகலாம்' என்ற புத்தகமே அதற்குக் காரணம்.

ஒவ்வொரு பக்கமாக அந்தப் புத்தகத்தைப் புரட்டிக் கொண்டிருக்கும்போது, இவன் சஃபாரி சூட் அணிந்து காரில் இருந்து இறங்குவதுபோலவும், இவனிடம் வேலை செய்யும் நூற்றுக்கணக்கானவர்கள் இவனுக்கு வணக்கம் வைப்பதுபோலவும், லயன்ஸ் கிளப், ரோட்டரி கிளப் என்று சினிமாவில் பார்த்த கிளப்களில் எல்லாம் இவன் தலைமை உரை ஆற்றுவதுபோலவும் கனவு காணத் தொடங்குவான்.

விக்ரமாதித்யனைப் பிடித்த வேதாளம் போல, அந்தப் புத்தகம் இவன் தோளில் தொற்றிக்கொண்டு, பல்வேறு சுயமுன்னேற்ற, தன்னம்பிக்கை நூல்களை நோக்கி இவனை அழைத்துச் சென்றது. 'சிறு தொழில் பெரும் லாபம்', '30 நாட்களில் முன்னேறுவது எப்படி?', 'கோபுரத்தில் ஏறியவர்கள்', 'டாடாவுக்கே டாட்டா காட்டலாம்', 'வா இளைஞனே வளரத் தொடங்கு!' என்று யார் யாரோ எழுதிய

Join / Telegram : @Tamil_Books_Library

*புத்தகங்கள் எல்லாம் இவன் மூளைக்குள் முகாமிட்டு 'காசேதான் கடவுளடா... அந்தக் கடவுளுக்கும் இது தெரியுமடா...' என்று பாடத் தொடங்கின.*

***அ**டுத்த நாள் காலையில் தொழிலதிபர் கனவில் இவன் திளைத்துக்கொண்டிருந்தபோது, இவன் ஆயா இவனை எழுப்பி "காபித் தூள் தீர்ந்துபோச்சுடா... அண்ணாச்சி கடைல ஒரு பாக்கெட்டு வாங்கிட்டு வா" என்று கையில் பத்து காசைக் கொடுக்க, இவன் 'ஊட்டியில் காபி எஸ்டேட் ஒன்று வாங்க வேண்டும்' என்ற கனவுடன் ஓடத் தொடங்கினான்.*

*ஆனால், யதார்த்தம் வேறு என்று அன்று இவன் அறிந்தானில்லை. அன்று முதல் இன்று வரை, இவன் சட்டைப் பாக்கெட்டிலும், கால் சட்டைப் பாக்கெட்டிலும் ஏதோ ஒரு மாய ஓட்டை இருந்துகொண்டுதான் இருக்கிறது. இவனிடம் காசு இருக்கும்போதெல்லாம் அந்த மாய ஓட்டை வழியே நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் அள்ளிக் கொடுத்துவிட்டு, அடுத்த வார செலவுக்கு யாரிடம் கடன் வாங்கலாம் என்று யோசித்துக்கொண்டிருப்பான். இப்படி வாழ்வதும் இன்னோர் ஆனந்தம்தான் இவனுக்கு!*

***து**ருப்பிடித்த சைக்கிளில் 'தொழிலதிபர்' கனவில் இவன் சுற்றிக்கொண்டிருப்பதை அறிந்த இவன் தந்தை, சென்னையில் சிறு தொழில் பற்றி நடந்த பயிற்சி வகுப்பு ஒன்றுக்கு இவனை அனுப்பிவைத்தார். அப்போது இவன் வீட்டுக்கு வந்து கொண்டிருந்த சிறு பத்திரிகைகளில் 'சிந்தனையாளன்' பத்திரிகையும் ஒன்று.*

*சிந்தனையாளன் பத்திரிகையில் அரசியல் இலக்கியம் குறித்த கட்டுரைகள் எழுதிக்கொண்டிருந்த எழுத்தாளர் சங்கமித்ராதான், அந்த இரண்டு நாள் பயிற்சி முகாமை நடத்தினார். சுற்றிலும் நடுத்தர வயதினர்கள் அமர்ந்திருக்க, அப்போதுதான் மீசை அரும்பத் தொடங்கியிருந்த மாணவனாக, கையில் குறிப்பேட்டுடன் சிறு தொழில்கள் குறித்தும், சுயமுன்னேற்றம் குறித்தும் அவர் சொல்வதை இவன் குறிப்பு எடுத்துக்கொண்டிருந்தான்.*

Join / Telegram : @Tamil_Books_Library



அந்தப் பயிற்சி முகாமில்தான் இவன், கவிஞர் மு.சுயம்புலிங்கத்தைச் சந்தித்தான். ‘நாட்டுப் பூக்கள்', ‘ஊர்க் கூட்டம்’ என்னும் தலைப்பிலான கவிதைத் தொகுப்புகளுக்கு சொந்தக்காரர். கரிசல்காட்டு இலக்கியத்தில் கி.ரா- வுக்குப் பிறகு குறிப்பிடத்தகுந்தவர். அவர் எழுதிய கவிதை ஒன்றை தூக்கத்தில் எழுப்பிக் கேட்டாலும் இவன் வரிவிடாமல் சொல்வான். அப்படிச் சொல்லும்போதெல்லாம் நெஞ்சை கனக்கச் செய்யும் அந்தக் கவிதை.

நாங்கள் சந்தோசமாக இருக்கிறோம்.
எங்களுக்கு ஒரு குறையும் இல்லை.

டவுசர் இல்லையென்று குழந்தைகள் அழும்
ஒரு அடி கொடுப்போம்.
வாங்கிக்கொண்டு ஓடிவிடுவார்கள்.

தீட்டுக் கறை படிந்த
பூ அழிந்த சேலைகள்
பழைய துணிச் சந்தையில்
சகாயமாகக் கிடைக்கின்றன.

இச்சையைத் தணிக்க
இரவில் எப்படியும் இருட்டு வருகிறது.

Join / Telegram : @Tamil_Books_Library

*கால் நீட்டி தலை சாய்க்க*
*தார் விரித்த பிளாட்பாரம் இருக்கிறது.*
*திறந்தவெளிக் காற்று யாருக்குக் கிடைக்கும்?*

*எங்களுக்குக் கொடுப்பினை இருக்கிறது.*
*எதுவும் கிடைக்காதபோது*
*களிமண் உருண்டையை வாயில் போட்டு*
*தண்ணீர் குடிக்கிறோம்*
*ஜீரணமாகிவிடுகிறது.*

*எங்களுக்கு ஒரு குறையும் இல்லை*
*நாங்கள் சந்தோசமாக இருக்கிறோம்!'*

*பயிற்சி முகாமின் இரண்டு நாட்களிலும் இவன், கவிஞர் மு.சுயம்புலிங்கத்தையே வியந்தபடி பார்த்துக் கொண்டு இருந்தான். சிவப்பாக, ஒல்லியான தோற்றத்துடன் இருக்கும் இவரா,*

*அதோ மேகங்கள்*
*மழையைக் கொண்டுபோகின்றன.*
*நம்முடைய குளங்கள்*
*வறண்டுவிட்டன.*
*நம்முடைய பயிர்கள்*
*வாடிவிட்டன.*
*விடாதே!*
*மேகங்களை மடக்கு.*
*பணிய வை!*

*-போன்ற கவிதைகளை எழுதியவர்!*

*அந்தப் பயிற்சி வகுப்பிலும் அவர் ஒரு கவிதை படித்தார். எளிமையான வார்த்தைகளுடன் சிறு தொழில் செய்ய தன்னம்பிக்கை கொடுத்த அந்தக் கவிதை, இப்போதும் இவன் நினைவில் நிற்கிறது.*

Join / Telegram : @Tamil_Books_Library



*புளிய மரத்தடியில்*

*பாய், பிரியாணி விற்கிறார்.*

*சுவையாக இருக்கிறது.*

*ஆரோக்கியமாகவும் இருக்கிறது.*

*மக்கள் விரும்பிச் சாப்பிடுகிறார்கள்*

*நாம் ஏன் முயற்சிக்கக் கூடாது?*

கவிதையைத் தொடர்ந்து, தாம்பரத்தை அடுத்த பெருங்களத்தூரில் தான் ஒரு மிட்டாய்க் கடை நடத்துவதையும்' அதில் சந்திக்கும் சிக்கல்களையும் அவர் பேசத் தொடங்க, இவன் அண்ணாந்து வாய்பிளந்து கேட்டுக்கொண்டிருந்தான்.

**ஊ**ருக்குத் திரும்பியதும் “என்னடா.. பயிற்சி வகுப்பு எப்படி இருந்துச்சு?” என்று அப்பா இவனிடம் கேட்க, “நல்லா இருந்துச்சுப்பா. இந்த லீவுல நம்ம திண்ணையிலேயே நான் பெட்டிக் கடை வெக்கப் போறேன்” என்று இவன் சொல்ல, அப்பா சம்பளப் பணத்தில் இருந்து 500 ரூபாயை எடுத்துக் கொடுத்தார்.

**அ**டுத்த நாள் அதிகாலை அப்பா, இவனை காஞ்சிபுரம் ராஜாஜி மார்க்கெட்டில் இருந்த ஹோல்சேல் கடை ஒன்றுக்கு அழைத்துச்

Join / Telegram : @Tamil_Books_Library

சென்றார். பிஸ்கட்டுகள், கலர்கலரான மிட்டாய்கள், கமர்கட்டு, தட்டை, முறுக்கு, லக்கி பிரைஸ் அட்டை, பென்சில்கள், பல்பம், எலந்தப்பழ ஊறுகாய் அட்டை என்று இவனுக்குப் பிடித்த எல்லாவற்றையும் தேடித் தேடிக் கொள்முதல் செய்தான்.

காலி ஹார்லிக்ஸ் பாட்டில்களிலும், பிளாஸ்டிக் டப்பாக்களிலும் தின்பண்டங்களை அடைத்து, மற்ற பொருள்களை கயிறு கட்டிக் கூரையில் இருந்து தொங்கவிட்ட பின், இவனது பெட்டிக் கடை திண்ணையில் தயாராகி விட்டது. ஜி.நாகராஜன் எழுதிய 'நாளை மற்றுமொரு நாளே' என்ற புத்தகத்தை வாசித்தபடி, வாடிக்கையாளர்களுக்காகக் காத்திருக்கத் தொடங்கினான். காலையில் இருந்து மதியம் வரை வெவ்வேறு இடங்களில் வட்டம் வட்டமாக விழுந்து கொண்டிருந்த வெயில் மட்டுமே இவன் வாடிக்கையாளராக இருந்தது.

பூக்கடைக்கே விளம்பரம் தேவைப்படும்போது பெட்டிக் கடைக்கு வேண்டாமா? நண்பர்களின் வீடுகளுக்குச் சென்று, கடை ஆரம்பித்திருப்பதைச் சொல்லிவிட்டு வந்தான். ஆர்வமாக வந்து மிட்டாய்களையும் பிஸ்கட்டுகளையும் அள்ளிக்கொண்டு கடன் சொன்னார்கள். இவன் 'கடன் அன்பை முறிக்கும்' ஸ்டிக்கரைக் காட்டியபோது, “அப்ப போன வாரம் என்கிட்ட நெல்லிக்காய் வாங்கிச் சாப்பிட்டியே. நான் காசு கேட்டேனா?” என்று எதிர்க் கேள்வி கேட்க கேட்க, அந்தக் கேள்வியில் இருந்த நியாயம் புரிந்து, இவனும் கடன் கொடுக்கத் தொடங்கினான்.

இப்படியாக இவனுடைய முதல் முதலீடு இவனும், நண்பர்களும், இன்னும் பல எறும்புகளும், வீட்டுக்கு வந்த விருந்தினர்களும் தின்றது போக, 35 ரூபாயில் முடிந்திருந்தது.

அதை அப்பாவிடம் கொடுத்தான். அவர் சிரித்தபடி வாங்கிக்கொண்டு “அடுத்து என்ன?” என்றார்.

இவன் சற்றும் மனம் தளராமல் “ஊதுவத்தி தயாரிக்கப் போறேன்” என்றான்.

ஏகப்பட்ட கச்சாப் பொருள்களுடன் புத்தகங்களைப் படித்து இவன் தயாரித்த ஊதுவத்திகள் வாசனை தர மறுத்தன. ஏனென்றால், அவை எரியவே மறுத்தன. அந்தத் தொழில் அதோடு அணைந்துபோனது. அடுத்து இவன் தயாரிப்பில் வெளிவந்த 'பபுள்ஸ் ஷாம்பு' ஊதுவத்தியைப் போல் ஏமாற்றாமல், அதிகமாகவே நுரைகளைக் கொடுத்த போதிலும், இவன் கிராமத்தில் எல்லோரும், பம்ப் செட்டில் தேங்காய் நாரைத் தேய்த்துக் குளிப்பதால், அந்த ஷாம்புகளின் நீர்க்குமிழ்கள் உடைந்துபோயின. இத்துடன் தமிழகம்

Join / Telegram : @Tamil_Books_Library

*இரண்டாவது ஜி.டி.நாயுடுவை இழந்தது.*

*அப்போதுதான் இவனுக்குள் அந்தத் 'தங்க மீன்கள்' திட்டம் உருவாகத் தொடங்கியது. நகரத்தில் வசித்த நண்பர்களின் வீடுகளில் 'கோல்டு ஃபிஷ்' எனப்படும் தங்க மீன்கள், கண்ணாடித் தொட்டிகளில் துள்ளித் திரிவதைப் பார்த்திருக்கிறான். ஒரு மீன் ஐந்து ரூபாய் என்றும், அது குட்டி போட்டால் இரண்டு ரூபாய் என்றும் இவன் பெருங்கனவு விரிந்தது. மிகப் பெரிய தொட்டிகளில் தங்க மீன்களை அடைத்துவைத்து, அதே பழைய ஹார்லிக்ஸ் பாட்டில்களில் விற்கத் தொடங்கினான். ஒரு மீன், இரு மீன் என விண்மீனை பிடிக்கும் கனவுகள்!*

*மறுநாள் விடிந்ததும் இவன் வீட்டின் முன்பு சிறு கூட்டம். எல்லோர் கைகளிலும் ஹார்லிக்ஸ் பாட்டில்கள். அதில் இருந்த மீன்கள் இறந்து கிடந்தன. இவன் அதிர்ச்சியுடன், இவன் வீட்டில் இருந்த கண்ணாடித் தொட்டியைத் திரும்பிப் பார்த்தான். அங்கு இருந்த மீன்களும் இறந்து மிதந்து கொண்டிருந்தன. எல்லோருக்கும் காசைத் திருப்பிக் கொடுத்து விட்டு, இவன் மீண்டும் கனவுக்குள் நீந்தத் தொடங்கினான்.*

*ஆள் பாதி, ஆடை பாதி என்பார்கள். இவனது அடுத்த இலக்கு ஆயத்த ஆடைகள் வாங்கி விற்பது. சென்னைக்கு வந்து, பூக்கடைப் பேருந்து நிலையத்தில் இறங்கி, தங்க சாலைக் கடைகளுக்குள் நுழைந்து, ரெடிமேட் சட்டைகளும் பேன்ட்களும் வாங்கிக்கொண்டு, அம்பானியாகும் கனவுடன் அய்யம்பேட்டையில் இறங்கி ஊருக்குள் நடந்து வந்தான். இந்த முறை தொழிலதிபர் வி.ஜி.பன்னீர்தாஸ் எழுதிய சுயசரிதையில், நரிக்குறவர்களுக்கு தவணை முறையில் டிரான்சிஸ்டர் ரேடியோ கொடுத்து முன்னேறியதைப் போல், தவணை முறைத் திட்டத்தைச் செயல்படுத்த தொடங்கினான். மடித்துக் கட்டிய வேஷ்டியும், கோவணமும், அரைக்கால் டவுசரும், அணிந்தபடி தறிக்குழியில் அமர்ந்து பட்டுச் சேலைகள் நெய்துகொண்டிருந்த கிராமத்து ஆட்கள், "இன்னாது ரெடிமேடு சொக்காவா? இப்பத்தாம்பா பொங்கலுக்கு துணி எடுத்துத் தெச்சேன். இத்தோட தீபாவளிக்குத்தான். அப்ப வா பாக்கலாம்" என்றார்கள்.*

*"இல்லண்ணே தவணை முறையில் வாங்கிக்குங்க. இப்ப அஞ்சு ரூவா குடுங்க. அப்புறம் மாசாமாசம் அஞ்சு ரூவா குடுத்தாப் போதும்" என்ற இவன் வார்த்தைக்கு, அமோக வரவேற்பு இருந்தது. எல்லாத் துணிகளும் விற்றுத் தீர்ந்தன.*

*அடுத்த மாதம் தவணைக்காகப் போய் நின்றபோது, "இன்னாப்பா துணி குடுத்திருக்க? ரெண்டு தடவைதான் போட்டேன். அதுக்குள்ள*

Join / Telegram : @Tamil_Books_Library

*சாயம் போயிடிச்சு. குடுத்த காசைத் திருப்பிக் கேக்காம இருக்கேனே... அத நெனச்சு சந்தோஷப்படு" என்றார்கள். இவனும் அதை நினைத்து சந்தோஷத்துடன் வீடு திரும்பினான்.*

***எ****ல்லாவற்றையும் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த இவன் அப்பா, இவனிடம் சொன்னார், "கவலைப்படாத. காசுங்கிறது காகிதம் மாதிரி. வரும்... போகும். இதையெல்லாம் ஒரு அனுபவமா எடுத்துக்கோ."*

*இன்று எல்லாவற்றையும் விட்டு தள்ளி நின்று இவன் யோசித்துப்பார்க்கையில் இந்த அனுபவங்கள் இவனுக்கு இந்தப் பாடத்தைதான் கற்றுக்கொடுத்தன: 'ஒரு வியாபாரி கவிதை எழுதினால், அவனிடம் இருக்கும் காசு மட்டுமே காணாமல் போகும். ஒரு கவிஞன் வியாபாரியானால், அவனிடம் இருக்கும் கவிதையே காணாமல் போய்விடும்!'*

Join / Telegram : @Tamil_Books_Library

10

# புன்னகைக்க மருந்து கதை

"கண் சிமிட்டும் நேரத்தில் ஓர் உன்னதத் தருணம் புகைப்படம் ஆகிறது. அந்தத் தருணத்துக்கான காத்திருத்தலே, புகைப்படக் கலை. இருளை உணர்ந்தவனே, ஒளியில் வாழக் கற்றுக்கொள்கிறான்!"

-பி.சி. ஸ்ரீராம்

ஒளி உண்டாகக் கடவதாக' என்றார் ஆண்டவர். ஒளி உண்டானது. ஒளி உண்டாகி லட்சக்கணக்கான வருடங்கள் கழித்து, ஒளியின் விரல் பிடித்து அதைச் சட்டகத்துக்குள் அடைக்கும் கேமரா உண்டானது. கேமரா உண்டாகி பல வருடங்களுக்குப் பிறகு, இவன் ஊரில் 'ஜானகிராம் ஸ்டுடியோ' உண்டானது. அந்த ஸ்டுடியோ உண்டாகி வருடங்களுக்கும் பிறகே இவன் அங்கு புகைப்படம் எடுக்கச் சென்றான்.

திருவிழா பார்ப்பதுபோல, தேர் பார்ப்பதுபோல, கரிய முதுகில் பட்டாடை அணிந்து வெண்கொற்றக் குடை சுமந்தபடி அசைந்து வரும் யானையைப் பார்ப்பதுபோல, இவன் அந்த ஸ்டுடியோவையே ஆச்சர்யமாகப் பார்த்துக் கொண்டிருந்தான்.

ஜானகிராம் ஸ்டுடியோ, காஞ்சிபுரத்தில் தேரடி வீதியில் இருந்தது. வீதி முழுக்க இந்தப் பக்கமும் அந்தப் பக்கமும், பட்டு ஜவுளிக் கடைகள்; பட்டு நூல் சொஸைட்டிகள். பின் பக்கம் கிளை விரித்துச் செல்லும் சாலையோரம் அகன்று விரிந்த ரங்கசாமி குளம். இவற்றுக்கு நடுவே ஸ்டுடியோ. கீழ்த் தளத்தில், புகைப்படத்துக்கு ஃபிரேம் போட்டுக் கொடுக்கும் கடை. அந்தக் கடையில் கையில் வேலுடன் முருகர், சுண்டெலி வாகனத்துடன் பிள்ளையார், 'தனம் தரும் தானம் தரும் லட்சுமி தேவி' என எத்தனையோ புகைப்படங்கள் கண்ணாடிச் சட்டம் போடப்பட்டு விற்பனைக்கு நின்றிருக்கும். நீளவாக்கில் பாளம் பாளமாக

Join / Telegram : @Tamil_Books_Library

அடுக்கப்பட்ட கண்ணாடிகளை இன்ச் டேப் வைத்து ஒருவர் அறுத்துக் கொண்டிருக்க, மறுபக்கத்தில் ஸ்கேலைவிடவும் ஒல்லியாகச் செதுக்கப்பட்ட மரச் சட்டங்கள் அடுக்கியிருக்கும்.

இந்தக் காட்சிகளைக் கண்டபடியே இருளும் ஒளியும் கலந்த நூற்றாண்டுத் தூசி படிந்து வளைந்து செல்லும் படிக்கட்டுகளில் ஏறி, இவன் முதல் தளத்தில் இருந்த ஸ்டுடியோவை அடைந்தான். சிறு வயதில் இவன் தவழ்ந்தபடி தலை நீட்டிப் பார்க்கும் புகைப்படமும், வலப்பக்கம் யானை பொம்மை, இடப்பக்கம் மரப்பாச்சி பொம்மை புடைசூழ ஏதோ ஒரு திசையை வெறித்தபடி அமர்ந்திருக்கும் புகைப் படமும், வயர் கூடையில் நிர்வாணமாக கால் மேல் கால் போட்டு அமர்ந்திருக்கும் புகைப்படமும் இதே ஸ்டுடியோவில் எடுக்கப்பட்டு, இவன் கிராமத்து வீட்டில் இன்னமும் தொங்கிக்கொண்டிருக்கின்றன. சிரிப்பும் இல்லாமல் அழுகையும் இல்லாமல், இரண்டும் கலந்த பாவனையில் இவன் காலத்தில் உறைந்ததற்கான சாட்சிகள் அவை.

பொங்கலுக்கு எடுத்த டவுசரும் பூப்போட்ட சட்டையும் அணிந்து அப்போது இவன் சென்றது, கடைசி அத்தையுடன் புகைப்படம் எடுத்துக்கொள்வதற்காக. அந்த அத்தைக்கு அடுத்த வாரம் திருமணம். கடந்த சில நாட்களாக வெவ்வேறு வண்ணங்களில் தாவணி அணிந்து, கண்ணாடியில் தன்னைத் தானே பார்த்துக்கொள்வதும், தனக்குத்தானே சிரித்துக் கொள்வதுமாக வளைய வந்துகொண்டிருந்தாள். அந்தத் தாவணிப் பருவத்தின் கடைசி மிச்சம்தான் இந்தப் புகைப் படம். இனி அவள் கழுத்தில் தொங்கும் புது மஞ்சள் தாலியுடன் சேலைக்கு மாறிவிடுவாள். பிறந்த வீட்டின் நாட்கள் ஒரு பழைய தாவணியைப் போல அவளிடம் இருந்து மெள்ள நழுவிச் சென்றுவிடும்.

வரவேற்பறையில் நிறையப் புகைப்படங்கள் மாட்டப் பட்டிருந்தன. சிவாஜிக்கு யாரோ கேக் ஊட்டிவிடுகிறார்கள். அறிஞர் அண்ணா, சாவகாசமாக தரையில் அமர்ந்தபடி லுங்கி பனியனுடன் பேப்பர் படித்துக்கொண்டிருக்கிறார். கட்சித் தொண்டர்களுடன் எம்.ஜி.ஆர். உரையாடுகிறார். ஏதோ ஒரு புதுமணத் தம்பதியில் ஆண் வேட்டி-சட்டையுடன், நாற்காலியில் அமர்ந்தபடி கேமராவைப் பார்த்து முறைத்துக் கொண்டிருக்க, பக்கத்தில் அவன் மனைவி கட்டம்போட்ட கூரைப் புடவையுடன், கைகளில் பஃப் வைத்த ஜாக்கெட் அணிந்தபடி தலைகுனிந்து நிற்கிறாள். இன்னொரு புகைப் படத்தில் கதம்ப ஜடை அணிந்து கண்ணாடியில் தெரியும் ஒரு சீமந்தப் பெண்.

இவர்கள் முறை வந்ததும், கறுப்புத் திரைச்சீலையை விலக்கி இன்னோர் அறைக்குள் நுழைந்தார்கள். தேக்குச் சட்டம் பளபளக்க முட்டை வடிவ ஆளுயர பெல்ஜியம் கண்ணாடியில் தலை சீவி, ஸ்டுடியோவில் இருந்த பாண்ட்ஸ் பவுடர் பூசி, பின்னணியில் நீல

வானமும் இடப்பக்கத்தில் பிளாஸ்டிக் பூச்சாடி வைக்கப்பட்ட நீள வடிவ மர மேஜைக்கு அருகில் நின்று இவனும் அத்தையும் புகைப்படம் எடுத்துக் கொண்டார்கள். தலை முழுக்க கறுப்புத் துணியைப் போர்த்திக்கொண்டு கேமராவுக்குள் ஒளிந்து, புகைப்படக்காரர் இவர்களைப் படம் எடுத்தபோது, இவன் வழக்கம் போலவே சிரிப்பும் அழுகையும் கலந்த ஒரு பாவனையில் இருந்தான்.

அந்தப் புகைப்படக்காரருக்கு இருந்த மரியாதையும், அடிக்கடி சிரிக்கச் சொல்லி இவர்களை அடக்கிய ஆளுமையும் இவனை வசீகரித்தன. வளர்ந்து பெரியவன் ஆனதும் நிச்சயம் ஒரு புகைப்படக் கலைஞனாக வேண்டும் என்று 10,011-வது முறையாக இவன் தன் தொழிலை மாற்றினான்.



**அ**ன்று விழுந்த விதை உள்ளுக்குள் உறங்கிக்கிடந்து, 10-ம் வகுப்பு படிக்கையில், தூர்தர்ஷனில் கேமராக் கவிஞர் பாலு மகேந்திராவின் நேர்காணல் ஒன்றைப் பார்த்தபோது, மீண்டும் வளர்ந்து எழுந்தது.

“எனக்கு ஒரு கேமரா வேணும். நான் போட்டோகிராபர் ஆகப்போறேன்” என்று வீட்டில் இவன் நச்சரிக்கத் தொடங்க, அப்பா இவனுக்கு ஒரு யாஷிகா ஆட்டோமேட்டிக் கேமரா வாங்கிக் கொடுத்தார். ஆறடிக்குள் மட்டும்தான் அது காலத்தைக் காட்சிப்படுத்தும். ஜூம் வசதியும் கிடையாது. அப்போதுதான் தொழில்நுட்பத்தின் முதல் படிக்கட்டில் இருந்த இவன், அதைப் பற்றிப் புரிந்துகொள்ளவில்லை.

சேற்றுக் குட்டையில் எருமைகள் குளிப்பது, வயல்காட்டில் தவளைகள் குதிப்பது, செடிப்பூக்களை விட்டு பட்டாம்பூச்சிகள் பறப்பது, நுங்கு வண்டி ஓட்டும் சிறுவர்கள், பாக்கு இடிக்கும் கிழவிகள்... என அகப்பட்ட காட்சிகளை எல்லாம் புகைப் படங்கள் எடுத்து,

Join / Telegram : @Tamil_Books_Library

ஸ்டுடியோவில் கொடுத்து நெகட்டிவ்களை டெவலப் செய்து பார்த்தபோது, அதில் இவன் படம் எடுத்ததற்கான எந்தத் தடயமும் இல்லை.

ஸ்டுடியோவில் வேலை செய்த ஓர் அண்ணன், இவனுடைய ஆர்வத்தை அறிந்து எப்படி ஃபிலிம் மாட்டுவது, எப்படி ஒளியை உள்வாங்குவது என்று ஒவ்வொன்றாகக் கற்றுக் கொடுத்தார்.

பின்னாட்களில் பாலு மகேந்திராவிடம் உதவி இயக்குநராகப் பணியாற்றப்போகிறோம் என்பதை அறியாமலேயே, ஒரு கிராமத்து பாலு மகேந்திராவாக தன்னை நினைத்துக்கொண்டு சுற்றித் திரிந்த காலம் அது.

இயற்கையை அடுத்து இவன் இப்போது மனிதர்களைப் படம் பிடிக்கத் தொடங்கினான். 'பிரின்ட் போடுறதுக்கு ஆகிற செலவை மட்டும் குடுத்தாப் போதும்' என்ற இவன் கோரிக்கைக்கு அமோக ஆதரவு இருந்தது. கிராமம் முழுக்க ஒன்றுகூடி வந்து இவன் கேமராவுக்குள் சிறையானார்கள்.

ஆஹா... அது ஒரு கனாக் காலம். ஒவ்வொருவரையும் ஒவ்வொரு கோணத்தில் படம்பிடித்தான். ஆடு மேய்த்தபடி ஒருவர், வயல்காட்டில் ஏர் உழுதபடி இன்னொருவர், தறி நெய்தபடி மற்றொருவர் என அவரவர் தொழில் சார்ந்து அவர்கள் காட்சியானார்கள். பனை ஏறும் பச்சையப்பன் அண்ணன் பனை உச்சியில் அமர்ந்து பனங் குலைகளை வெட்டுவதுபோல் தன்னைப் புகைப்படம் எடுக்க வேண்டும் என்று கேட்டது, இவன் தொழில்நுட்பத்துக்கு சவாலானது. பக்கத்தில் இருந்த ஆலமரத்தை கிரேனாக்கி, இவன் அவரைப் படம் எடுத்ததற்கு சாட்சியாக, அந்த உச்சிக் கிளை முறிந்து கீழே விழுந்து, வலது கால் முட்டி பெயர்ந்து ரத்தம் கொட்டி ஆறிய தழும்பு இப்போதும் இவன் உடலில் இருக்கிறது. ஆனால் என்ன? இவன் எடுத்த புகைப்படங்கள் இன்னும் அந்தக் கிராமத்து மனிதர்கள் வீட்டில் தொங்கிக்கொண்டு இருக்கின்றன.

அடுத்த சவால், வேறு வடிவத்தில் வந்தது. இவன் நண்பனின் அண்ணனுக்குத் திருமணம். இவன்தான் புகைப்படம் எடுக்க வேண்டும் என்று நண்பன் உறுதியாக நின்றான். அட்வான்ஸ் கொடுக்கும்போதே நண்பனின் தந்தை ஒரு கட்டளை விதித்தார்.

"தோ பாரு குமாரு... நீ உன் இஷ்டப்படி எத வேணா எடுத்துக்கோ. ஆனா, முக்கியமா சில போட்டோங்க இருக்கணும். எண்ணெய் நலங்கு வைக்கிறது, சர விளக்கு ஏத்தறது, அரசாணி கால் நடறது, காசி யாத்திரை போறது, பாத பூஜை பண்றது, தாலி கட்டறது, மணவறை சுத்தி வர்றது, மெட்டி போடறது, மாலை மாத்தறது, நாத்தனார் பட்டம்

Join / Telegram : @Tamil_Books_Library


கட்டறது, பந்தியில பையனும் பொண்ணும் ஊட்டிக்கிறது, மறு வூட்டு சீர் கொடுக்கிறது இதெல்லாம் முக்கியம். சரியா?" என்றார்.

இவன் சரியென்று சொல்லிவிட்டு வந்தான். ஆனால், ஒவ்வொரு சரிக்கு பின்னாலும் ஓராயிரம் தவறுகள் இருப்பதை அப்போது இவன் அறியவில்லை. அந்தத் திருமணப் புகைப்படங்கள் பிரின்ட் ஆகி வந்தபோது இவன் தன் கலை உணர்வை மெச்சிக்கொண்டான். மணமகளின் டைட் குளோசப் கன்னத்தில் நலங்கு வைக்கும் யாரோ ஒரு பெண்ணின் ஐந்து விரல்கள், தனியாக எரியும் சரவிளக்கின் தீபச் சுடர்கள், இடப்பக்க ஃபிரேமில் காசியாத்திரை குடையும், வலப்பக்க ஃபிரேமில் இளந்தளிர் சூரியனும் விழுந்திருந்த அந்தப் புகைப்படத்தில் மணமகனும் மச்சானும் காணாமல் போயிருந்தார்கள். எல்லாவற்றுக்கும் மேல் நண்பனின் தந்தையைக் கோபப்படுத்தியது, தாலி கட்டும் மணமகனின் கை விரல்களும் மணமகளின் கழுத்து மட்டுமே இருந்த புகைப்படம். நல்லவேளை பெண் வீட்டுக்காரர்கள் புரொஃபஷனல் கேமராமேன் ஒருவரை வைத்து புகைப்படம் எடுத்திருந்ததால், இவன் தப்பித்தான்.

அதற்குப் பிறகும் ஒளியின் விரல்களை இவன் விட்ட பாடில்லை. அப்போதுதான் பி.சி. ஸ்ரீராம் ஒளிப்பதிவில் 'அக்னி நட்சத்திரம்' படம் வெளிவந்திருந்தது. அதைப் பார்த்த பின் இவன் இருள் ஒளியுடன் பயணிக்கத் தொடங்கினான். பால்ய சிநேகிதன் ஒருவனை அவன் வீட்டுக் கூடத்தில் கதவு ஜன்னல்களை அடைத்து விட்டு இரண்டு பக்கங்களும் பித்தளைக் குத்துவிளக்குகளை ஏற்றி நடுவில் அவனை அமரவைத்து இவன் எடுத்த புகைப்படம் கலையின் உச்சம் என்பான். ஆனால், நண்பனின் அம்மாவின் பார்வை வேறுவிதமாக இருந்தது. "ஏன்டா... அடுத்தடுத்து ஏழு பொட்டப் புள்ளங்களப் பெத்துட்டு தவமாத் தவமிருந்து ஆம்பளப் புள்ளயப் பெத்து 'ஆணாய் பிறந்தான்'னு பேரு வெச்சு ஆசை ஆசையா வளத்தா, பொட்டப் புள்ளைங்க வயசுக்கு வந்த மாதிரி போட்டோ எடுத்திருக்க? இனிமே இந்த வீட்டுப் பக்கமே வராத" என்றதும் தனக்குள் இருந்த பாலு மகேந்திராவையும் பி.சி.ஸ்ரீராமையும் இவன் கொஞ்ச காலம் தள்ளிவைத்திருந்தான். ஆனாலும் காலம் யாரை விட்டது?

ஒருநாள் காலையில் "அண்ணே... முத்தண்ணே... அவசரமா ஒரு போட்டோ எடுக்கணும்ணே. கையோட கூட்டிட்டு வரச் சொன்னாங்க" என்ற குரல் கேட்டு, இவன் கண் விழித்தான். கேமராவுடன், வந்தவனின் சைக்கிளில் இவன் அமர்ந்தான். அந்த வண்டி, பக்கத்து ஊரில் இருந்த ஒரு சேரிக்குள் நுழைந்தது. அங்கு ஒரு குடிசையின் வாசலில் வைக்கோல் மூட்டி எரிந்த தீயில் அடிக்கடிக் காட்டி சூடு ஏற்றியபடி பறையடித்துக்கொண்டிருந்தார்கள். அதற்குப் பக்கத்தில், நிறம் மங்கிய

Join / Telegram : @Tamil_Books_Library



பழைய ஓலைப் பாய் ஒன்றில் ஐந்து வயது மதிக்கத்தக்க ஆண் குழந்தையின் பிணம் கிடந்தது. “அய்யா, வாய்யா போட்டோ புடிச்சா ஆயுசு குறையும்னு எம் பேரனை போட்டோ புடிக்காமயே விட்டுட்டோம். பேர் தெரியாத காய்ச்சல் வந்து செத்துப்புட்டான். உயிரோட்டமா இருக்கணும்னுதான் இன்னும் கண்ணைக்கூட மூடல. எங்க குலக் கொழுந்து, ஒரே வாரிசு, எப்பவும் எங்க ஞாபகத்துல இருக்கிற மாதிரி ஒரு போட்டோ எடுத்துக் குடு ராசா” என்று வயது முதிர்ந்தவள் சொல்ல, இவன் கேமராவைத் திறந்து கண்களை வைத்தான்.

இறந்துகிடந்த அந்தக் குழந்தையின் கண்களை சந்தித்த போது, இவன் அதிர்ச்சியைச் சந்தித்தான்; இந்த உலகின் மீதான அவநம்பிக்கையைச் சந்தித்தான்; அதை சாத்தியப் படுத்தும் மரணத்தைச் சந்தித்தான்; இவன் கேள்வி கேட்க நினைத்த கடவுளைச் சந்தித்தான்; சுற்றிலும் சாக்கடை நீர் பெருகிக்கிடக்க, அவற்றில் எருமைகளையும் பன்றிகளையும் அவற்றின் வால்களில் மொய்த்துக்கொண்டிருக்கும் கொசுக்களையும் சந்தித்தான்; இதை ஏதும் கண்டுகொள்ளாமல், தன் போக்கில் ஓடிக்கொண்டிருக்கும் சமூகத்தைச் சந்தித்தான்.

அன்றிலிருந்து இவன், கற்ற புகைப்படக் கலை இவனிடம் இருந்து விலகிப்போனது. இப்போதெல்லாம் இலக்கிய நிகழ்ச்சிகளிலோ திரைப்பட விழாக்களிலோ இவனைப் படம் எடுக்கும் புகைப்படக்காரர்கள் “கொஞ்சம் சிரிங்க சார்” என்று கேட்கும்போது, இவனுக்கு அந்தக் குழந்தையின் கண்கள்தான் ஞாபகம் வரும். சிரிப்பும் இல்லாமல், அழுகையும் இல்லாமல் அதிர்ச்சியுடன் எங்கோ ஒரு திசையில் பார்ப்பான்.

Join / Telegram : @Tamil_Books_Library

11

## இவன், இவனான கதை!

“இப்பொழுதும்
அங்குதான்
இருக்கிறீர்களா?”
என்று கேட்டார்.

“எப்பொழுதும்
அங்குதான் இருப்பேன்”
என்றேன்.

- நகுலன்
('கோட் ஸ்டாண்ட்’ கவிதைத் தொகுப்பிலிருந்து...)

போலந்து திரைப்பட இயக்குநர் கீஸ்லோவஸ்க்கியிடம் ஒரு நிருபர் “உங்களுக்குப் பிடித்த இயக்குநர் யார்?” என்று கேட்டதற்கு, அவர் சற்றும் தயங்காமல் “தாஸ்தாவஸ்க்கி” என்றார். உடனே அந்த நிருபர் “தாஸ்தாவஸ்க்கியா? அவர் ஓர் எழுத்தாளராயிற்றே!” என்று கேட்க, “ஆமாம். என் சிந்தனைகளை இயக்கியவர் அவர்தான்” என்றார் கீஸ்லோவஸ்க்கி.

இவன் ஒன்றும் சுயம்பு இல்லை. இவனையும் தட்டித் தட்டி வனைந்தது பல எழுத்தாளர்களின் கைகளே. ஒரு சரளைக்கல்லாக தன் போக்கில் கிடந்த இவனை, இவன் படித்த புத்தகங்கள் எனும் மகாநதிகள்தான் லயமாகச் செதுக்கி, ஜென் தோட்ட கூழாங்கல்லாக மாற்றின.

Join / Telegram : @Tamil_Books_Library

என்ன படிப்பது? எதைப் படிப்பது? என்று தெரியாமல் கிடைத்ததையெல்லாம் படித்துக்கொண்டிருந்த காலம் அது. காஞ்சிபுரத்தில் கம்பன் கழகம், கவிதைச்சோலை, சிந்தனையாளர் பேரவை, திருக்குறள் மன்றம் என்று பல்வேறு இலக்கிய அமைப்புகள் இயங்கிக்கொண்டிருந்தன. இவன் பள்ளி முடிந்து ஸ்கூல் யூனிஃபார்மோடு அங்கு சென்று இவன் எழுதிய கவிதைகளைப் படிப்பான். கனவுகளும் கவிதைகளுமாகத் திரிந்த பருவம்.

ஒரு ஞாயிற்றுக்கிழமை காலை, இவனை அப்பா ‘இலக்கிய வட்டம்’ என்ற அமைப்பு நடத்திய கூட்டம் ஒன்றுக்கு அழைத்துச் சென்றார். காஞ்சிபுரம் பூக்கடை சத்திரத்தில் இருந்த பி.டி.வி.எஸ். பள்ளியில் அந்தக் கூட்டம் நடந்தது.

கரும்பலகை முன்னிருக்க வகுப்பறை பெஞ்ச்களில் எல்லா வயதும் கலந்த பத்து இருபது பேர் அமர்ந்திருந்தனர். இடது பக்கத்தில் சில மேஜைகள் போடப்பட்டு, அதில் தமிழகத்தின் முக்கியமான பதிப்பகங்களின் புத்தகங்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தன அப்போது தான் பிறந்த குழந்தைகளைப் போல அந்தப் புத்தகங்கள் இவனைப் பார்த்து, ‘என்னைத் தொடு... என்னைத் தொடு!’ என்று அழைத்தன.

அப்பா, இவனுக்கு இலக்கிய வட்டத்தை நடத்தும் வெ.நாராயணன் சாரை அறிமுகப்படுத்தினார். அந்த மாதம் ‘கணையாழி’ இதழில் வெளிவந்த இவன் கவிதையை வரிக்கு வரி அவர் விமர்சித்துப் பேசியது இப்போதும் இவன் நினைவில் இருக்கிறது.

அந்தக் கூட்டத்துக்கு சிறப்பு விருந்தினராக எழுத்தாளர் லா.ச.ரா., வந்திருந்தார். இவன் அவரது ‘அபிதா’, ‘பாற்கடல்’ படித்திருந்ததால், அவரையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக்கொண்டிருந்தான். வரவேற்புரை, அறிமுக உரை என்ற வெற்று சம்பிரதாயங்கள் இல்லாமல், “நண்பர்களே... இப்போது லா.ச.ரா., பேசுவார். அதற்குப் பிறகு உங்கள் கேள்விகளைக் கேட்கலாம்” என்று நாராயணன் சார் அறிவிக்க, லா.ச.ரா., தன் பேச்சைத் தொடங்கினார்.

Join / Telegram : @Tamil_Books_Library




சிறு வயதில் சின்னக் காஞ்சிபுரத்துக்குப் பக்கத்தில் அய்யம்பேட்டை என்ற ஊரில் தான் வளர்ந்ததாகவும், அங்கிருந்த பள்ளியில் தன் தந்தை ஆசிரியராகப் பணியாற்றியதாகவும், அந்தச் சிறு வயதில் ஒரு பெண்ணின் மீதுகொண்ட காதல்தான் 'அபிதா' நாவல் என்றும், லா.ச.ரா., சிலாகித்துப் பேச, இவன் ஆச்சர்யப்பட்டுப் போனான்.

இவன் ஊருக்குப் பக்கத்தில்தான் அய்யம்பேட்டை இருந்தது. இவன் தந்தை படித்த பள்ளி அது. எல்லா இலக்கியக் கூட்டங்களிலும் நடப்பதைப் போலவே பார்வையாளர் வரிசையிலிருந்து லா.ச.ரா-வை நோக்கி ஒரு கலகக் குரல் எழுந்தது. "கரெக்ட்டா சொல்லுங்க... அந்த வயசுல வந்திருக்குனா, அது காதலா? காமமா?" என்று ஒருவர் கேட்க, "காதல்தான்" என்றார் லா.ச.ரா. "காமம்னு நான் சொல்றேன்" என்று கேள்வி கேட்டவர் மீண்டும் வம்பிழுக்க, நாராயணன் சார் எவ்வளவு சமாதானப்படுத்தியும், "இத்துடன் என் உரையை முடித்துக்கொள்கிறேன்" என்றார் லா.ச.ரா.

நிகழ்ச்சி முடிந்து இவன் லா.ச.ரா-விடம் தன்னை அறிமுகப் படுத்திக்கொண்டு, "அய்யம்பேட்டை பக்கத்துலதான் நான் இருக்கேன்" என்றான். சட்டெனக் குழந்தையாகி "என்னை அங்க கூட்டிட்டுப் போறியா? பழைய சிநேகிதர்கள் இன்னமும் இருக்காங்களானு பார்க்கணும்" என்றார்.

இப்படித்தான் இவன் வியந்து படித்த லா.ச.ரா., இவன் வீட்டுக்கு வந்தார். இவன் ஆயாவிடம் மதிய உணவுக்கு எண்ணெய் கத்திரிக்காய் குழம்பு வைக்கச் சொல்லி, கத்திரிக்காயை எப்படி நறுக்க வேண்டும். அதில் என்னென்ன சேர்க்க வேண்டும் என்று ரசனையோடு லா.ச.ரா., சொன்னதை, வீடே வாய்பிளந்து வேடிக்கை பார்த்தது. அவர் மனதில்

Join / Telegram : @Tamil_Books_Library

இருந்த அய்யம்பேட்டை முற்றிலும் மாறியிருந்தது. அவர் சந்திக்க நினைத்த சிநேகிதர்கள் இடம் மாறியிருந்தனர், அல்லது இறந்துபோயிருந்தனர். அந்த ஊரின் மண்ணையும் நினைவுகளையும் உள்ளங்கையில் ஏந்திக்கொண்டு லா.ச.ரா., சென்னைக்குத் திரும்பிச் சென்றார்.

'இலக்கிய வட்டம்' நாராயணன் சாரைப் பற்றி எழுத வந்து, இவன் வேறு எங்கோ தடம் மாறிவிட்டான். ஒன்றைத் தொட்டு இன்னொன்று கிளை விரித்துச் செல்லும் ஒற்றையடிப் பாதைகள்தான் ஞாபகங்களோ? உண்மையில் கண்ணதாசன் சொன்னதுபோல் நினைவுகள்... பறவைகள் தான். அதற்குப் பிறகு 'இலக்கிய வட்டம்' நாராயணன் சார், கிட்டத்தட்ட இவனைத் தத்தெடுத்துக்கொண்டார். இலக்கிய வட்டம் ஆரம்பித்த கதையை அவர் எத்தனை முறை சொன்னாலும் இவன் புதிதாகக் கேட்பதுபோல் விழி விரித்துக் கேட்பான்.

அவர் காஞ்சிபுரம் கேன்சர் இன்ஸ்டிட்யூட்டின் அலுவலகத்தில் பணியாற்றிக்கொண்டிருந்தார். "தஞ்சாவூரில் இருந்து இங்க மாற்றலாகி வந்ததும், இலக்கியம் பேச ஆளில்லாமத் தவிச்சுட்டிருந்தேன். ஜோதி புக் ஸ்டோர்ல கணையாழி, காலச் சுவடு இதழ்கள் வாங்கப்போனப்போ, ரெகுலரா அவங்க ரெண்டு இதழ்களையும் பத்து காப்பி வாங்குறாங்கனு தெரிஞ்சது. அப்ப நம்மள மாதிரியே சீரியஸாப் படிக்கிற பத்துப் பேர் இந்த ஊர்ல இருக்காங்கனு தெரிஞ்சுது. 'யார் யார் இந்த புக்ஸை வாங்குறாங்களோ, அவங்களை எல்லாம் எனக்கு போன் பண்ணச் சொல்லுங்க'னு தொலைபேசி நம்பர் கொடுத்துட்டு வந்தேன். ஏழெட்டுப் பேர் பேசினாங்க. வைகுண்டப் பெருமாள் கோயில் புல்வெளியில்தான் முதல் கூட்டம் நடந்துச்சு" - இதுதான் இலக்கிய வட்டம் உருவான கதை.

அந்த ஏழெட்டுப் பேர்களில் முதன்மையானவர் கவிஞர். தரும.ரத்னகுமார். இயக்குநர் ஆர்.கே.செல்வமணியின் அண்ணன். 'ங்' என்ற சிறு பத்திரிகை நடத்தியவர். நவீன இலக்கியத்தை நோக்கி இவனை மடை மாற்றிவிட்டவர். 'எண்பதுகளில் கலை இலக்கியம்' என்று 'முன்றில்' பத்திரிகை சென்னையில் ஏற்பாடு செய்த இரண்டு நாட்கள் கருத்தரங்கில் அவருடன் இவன் கலந்துகொண்டான். கருத்தரங்கு முடிந்து இரவில் இயக்குநர் ஆர்.கே.செல்வமணி அலுவலகத்தில் தங்குவார்கள். அப்போது ஆர்.கே.செல்வமணி 'செம்பருத்தி' படம் எடுத்துக்கொண்டிருந்தார். அடுத்த நாள் படப் பிடிப்புக்கான பாடலை இயக்குநர் ஆர்.கே.செல்வமணி விடிய விடியக் கேட்டுக்கொண்டிருந்ததும், நடன அசைவுகளை நடன இயக்குநருடன் விவாதித்துக் கொண்டிருந்ததும், இவன் மனதில் சினிமாவுக்கான முதல் விதைகள் விழுந்ததற்கான தருணங்கள்.

Join / Telegram : @Tamil_Books_Library

*இன்னொருவர் செ.காமராசன் - 'புல்வெளி' சிற்றிதழின் ஆசிரியர். அந்த வாரத்தில் வெளியாகிற அத்தனைத் திரைப் படங்களுக்கும் இவனை அவரது செலவில் அழைத்துச் செல்வார். கையில் எண்பது பக்க நோட்டு வைத்துக்கொண்டு படம் பார்க்கும்போதே கதாநாயகன் அறிமுகம், நண்பர்கள் அறிமுகம், கதாநாயகி அறிமுகம் என்று திரையரங்க இருட்டில் அந்தப் படத்தின் ஒன்லைனை எழுதிக் கொண்டிருப்பார். இப்போது யோசித்துப் பார்க்கையில், இவன் திரைத் துறையில் நுழைவதற்கான ஆசையை விதைத்தவர்களில் அவரும் முக்கிய காரணம். அதற்கு அப்புறம் கவிஞர் அமுதகீதன்.*

*பாரத தேசத்துப் பட்டத்து ராஜனுக்கு*

*படுக்க ஒரு பாய் இல்லையா?*

*யாருனைக் காப்பது இரைக்கின்ற நாய்தானா?*

*ஈன்ற உன் தாய் இல்லையா?*

*-என்று அவர் மரபுக் கவிதைகளின் கணீர் குரல் இப்போதும் இவன் காதுகளில் ஒலித்துக்கொண்டிருக்கிறது.*

*'இலக்கிய வட்டம்' நாராயணன் சாரை பள்ளி முடிந்து தினமும் அவர் அலுவலகத்தில் இவன் சந்திப்பான். இவன் எழுதிய கவிதைகளை அவரே கைப்படப் பிரதி எடுத்து பத்திரிகைகளுக்கு அனுப்பிவைப்பார். அவர் படித்து முடித்த புத்தகங்களையெல்லாம் 'அன்புடன்' என்று கையெழுத்திட்டு இவனுக்குக் கொடுத்துவிடுவார். தவிர, பதிப்பகங்கள் அவருக்குக் கொடுக்கும் 25 சதவிகிதம் தள்ளுபடி விலையிலேயே கூட்டத்தில் புத்தகங்கள் கிடைக்கும். கடன் வசதி வேறு. அவரது கடன் பட்டியலில், இவனால் இவன் தந்தை முதல் இடத்தில் நிற்பார்.*

*தமிழகம் எங்கும் நவீன இலக்கிய உலகில் வீசிய புதுப்புது அலைகளை இலக்கிய வட்டம்தான் இவனுக்கு அறிமுகப் படுத்தியது. எத்தனை எழுத்தாளர்கள்! எத்தனை விதமான இஸங்கள்! ரியலிஸம், மேஜிக் ரியலிஸம், போஸ்ட் மார்டனிஸம், ஸ்ட்ரக்சரிஸம் என எல்லா வகைகளையும் இவன் அறிந்துகொண்டது அங்குதான்.*

*'மண்' சிறுகதைத் தொகுப்பு விமர்சனக் கூட்டத்தில் பேசிக்கொண்டிருக்கும்போதே எழுத்தாளர் கோமல் சுவாமிநாதன் இறந்த செய்தி கிடைத்து, "இனி என்னால் பேச முடியாது" என்று தழுதழுத்த ஜெயமோகனையும், டி-ஷர்ட்டும் பெர்முடாஸும் அணிந்து சினிமா ஹீரோவைப் போல் வந்து இறங்கி 'எக்சிஸ்டென்ஷியலிஸமும் ஃபேன்சி பனியனும்' நாவல் குறித்து உரையாடிய சாரு நிவேதிதாவையும், ஒவ்வாத உணர்வுகள் குறித்துப் பேச வந்த கோபி*

Join / Telegram : @Tamil_Books_Library

கிருஷ்ணனையும் இவனால் எப்படி மறக்க முடியும்?



தமிழகத்தின் முக்கிய எழுத்தாளர்கள் அனைவரும் இலக்கிய வட்டத்தில் பேசி இருக்கிறார்கள். நாராயணன் சாரிடம் ஒரு தனித் திறமை இருந்தது. அவர்கள் கூட்டத்தில் பேசிய அத்தனை விஷயங்களை மனதுக்குள் சேமித்து, அன்று இரவே ஒரு வார்த்தைவிடாமல் ஒரு பெரிய நோட்டில் எழுதி வைப்பார். அவையெல்லாம் புத்தகமாக வந்தால், மிகப் பெரிய ஆவணம்.

எழுத்தாளர்கள் மட்டுமல்ல... ஒரு மாதம் எண் கணித ஜோதிடர், மறுமாதம் சித்த வைத்திய ஆராய்ச்சியாளர், அடுத்த மாதம் அஷ்டாவதானி என்று எல்லாத் துறை அனுபவங்களையும் இலக்கிய

Join / Telegram : @Tamil_Books_Library

வட்டம் வாசகனுக்கு நாராயணன் அறிமுகப்படுத்தினார்.

சில பார்வையாளர்கள் புத்தகங் களைப் படிப்பதைப் போல பாவனைசெய்து, திருடிச் சென்றுவிடுவார்கள். ‘விடுப்பா... அந்தப் புத்தகம் அவனைப் பாதிச்சா, அடுத்த மாசம் திரும்ப வந்து காசு தருவான்’ என்பார் நாரயணன். காஞ்சிபுரம் போன்ற நகரத்தில் கிட்டத்தட்ட 15 லட்ச ரூபாய்க்கு மேல் புத்தகம் விற்றது அவரது சாதனை. அதில் கிட்டத்தட்ட ஐந்தாறு லட்சங்கள் கடன் கொடுத்துத் திரும்பிவராமல் தன் கைக்காசைப் பதிப்பகங்களுக்கு அனுப்பியிருக்கிறார்.

இலக்கிய வட்டத்தின் அழைப்பிதழ்கள் போஸ்ட் கார்டில் நாராயணணின் சாய்ந்த கையெழுத்துடன் வரும். தொடர்ந்து மூன்று கூட்டங்களில் ஒருமுறையாவது வராதவர்களுக்கு அடுத்த அழைப்பிதழ் வராது.

‘இலக்கியப் பயணம்’ என்று ஆறு மாதங்களுக்கு ஒருமுறை சுற்றியுள்ள கிராமங்களுக்கு எல்லோரையும் அழைத்துச் சென்று, மக்களுக்கு நடுவே இலக்கியம் பேசவைப்பார். கடைசி வரை தன்னை முன்னிலைப்படுத்தாமல் செயல் பட்டவர். இவன் பிற்காலத்தில் திரைத் துறைக்குப் பாடல்கள் எழுதிவந்தது குறித்து நாராயணன் சாருக்கு சந்தோஷம் கலந்த ஒரு வருத்தம் இருந்தது. “உன்கிட்ட இருந்து தமிழின் தலைசிறந்த நாவல்களையும் சிறுகதைகளையும் எதிர் பார்க்கிறேன். நீ பாட்டு எழுதப் போயிட்ட...” என்று சந்திக்கும்போதெல்லாம் சொல்லிக்கொண்டிருப்பார்.

சில வருடங்களுக்கு முன்பு மாரடைப்பால் அவர் இறந்த செய்தி கேட்டு பதறியடித்து இவன் காஞ்சிபுரம் விரைந்தான். சுடுகாட்டில் அவரது பிணம் எரிந்துகொண்டிருந்தபோது பற்றிப் படர்ந்து மேல் எழுந்த தீயின் ஜுவாலைகள் புத்தக வடிவில் மடிந்து ‘அன்புடன்’ என்று கையெழுத்திட்டு, இவனிடம் நீட்டிக்கொண்டிருந்தன!

Join / Telegram : @Tamil_Books_Library

12

# தீராத விளையாட்டு

*"வாழ்க்கையின் கேள்விகள் கடினமாக இருக்கலாம். ஆனால், விடைகள் எளிமையாகத்தான் இருக்கின்றன!"*

*- ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்*

*நான்தான் டாம். நீங்க ஜெர்ரியாம். ஓடிப்போயி ஒளிஞ்சிக்குங்க. டாம் உங்களைக் கண்டுபுடிக்கும்."*

*- மகன் சொல்ல, இவன் ஒளிந்து கொள்ள இடம் தேடினான். கதவுக்குப் பின்னால், பீரோ மறைவில், திரைச் சீலைகளுக்குப் பின்னால், பாத்ரூம் இருட்டில்... என பல இடங்களில் ஜெர்ரி ஒளிந்து, டாம் கண்டுபிடித்திருக்கிறது. ஆதலால், இவன் புதிய இடத்தை யோசிக்கத் தொடங்கினான்.*

38 *வயதுக்குப் பின் கூனிக் குறுகி கட்டிலுக்கு அடியில் நுழைவது இவனுக்குச் சிரமமாக இருந்தது. தூசிகளை உடலில் போர்த்திக்கொண்டு கட்டிலுக்கு அடியில் உருண்டு உள்ளே சென்றான்.*

Join / Telegram : @Tamil_Books_Library



உடைந்துபோன பழைய ஏணி, இவன் திருமணத்துக்கு வந்த பரிசுப் பொருள்கள் அடங்கிய அட்டைப் பெட்டிகள், மகன் தவழ்கை யில் வாங்கிக் கொடுத்த நடைவண்டி, என்றுமே உபயோகத்துக்கு வராமல் கோணிப் பைகளுக்குள் பாரம்பரியப் பெருமைகளுடன் முடங்கிக்கிடக்கும் முன்னோர்களின் பித்தளைப்பாத்திரங்கள்... என, கட்டிலுக்கு அடியில் வேறு ஒரு வீட்டைச் சந்தித்தான்.

பாரம்பரிய நெடி தாங்காமல் 'ஹச்' என்று இவன் தும்மிய போது "உஷ்! சத்தம் போடாதடா. பேரன் கண்டுபிடிச்சுடுவான்ல?" என்ற குரல் கேட்டு, திடுக்கிட்டு இருட்டுக்குள் இவன் திரும்பிப் பார்த்தான். லுங்கி, பனியனுடன் 35 வயது தோற்றத்தில் இவன் அப்பா, இவன் பக்கத்தில் ஒளிந்துகொண்டிருந்தார்.

இவன் மெள்ள அவரைத் தொட்டுப் பார்த்தான். "என்னடா?" என்றார் மெல்லிய குரலில். "அப்பா, நீங்க செத்துப்போயி ஆறு வருஷம் ஆச்சு. இங்க எப்பிடி வந்தீங்க?" என்றான் ஆச்சர்யத்துடன்.

"மடையா... உனக்கு எத்தனை தடவை சொல்லியிருக்கேன். இந்த உலகத்துல மனுஷங்க யாரும் சாகறதே இல்ல. காலம்தான் செத்துப்போகுது. நீ இருக்கிற வரைக்கும் நான் உயிரோட தான் இருப்பேன். அப்புறம் நீயும் நானும் உன் பையனா, பேரனா வாழ்ந்திட்டு இருப்போம். ஜனனமும் மரணமும் முடிவே இல்லாத ஒரு தொடர்ச்சிடா.. புரியுதா?''

இவன் புரிந்தும் புரியாமலும் "அது சரிப்பா... நீங்க ஏன் இங்க ஒளிஞ்சிட்டு இருக்கீங்க?" என்றான்.

"நாம திருடன்-போலீஸ் வெளயாட்டு வெளயாடிட்டு இருக்கோம். நான்தான் திருடன்; நீ போலீஸ். நீ என்னைத் தேடிட்டு இருக்க!"

Join / Telegram : @Tamil_Books_Library

“நான்தான் உங்க பக்கத்துலயே இருக்கிறேனே... அப்புறம் எப்படி உங்களைத் தேட முடியும்?”

“நீன்னா இப்ப இருக்கற நீ இல்லடா. பத்து வயசுல இருந்த நீ...” என்று இவன் அப்பா சொல்லிக்கொண்டிருக்கும்போதே கட்டிலுக்கு அடியில் மகனின் முகம் தெரிந்தது.

“ஜெர்ரி மாட்டிக்கிட்டியா?” என்று குதூகலத்துடன் மகன் சொல்ல, “பேசாதேன்னு அப்பவே சொன்னேன்ல. பேரன் கண்டுபுடிச்சிட்டான் பாரு. வெளியில போயி போலீஸ்கிட்ட சொல்லாத. நானும் மாட்டிப்பேன்” என்றார் அப்பா.

இவன் ஜனனச் சங்கிலியில் இருந்து வெளியே வந்தான்.

இப்போது இவனுக்குள் 10 வயது போலீஸாக மாறி அப்பாவைக் கண்டுபிடிக்க வேண்டும் என்ற ஆர்வம் இருந்தாலும், மாட்டிக்கொண்ட ஜெர்ரியாக மகனைப் பின்தொடர்ந்தான்.

எல்லாப் பிள்ளைகளையும் போலவே பத்தே நிமிடங்களில் டாம் அண்ட் ஜெர்ரி விளையாட்டு போரடித்து, மகன் இவனை செஸ் விளையாடக் கூப்பிட்டான்.

வெள்ளைக் காய்களை மகன் எடுத்துக்கொள்ள, கறுப்புக் காய்களோடு இவன் களம் இறங்கினான். கொஞ்சம் கொஞ்சமாக முன் நகர்ந்த விளையாட்டின் ஒரு கட்டத்தில், மகனின் சிப்பாயை இவன் வெட்ட முற்பட்டபோது இவனுக்கு மட்டும் கேட்கும்படி “டேய் பேராண்டி... தாத்தாவை எந்தப் பேரனாவது வெட்டுவானாடா? இது நியாயமாடா?” என்றது அந்தச் சிப்பாய்.

இவன் அதிர்ச்சியுடன் “தாத்தாவா?” என்றான்.

“ஆமாண்டா ராசா. நீ பிறக்கிறதுக்கு முன்னாடியே செத்துப்போனானே உன் தாத்தா... நான் அவனோட எள்ளுத் தாத்தாவோட எத்தனையோவாவது எள்ளுத் தாத்தா. பல்லவ ராஜாகிட்ட சிப்பாய் படையில இருந்தேன்” என்ற மூதாதையனின் குரல் கேட்டு, இவன் வெட்டாமல் விட்டு வேறு காயை நகர்த்தினான்.

மகன், இவன் மந்திரியை ராணியால் வெட்டி, ராஜாவுக்கு செக் வைத்தான். இப்படியாக இவன் இரண்டாவது முறை மகனிடம் தோற்றான். மகனிடம் தோற்பதைவிட ஒரு தந்தைக்கு வேறு என்ன ஆனந்தம் இருக்க முடியும்?

அடுத்து இவனை மகன் அழைத்தது அப்பா-அம்மா விளையாட்டுக்கு. “நான்தான் அப்பாவாம். நீங்க அம்மாவாம். வாங்க விளையாடலாம்” என்று மகன் சொல்ல, “டேய் நாம ரெண்டு பேரும்

Join / Telegram : @Tamil_Books_Library

பாய்ஸ்டா. கொஞ்ச நேரம் அம்மாகூட போய் விளையாடு” என்று இவன் ஒய்வெடுக்க விரும்பினான்.

“அதெல்லாம் முடியாது. அம்மா எனக்கு பூரி செஞ்சிக்கிட்டு இருக்காங்க. அப்புறம் ஹோம்வொர்க் சொல்லித் தருவாங்க. அதனால நீங்கதான் என்கூட விளையாடணும்” என்று மகன் விரித்த வலையில், இவன் விரும்பிப்போய் விழுந்தான்.

“அது சரிடா. நான் எப்பிடி அம்மாவா நடிக்க முடியும்?” என்று இவன் சொல்லிக்கொண்டிருக்கும்போதே, இவன் தோளில் யாரோ தொடும் உணர்வு ஏற்பட்டு திரும்பிப் பார்க்க, எப்போதோ இறந்துபோன இவன் அம்மா நின்று கொண்டிருந்தாள். “உன் உடம்புல உங்க அப்பா மட்டுமில்ல, நானும் இருக்கேன். பேரன் கூப்புடுறான்ல. போய் வெளயாடுடா” என்று சொல்லிவிட்டுக் காணாமல்போனாள்.

பிள்ளைக்காகத் தாயாகி, இவன் பாவனையாகச் சமைத்து, பாவனையாக துணி துவைத்து, பாவனையாகக் கண்ணீரும் சிந்தினான்.

பின்பும் ஒரு பரமபத விளையாட்டு தொடங்கியது. அடுத்தடுத்த பகடை உருட்டல்களில் இவன் நண்பர்கள் ஏணிகளாக, எதிரிகள் பாம்புகளாக, ஏறியும் வழுக்கியும் இவன் பயணம் சென்றுகொண்டிருந்தான். அப்போதும்கூட ‘என் பிள்ளைக்கு, ஏணிகளாகும் நண்பர்களை மட்டும் கொடு’ என்று இவன் மனம் வேண்டிக்கொண்டிருந்தது.

அடுத்தடுத்து வீட்டுக்குள்ளேயே டென்னிஸ் பால், பிளாஸ்டிக் பேட் கிரிக்கெட், ரப்பர் பலூனில் ஃபுட்பால், கண்ணாமூச்சி ஆட்டம்... என விளையாட்டுகள் தொடர்ந்து, இரவு உணவு முடித்து உறங்கப்போகும்போது வழக்கம் போல் மகன் கேட்டான். “அப்பா, ‘உங்கள் கையில் ஒரு கோடி’ விளையாடலாமா?”

இவன் அன்றைய தினத்தின் அந்த இறுதி விளையாட்டுக்கு ஆயத்தமானான்.

“வெல்கம் பேக் டு உங்கள் கையில் ஒரு கோடி. இன்னிக்கு நம்மகூட ரெண்டு பேரு விளையாட வந்திருக்காங்க. ஒருத்தர் மிஸ்டர் ஆதவன் நாகராஜன். இன்னொருத்தங்க, மிஸஸ். ஜீவலட்சுமி முத்துக்குமார். வணக்கம் மிஸ்டர் ஆதவன் நாகராஜன்!''

மகன் முன்பு செய்தி வாசித்த நிர்மலா பெரியசாமி போல் ‘வ...ண...க்...க...ம்...’ என்றான்.

“நீங்க என்ன பண்ணிட்டு இருக்கீங்க?”

“தூங்கிட்டு இருக்கேன்.”

Join / Telegram : @Tamil_Books_Library

“அது இல்லடா... என்ன படிக்கிற?”

“ஃபர்ஸட் ஸ்டாண்டர்ட் ‘கே’ செக்ஷன்.”

“உங்க அப்பா என்ன பணறாரு?”

“எனக்கு அப்பாவா இருக்காரு.”

“டே லூஸு. வேறென்ன பணறாரு?”

“ம்... பாட்டு எழுதறாரு. எங்கிட்ட மட்டுமே கேள்வி கேப்பீங்களா? அம்மாகிட்ட கேளுங்கப்பா” என்று மகன் சிடுசிடுக்க, இவன் “வணக்கம் மிஸஸ் ஜீவலட்சுமி. நீங்க என்ன பணறீங்க?” என்று கேட்க,

“‘ஃபர்ஸ்ட் ஸ்டாண்டர்ட் ‘கே’ செக்ஷன்’னு சொல்லும்மா” என்று மகன் சொல்ல, இவன் மனைவி ‘ ஃபர்ஸ்ட் ஸ்டாண்டர்ட் ‘கே’ செக்க்ஷன்” என்றாள்.

“பாருங்கப்பா, சின்னப் பசங்கதான ஃபர்ஸ்ட் ஸ்டாண்டர்ட் படிப்பாங்க? அம்மாவும் என் கிளாஸ்ல படிக்கிறாங்களாம்” என்று மகன் இவன் மனைவிக்கும் வலை விரித்து உள்ளே இழுத்தான்.

“சரி விடுடா. அது ஃபெயிலாகி ஃபெயிலாகி படிக்குதுபோல. உங்களுக்கான முதல் கேள்வி. விமானத்தைக் கண்டுபிடித்தது யார்..? A. ரைட் சகோதரர்கள் B. ராங் சகோதரர்கள்”.



Join / Telegram : @Tamil_Books_Library

மகன், இவன் காதுக்குள் கிசுகிசுப்பாக, "யாருப்பா?" என்றான்

இவன் அவன் காதுக்குள், "ரைட் சகோதரர்கள்" என்றான்.

மகன் ரகசியமாகப் பேசுவதாக
நினைத்து, இவன் மனைவியிடம்' "அம்மா, ராங் சகோதரர்கள் தான் கரெக்டான ஆன்சராம்மா. நீ 'ராங் சகோதரர்கள்'னு சொல்லும்மா..." என்று சொல்ல, இவன் மனைவி அப்பாவியைப்போல் நடித்து "ராங் சகோதரர்கள்" என்றாள்.

மகன் பெருமிதத்துடன் "ரைட் சகோதரர்கள்" என்று சொல்லி இவனைப் பார்த்து கண்ணடிக்க, இவன் "ரைட் சகோதரர்கள் is the right answer. மிஸ்டர் ஆதவன் நாகராஜன், நீங்க ஆயிரம் ரூபாய் வின் பண்ணிட்டீங்க. சொல்லுங்க இந்தக் காசை வெச்சு என்ன பண்ணப் போறிங்க?" என்று மகனைப் பார்த்து கண்ணடித்தான்.

"சாக்லேட் வாங்கிச் சாப்பிடுவேன்."

"வெரிகுட். அப்பாவுக்கும் அம்மாவுக்கும் குடுப்பியா?"

"செகண்ட் கொஸ்டினைக் கேளுங்கப்பா. அத விட்டுட்டு சாக்லேட்டைக் கேக்குறீங்க?"

"ஓ.கே-டா... உலகம் அழிஞ்சாலும் அழியாத உயிரினம் எது? A. கரப்பான் பூச்சி. B. பட்டாம்பூச்சி"

திருட்டுத்தனமாக இவனே மகனின் காதுக்குள் "'கரப்பான் பூச்சி" என்று கிசுகிசுத்தான். இவன் மனைவி மீண்டும் அப்பாவியாகி "பட்டாம்பூச்சி" என்று தவறான விடையை அளித்து, விளையாட்டுக்கு உற்சாகம் ஊட்டினாள்.

மகன், 5,000 ரூபாய் வென்று, ஐஸ்கிரீம் வாங்கிக்கொண்டான். அதில் பங்கு கேட்டால், ஏடாகூடமான பதில் வரும் என்பதால் இவன் கேட்காமல் விட்டுவிட்டான்.

"உங்களுக்கான மூன்றாவது கேள்வி" என்று கேட்கத் தொடங்கும்போதே "ஏம்ப்பா, கேள்வியே கேட்டுட்டு இருப்பீங்களா? விளம்பர இடைவேளை விடுங்கப்பா. டி-வி-ல அப்படித்தான காட்றாங்க" என்று மகன் செல்லமாகக் கண்டிக்க, இவன் விளம்பர இடைவேளை விடத் தொடங்கினான்.

"ராஜா... கையைக் கழுவிட்டுத்தான சாப்பிடுற?''

"ஆமாம்மா! அல்டாப்பு சோப்லதான் கை கழுவினேன். அல்டாப்பு சோப்பு... ஆரோக்கியத்தின் டாப்பு."

"எம் பொண்ணு சரியாவே சாப்பிட மாட்டேங்கிறா. என்ன

Join / Telegram : @Tamil_Books_Library

பண்ணலாம்? குரங்கு மார்க்கு சேமியா வாங்கிக் குடு. குதூகலமாச் சாப்பிடுவா!”

“நம்ம பையன் நம்மகிட்ட பேசியே பல மாசம் ஆச்சு. என்னங்க பண்ணலாம்?”

“துலாலினோ செல்போன் உபயோகியுங்கள். உங்கள் தலைமுறையே உங்களிடம் பேசும்!”

விளம்பரம் முடிந்து இவன் தொடர்ந்தான். “வெல்கம் பேக் டு உங்கள் கையில் ஒரு கோடி. இந்தக் கேள்விக்கு ஆப்ஷனே இல்ல. நீங்க Phone a friend லைஃப் லைனை யூஸ் பண்ணலாம். இதோ உங்களுக்கான கேள்வி. நா.முத்துக்குமாரின் தாத்தா பெயர் என்ன?

மகன் உடனே, “Phone a friend” என்றான்.

“வெரிகுட். யாருக்கு Phone பண்ணப் போறீங்க?''

“உங்களுக்குத்தாம்ப்பா!”

“சரி. யுவர் கவுன்ட் டவுன் ஸ்டார்ட்ஸ் நவ்” என்று சொல்ல, “அப்பா, உங்க தாத்தா பேரு என்னப்பா?” என்று மகன் ஆர்வமாகக் கேட்க, இவன் தூக்கக் கலக்கத்துடன் “எத்திராஜுடா’ என்றான்.

‘எத்திராஜுடா’ என்ற மகன் பதிலுக்கு 50,000 கிடைத்து, அவன் எத்திராஜ் தாத்தாவுடன் கம்ப்யூட்டர் வாங்கி வீடியோ கேம்ஸ் விளையாடப் போனான்.

அடுத்தடுத்த கேள்விகளின் நாடகம் முடிந்து, மகனுக்கான ஒரு கோடியை கையில் கொடுத்துவிட்டு இவன் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தபோது, கன்னத்தில் ஓர் ஈர முத்தம். திடுக்கிட்டு இவன் விழித்தெழுந்தபோது இவன் எதிரே ஓர் உருவம் தெரிந்தது.

“யார் சார் நீங்க!” என்றான்.

“என்னைத் தெரியலையா? ஏற்கெனவே நாம டிரெயின்ல மீட் பண்ணிருக்கோமே. நான்தான் கடவுள்” என்றார்.

இவன் பதற்றத்துடன் “அய்யா... சாமி, எதுக்கு வந்திருக்கீங்க?” என்றான்.

“வாழ்க்கைங்கிறது என்ன?” என்று கேட்டார் கடவுள்.

இவன் மீண்டும் பதற்றத்துடன் விழித்துக்கொண்டிருக்க, கடவுள் சொன்னார்: “வாழ்க்கைங்கிறது இந்த மாதிரி அப்பனும் புள்ளையும் விளையாடற தீராத விளையாட்டு!''

Join / Telegram : @Tamil_Books_Library



# வீடென்பது யாதெனில்...

“எனது புறநகர் குடியிருப்பு
வயல்களின் சமாதி என்று
நினைவுபடுத்தியவை
தவளைகளே!”

_ சுகுமாரன்
'பூமியை வாசிக்கும் சிறுமி' கவிதைத் தொகுப்பிலிருந்து...

இன்னமும் இவனுக்கு லிஃப்ட்டில் செல்வது என்றால், அடிவயிற்றில் இருந்து ஒரு பயம் லேசாக எட்டிப் பார்க்கும். ஒவ்வொரு முறை லிஃப்ட்டுக்குள் நுழையும்போதும், திறந்து மூடும் சவப்பெட்டிக்குள் நுழைவதுபோலவே நினைத்துக் கொள்வான். முதன்முறையாக ரயிலின் ஓட்டத்தைப் பார்த்து மரத்துக்குப் பின்னால் ஒதுங்கிய காட்டுமிராண்டியின் பயம் அது.

தலைமுறைகள் கடந்து இவன் டி.என்.ஏ- வில் ஏதோ ஒரு முப்பாட்டன் அந்தப் பயத்தைக் கடத்தியிருக்கிறான். மாநகரத்துக்கு வந்த புதிதில், உயரமான கட்டடங்களுக்குள் நுழையும் போதெல்லாம், இவன் பழைய பயத்துடன் லிஃப்டடைப் புறக்கணித்து கால்களாலேயே அந்த உயரங்களைத் தாண்டியிருக்கிறான்.

இவன் இப்படியென்றால், இவன் மனைவிக்கு எஸ்கலேட்டரைக் கண்டால் பயம். சேலையின் கால் பகுதி படிக்கட்டில் மாட்டிக் கொண்டால் என்னாவது? எஸ்கலேட்டரில் கால் வைக்கும் போது தலைகீழாக விழுந்து விடுவேனா..? எனப் பல சந்தேகங்கள் கேட்டு இவன் அச்சத் தீயில் நெய் ஊற்றுவாள்.

Join / Telegram : @Tamil_Books_Library

இவன் என்னமோ பெரிய வீரன் மாதிரி, ‘இது நம்மள மேல தூக்கிட்டுப் போற ஒரு மெஷின். அவ்வளவுதான். இதைப் பார்த்துப் பயப்பட வேண்டாம்’ என்று முதல் படிக்கட்டில் காலை எப்படி வைப்பது, கடைசி படிக்கட்டில் இருந்து காலை எப்படி எடுப்பது என்று பாடம் நடத்துவான். எஸ்கலேட்டரில் கால் வைத்ததுமே, தோளோடு சேர்த்து மனைவியைப் பிடித்துக் கொள்வான். தன் பாதுகாப்புக்காகத்தான் கணவன், தோள் சாய்த்துக் கொள்கிறான் என்று மனைவி நினைத்தாலும், இவனுக்குள் இருக்கும் அச்சத்தால்தான் அவளைப் பிடித்துக்கொள்கிறான் என்று இன்று வரை அவளுக்குத் தெரியாது. காட்டு மிராண்டிக்கு ஏற்ற காட்டுச்சி!

இவன் இப்போது வசிப்பது ஒரு அபார்ட்மென்டின் நான்காவது தளத்தில். மொத்தம் ஆறு பிளாக்குகள். 400 ஃப்ளாட்டுகள். குடும்பத்துக்கு ஐந்து பேர் என்று கணக்கிட்டாலும் 2,000 பேர் வசிக்கும் ஒரு நவீன காலனி அது. இவன் வசிப்பது, ‘Sun flower’ பிளாக்கில். ஒவ்வொரு முறை அதற்குள் நுழையும்போதும் வான்கா வரைந்த சூரியகாந்தி ஓவியமும், கூடவே காதலிக்காக அறுத்துக் கொடுத்த அவன் காதும்தான் இவன் ஞாபகத்துக்கு வரும்.

ஒவ்வொரு நாளும் இவன் லிஃப்ட்டையும், லிஃப்ட இவனையும் எதிரிகளைப் போல சந்தித்துக்கொள்வார்கள். சில மாதங்களுக்கு முன்பு பள்ளி விட்டு வந்த மகனுடன் லிஃப்ட்டுக்குள் நுழைந்தான். அங்கே ஏற்கெனவே ஒருவர் நின்றிருந்தார். ஆறரை அடி உயரத்தில் செக்கச்செவேலென இருந்த அவரை, இவன் பல முறை பார்த்திருக்கிறான்; பேசியது இல்லை. இவன் இருக்கும் பிளாக்கில் ஏதோ ஒரு தளத்தில் வசிக்கிறார்.

அவர் ஒரு பன்னாட்டு நிறுவனத்தில் உயர் அதிகாரியாகப் பணியாற்றுகிறார் என்றும், காரில் செல்லும்போது இவன் எழுதிய பாடல்களை விரும்பிக் கேட்பார் என்றும் அவரது டிரைவர் இவனிடம் சொன்னது ஞாபகத்துக்கு வந்தது. இவன் அவரைப் பார்த்து ஒரு சிநேகப் புன்னகை வீசினான். அவர் லேசாகத் தலையாட்டி இவனிடம், “எந்த ஃப்ளோர்ல இருக்கீங்க?” என்றார்.

இவன் “ஃபோர்தத் ஃப்ளோர்” என்றான்.

“ஹவுஸ் ஓனரா? டெனன்ட்டா?

“டெனன்ட்தான் சார்”.

“ஓ! வாடகை வீடா?” என்று வேறு பக்கம் முகத்தைத் திருப்பிக்கொண்டார். அந்த ‘ஓ’வின் அலட்சியத்தாலும் முகத் திருப்பலிலும், இவன் சற்றுக் காயப்பட்டுப்போனான்.

Join / Telegram : @Tamil_Books_Library

“ஹலோ சார்” என்றான் அவரைப் பார்த்து.

“என்ன?” என்றார் எரிச்சலுடன்.

“இந்த உலகமே ஒரு வாடகை வீடுதான். இன்னும் சொல்லப்போனா, நம்ம உடம்பே ஒரு வாடகை வீடுதான். இங்க யாரும் எதுக்கும் ஓனர் இல்லே” என்றான்.

இதற்குள் அவர் இறங்கவேண்டிய ஃப்ளோர் வந்ததும், “அதனால்தான் நீங்க இன்னமும் வாடகை வீட்டிலேயே இருக்கீங்க” என்று மீண்டும் காயப்படுத்திவிட்டுக் கடந்து போனார். லிஃப்ட் இயங்கத் தொடங்கியதும் இவர்களின் உரையாடலைக் கேட்டுக்கொண்டிருந்த மகன், “அப்பா வாடகை வீடுனா என்ன?” என்றான்.

இவன் அவனுக்கு எப்படிப் புரியவைப்பது என்று யோசித்துக்கொண்டிருக்கும்போது, ‘ஆதவன் நான் சொல்றேன்’ என்ற குரல் கேட்டு, அப்பனும் பிள்ளையும் திடுக்கிட்டார்கள்.

“யாரோ பேசுறாங்கப்பா” என்றான் மகன் ஆச்சர்யத்துடன்.

“யாரோ இல்ல. மேலே நிமிர்ந்து பாரு” என்ற குரல் கேட்டு மேலே நிமிர்ந்தார்கள்.

ஒரு சின்ன வட்டத்துக்குள் கோடு கோடுகளாகப் பொருத்தப்பட்டிருந்த லிஃப்ட்டின் மின் விசிறியில் இருந்து, மீசையை ஆட்டியபடி ஒரு கரப்பான் பூச்சி வெளிவந்தது.

“வணக்கம் கவிஞரே” என்றது கரப்பான் பூச்சி.

இவன் வணக்கம் சொன்னான்.

“அப்பா, கரப்பான் பூச்சி பேசுதுப்பா!” என்றான் மகன் ஆச்சர்யத்துடன்.

கரப்பான் பூச்சி பேசியது.

“ஒரு கவிதை சொல்லலாமா?”

“அப்பா... கவிதையாம்ப்பா... சொல்லு சொல்லு. என்ன கவிதை?” என்று துள்ளிக் குதித்தான் மகன்.

“வாடகை வீட்டைப் பத்தித்தான்! கேக்கிறியா?” என்றது கரப்பான் பூச்சி.

“ம்’ என்றான் மகன் ஆர்வத்துடன்.

“இது மலையாளக் கவிஞர் ஸ்ரீவத்ஸன் எழுதி, கே.வி. ஷைலஜா தமிழில் மொழிபெயர்த்தது” என்று கரப்பான் பூச்சி சொன்ன அந்தக்

Join / Telegram : @Tamil_Books_Library

*கவிதை...*

*நமதில்லை மகனே,*
*இந்த வீடும் கதவுகளும்*
*மாடங்களும் படிக்கல்லும்*
*வெளிப்புற வேலிப்படர்ப்பும்*
*பொன் பூக்களும்.*

*நமதில்லை மகனே,*
*இந்த வீடும் வாசலும்*
*நந்தியாவட்டை நிழலும்*
*அரளியும் இலஞ்சிப்பூ மணமும்.*

*நமதில்லை மகனே,*
*இந்த வீடும் குளமும் கோயிலும்*
*குளிர் சாமரம் வீசும் காற்றும்.*

*நமதில்லை மகனே,*
*இந்த வீடும் சித்திர விதானங்களும்*
*கண்ணாடி பார்க்கும் மரச்சிற்பக் கன்னிகளும்,*
*அப்பா, கரப்பான் பூச்சிப்பா?*

*நமதில்லை மகனே,*
*இந்த வீட்டின் கோடியில்*
*தொங்கவிட்டிருக்கும்*
*ஆலோலம் கிளிக் கூடும்*
*நெல்மணிக் குதிர்களும்.*

*(கூட்டில் வந்து உட்காரும்*
*கிளியைக் காணாமல் நீ*
*துக்கத்தில் தேம்பின எத்தனை*
*அந்திகள் போயிருக்கிறது*

Join / Telegram : @Tamil_Books_Library




இந்த வாசல் வழியாக!)

நமதில்லை மகனே,
இந்த வீடும் வீட்டின் சங்கீதமும்.

நாம் போகிறோம்,
கால தேசங்கள் அறியாமல்
பூமியின் எல்லைக்கோடு வரை
முடிவில்லா யாத்திரையாய்...
யாத்திரையின் இடையில்
ஒரு நொடி தலைசாய்க்க
வீடு தேடிப் போகிறோம் மகனே நாம்!

புரிந்தும் புரியாமலும் மகன் கேட்டுக்கொண்டிருக்க, இவன் தன் உணர்வை வரிகளாகச் சொன்ன ஸ்ரீவத்ஸனையும் கரப்பான் பூச்சியையும் நன்றியுடன் பார்த்தான்.

திருமணத்துக்குப் பிறகு எத்தனை வீடுகள் இவன் மாறியிருக்கிறான்! இவன் மனைவி, மிக்ஸியில் எதையோ அரைத்துக்கொண்டிருப்பாள். காலிங்பெல்கூட அடிக்காமல், ஹவுஸ் ஓனர் பெண்மணி உள்ளே நுழைவார்.

“ஆணி அடிக்கக் கூடாதுன்னு சொன்னேன்ல! எதுக்கு ஆணி அடிக்கிறீங்க?”

“நாங்க ஆணி எதுவும் அடிக்கலயே!”

Join / Telegram : @Tamil_Books_Library

“சத்தம் மாடி வரைக்கும் கேக்குது”

“மிக்ஸியில் சட்னி அரைச்சிட்டு இருந்தேன்” என்று மனைவி சொன்னதும்,

“இனிமே சத்தம் போடாத மிக்ஸி வாங்குங்க” என்று ஹவுஸ் ஓனர் பெண்மணி வெளியேறுவதைப் பார்த்து இவன் பதைபதைத்துப் போய், அடுத்த மாதமே அந்த வீட்டைக் காலி செய்தான்.

இன்னொரு வீட்டில் தண்ணீர் பிரச்னை. வாட்டர் டேங்க் துருப்பிடித்திருக்க, குழாயைத் திறந்தால் செந்நிறத்தில் சக்கை சக்கையாக இரும்புத் துண்டுகள் பக்கெட்டில் மிதந்தன. அந்தக் காலகட்டத்தில்தான் ஐ.டி. இளைஞர்கள் மாநகரத்தில் மும்முடங்காக வாடகையை ஏற்றியிருந்தனர். இவன் சினிமாக்காரன் என்பதால், நான்கு மடங்கு வசூலித்துக் கொண்டிருந்தார் ஹவுஸ் ஓனர். அவரை வீட்டுக்கு வரவழைத்து தண்ணீர் பக்கெட்டைக் காட்டினான்.

“இரும்பும் ஒரு சத்துதான் சார். உடம்புக்கு நல்லது. இதயெல்லாம் பார்த்தா சிட்டியிலே வாழ முடியுமா? அதுவும் நீங்க குடுக்கற வாடகையில்?” என்று சிடுசிடுத்தபடி வெளியே போனார்.

இவனுக்குள் இருக்கும் வைராக்கிய வேதாளம் வெளியே கிளம்பி, இப்போது இருக்கும் இந்த வீட்டுக்கு குடி வந்தான். இந்த ஹவுஸ் ஓனர் தஞ்சாவூரில் டாக்டர். இந்த மூன்று ஆண்டுகளில் ஒருமுறைதான் அவரைச் சந்தித்திருக்கிறான். வாடகை வீட்டிலும் சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கும் சுகத்தைத் தந்துகொண்டிருப்பவர்.

லிஃப்ட்டில் பார்த்த கரப்பான் பூச்சி இவர்களது சிநேகிதன் ஆனது. கரப்பான் பூச்சிக்கு மகன் ‘டிங்கு’ என பெயர் வைத்தான். தினமும் காலையில் பள்ளிக்குக் கிளம்பும்போது, மகனுக்கான உணவை இவன் மனைவி டிபன் பாக்ஸில் எடுத்துவைக்கும்போதே “அம்மா, டிங்குவுக்கு?” என்பான் மகன்.

பிளாஸ்டிக் தட்டில் பரிமாறப்பட்ட இட்லியையோ, பூரியையோ, உப்புமாவையோ, கீரை சாதத்தையோ கடவுளுக்குப் படைக்கச் செல்லும் பக்தனைப் போல, உள்ளங்கையில் ஏந்திக்கொண்டு இவனுடன் லிஃப்ட்டுக்குள் நுழைந்ததும் மகன், “டிங்கு... சாப்பிட வா” என்பான். மின்விசிறிக்குள் இருந்து வெளியே வந்து டிங்கு மீசையை ஆட்டும்.

இன்று வரை டிங்கு அந்த உணவைச் சாப்பிட்டதா... இல்லையா என்று இவர்களுக்குத் தெரியாது. ஆனால் அடுத்த முறை லிஃப்ட்டுக்குள் நுழையும்போது அந்த உணவு காணாமல் போயிருக்கும்.

பள்ளி விட்டுத் திரும்புகையில் மகன் கேட்பான். “டிங்கு, இன்னிக்கு என்ன பண்ணின?”

Join / Telegram : @Tamil_Books_Library

“தேர்ட் ஃப்ளோர் ஆன்ட்டி லிஃப்ட்டுக்குள் நுழைஞ்சதும் அழுதுக்கிட்டே இருந்தாங்க. அப்புறம் கண்ணாடியைப் பாத்து கண்ணைத் துடைச்சுக்கிட்டு வெளில போயிட்டாங்க. பாவம், அவங்களுக்கு என்ன கஷ்டமோ? ஒண்ணும் புரியாமப் பார்த்திட்டே இருந்தேன்.”

“அய்யோ பாவம்” என்பான் மகன்.

ஒவ்வொரு நாளும் ஒவ்வோர் உரையாடல். மகனும் டிங்குவும் பேசிக்கொண்டிருக்கும் லிஃப்ட் கீழிறங்கும் ஒரு நிமிடத்துக்கும் குறைவான அந்தக் கணம், இவனுக்கு கடவுள் கொடுத்த வரமாகத் தோன்றும்.

நேற்று மகன், டிங்குவிடம் கேட்டான்: “எதுக்கு லிஃப்ட்லயே இருக்க? பேசாம எங்க வீட்டுக்கு வந்துடேன். நாம ஒண்ணா சேர்ந்து விளையாடலாம்.”

டிங்கு சொன்னது, “இல்ல ஆதவன், வாடகை வீடுன்னா என்னன்னு உன்னை மாதிரி ஒரு பையன் கேப்பானல்? நான் உங்க வீட்டுக்கு வந்துட்டா... அந்தக் கவிதையை அவனுக்கு யாரு சொல்றது?”

ஒரு கணம் இவன் திகைத்துப்போனான்.

டிங்குவை கீழே இறங்கி வரச்சொல்லி, ஆத்மார்த்தமாகக் காலில் விழுந்து வணங்கினான். ஒரு மனிதன், பூச்சியின் காலில் விழுந்து வணங்குவதை, லிஃப்ட் ஆச்சர்யத்துடன் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தது!

Join / Telegram : @Tamil_Books_Library




# நிலாக் காலம்

*எந்த ஊரில் எந்த நாட்டில்*
*எங்கு காண்போமோ?*

*எந்த அழகை எந்த விழியில்*
*கொண்டுசெல்வோமோ?*

*இந்த நாளை வந்த நாளில்*
*மறந்துபோவோமோ?*

*-கவியரசு கண்ணதாசன்*
*('பசுமை நிறைந்த நினைவுகளே...' பாடலிலிருந்து)*

**எ**ல்லாப் பிள்ளைகளையும் போலவே வளர்ந்து பெரியவன் ஆனதும், டாக்டர் ஆக வேண்டும் என்றோ, இன்ஜினியர் ஆக வேண்டும் என்றோ சொல்லிக்கொடுத்து இவன் வளர்க்கப்படவில்லை. இவன் இவனாகவே வளர அனுமதித்ததால், படித்து முடித்ததும் என்ன வேலையில் சேரலாம் என்று இவன் நிறையக் கனவுகள் வைத்திருந்தான்.

அந்தந்த வயதுக்கு ஏற்ற எளிய, சிறிய கனவுகள். வெவ்வேறு முகவரிகளையும், வாசல் கோலங்களையும் கடந்தபடி கடிதங்கள் சுமக்கும் ‘போஸ்ட்மேன்’ ஆக வேண்டும்; குழந்தைகளின் கையாட்டலுக்குத் தலை அசைத்தபடி கூட்ஸ் வண்டியின் கார்டாக கடைசிப் பெட்டியில் நின்று சிவப்புக் கொடி காட்டிச் செல்ல வேண்டும்; இரும்பு யானையைப் போல் கம்பீரத்துடன் அசைந்து வரும் ரோடு ரோலர் டிரைவர் ஆக வேண்டும்; ‘மருதமலை மாமணியே முருகய்யா...’

Join / Telegram : @Tamil_Books_Library

என்று ஸ்பீக்கர் கட்டி முதல் ஆட்டத்துக்கு ஊர் மக்களை அழைக்கும் சீதாலட்சுமி டெனட் டாக்கீஸில் டிக்கெட் கிழித்துக் கொடுக்க வேண்டும்... என எத்தனையோ கனவுகள். கலைத்துக் கலைத்து மீண்டும் அடுக்கப்படும் சீட்டுக் கட்டுகள்தானே கனவுகள்.

மூன்றாம் வகுப்பு படிக்கும்போது வகுப்பின் முதல் நாள் அன்று திலகவதி மிஸ் இவனிடம் கேட்டார், “படிச்சு முடிச்சதும் என்ன ஆகப் போற?”

இவன் ஆர்வத்துடன் பதில் சொன்னான், “எங்க வீட்டுக்குப் பக்கத்துல இருக்கிற காலேஜ்ல பியூன் வேலைக்குப் போவேன்.''

திலகவதி மிஸ் அதிர்ச்சியாகி, “புரொஃபஸர் ஆவேன்னு சொன்னாப் பரவாயில்ல; பியூன் ஆகப்போறேன்னு சொல்றியே?” என்று கேட்க, இவன் அதே ஆர்வத்துடன், “இல்ல மிஸ் புரொஃபஸர், நாலைஞ்சு கிளாஸுக்குததான் போக முடியும். எங்க வீட்டுக்குப் பக்கத்துல இருக்கிற கணபதி அண்ணன் அந்தக் காலேஜ்லதான் பியூனா இருக்காரு. அந்தக் காலேஜ்ல அவரு மட்டும்தான் எல்லா கிளாஸுக்கும் போவாரு தெரியுமா?” என்று பதில் சொன்னான். திலகவதி மிஸ் இவனை முறைத்துப் பார்த்துவிட்டு, அடுத்த பையனை நோக்கி நகர்ந்தார்.

இவன் வீட்டில் இருந்து பார்த்தால், காஞ்சிபுரம் பச்சையப்பன் ஆடவர் கல்லூரியின் கட்டடம் தெரியும். நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலம், அந்தக் கல்லூரிக்குச் சொந்தமாக இருந்தது. இவன் வீட்டை ஒட்டியிருந்த சாலையில் இருந்தே அந்த நிலத்தின் பரப்பளவு தொடங்கி விடும். சிறுவயதில் அந்த நிலத்தில்தான் இவன் விளையாடித் திரிந்தான். அந்த மைதானத்தில் மாணவர்கள் தங்கும் விடுதி, கூழாங்கல் சப்திக்க வளைந்து நெளிந்து ஓடும் வேகவதி ஆறு, ஆற்றில் மேய்ந்துவிட்டு ஈர மண் தரையில் நட்சத்திரக் கால் பதிக்கும் வாத்துக் கூட்டங்கள், கையில் குச்சியுடன் அவற்றை விரட்டும் ஆடு, மாடு மேய்க்கும் சிறுவர்கள்... எனச் சிற்றில் ஆடித்தான் இவன் பாலகாண்டத்தைக் கடந்து வந்தான்.

இன்று வரை புல் மண்டிக்கிடக்கும் கல்லூரிக்குச் சொந்தமான அந்தச் சிறு வனத்தின் பெரும் வெளியில்தான் எத்தனையெத்தனை மரங்கள்? அங்கு இருக்கும் எல்லா மரங்களின் கிளைகளிலும் இவன் கால் ரேகைகள் பதிந்திருக்கின்றன. கண்ணாமூச்சி ஆட்டங்களில் இவன் ஒளிந்துகொள்ளும் முக்கிய இடம், அந்த மரங்களின் உச்சிக் கிளைகள்தான்.

கொடுக்காப்புளி மரத்தின் முள் கிழித்த காயத்துடன், பொன்வண்டுகள் பிடித்து கொட்டாங்கச்சி சிறையில் அடைத்து, அவை இடும் மஞ்சள் முட்டைகளையும் பச்சை நிறக் கழிவுகளையும் பார்த்துப்

Join / Telegram : @Tamil_Books_Library

பரவசப்பட்டதும், கல்லூரிக்குப் பின்பக்கத்தில் படர்ந்திருக்கும் பெரிய பாதாம் மரத்தின் சருகுகளைத் தேடி ஈரம் அப்பிய பாதாம் கொட்டைகளைப் பொறுக்கி, செந்நிற நார் உரித்து பாதாம் பருப்புகளை ருசி பார்த்ததும், நாவல் மரங்களை கல்லால் அடித்து மண் உதிராப் பழங்களை உப்பிட்டு உண்டதும்... திரும்பி வாராத காலங்கள்.

அந்த மைதானத்தில்தான் இவன் தென்னை மட்டையில் செதுக்கிய பேட்டுடனும், சைக்கிள் டியூபில் செய்த பந்துடனும், கிரிக்கெட் விளையாடினான். கிரிக்கெட் மட்டுமா? கபடி... கபடி, ஐஸ் பால், கில்லித்தண்டு என நாளெல்லாம் ஆட்டங்கள்; நெஞ்சம் எல்லாம் ஞாபகங்கள். இவன் முதன்முதலில் சைக்கிள் ஓட்டக் கற்றுக்கொண்டது அங்குதான். முதன்முதலில் பீடி குடித்து, முதல் இருமலைப் பெற்றுக்கொண்டதும் பாம்புகள் திரியும் அந்த இடத்தில்தான்.

பள்ளியில் படிக்கும் காலத்தில் இருந்தே அந்தக் கல்லூரியை இவன் அப்படி நேசித்தான். பள்ளி விட்டு வரும் மாலைகளிலும், சனி, ஞாயிறு விடுமுறைகளிலும், மிதிவண்டியில் அந்தக் கட்டடங்களைச் சுற்றிச் சுற்றி வருவான்.



'ப்ளஸ் டூ முடிச்சுட்டு, படிச்சா இந்தக் காலேஜ்லதான் படிக்கணும்' என்று ஏங்குவான். 'அப்படி இந்தக் காலேஜ்ல படிச்சா, எந்த ரூம் நம்ம கிளாஸா இருக்கும்' என்று ஒவ்வோர் அறையாக வெளியில் இருந்தே பார்த்து, ஜன்னலைத் திறந்தால் பாதாம் மரத்துக் கிளைகளும், பின்னணியில் ஓடும் வேகவதி ஆறும் தெரியும் அறையைத் தேர்ந்தெடுப்பான்.

ப்ளஸ் டூ படிக்கையில் இவன் வானியல் விஞ்ஞானி ஆக வேண்டும் என்று மீண்டும் ஒரு புதிய கனவை நோக்கி அடியெடுத்துவைத்தான்.

Join / Telegram : @Tamil_Books_Library

அதற்குக் காரணம், இவனுக்கு இயற்பியல் வகுப்பு எடுத்த சந்திரசேகர் மாஸ்டரும், ஸ்பெக்ட்ரோமீட்டருக்குள் புலப்பட்ட ஏழு வண்ணங்களுடன் விரிந்த வானவில் தரிசனமும்தான். சந்திரசேகர் மாஸ்டர் இயற்பியலை அணுஅணுவாக அனுபவித்துச் சொல்லிக் கொடுத்தார். "நான் டியூஷன் எடுக்க மாட்டேன். எது புரியலைனாலும் கிளாஸ் ரூம்லயே கேளுங்க. அப்படியே நேரம் இல்லைன்னா சனி, ஞாயிறு வீட்டுக்கு வாங்க. ஃப்ரீயா சொல்லித்தர்றேன்" என்று இயற்பியல் சூத்திரங்களின் கதவுகளைத் திறந்துவிட்டார்.

ஐசக் நியூட்டனை, ஆல்பர்ட் ஐன்ஸ்டீனை, டாப்லரை, தாமஸ் ஆல்வா எடிசனை, கார்நாட் தியரியை அப்படிப்பட்ட சனி, ஞாயிறுகளில்தான் இவன் அறிந்துகொண்டான். ப்ளஸ் டூ முடிக்கும்போதே எம்.எஸ்சி., இயற்பியல் படிக்கும் மாணவனைவிட, அதிக ஞானத்தை அவர் இவனுக்கு அளித்தார்.

ப்ளஸ் டூ தேர்வில், இயற்பியலில் இவன் 95 சதவிகிதம் மதிப்பெண்கள் எடுத்து, இவன் ஆசைப்பட்ட அதே பச்சையப்பன் கல்லூரியில் இளங்கலை இயற்பியல் வகுப்பில் சேர்ந்தான்.

அந்தக் கல்லூரி, பசுமை நிறைந்த நினைவுகளாக, பாடித் திரிந்த பறவைகளாக இவனை அணைத்துக்கொண்டது. இவன் பாடம் படித்தான். கட்டடித்து, நண்பர்களுடன் படங்கள் பார்த்தான். அவ்வப்போது பெண்கள் கல்லூரிப் பக்கம் ஒதுங்கி, பார்வைகளால் காதலும் செய்தான்!

கல்லூரிப் பருவம் என்பது, காலம் ஒரு மாணவனைக் கூட்டுப்புழுப் பருவத்தில் இருந்து வண்ணத்துப்பூச்சியாக மாற்றி வெளியே பறக்கவிடும் பருவம். இவன் சுதந்திரமாகப் பறந்தான்; பதின் வயதுகளின் பூந்தோட்டங்களில் மிதந்தான்; முள்மரங்களில் சிக்கி, இறகுகள் கிழிந்தான்; மீண்டும் வண்ணங்களைப் பூசிக்கொண்டு வானம் அளந்தான்; கைப்பிடிக்குத் தப்பிப்போன அந்த வண்ணத்துப்பூச்சியின் வண்ணங்கள், இன்றும் இவன் நெஞ்சுக்குள் கொட்டிக் கிடக்கின்றன.

கல்லூரியின் வகுப்புகளைவிட மரத்தடி நிழல்கள்தான் இவனுக்கு நிறைய நண்பர்களை அறிமுகப்படுத்தின. 'குண்டு' சிவா, "பேட்டை' சிவா, 'பழைய சீவரம்' சிவா, ஆர்.சிவா... என்று நான்கு சிவாக்கள் இவனுடன் படித்தார்கள். 'குண்டு சிவாவை ஒரு எம்.எல்.ஏ-வின் உதவியாளனாகவும், 'பேட்டை சிவாவைப் பேராசிரியராகவும், 'பழைய சீவரம்' சிவாவை ஆஃப்ரிக்காவின் தான்சானியாவில் இன்ஜினீயராகவும், ஆர்.சிவாவை கோழிப் பண்ணையாளனாகவும் அந்தக் கல்லூரிதான் மாற்றியது!

அதிகாலை பூரிக்கு ஆசைப்பட்டு மைதானத்தைச் சுற்றி வந்து மூச்சு

Join / Telegram : @Tamil_Books_Library


இரைத்து பின்னாட்களில் இவன் கைவிட்ட என்.சி.சி-யில் இவனுடன் பங்கேற்ற தமிழ்வளவனை கார்கிலுக்கு அருகில் பனிப்பொழிவில் ஏதோவொரு ரெஜிமென்டில் ராணுவ வீரனாக்கியதும், அகஸ்டின் செல்லபாபுவை டி.என்.பி.எஸ்.சி. எழுதவைத்ததும், வகுப்பின் முதன் மாணவன் சந்திரசேகரை கல்பாக்கம் அணுமின் நிலையத்தில் ரிசர்ச் அசிஸ்டென்ட் ஆக்கியதும், ‘குட்லி’ என்று அழைக்கப்படுகிற சுதர்சனத்தை அமெரிக்காவில் ஐ.டி. தொழில் செய்ய அனுப்பியதும், செந்தில்குமாரை விவசாயத்துக்கே திருப்பி அனுப்பியதும், தேவகணேசை உரக்கடை வைக்கச் சொன்னதும் அதே கல்லூரிதான்!

ஜி.ஆர்.கே. சாரின் பரபரப்பான வேகத்தையும், ஜி.பி. சாரின் அமைதியான கிண்டல்களையும், ஏ.ஆர்.பி. சாரின் ‘இதைப் பாரும்மா...’ என்று ஆரம்பிக்கும் தொனியையும்’ வி.ஜே.ஆர். சாரின் தெலுங்கு கலந்த தமிழையும், கணிதம் எடுத்த எஸ்.ஜி. சாரையும், ஆங்கிலம் எடுத்த சுகந்தி மேடத்தையும், தமிழ் வகுப்பு எடுத்த விநாயகம் மற்றும் எஸ்.குருசாமி ஐயாக்களையும் எப்படி இவனால் மறக்க முடியும்?

அந்தக் காலத்தில் எல்லாப் பத்திரிக்கைகளிலும் இவன் கவிதைகள், கதைகள், கட்டுரைகள் என பரவலாக எழுதிக் கொண்டிருந்தான். அவற்றுக்கான சன்மானங்கள் மணியார்டரில் வரும். போஸ்ட்மேன் தெய்வசிகாமணி சார் இவன் பக்கத்து ஊர்க்காரர் என்பதால், கல்லூரிக்குக் கடிதங்கள் கொடுக்க வரும்போது, இவன் வகுப்புக்கே வந்து மணியார்டர் பணத்தைக் கொடுப்பார். “எங்களைவிட நீதான் அதிகம் சம்பாதிக்கிற போலிருக்கே?” என்று பேராசிரியர்கள் கிண்டல் செய்வார்கள்.

இவன் வகுப்பில் இவனுடன் டி.எஸ்.ராஜராஜனும் படித்தான். இவனைப் போலவே அவனும் கதை, கவிதை என்று எழுதிக்கொண்டிருந்தால், கல்லூரி முடிநது மாலையில் மரத்தடியில் இருவரும் அமர்ந்து கவிதைகள் எழுதுவார்கள். பனித்துளி, மலை அருவி, வரதட்சணை, முதிர் கன்னி, மூன்றாம் பிறை என்று எல்லா அமெச்சூர் கவிஞர்கள் போலவே ஒரு தலைப்பைத் தேர்ந்தெடுத்து ஹைக்கூ கவிதையோ, அதையும் தாண்டி ஆறேழு வரிகளையோ எழுதுவார்கள். அதிகபட்சம் அரை மணி நேரம்தான். அதற்குள் அவரவர் வலைகளில் அது லாபம் என்பது கணக்கு. எப்போதாவது சில தருணங்களில் மீன்களுக்கு பதில் விண்மீன்களும் விழுவது உண்டு.

Join / Telegram : @Tamil_Books_Library



‘நிலா’ என்ற தலைப்புக்கு

அழுது புரண்டு
நான் அலறிய ராத்திரிகளில்,
நிலா இருந்தது.
சோறும் இருந்தது.
ஊட்டத்தான் தாயில்லை!’

-என்று இவனும்...

ஏழையின் பசிக்கு
எட்டாத தோசையால்
தெரிந்தது நிலா!
என்று அவனும்...

பின்பு ‘வரதட்சணை’ எனும் தலைப்பில்
மாயியார்க்கெல்லாம்
மரபுக் கவிதைதான்

Join / Telegram : @Tamil_Books_Library

*அதிகம் பிடிக்கும்*

*சீர் கொண்டுவருவதால்!*

*என்று இவனும்...*

*ஜன்னல் கம்பிகளுக்குப் பின்*

*ஆயுள் கிறை*

*முதிர்கன்னிகள் !*

*-என்று அவனும் எழுதி முடித்த பின், அவன் கவிதைகளை இவனும், இவன் கவிதைகளை அவனும் படித்துப் பார்த்து எதை எந்தப் பத்திரிகைக்கு அனுப்பலாம் என்று தரம் பிரிப்பார்கள். நல்ல வரிகளுக்கு பரஸ்பரம் கை குலுக்கிக் கொள்வார்கள். அன்று கை குலுக்கிய டி.எஸ்.ராஜராஜனின் கைகள்தான் பின்னாட்களில் கோடம்பாக்கத்து சினிமாவை நோக்கி இவனை அழைத்துவரப் போகின்றன என்று, அன்று இவனுக்குத் தெரியாது!*

Join / Telegram : @Tamil_Books_Library

15

## சாலைகளின் பாடல்

“நம் ஒட்டுமொத்த வாழ்க்கையும் சினிமா பார்ப்பதைப் போலத்தான். ஆனால், படம் முடிந்த பின் க்ளைமாக்ஸ் என்ன என்பது படம் பார்த்தவருக்குத் தெரியாது!”

- ரோமன் பொலன்ஸ்கி,
போலந்து திரைப்பட இயக்குநர்

**க**னவுத் தொழிற்சாலையில் இவன் காலடி வைத்ததற்கு நிறைய முன்கதைச் சுருக்கங்கள் இருக்கின்றன.

இவன் எட்டாவதோ ஒன்பதாவதோ படிக்கும்போது இவன் கிராமத்துக்கு ஒரு குழுவினர், தொலைக்காட்சி மற்றும் வீடியோ டெக்குடன் வந்து இறங்கினார்கள்.

பஞ்சாயத்துத் தலைவர் அனுமதி பெற்று அந்தி மாலை, இருளுக்குள் விழுந்துகொண்டிருந்த நேரத்தில் கோயில் மண்டபத்தில் வைத்து ஊர் மக்களுக்கு ஒரு படத்தைப் போட்டுக் காட்டினார்கள். அந்தப் படம், சத்யஜித் ரே இயக்கிய ‘பதேர் பாஞ்சாலி'.

வீடியோ டெக் அறிமுகமான காலம் அது. துபாயிலோ, சிங்கப்பூரிலோ வேலை செய்பவர்களின் வீடுகளில்தான் அது இருக்கும். இவன் கிராமத்தில் எல்லோரும் தறிக் குழியில் அமர்ந்து வேலை செய்ததால், துபாய்க்குப் போகும் யோகம் இல்லை. ஆகையால், வாடகைக்கு எடுத்த வீடியோ டெக்கை இவன் திருவிழா சமயங்களில்தான் பார்த்திருக்கிறான். அந்தத் திருவிழாக்களிலும் பெரும்பாலும் இவன் பார்த்த படங்கள் ‘திருவிளையாடல்', ‘சரஸ்வதி சபதம்', ‘கர்ணன்’, ‘ஆயிரத்தில் ஒருவன்', ‘விதி’ போன்றவைதான்.

Join / Telegram : @Tamil_Books_Library

இப்போது எழுப்பிக் கேட்டாலும், அந்தப் படங்களின் வசனத்தை வரிக்கு வரி ஒப்பிப்பான்.

'பதேர் பாஞ்சாலி'யின் கதைச் சுருக்கத்தையும் சத்யஜித்ரே பற்றியும் தாடி வைத்த ஒருவர் அறிமுகப்படுத்த, படம் தொடங்கியது. 'சாலையின் பாடல்' என்னும் பதேர் பாஞ்சாலி, இவன் கிராமத்தின் சாலையைப் பாடத் தொடங்கியது. அதன் ஒவ்வொரு காட்சிகளும் விரியத் தொடங்க இவன் அழுதான்; சிரித்தான்; நெகிழ்ந்தும்போனான். அவ்வப்போது திரும்பிப் பார்க்கும்போது, அரை இருட்டில் இவனைப் போலவே, மற்றவர்களும் உருகிக்கொண்டு இருந்தார்கள்.

படம் முடிந்து, தாடி வைத்தவர் "இந்தப் படம் உங்களுக்குப் பிடிச்சிருக்கும்னு நெனைக்கிறேன். இதைப் பத்தி உங்க கருத்துகளைப் பகிர்ந்துக்கலாம். அதுக்கு முன்னாடி ஒரு தகவல், வாராவாரம் ஞாயிற்றுக்கிழமை மதியம் ஒன்றரை மணிக்கு இந்த மாதிரிப் படங்களை தூர்தர்ஷனில் ஒளி பரப்புவாங்க. வாய்ப்பு இருந்தா பாருங்க." என்று சொல்ல, அந்த இரவு விடியா இரவானது.

இவன் கிராமத்தில் யார் வீட்டிலும் தொலைக்காட்சி இல்லை என்பதால், பெரியார் நகரில் இருந்த நண்பன் அகஸ்டின் செல்லபாபு வீட்டுக்கு ஒவ்வொரு ஞாயிறு மதியமும் ஆஜராகிவிடுவான். இவன் ஆர்வம் அறிந்து, அவர்களும் இவனுடன் மதியத் தூக்கம் துறந்து, படம் பார்ப்பார்கள்; அல்லது பாதியில் எழுந்துபோவார்கள். அப்படித்தான் இவன் சத்யஜித் ரேயை, ரித்விக் கட்டக்கை, மிருணாள் சென்னை, அடூர் கோபாலகிருஷ்ணனை, கோவிந்த நிஹாலினியை அறிந்துகொண்டான்.

**ப்**ளஸ் டூ படிக்கையில் இவன் வாழ்க்கையில் மிகப் பெரிய ஒரு மாற்றம் நிகழ்ந்தது. காஞ்சிபுரம் அண்ணா அரங்கத்தில் எடிட்டர் பி.லெனின், அவர் இயக்கி தேசிய விருது பெற்ற 'நாக் அவுட்' படத்தைத் திரையிட வந்திருந்தார். ஒரு பிணத்தை வைத்து அவர் கதை சொன்ன விதம் இவனுக்குப் பிடித்திருந்தது. அவர்தான் 'உதிரிப் பூக்கள்' படத்தின் எடிட்டர் என்று யாரோ சொல்ல, மேலும் மரியாதை கூடியது. அந்த மரியாதைக்கு மகுடம் சூட்டியது, அவர் இயக்குநர் பீம்சிங்கின் மகன் என்பது.

Join / Telegram : @Tamil_Books_Library



அன்று அவர் பேசிய பேச்சு, சினிமா பற்றிய இவன் பார்வையை மேலும் செழுமைப்படுத்தியது. மக்களுக்கான சினிமாவைப் பற்றியும், சினிமாவில் என்னென்ன துறைகளில் எளிமை தேவை என்பதைப் பற்றியும் அவர் சொல்லிக் கொண்டே செல்ல, பக்கத்தில் அமர்ந்திருந்தவர் இவன் காதில் “இந்த நிகழ்ச்சிக்குக்கூட பேருந்தில்தான் வந்தார் தோழர். சென்னையில்கூட அடிக்கடி இவரை பேருந்துகளில் பார்த்திருக்கிறேன். அவ்வளவு எளிமை” என்று சொல்ல பி.லெனின் தொடர்ந்து “மக்கள்கிட்ட பணம் வாங்கி, மக்களுக்கான படம் எடுக்கப்போறேன். ஏற்கெனவே கேரளாவுல இயக்குநர் ஜான் ஆபிரஹாம் ‘ஒடேசா’ (Odessa) திரைப்பட இயக்கம் மூலமாக இந்த முயற்சிக்கு முன்னுதாரணமாக இருந்திருக்கார். இப்ப நான் துண்டேந்தி உங்ககிட்ட வரப்போறேன். உங்களால முடிஞ்ச உதவியை செய்ங்க” என்று சொல்லிவிட்டு, தோளில் போட்டிருந்த துண்டை விரித்து பார்வையாளர்களிடம் வந்து கையேந்தினார். அவரது துண்டில் 5,10,100 ரூபாய் நோட்டுகள் விழுந்துகொண்டிருந்தன.

முன் வரிசையில் இருந்த ஒரு பெண்மணி, தன் கையில் அணிந்திருந்த தங்க வளையல்களைக் கழற்றித் துண்டில் போட்டதும், இவன் திடுக்கிட்டான். பி.லெனின் அவரை நன்றியுடன் பார்த்துவிட்டு இவனை நெருங்கிவர, பேருந்துக்குக்கூட காசு எடுக்காமல், பையில் இருந்த மொத்தப் பணத்தையும் துண்டில் போட்டான். நிகழ்ச்சி முடிந்து, எட்டு கிலோமீட்டர் நடந்தே இவன் வீட்டுக்கு வந்தபோது, இவன் காதுகளில் ‘பதேர் பாஞ்சாலி’யின் ‘சாலையின்’ பாடல் கேட்டுக்கொண்டே இருந்தது.

அதற்குப் பின் இவன் திரைப்படங்களை, படங்களாகப் பார்க்கவில்லை; பாடங்களாகப் பார்த்தான். இதற்கு முன் இவன் கண்ட கனவையெல்லாம் அழித்துவிட்டு, திரைப்பட இயக்குநராக வேண்டும்

Join / Telegram : @Tamil_Books_Library

என்ற புதிய கனவை உரம் போட்டு வளர்க்க ஆரம்பித்தான். வகுப்பு அறைகளைவிட சங்கம், அருணா, பாபு, பாலாஜி, லட்சுமி, நாராயணமூர்த்தி, பாலசுப்ரமணியா தியேட்டர்களில்தான் இவன் அதிகம் தவம் இருந்தான்.

வருட இறுதியில், அந்த வருடத்தில் வந்த படங்களின் பட்டியல் நாளிதழ்களில் வெளியிடப்பட்டிருக்கும். ஒரு பேனாவை எடுத்துக்கொண்டு பார்த்த படங்களை இவன் டிக் செய்வான். டப்பிங் படங்கள் உள்பட எல்லாப் படங்களிலும் அந்த டிக் மார்க் விழுந்திருக்கும். சில படங்களின் ஓரம் 5,8 என்று எழுதுவான். அத்தனை முறை இவன் அந்தப் படங்களைப் பார்த்திருக்கிறான்.

திரைத் துறைதான் தன் தொழில் என்று முடிவானதும், இவன் தன் அப்பாவிடம் எப்படிச் சொல்வது என்று பல வாரங்களாக யோசித்துக்கொண்டிருந்தான். இவன் உறவுகளில் இருந்து திரைத் துறையில் சாதித்தவர் யாரென்று பட்டியலிட்டான். அந்தப் பட்டியலில் ஒரேயொரு பெயர்தான் இருந்தது.

இவன் பிறப்பதற்கு முன்பே இறந்தவிட்ட அவர், திரைத் துறையில் தன் அடுக்குமொழி வசனங்களில் கோலோச்சினார். தமிழ் சினிமாவை திராவிடக் கொள்கைகளின் பின்னால் திசை திருப்பினார். அரசியலிலும் ஆங்கிலப் புலமையிலும் முன்னுதாரணமாகத் திகழ்ந்தார். அவரது இறுதி ஊர்வலத்தின் போது வரலாறு காணாத அளவு மக்கள் திரண்டார்கள். அவர்தான் பேரறிஞர் அண்ணா.

இவன் அம்மா வழியிலும், அப்பா வழியிலும் பேரறிஞர் அண்ணா இவன் உறவினர். சிறு வயதில் அண்ணாவின் மேற்கோள்களை உதாரணம் காட்டித்தான் இவனை, இவன் தந்தை வளர்த்தார். உறவினர்கள் கூடும் சுப நிகழ்ச்சிகளில் இவனை, இவன் தந்தை, அண்ணாவின் மகன் சி.என்.ஏ.பரிமளத்திடம் அழைத்துச் சென்று, இவன் அப்போது எழுதிய கவிதையைச் சொல்லச் சொல்வார். உரத்தக் குரலில் இவன் சொல்லி முடித்ததும், பரிமளம் இவனை அருகில் அழைத்து மடியில் அமர்த்திக்கொண்டு, “இதை அப்படியே ஒரு காகிதத்துல எழுதிக் குடு. நான் திரும்பவும் நடத்தற ‘காஞ்சி’ பத்திரிகைல பிரசுரிக்கிறேன்” என்று உற்சாகப் படுத்துவார். அப்போது அவர் காஞ்சியில் தோல் மருத்துவராகப் பணியாற்றிக்கொண்டிருந்தார். அடிக்கடி அவரை இவன் கவிதைகளுடன் சந்திப்பான். படித்துப் பார்த்து நிறைகுறைகள் சொல்வார். இவன் ஆளுமையை வளர்த்ததில் அவருக்கும் பெரிய பங்கு உண்டு.

இவனது சினிமா ஆசை தெரியவந்ததும் இவன் வகுப்பில் படித்த நண்பர் டி. எஸ்.ராஜராஜன், அலட்டிக்கொள்ளாமல் சொன்னான்,

Join / Telegram : @Tamil_Books_Library

“எங்க சித்தப்பாவும் அப்பாவும் சேர்ந்து எடுத்த படம்தான்டா, தேசிய விருது பெற்ற, ஜெயபாரதி இயக்கிய ‘உச்சி வெயில்’ திரைப்படம்". இவன் ஆச்சரியப்பட்டுப் போனான். ராஜராஜன் தொடர்ந்தான். “வர்ற சண்டே வீட்டுக்கு வா. அப்பாவை அறிமுகப்படுத்துறேன்.”



ராஜராஜனின் அப்பாவைப் பற்றி சொல்வதற்கு முன்பு, அவரது தம்பி டி.எம்.சுந்தரத்தைப் பற்றிச் சொல்ல வேண்டும். அரக்கோணத்தில் சுந்தரம் லஞ்ச் ஹோம் நடத்தி வருபவர். ‘உச்சி வெயில்’ படத்தின் தயாரிப்பாளர். இலக்கிய வாசகர். அவரது அண்ணன் ராஜராஜனின் தந்தை டி.எம்.சுபரமணியமும் தேர்ந்த வாசகர். கணையாழி, காலச்சுவடு என்று கல்லூரிப் பருவத்தில் படித்த இதழ்களின் கதை, கட்டுரைகளை அவர்களுடன் இவன் விவாதித்தான்.

இவன் இன்று வரை திரும்பத் திரும்ப எடுத்துப் படிப்பது, திரையுலகைப் பற்றி எழுதப்பட்ட மிகச் சிறந்த நாவலான அசோகமித்திரன் எழுதிய ‘கரைந்த நிழல்கள்'. இந்த நாவலை, அசோகமித்திரனின் அனுமதி பெற்று தூர்தர்ஷனில் தொலைக்காட்சித் தொடராகத் தயாரிக்க அவர்கள் திட்டமிட்டு இருப்பதாகவும், ‘ஏர்முனை’, ‘காணி நிலம்’ போன்ற தேசிய விருது பெற்ற படங்களை இயக்கிய அருண்மொழி, அந்தத் தொடரை இயக்கவிருப்பதாகவும்,

Join / Telegram : @Tamil_Books_Library

அதில் இவன் உதவி இயக்குநராகப் பணியாற்ற வாய்ப்பு அளிப்பதாகவும் நம்பிக்கையூட்டினார்கள்.

இவன் கனவுகளின் மேகத்தில் மிதந்தான். இளங்கலை இறுதி ஆண்டு கடைசித் தேர்வு எழுதி வெளியே வந்ததும், ராஜராஜன் இவனைத் தனியே அழைத்து, “போன மாசம் அப்பா சொன்னார்ல அசோகமித்திரனோட ‘கரைந்த நிழல்கள்’ நாவலைத் தொடரா எடுக்கப் போறோம்னு. ரெண்டு நாள் கழிச்சு ஷூட்டிங் ஆரம்பிக்கப்போகுது. வீட்ல போய் அப்பாகிட்ட சொல்லிட்டு, நாலு செட்டு டிரெஸ் எடுத்துக்கிட்டு நாளைக்குக் காலைல எங்க வீட்டுக்கு வா. நீ அசிஸ்டென்ட் டைரக்டர் ஆயிட்ட. வாழ்த்துகள்” என்று கைகுலுக்கினான்.

இரவு உணவு முடிந்ததும் இவன், அப்பாவிடம் தயங்கித் தயங்கி தன் ஆசையைச் சொல்லத் தொடங்கினான். கொஞ்ச நேரம் மௌனமாக இருந்த அப்பா, “உன் வாழ்க்கையைத் தீர்மானிக்கிற எல்லா சுதந்திரமும் உனக்கு இருக்கு. பின்னாட்கள்ல அதற்கான சந்தோஷத்தையும் துக்கத்தையும் அனுபவிக்கும்போது மட்டும், என்னை நினைச்சுப் பார்த்துக்கோ. அதுக்கு முன்னாடி ஒரு புத்தகம் தர்றேன். அதை முழுசாப் படி. அப்புறம் முடிவு எடு” என்று சொல்லிவிட்டு புத்தக அலமாரிகளில் தேடித் தேர்ந்தெடுத்து ஒரு புத்தகத்தை இவனிடம் கொடுத்தார்.

அது நடிகர் சிவகுமார் எழுதிய ‘இது ராஜபாட்டை அல்ல’ என்ற புத்தகம். விடிய விடிய கண் விழித்து அந்தப் புத்தகத்தைப் படித்தான். அதிகாலையில் அப்பாவை எழுப்பி “நீங்க குடுத்த புத்தகத்தைப் படிச்சிட்டேன். நான் சினிமாவுல அசிஸ்டென்ட் டைரக்டரா சேரப்போறதுல உறுதியா இருக்கேன்” என்றான். அப்பா இவனை ஆசீர்வதித்தார்!

Join / Telegram : @Tamil_Books_Library

# 16

## கனவின் கைப்பிடியில்

"கட்டடங்களின் விரிசல்களுக்கு இடையே வேர் விட்டுப் பூக்கும் ரோஜாச் செடிகளை நீங்கள் பார்த்ததுண்டா? இயற்கை விதிகளைத் தவறாக்கி கால்கள் இல்லாமல் நடக்க அவை கற்றுக்கொடுக்கின்றன; அவை கனவுகளோடு வாழ்கின்றன. அதனால்தான் அவற்றால் தூய்மையான காற்றைச் சுவாசிக்க முடிகிறது!"

- ஹிராகி முராகோமி, ஜப்பானிய எழுத்தாளர்.

இரவெல்லாம் இவன் கனவுகள் நொடிக்கு 24 ஃப்ரேம்களில் ஓடிக்கொண்டிருந்தன. அடுத்த நாள் வந்த அதிகாலைச் சூரியன், இதுவரை இவன் பார்த்திராத வகையில் அழகானதோர் ஆரஞ்சுப் பந்தை வானத்தில் வரைந்து கொண்டிருந்தது. 'வருகிறேன் சென்னையே... வருகிறேன். என் ப்ரியத்துக்குரிய கோடம்பாக்கமே!' என்று மனதுக்குள் குதூகலித்து, கனவுத் தொழிற்சாலைக்குள் கால் எடுத்து வைத்தான்.

மயிலாப்பூரில் நீல்கிரீஸ் கட்டடத்துக்குப் பின்னால், 'சாரதா நிவாஸ்' என்ற ஹோட்டலில் அறை எடுத்து, அடுத்த நாள் ஷூட்டிங்குக்கான வேலைகள் நடந்துகொண்டிருந்தன. முதன்முதலில் கடலைப் பார்த்த குழந்தையைப் போல, இவன் பிரமித்தபடி அனைத்தையும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான்.


"யூனிட்டுக்கு சொல்லியாச்சா? என்னென்ன லைட்ஸ் வேணும்னு கேமராமேன்கிட்ட லிஸ்ட் வாங்கிக்குங்க. ஃபஸ்ட் ஷாட் பிள்ளையார் கோயில் மரத்தடியில. இன்னிக்குக் கிரேன் வேணாம், ரெண்டு நாள் கழிச்சுத் தேவைப்படும். இந்த 'விக்'கை எடுத்துட்டுப் போயி சதாசிவம் சாருக்குப் பொருந்துதானு பார்த்து ஸ்டில்ஸ் எடுத்துட்டு வாங்க.

அசிஸ்டென்ட் டைரக்டர் எங்கப்பா? டயலாக் சொல்லிக் கொடுத்தாச்சா? எடிட்டிங் ரிப்போர்ட் சொதப்பிடாதீங்க... கன்டினியூட்டி யார் பாக்கிறது?" என்று வேறு பாஷை, வேறு உலகத்துக்குள் நுழைந்தான்.

கூத்துப்பட்டறையைச் சேர்ந்த குமரவேல், ஜெயக்குமார், தமிழ்நாடு திரைப்பட இயக்கம் என்ற ஃபிலிம் சொஸைட்டி நடத்தியவரும், கன்னட மொழிபெயர்ப்பாளருமான மறைந்த தி.சு.சதாசிவம், நடிகை மௌனிகா மற்றும் பல துணை நடிகர்களுடன் அடுத்த நாள் ஒரு வீட்டில் படப்பிடிப்பு தொடங்கியது. தயாரிப்பாளருக்குத் தெரிந்தவன் என்பதால், என்னென்ன எழுத வேண்டும் என்று சொல்லிக் கொடுக்கப் பட்டு, முதல் நாளே இவன் கையில் எடிட்டிங் ரிப்போர்ட் எழுதும் பணி ஒப்படைக்கப்பட்டது.

ஒரு நாவல் படமாவதை, வார்த்தைகள் குறைந்து காட்சிகளாவதை, கண்ணெதிரே கற்றுக்கொண்டான். இயக்குநர் அருண்மொழி சத்தம் போட்டுக்கூட பேச மாட்டார். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு காட்சியாக, 'கரைந்த நிழல்கள்' வளர்ந்துகொண்டிருந்தது. ராஜராஜனும், தந்தைக்கு உதவியாகத் தயாரிப்பு நிர்வாகப் பணியை ஏற்றுக்கொண்டான்.

**ஷூ**ட்டிங் முடிந்து, இரவு அறைக்கு வந்ததும் சாரதா நிவாஸின் மொட்டைமாடியில், பால் நிலா வெளிச்சத்தில் நனைந்துகொண்டிருக்கும் மாமரத்து இலைகளைப் பார்த்தபடி, ராஜராஜனும் இவனும் அன்றைக்கு அறிந்த அனுபவங்களைப் பகிர்ந்துகொள்வார்கள்.



ராஜராஜனுக்கு ஒளிப்பதிவாளராக வேண்டும் என்ற ஆசை.

Join / Telegram : @Tamil_Books_Library

நாய்க்குட்டி, பனையேறும் பச்சையப்பன் அண்ணன், குத்துவிளக்குக்கு நடுவே சிரித்த செந்தில்... என இவனைப் போலவே அவனுக்குள்ளும் கோனிகா மேக்ஸி சைஸ் போட்டோக்கள் இருப்பதை இவன் அறிந்துகொண்டான். நள்ளிரவு வரை இவன் கதையாகச் சொல்ல, அவன் ஒளியாக வரைந்து பார்ப்பான.

**வா**ழ்ந்து கெட்ட வீடுகளில் இருந்து ஒரு வலி, மெள்ளக் கசிந்து காற்றில் பரவி நிலையற்று அலைவதை எப்போதாவது சந்தித்திருக்கிறீர்களா? கிராமத்தில் வாழ்ந்த சொந்த வீட்டை பூனைகள் உறங்கவும், அரசமரச் செடிகள் சுவர் வழி வேர்விட்டு, வெடித்து கிளம்ப கரைய அனுமதித்துவிட்டு மாநகரத்து வீதிகளில் பசியுடன் அலையும் கண்கள் நடுநிசியில் வந்து உங்களை அலைக்கழித்ததுண்டா? கதவு, ஜன்னல், பாத்திரங்கள்... போன்றவற்றை விற்ற பின்பு, கையிருப்புக் கரையக் கரைய மாநகரத்து சிக்னல் கம்பங்களுக்கு அருகே சிகப்பு விளக்கு விழும் வரை காத்திருந்து ஓடிவந்து வாகனங்களுக்கு இடையே நுழைந்து கார் துடைக்கும் துணியும், ஆங்கில ரைம்ஸ் புத்தகமும் விற்பவர்களில் உங்கள் தூரத்து உறவினர்களின் சாயல் கண்டு துடித்ததுண்டா?



**கா**லம், மைதானத்தில் விளையாடுபவனைப் பார்வையாளனாகவும், பார்வையாளனைப் பரிசு வெல்பவனாகவும் மாற்றிவிடுகிறது. அப்படிப்பட்ட ஓர் இளைஞனை அடுத்த நாள் இவன் சந்தித்தான். விஜயா-வாஹினி ஸ்டுடியோவில் ஒரு காட்சியைப் படம் பிடித்துக்கொண்டிருந்தார்கள்.

தேநீர் இடைவேளையில் கையில் பேடுடன் இவன் இருந்தபோது, "நீங்க அசிஸ்டென்ட் டைரகடர்தானே?" என்றபடி அவன் வந்தான்.

"ஆமாம்" என்றான். 20 வயது இருக்கும். கசங்கிய உடைகள். பஞ்சடைத்துப்போன கண்கள். வியர்வையில் நனைந்து சூழலுக்குப் பொருத்தமற்று நின்றிருந்தான்.

*“எனக்கு ஏதாவது நடிக்கிறதுக்கு சான்ஸ் வாங்கிக் கொடுங்க சார்.”*

*“ஆபீஸ்ல வந்து பாருங்க... இதுக்கு முன்னாடி நடிச்சிருக்கீங்களா?”*

*“இல்ல சார்”*

*“அப்படின்னா “கஷ்டம்... எதுக்கும் டைரக்டரை ஆபிஸ்ல வந்து பாருங்க.”*

*சட்டென்று இவன் கைகளைப் பிடித்துக்கொண்டான். “நேத்து காலைல இருந்து சாப்பிடலை சார். ஏதாவது வேஷம் வாங்கிக் கொடுங்க. 10 ரூபா கிடைச்சாக்கூட போதும் சார்” என்றான்.*

*“நடிக்கிறது கஷ்டம்... வேணும்னா புரொடக்ஷன்ல சாப்பிட்டுட்டுப் போங்க.”*

*“இல்ல சார், ஓசி சாப்பாடு வேணாம்” என்று சொல்லிவிட்டு விறுவிறுவென்று நடக்கத் தொடங்கினான்.*

*இவனுக்கு, அவன் வைராக்கியம் பிடித்திருந்தது. அவனை இயக்குநரிடம் அறிமுகப்படுத்தி, சின்னதாக ஒரு வேடம் வாங்கிக்கொடுத்தான்.*

*ஒரு திரைப்படத்தின் முதல் நாள் பூஜை நடக்கும் காட்சி. அந்தப் படத்தின் இயக்குநருடைய தம்பியிடம் நாவலின் முக்கியமான கதாபாத்திரத்தை ஒரு எடிட்டிங் உதவியாளன் அறிமுகப்படுத்தி, ‘இவரு கானா தானாகிட்ட வேலை செஞ்சவரு. டைரக்டர்கிட்ட ஓர்க் பண்ணணும்னு பிரியப்படுறாரு’ என்று சொல்ல வேண்டும். அதற்கு அவர் ‘அப்பறம் பார்க்கலாம்’ என்பார். இதுதான் காட்சி.*

*எடிட்டிங் உதவியாளனாக அவனை நடிக்கவைக்க ஏற்பாடு ஆயிற்று. நான்கைந்து முறை வசனத்தைச் சொல்லவைத்துப் பார்த்து திருப்தியாக இருந்தது. திரைப்படத்தின் பூஜைக் காட்சி என்பதால், ஆப்பிள், சாத்துக்குடி, வாழைப் பழம், இனிப்பு வகைகள்... என நான்கைந்து பெரிய தாம்பாளத் தட்டுகளில் சாமி படத்தின் முன்பு வைக்கப்பட்டிருந்தன. அதன் அருகில்தான் மேற் சொன்ன காட்சி எடுக்க வேண்டும்.*

*நடிகர்கள் தயாராகி நிற்க, ஒளிப்பதிவாளர் வெளிச்சம் சரி பார்த்து ‘ஓ.கே.’ என்று சொல்ல, இயக்குநர் “ரெடி டேக்” என்றார். எல்லோரும் சரியாகச் செய்ய அவன் முறை வந்தபோது “இவரு... இவரு... கானா தானாகிட்ட... வேலை... வேலை” என்றான். கட் கட் என்று சொல்லிவிட்டு “என்னப்பா சொதப்பற?” என்று அலுத்துக் கொண்டார் இயக்குநர்.*

*“ஸாரி சார்... இப்ப சரியாப் பண்ணிடுறேன்.”*

Join / Telegram : @Tamil_Books_Library

“ஓ.கே. லைட்ஸ் ஆன்... டேக்” என்றார்.

மீண்டும் சொதப்பினான். கிட்டத்த ஏழெட்டு டேக்குகள் ஆயிற்று. இயக்குநர் இவனை முறைத்தார்.

“இல்ல சார்... என்னால முடியல. வேற யாரையாவது நடிக்கவெச்சிக்குங்க” என்று சொல்லிவிட்டு அவன் செட்டை விட்டு அழுதுகொண்டே ஓடினான். இவன் அவனைப் பின்தொடர்ந்து சென்றான்.

ஒரு தெலுங்குப் படத்தின் பாடலுக்காக செட் போடப் பட்டிருந்த காகித சொர்க்கத்தில் அமர்ந்து அழுது கொண்டிருந்தான் அவன். இவன் மெள்ள நெருங்கி அவன் தோளைத் தொட்டு, “என்னப்பா என்ன ஆச்சு?” என்றான்.

அவன் குலுங்கிக்கொண்டே சொன்னான்.

“இல்ல சார்... எங்க குடும்பம் பெரிய குடும்பம் சார். தஞ்சாவூர்ல 100 ஏக்கர் நிலம் இருந்திச்சு. ரெண்டு தெருவைச் சேர்த்த மாதிரி வீடு. திண்ணையிலேயே 100 பேர் தங்கலாம். அப்பாவோட சீட்டாட்டப் பழக்கத்தால எல்லாம் போயிடுச்சு. குடும்பத்தோட மெட்ராஸ் வந்து கஷ்டப்படுறோம். தங்கச்சிங்க எக்ஸ்போர்ட் வேலைக்குப் போகுதுங்க” என்று சொல்லி அழுதுகொண்டிருந்தான்.

“அது சரி, நடிச்சா காசாவது கிடைச்சிருக்குமே?!” என்று இவன் கேட்க,

“இல்ல சார்... கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி தட்டுல ஆப்பிள், சாத்துக்குடி, ஸ்வீட்டுனு நெறைய வெச்சிருந்தீங்க".


“ஆமா, அதுக்கென்ன?”

“என் கண்ணு முன்னாடியே ஒருத்தர் அந்தத் தட்டு மேல மண்ணெண்ணெய ஊத்தினாரு... என்னால தாங்க முடியல... எங்க வீட்டுல யாருமே ரெண்டு நாளாச் சாப்பிடல சார்... இங்க என்னடான்னா...” உரையாடலை முடிக்காமல் அழுது கொண்டிருந்தான். இவனுக்கு விஷயம் விளங்க ஆரம்பித்தது.

சினிமாவில் இதை ‘கன்டினியூட்டி. என்பார்கள். ஒரு ஷாட்டில் வைக்கப்படும் பொருள்கள் அடுத்த ஷாட்டிலும் அதே இடத்தில் அதே வடிவத்தில் இருக்க வேண்டும். அன்று எடுக்கப்பட்ட காட்சிகளின் பின்னணியாக 10 ஆப்பிள்கள் இருந்தன என்றால், இதன் தொடர்ச்சியாக அதே காட்சியை சில மணி நேரங்கள் கழித்து எடுப்பார்கள். அப்போது 10 ஆப்பிளுக்குப் பதில் எட்டு ஆப்பிள்களோ அல்லது வாழைப்பழமோ இருந்தால், படம் பார்க்கையில் உறுத்தும். உணவுப் பொருள்கள்

Join / Telegram : @Tamil_Books_Library

என்பதால், தெரியாமல் யாராவது சாப்பிட்டுவிடக்கூடும். அதற்காக அதன் மேல மண்ணெண்ணெய் ஊற்றுவார்கள். இதை அவனிடம் இவன் விளக்கிச் சொன்னான்.



“இருக்கட்டும் சார்... அதுக்காக மண்ணெண்ணெய் ஊத்துவாங்களா.? நாங்க ரெண்டு நாளா சாப்பிடல சார்...” என்று கைகள் நடுங்க அழுது கொண்டிருந்தான்.

“சரி, பரவாயில்ல இந்தாங்க” என்று அவன் கையில் 20 ருபாய் கொடுத்தான்.

“வேணாம் சார்” என்று சொல்லி விட்டு வாசல் நோக்கி வேகமாக நடந்து காணாமல் போனான்.

**அ**தற்குப் பிறகு செய்தித்தாள்களில் ‘வறுமை காரணமாகக் குடும்பததுடன் தற்கொலை’ என்று படிக்கும்போது புகைப்படத்தில் அவன் முகம் இருக்கிறதா என்று பல நாட்கள் இவன் பதைபதைப்புடன்

Join / Telegram : @Tamil_Books_Library

பார்த்துக்கொண்டிருந்தான்.

இன்றைக்கும் மாநகரத்தில் ஒவ்வொரு சினிமா கம்பெனி வாசலிலும் நூற்றுக்கணக்கான இளைஞர்கள் வாய்ப்புக்காகக் காத்துக்கொண்டு இருப்பதைக் கவனிக்கிறான். அவர்களுடைய முகங்களில், அந்தத் தஞ்சாவூர் இளைஞன் முகச் சாயலின் துகள்கள் படிந்திருப்பதைப் பார்க்கையில் பயமாக இருக்கிறது!

Join / Telegram : @Tamil_Books_Library



17

# குறுக்கு வெட்டித் தோற்றம்

*தாமிரக் காசை தண்டவாளத்தில் வெச்சி*
*நாம பதுங்க ரயில் நசுக்கும் - ராமையா*
*கால ரயிலோட நாமெல்லாம் காசானோம்*
*வாலிபம் போய் ஆச்சே வயசு!*

- வெசேஷாசலம்
**('ஆகாசம்பட்டு' தொகுப்பில் இருந்து)**

காலையில் எழுந்து கண்ணாடியைப் பார்த்ததும் இவன் திடுக்கிட்டுப்போனான். கண்ணாடியில், இவன் உருவத்துக்குப் பதில் குட்டிப் பையன் ஒருவன் நின்றுகொண்டிருந்தான். கண்களைத் தாழ்த்தி தன்னைத்தானே ஒருமுறை பார்த்துக் கொண்டான். நிஜம்தான். இவன், எட்டு வயதுக் குட்டிப் பையனாக மாறியிருந்தான். எப்படி இது சாத்தியம்? இவனால் நம்ப முடியவில்லை.

மூன்றாம் வகுப்பு படிக்கும்போது தீபாவளிக்கு இவன் மாமா எடுத்துக் கொடுத்த ஆரஞ்சு கலர் பூப்போட்ட சட்டையும், காக்கி கலர் டிரவுசரும் அணிந்தபடி கண்ணாடி முன் நிற்கும் இந்தப் பையன் இவன்தானா? அதே பழைய ஒல்லியான தோற்றமும், சற்றே சப்பையான மூக்கும் இவன்தான் என்பதை இவனுக்கு உணர்த்தியது. இந்தச் சப்பை மூக்கால்தான் இவனுக்கு சக மாணவர்கள் 'ஜப்பான்' என்று பட்டப்பெயர் வைத்தார்கள். "டேய் ஜப்பான்... நீ எப்படிடா மறுபடியும் வந்த?" என்று இவனே இவனைப் பார்த்து ஆச்சரியப்பட்டான்.

அடுத்த அறையில் மனைவியும் மகனும் உறங்கிக்கொண்டு இருந்தார்கள். மெள்ள மனைவியைத் தொட்டு எழுப்பினான். கண்

Join / Telegram : @Tamil_Books_Library

விழித்து இவனைப் பார்த்தவள், “ஆதவன்... உன் ஃப்ரெண்டு வந்திருக்கான் பாரு” என்று சொல்லிவிட்டு, “தம்பி... எந்த ஃப்ளாட்டுடா நீ?” என்றாள்.

“நான் ஆதவன் ஃப்ரெண்டு இல்லடி. நான்தான் முத்துக்குமார். உன் புருஷன்’ என்றான்.

மனைவியும் திடுக்கிட்டு எழுந்து, “என்னங்க இது கூத்து!?” என்று அச்சத்துடன் கேட்க, “ஹாலுக்கு வா சொல்றேன்” என்றான்.

ஹாலுக்கு வந்து சொல்லி முடித்ததும், “எப்படிங்க இப்படிச் சின்னப் பையனா மாறினீங்க?” என்றாள் அதே ஆச்சரியத்துடன்.

“அதான் எனக்கும் தெரியல” என்றான்.

“அய்யோ! இப்ப நான் ரெண்டு புள்ளைங்களை வளர்க்கணுமா? ஏற்கெனவே ஒண்ணு பண்ற சேட்டையே தாங்க முடியல...” என்று அலுத்துக்கொண்டாள்.

சத்தம் கேட்டு விழித்து எழுந்து ஹாலுக்கு வந்த மகன், யாரோ போல் இவனைப் பார்த்தான். இவன், “'டேய்.... நான்தான்டா, அப்பாடா!” என்றான்.

“அப்பாவா? யாருகிட்ட டூப் விடற? எங்கப்பா ஹைட்டா இருப்பாரு. தாடி வெச்சிருப்பாரு” என்றான் மகன்.


“இல்லடா அப்பாதான்டா. திடீர்னு சின்னப் பையனா மாறிட்டேன்” என்று இவன் சொல்ல, “எங்கப்பா சின்ன வயசுல ஹார்லிக்ஸ் பேபி மாதிரி குண்டா இருப்பாராம். அவரே சொல்லியிருக்காரு” என்று மகன், இவன் எப்போதோ சொன்ன பொய்யை நினைவுபடுத்தினான்.

“இல்லடா ராஜா. அது அப்பா சும்மா நீ நல்லாச் சாப்பிடணும்னு பொய் சொன்னேன். உண்மையிலேயே நான் ஒல்லியாத்தான் இருப்பேன். வேணும்னா போட்டோ காட்டுறேன் பாரு” என்று சொல்லிவிட்டு இவன் பழைய ஆல்பத்தை எடுத்து வந்து மகனிடம் காட்டினான்.

“ஆமாப்பா... அப்படியே இருக்கீங்கப்பா! எப்பிடிப்பா சின்னதா ஆனீங்க?” என்று மகன் கேட்க, “அதான்டா எனக்கும் தெரியல” என்றான்.

இவர்கள் உரையாடிக்கொண்டிருக்கும்போதே இவன் மனைவி, சொந்தக்காரர்களுக்கு எல்லாம் தொலைபேசியில் இந்த அதிசயத்தைச் செய்தியாக்கிக்கொண்டிருந்தாள்.

Join / Telegram : @Tamil_Books_Library



“இப்பதான் நீங்க குட்டிப் பையனா மாறிட்டீமங்களே, வாங்க பார்க்ல போயி சறுக்கு மரம் வெளயாடலாம்” என்று மகன் இவனை வடிவேலாக்கி வேனில் ஏற்ற, இவன் என்ன செய்வது என்று தெரியாமல் விழித்துக்கொண்டிருந்தான்.

இவனுக்குள் இப்போது நிறையக் கேள்விகள். இனி என்ன செய்வது? மூன்றாம் வகுப்பில் இருந்து படிப்பைத் தொடர்வதா? இவன் படிக்கப்போனால், குடும்பத்தை யார் காப்பாற்றுவது? இதே உருவத்துடன் இவன் மகனுக்கு இவன் எப்படி அப்பாவாக இருப்பது என்று இவன் குழம்பிக்கொண்டு இருந்தபோது, அந்தக் குழப்பக் குளத்தில் மனைவி மேலும் ஒரு கல் எறிந்தாள். “சாயங்காலம் ஒரு கல்யாண ரிசப்ஷன் இருக்கே. உங்களை எப்படி வெளிய கூட்டிட்டுப் போறது?''

இவனுக்கு எப்போது மனக்குழப்பம் வந்தாலும், எழுத்தாளர், கலை விமர்சகர் சி.மோகனுக்கு தொலைபேசியின் வழியே ஆலோசனை கேட்பான். அவரைத் தொடர்புகொண்டு நிலைமையை விளக்கினான்.

“சமீபத்துல காஃப்காவோட புக் ஏதாச்சும் படிச்சீங்களா?” என்றார்.

“ஆமா சார். அவரோட புக் படிச்சு ரொம்ப நாளேச்சுனு அவரு எழுதின ‘உருமாற்றம்’ நாவலைப் படிச்சேன்” என்றான்.

“அதான். லிட்ரேச்சரைப் படிக்கும்போது கவனமா இருக்கணும். அது கத்தி மேல நடக்கிற மாதிரி. ஆழ்மனசுல எங்கேயோ போய் சில சமயங்கள்ல அந்தக் கத்தி கிழிச்சுடும். இப்படித்தான் எம்.வி.வெங்கட்ராமோட ‘காதுகள்’ நாவலைப் படிச்சிட்டு நெறையப் பேரு, அவங்க காதுலயும் பலவிதமான குரல்கள் கேட்கிறதா எங்கிட்ட சொல்லியிருக்காங்க” என்றார். இவனுக்குத் தெளிவாகப் புரிந்தது.

Join / Telegram : @Tamil_Books_Library

'உருமாற்றம்' நாவல், ஒரு மனிதன் திடீரென்று கரப்பான்பூச்சியாக மாறுவது குறித்தது!

"இப்ப என்ன சார் பண்றது?" என்றான் திகைப்புடன்

"ஒண்ணு பண்ணலாம் முத்துக்குமார். நீங்க இப்ப ஃப்ரியா இருந்தீங்கன்னா, என் ரூமுக்கு வாங்க. சின்ன வயசுல நீங்க எப்படி இருந்தீங்கன்னு பார்க்க, எனக்கும் ஆசையா இருக்கு" என்றார் சிரித்தபடி.

மகன், பள்ளிக்குக் கிளம்பிச் செல்ல, இவனுக்காக தொலைக்காட்சியில் போகோ சேனலை வைத்துவிட்டு, "பார்த்துட்டு இருங்க. எனக்கு கிச்சன்ல நெறைய வேலை இருக்கு" என்றாள் மனைவி.

"நான் வெளிய போயிட்டு வர்றேன்" என்று மனைவியிடம் சொல்லிவிட்டு, பதிலுக்குக்கூட காத்திராமல் காரைத் தவிர்த்துவிட்டு அரசுப் பேருந்தில் ஏறி, தேனாம்பேட்டை சிக்னலுக்கு டிக்கெட் வாங்கினான்.

சிக்னலுக்குப் பக்கத்தில் இவன் பால்ய வயது நண்பன் சண்முகம் வேலை பார்க்கும் அலுவலகத்துக்குச் சென்றான். இவனை சண்முகத்துக்கும் அடையாளம் தெரியவில்லை.

"டேய் நான்தான்டா முத்துக்குமார்" என்றான்.

"எந்த முத்துக்குமார்?" என்று அவன் கேட்க.

"டேய்... ஜப்பானடா" என்று சொல்லிவிட்டு, இவன் தன் நிலைமையை மீண்டும் விளக்கினான்.

"நான் சின்ன வயசுல எப்படி இருந்தேன்னு பார்த்தவங்கள்ல நீயும் ஒருத்தன். அதான் உங்கிட்டப் பேசிட்டுப் போலாம்னு வந்தேன்" என்றான்.

"நான் சின்ன வயசுல எப்படி இருந்தேன்னே எனக்கு ஞாபகம் இல்லே. இதுல உன்னை எப்படி ஞாபகம் வெச்சுக்கிறது? சரி... சரி... வா கேன்டீனுக்குப் போய்ப் பேசலாம். எதுக்கும் ரெண்டு அடி தள்ளியே நடந்து வா. சின்னப் பசங்ககூட எல்லாம் சகவாசம் வெச்சுக்கிறேன்னு ஆபீஸ்ல கிண்டல் பண்ணப்போறாங்க" என்று சண்முகம் சொல்ல, இவனுக்கு சர்க்கரை அதிகம் இருந்தும் காபி கசந்தது.

திரும்ப பேருந்து ஏறி வீட்டுக்கு வரும்போது செல்போன் ஒலித்தது. இயக்குநர் லிங்குசாமி பேசினார்.

"முத்துக்குமார் நாளைக்கு நைட்டு கம்போஸிங்குக்கு சிங்கப்பூர் போறோம். டிக்கெட் போட்டாச்சு" என்று சொல்ல.

Join / Telegram : @Tamil_Books_Library

"சார். அதுல ஒரு சிக்கல். நான் நேர்ல வந்து விளக்குறேன்" என்று சொல்லிவிட்டு அவரது அலுவலகம் விரைந்தான்.

லிங்குசாமி அலுவலகம் பரபரப்பாக இருந்தது. துணை நடிகர்கள், உதவி இயக்குநர் வாய்ப்பு கேட்டுக் காத்திருந்தவர்கள் என பெருங்கூட்டத்தை விலக்கி, இவன் உள்ளே நுழைந்தான்.

"தம்பி... சைல்ட் ஆர்ட்டிஸ்ட்டுக்கு இந்தப் படத்துல ரோல் இல்ல. போட்டோ குடுத்துட்டுப் போங்க. தேவைப்பட்டா கூப்புடுறோம்" என்று புரொடக்ஷன் மேனேஜர் இவனைப் பார்த்து சொல்ல, இவன் பெரும்பாடுபட்டு, தான் யாரென்று அவருக்கு விளக்கி, லிங்குசாமியை அவரது அறையில் சந்தித்தான்.

மீண்டும் பெரும் விளக்கம் முடிந்த பின், லிங்குசாமி கேட்டார், "இப்ப என்ன பண்றது முத்துக்குமார்? நாளைக்கு இதே உருவத்தோட வந்து நின்னா இமிக்கிரேஷன்ல நம்ப மாட்டாங்களே!"

"ஒரு நாள் டயம் இருக்கு சார். ஏதாவது மேஜிக் நடக்கலாம்" என்று சொல்லிவிட்டு வீடு வந்தான்.

மகன், அவன் வயதுடைய நண்பர்களையெல்லாம் ஃப்ளாட்டில் இருந்து அழைத்து வந்து, "எங்கப்பாடா! எப்படிச் சின்னப் பையனா மாறியிருக்காரு பாரு!" என்று பெருமையடித்துக்கொண்டிருந்தான். டிக்கெட் போட்டு விற்காத குறைதான். போதாக்குறைக்கு மனைவி வேறு இவனுக்குப் பிடிக்காத நூடுல்ஸ் செய்து, "சாப்பிடுங்க டேஸ்ட்டா இருக்கும். சின்னப் பசங்க இதைத்தான் விரும்பிச் சாப்பிடுவாங்க" என்றாள்.

இப்படியே தொடர்ந்தால் இவன் வாழ்க்கை என்ன ஆவது என்ற அச்சம் உருவானது. வங்கிக் கணக்கில் இருந்து கார் லோன் வரை அடையாள சிக்கல்கள் இவனைத் துரத்தும். இனி இவனது நண்பர் குழாம் இவனை எப்படி நடத்துவார்கள்? எல்லாவற்றுக்கும் மேல், 'நான்தான் கவிஞர் முத்துக்குமார்' என்றால், இவன் ரசிகர்கள் இவனை நம்புவார்களா?

மனைவியும் மகனும் உறங்கிய பின்னும் இவன் கண் விழித்து யோசித்துக்கொண்டேயிருந்தான். மூன்றாம் வகுப்பு படிக்கையில் இவன் என்ன செய்தான்?

என்னென்னவோ செய்தான்! பொறுப்புகளும், அதனால் வரும் கவலைகளும் இல்லாத ஒரு பருவம் அது. அந்தப் பருவத்தில்தான் இவன் எல்லாக் குழந்தைகளையும் போலவே கடவுளாக இருந்தான்.

மேகங்களை விலக்கி நீந்தி வந்து நிலா இவனுக்குக் கதை

Join / Telegram : @Tamil_Books_Library

சொன்னது. மழையும் வெயிலும் அதைத் தொடர்ந்து வண்ணங்கள் ஏழையும் விரித்துக் காட்டும் சீன விசிறியைப் போல் வானவில்லும், இவன் வானமெங்கும் நிறைந்திருந்தன. பெற்றவன் கடனை அறியாமல் பெருங்கனவுகளில் மிதந்து அலைந்த காலம் அது.

பென்சிலுக்காக அடித்துக் கொண்டதும், பெண் உடல் புதிரை அவிழ்க்க முயன்றதும், பிரபஞ்சத்தின் முன்னே புள்ளையாக நின்றது, விடையில்லாக் கேள்விகளால் வாழ்வை அளந்ததும் அந்தப் பருவத்தில் அல்லவா?

சிறகைப் போல் இவன் பொத்திப் பாதுகாத்த அந்த பால்ய காலம், இன்று சிலுவையைப் போல் கானப்பது ஏன்? பதில் தெரியாமல் உறங்கிப் போனான்.

காலையில் எழுந்து கண்ணாடியைப் பார்த்ததும் மீண்டும் ஓர் ஆச்சரியம் இவனுக்குக் காத்திருந்தது. குட்டிப் பையன் வளர்ந்து இவன் இவனாகி நின்று கொண்டிருந்தான். எப்படி இது சாத்தியம்? இடையில் என்ன நடந்தது? மனதுக்குள் கேள்வி எழும்ப, இவனைப் பார்த்து கண்ணாடி கேட்டது,

“பழைய உருவத்துக்கே வந்துட்ட. இப்ப சந்தோஷமா?”

“ஒண்ணுமே புரியல. நடந்தது எல்லாமே புதிராகவும் மர்மமாகவும் இருக்கு. நான் ஏன் சின்னப் பையன் ஆனேன்?” என்றான்.

கண்ணாடி சொன்னது, “ரெண்டு நாளைக்கு முன்னாடி நீ உன் பொண்டாட்டிட்ட என்ன சொன்ன... ஞாபகம் இருக்கா?”

“இல்லையே!”

“நான் சொல்லவா. வேலை வேலைன்னு இப்படிப் போட்டி, பொறாமைகளுக்கு நடுவுல ஓடிக்கிட்டு இருக்கிறது டயர்டா இருக்கு. மறுபடியும் ஏழெட்டு வயசுப் பையனா மாறினா எவ்வளவு சந்தோஷமா இருக்கும்”

இவன் ஞாபகம் வந்து, ‘“ஆமா... அப்படித்தான் சொன்னேன்” என்றான்.

“இப்ப சந்தோஷமா இருக்கா?” என்றது கண்ணாடி.

“இல்ல. அந்தந்த வயசுக்கு அது அது சந்தோஷம். மேட்டுலயும் பள்ளத்துலயும் ஓடத்தான் நதி படைக்கப் பட்டிருக்கு. இப்ப எனக்குப் புரிஞ்சிருச்சு” என்றான்.

Join / Telegram : @Tamil_Books_Library



இவன் இவனானதில், இவனைவிட மனைவியும் மகனும் அதிகம் மகிழ்ச்சி அடைந்தார்கள். லிங்குசாமிக்கு போன் செய்து “இன்னிக்கு நைட்டு கம்போஸிங் கிளம்பிரலாம் சார்” என்றான்!

Join / Telegram : @Tamil_Books_Library



18

## முன்பனிக்காலம்

*"நீ கிளையைக் கவனமாக வரைய முடியுமானால், உன்னால் காற்றின் ஒலியைக் கேட்க முடியும்!"*


- ஜென் தத்துவம்
(எஸ்.ராமகிருஷ்ணனின் ஜென் கவிதைகள் நூலிலிருந்து)

சினிமா, விநோதமான ஒரு ரங்கராட்டினம். ஆகாயத்துக்கும் பூமிக்குமாக அடிவயிற்றுப் பயத்துடன் சுற்றிக்கொண்டு இருந்தாலும், கீழே வந்து போகும் அந்த ஒரு கணம், மனதுக்கும் புத்திக்கும் ஏறுவதே இல்லை. நாம் எப்போதும் மேலேதான் இருந்துகொண்டிருக்கிறோம் எனும் மாயத் தோற்றத்தை சினிமா ரங்கராட்டினம் காலம் காலமாக எல்லோர் மனதிலும் தந்துகொண்டிருக்கிறது.

'கரைந்த நிழல்கள்' படப்பிடிப்பு முடிந்ததும் இயக்குநர் அருண்மொழி, எம்.வி.வெங்கட்ராம் எழுதிய 'நித்ய கன்னி' நாவலைத் தொடராக எடுக்க ஆரம்பித்தார். 'நித்ய கன்னி' இவன் விரும்பிப் படித்த நாவல். ஆர்வத்துடன் பணியாற்றினான்.

'நித்ய கன்னி' தொடருக்கும் ராஜராஜனின் சித்தப்பாதான் தயாரிப்பாளர். சினிமா என்னும் மகாநதியில் இருவரும் மீண்டும் இறங்கி நீச்சல் பழகக் கற்றுக்கொண்டார்கள். தொடர்ந்து ஒரு மாதம் படப்பிடிப்பு நடத்தி, போஸ்ட் புரொடக்ஷன் வேலைகள் முடித்து தூர்தர்ஷனின் அனுமதிக்காகக் காத்திருந்தார்கள். அந்தக் காத்திருப்பு மிக நீண்ட காத்திருப்பாக இருக்குமென்று இவன் அப்போது அறியவில்லை. இவன் பணியாற்றியதற்கு, கணிசமான ஒரு தொகையை கையில் தந்தார்கள். கல்லூரி முடிந்த அடுத்த நாளே

Join / Telegram : @Tamil_Books_Library




கனவுக்கோட்டைக்குள் நுழைய வாய்ப்பு கிடைத்ததையும், கை நிறைய சம்பளம் பெற்றதையும் நினைத்து இவன் வானத்தில் பறந்தான்.

இவன் ரங்கராட்டினம் கீழே இறங்கப்போகிறது என்று அறியாமல், இருந்த காசில் திருவல்லிக்கேணியில் மேன்ஷன் ஒன்றில் அறை எடுத்தான். திருவல்லிக்கேணி, மேன்ஷன்களின் தாய்நாடு. புறாக்கூண்டு ஒன்று காலியாக இருந்தாலும்' சின்னதாகப் படுக்கையை விரித்து வாடகைக்கு விட்டு விடுவார்கள். திருவல்லிக்கேணி ஒரு கலவையான பகுதி. சாலைகளில் ஒரு பக்கம் வெண்கொற்றக் குடையுடன் இந்துக் கடவுள் ஊர்வலம் போவார். மறுபக்கம் இஸ்லாமியர்கள் மசூதிகளில் தொழுதுகொண்டு இருப்பார்கள். குறுகலான சந்துகள், வாழை மண்டிகள், புராதனக் கட்டடங்கள். திடீரென்று ஏதோ ஒரு வீட்டிலிருந்து கேட்கும் ஆர்மோனிய சத்தம், பின்தொடரும் சரிகம பதநிச... என கிட்டத்தட்ட ஒரு குட்டிக் கல்கத்தா எனச் சொல்லாம்.

இவன் மேன்ஷன் 24 மணி நேரமும் பரபரப்பாக இருக்கும். காலையில் குளியலறை முன்பும், கழிவறை முன்பும் பிளாஸ்டிக் வாளிகள் வரிசையாக வைக்கப்பட்டிருக்கும். மாநகரம் மனிதர்களை பிளாஸ்டிக் வாளிகளாக நசுக்கிவிடுவது இந்தத் தருணத்தில் இருந்தே தொடங்குவதாக தோன்றும்.

அருவிக் குளியல்

ஆசைக்காரனுக்கு

நகரம் தந்தது

பக்கெட் வாட்டர்

Join / Telegram : @Tamil_Books_Library

-என்ற கவிஞர் வித்யாஷங்கரின் கவிதைதான் இவனுக்கு ஞாபகம் வரும். அடுத்து கீழே இருக்கும் மெஸ்ஸில் சாப்பிட்டு விட்டு அவரவர்களின் இயந்திர உலகுக்குக் கிளம்பி விடுவார்கள்.

அதற்குப் பிறகு விழிக்கும் உலகம், வேலையற்றவர்களின் உலகம். இரவு முழுக்கச் சீட்டு ஆடிவிட்டு, விடியலில் படுத்து பகல் 12 மணி வாக்கில் கண்கள் சிவந்து எழுவார்கள். சீட்டு ஆடுவதற்கென்றே மேன்ஷனில் ஓர் அறை இருந்தது. 28-ம் எண் அறை. அந்த அறைக்கு யார் வந்தாலும் அது சீட்டாட்ட அறையாக மாறிவிடும் அல்லது மாற்றப்படும். நான்கு பேர் எழுந்து சென்றால், வேறு நான்கு பேர் அமர்ந்துவிடுவார்கள். வெள்ளைக் காகிதங்களும் செய்தித்தாள்களின் ஓரங்களும் எண்களால் நிரம்பி வழிந்துகொண்டிருக்கும்.

இவன் காலையில் எழுந்ததும் கடற்கரைக்கு நடந்து செல்வான். பேரிரைச்சலும் மகா அமைதியும் அடுத்தடுத்து தரும் கடலைப் பார்க்கையில், இந்தப் பிரபஞ்சத்தில் தான் ஒரு புள்ளியாக நின்றுகொண்டிருப்பதாக உணர்வான். திரும்பி வருகையில் இயக்குநர் அருண்மொழிக்கு தொலை பேசுவான். “சாங்காலம் ஃபிலிம் சேம்பர்ல ஃபெலினி படம் போடுறாங்க. அங்க மீட் பண்ணலாம்” என்பார். திருவல்லிக்கேணியில் இவனுக்கு மிகவும் பிடித்த இடம், பேருந்து நிலையத்தை ஒட்டியுள்ள நடைபாதைப் புத்தகக் கடைகள். இவன் தேடிக்கொண்டிருந்த பல பொக்கிஷங்களை அந்தப் புத்தகக் கடைகளில்தான் குறைந்த விலைக்கு கண்டெடுத்தான். அங்கு வாங்கிய புத்தகங்களை வாசித்து பகல் பொழுதை ஓட்டுவான்.

மாலையில் ஃபிலிம் சேம்பரில் படம் முடிந்ததும் அருண்மொழி இவனிடம் “ரெண்டு மூணு புரொடியூசர்ஸ் கிட்ட பேசிக்கிட்டு இருக்கேன். சீக்கிரம் படம் தொடங்கிடலாம்” என்றார். அந்தச் சீக்கிரம் வர, ஆறு மாதங்கள் ஆனது.

இவன் கையிருப்பு குறைந்து, பசி, இவனை தினமும் மத்தியானம் ஒரு வேளை உணவுக்கு மட்டும் பழக்கியிருந்தது. மாலையில் யாராவது தோழர்களைச் சந்திக்கையில் தேநீர் வாங்கிக் கொடுப்பார்கள். அந்தக் கணத்துக்காகவே உரையாடலை நீட்டித்துக்கொண்டே செல்வான். என்ன கஷ்டம் வந்தாலும் அப்பாவிடம் பணம் வாங்கக் கூடாது என்ற வைராக்கியம் இவன் மனதில் இருந்தது. எந்த நிலையிலும் இவனின் வறுமை வீட்டுக்குத் தெரிந்துவிடக் கூடாது என்பதில் உறுதியாக இருந்தான்.

சென்னையில் இவன் தனியாக அறை எடுத்து தங்கியிருப்பதை அறிந்து, அம்மாவைப் பெற்ற இவன் ஆயா இவனைத் தேடி அறைக்கே வந்துவிட்டார்கள். இவன் தம்பி, சிறு வயதில் இருந்தே அந்த ஆயா வீட்டில்தான் தங்கி படித்துவருகிறான். தானும் அவர்களுக்கு ஒரு

Join / Telegram : @Tamil_Books_Library

சுமையாகிவிடக் கூடாது என்று இவன் நினைக்க, “மெட்ராஸ்ல நாங்க எல்லாம் இருக்கும்போது, தனியா ரூம் எடுத்துத் தங்கறானாம். இப்பவே கிளம்பி வீட்டுக்கு வாடா!” என்று ஆயா இவன் பெட்டியை எடுக்க, மறுக்க முடியவில்லை. வசிக்க இடம் கிடைத்து நீண்ட நாட்களுக்குப் பிறகு மீண்டும் இவன் மூன்று வேளை உணவு உண்டான்.

தினமும் அருண்மொழியை மாலையில் சந்தித்தான்.

ஒருநாள் மேக்ஸ்முல்லர் பவன் பெர்க்மென் படத்தில், மறுநாள் அலையன்ஸ் ஃபிரான்சிஸின் த்ரூபோ படத்தில், அடுத்தொரு நாள் அமெரிக்கத் தூதரகத் திரையரங்கில் ஹிட்ச்காக் படம் என அருண் மொழியை இவன் தொடர்ந்து கொண்டே இருந்தான். அந்தப் பின்தொடர்தல், இவனுக்கு பல உலகப்படங்களை அறிமுகம் செய்தது. இவன் உலக சினிமாவின் காதலன் ஆனான்.



Join / Telegram : @Tamil_Books_Library

நினைத்த படங்களின் டி.வி.டி. நினைத்த நேரத்தில் இப்போது கிடைக்கிறது. அன்றெல்லாம் படங்களை திரைப்பட சொசைட்டிகளிலும் மற்றும் அந்தந்த நாட்டு தூதரகங்களின் திரையிடல்களில் மட்டுமே பார்க்க முடியும். மிதிவண்டியில் அண்ணா சாலையில் பயணித்தபடியே இவன் ரஷ்யாவில், ஜெர்மனியில்' ஜப்பானில், ஃபிரான்ஸில், ஈரானில், போலந்தில் சுற்றினான். திரைப்படங்களின் பன்முகத்தன்மை புரிய ஆரம்பித்தது. எல்லா நாட்டுத் தூதரக நூலகங்களிலும் இருந்த திரைப்படம் சார்ந்த புத்தகங்களைத் தேடித் தேடி வாசித்தான்.

இடையிடையே இயக்குநர் அருண்மொழி, சில இயக்குநர்களிடம் இணை இயக்குநராகப் பணியாற்றுவார். கதை விவாதத்துக்கு இவனையும் உடன் அழைத்துச் செல்வார். அவர்களில் 'ஏழாவது மனிதன்' இயக்குநர் ஹரிஹரனையும், 'அவள் அப்படித்தான்' ருத்ரய்யாவையும் இவனால் மறக்க முடியாது.

திரைப்படங்கள் தவிர்த்து அருண்மொழி நிறையக் குறும்படங்களும் எடுத்தார். அவற்றிலும் இவன் பணியாற்றினான். அப்படி ஒரு குறும்படம் எடுப்பதற்காக தஞ்சைக்கு அருகில் உள்ள மெலட்டூருக்குச் சென்றார்கள். மெலட்டூரில் ஆண்டுதோறும் 'பாகவத மேளா' என்ற நாட்டிய நாடகம் நடத்துவார்கள். உலகெங்கும் வாழும் மெலட்டூரைச் சேர்ந்தவர்கள் ஒரு மாதம் முன்பே வந்து பயிற்சியில் கலந்துகொண்டு விழா அன்று அரங்கேறுவார்கள்.

மெலட்டூர்வாசிகள் ஏற்பாடு செய்து தந்திருந்த ஒரு வீட்டில் இவர்களும் ஒரு மாதம் தங்கினார்கள். தஞ்சை மண்தான் எத்தனை எத்தனை எழுத்தாளர்களைத் தந்திருக்கிறது. தி.ஜானகிராமன், எம்.வி.வெங்கட்ராம், கரிச்சான்குஞ்சு, தஞ்சை ப்ரகாஷ்... என எழுத்தாளர்கள் விளைந்த மண் அது. தி.ஜானகிராமனின் எழுத்துகளில் வரும் கிராமம் போலவே மெலட்டூரும் அதன் மனிதர்களும் இருந்தார்கள். எங்கு திரும்பினாலும் 'மோகமுள்' நாவலில் வரும் பாபுவும் யமுனாவும் நிறைந்திருந்தார்கள். நாடகம் முடிந்து மீண்டும் சென்னைக்கு வந்த பிறகும் மெலட்டூர் நாட்கள் இவன் மனதைவிட்டு மறையவில்லை.

மீண்டும் நீண்ட இடைவெளிக்குப் பிறகு, அருண்மொழி வேறொரு படம் தொடங்கினார். சாருஹாசன், சுஜிதா இருவரும் தந்தை-மகளாக நடிக்க கண்தானத்தின் முக்கியத்துவம் சொல்லும் கதை. ஜாலி அட்வர்டைஸ் என்ற நிறுவனத்தின் தலைவர் ஏ.ஜெ.ஜாய்தான் தயாரிப்பாளர். யூனிட்டில் எல்லோரிடமும் அன்பாகவும் எளிமையாகவும் பழகுவார். படத்தின் பெயர் 'விழியே உனக்கு விடியட்டும்'.

Join / Telegram : @Tamil_Books_Library

ஜாலி அடவர்டைஸ் அலுவலகத்தில்தான் இவர்களுக்கு அறை ஒதுக்கப்பட்டிருந்தது. அது திரையரங்குகளில் விளம்பர சிலைடுகள் தயாரிக்கும் நிறுவனம். ஒரு பக்கம் 'முன் சீட்டில் கால் வைக்காதீர்கள்' 'புகை பிடிக்காதீர்கள்' என்று ஒருவர் டப்பிங் பேசிக்கொண்டிருக்க, மறுபக்கம் 'கேட்டு வாங்குங்கள் நிஜாம் பாக்கு' என்று இன்னொருவர் குரல் கொடுத்துக்கொண்டிருப்பார். அந்த அலுவலகம், கேஸினோ தியேட்ட ருக்குப் பக்கத்தில் இருந்த மீரான் சாகிப் தெருவில் இருந்தது. தமிழ் சினிமாவின் வியாபாரத்தை தீர்மானிக்கும் முக்கியமான இடங்களில் ஒன்றாக மீரான் சாகிப் தெருவும் இருந்தது. இரண்டு பக்கமும் திரைப்பட விநியோக அலுவலகங்கள், பழைய மற்றும் புதிய படங்களின் போஸ்டர்கள், படப்பெட்டிகள், வீதியில் இறைந்துகிடக்கும் கிழிந்த ஃபிலிம் ரோல்கள் என சினிமாவின் வேறொரு பக்கத்தை அந்தத் தெருவில் இவன் தரிசித்தான்.

'விழியே உனக்கு விடியட்டும்' ஏனோ சில காரணங்களால் வளராமலேயே நின்றுபோனது. மீண்டும் வேலையற்று திரைப்பட சொசைட்டிகளிலும் நூலகங்களிலும் திரிந்து கொண்டிருந்தான். அவ்வப்போது பத்திரிகைகளில் எழுதிய கவிதைகளுக்கு வரும் சன்மானம் இவன் கைச்செலவுக்கு உதவிக்கொண்டிருந்தது.

**அ**ந்தக் காலகட்டத்தில் நண்பர் ஒருவரின் சிபாரிசில் இவன் உதவி இயக்குநராக வேலை பார்த்த பெயரிடப்படாத ஒரு படத்தின் முதல் நாள் படப்பிடிப்பை இவனால் மறக்கவே முடியாது. அந்தப் படத்தின் தயாரிப்பாளர் ஊரில் விவசாயம் செய்துகொண்டிருந்தவர். சினிமா ஆசையில் சென்னைக்கு வந்துவிட்டார். யார் யாரிடமோ ஏமாந்து கடைசியில் இந்தப் படத்தை தொடங்கியிருந்தார். ஆனால், கையில் போதுமான அளவுக்குப் பணம் இல்லை. திட்டமிட்டுச் செய்தால் சினிமாவைப் போல நல்ல தொழில் வேறு எதுவும் இல்லை. 'முதல் ஷெட்டியூல கஷ்டப்பட்டு முடிச்சிட்டா, சில ஏரியாக்களை வித்துடலாம்' என்று யாரோ நம்பிக்கை ஊட்ட, படப்பிடிப்பைத் தொடங்கி இருந்தார்.

ரிஃப்ளெக்டர், டிராக் அண்ட் டிராலி, லைட்ஸ்... என எதுவும் இல்லாமல் தெர்மகோல் உதவியுடன் கிடைத்த வெளிச்சத்தில் படப்பிடிப்பு நடந்துகொண்டு இருந்தது. மதியம் 2 மணி ஆகியும் உணவு இடைவேளை விடவில்லை. இரண்டரை மணிக்கு தயாரிப்பு நிர்வாகி காய்கறிப் பை ஒன்றுடன் வந்து இறங்க, மரத்தடியில் உப்புமா கிளறப்பட்டு 3 மணிக்கு எல்லோருக்கும் பரிமாறப்பட்டது. இப்படியாக இவன் 'உப்புமா கம்பெனி' என்பதன் அர்த்தத்தை அன்றுதான் அறிந்துகொண்டான்!

Join / Telegram : @Tamil_Books_Library

# 19

## பின்பனிக்காலம்

*பழத்தைப் பார்த்து பூ கேட்டது,*

*“இத்தனை நாளாய் எங்கு இருந்தாய்?”*

*பூ சொன்னது,*

*“உன் இதயத்தில்தான் ஒளிந்திருந்தேன்!”*

*- தாகூர்*
*(வழி தப்பிய பறவைகள் தொகுப்பில் இருந்து)*

*வேலையற்றவனின் பகலும், நோயாளியின் இரவும் நீளமானவை என்பதை இவன் உணர்ந்த காலம் அது. தூரத்தில் இருந்து பார்க்கையில் தங்க நிலவாகத் தெரிந்த சினிமாவின் மறு பக்கம் வேறுவிதமாக இருந்தது. மஞ்சள் வண்ணத்தில் தகதகத்த அந்த நிலவின் உள் பக்கம், ஆக்சிஜனற்று, தண்ணீரற்று, பள்ளம் பள்ளமாக இவன் முன் விரிந்தது. இவன் கனவின் கைகளைப் பிடித்துக்கொண்டு அந்தரத்தில் மிதந்தபடி வாய்ப்புகளைத் தேடிக் கொண்டிருந்தான்.*

*இவன் உதவி இயக்குநராக வேலை செய்ய ஆசைப்பட்ட இயக்குநர்களின் பெயர்களைப் பட்டியலிட்டு, அவர்களது அலுவலகங்களைத் தேடிப் போனான். ஏழு கடல் தாண்டி, ஏழு மலை தாண்டி, கிளியின் கழுத்தில் இருக்கும் இளவரசியின் உயிரைப் போல அவர்களைப் பார்ப்பது அவ்வளவு சிரமமாக இருந்தது. வாயிற்காப்போர்களே வந்தவர்களை வடிகட்டி அனுப்பிக்கொண்டிருந்தார்கள். இப்போது போல் கைபேசி வசதி அன்று இல்லை. ஆதலால், அவர்கள் அடைய முடியாத தூரத்தில் இருந்தார்கள்.*

Join / Telegram : @Tamil_Books_Library

சினிமாவில் இந்த மாதிரி வாய்ப்பு தேடுகிறவர்களுக்கு எழுதப்படாத விதி ஒன்று இருக்கிறது. பிரபலங்களின் வீட்டு முகவரியைக் கண்டுபிடித்து அதிகாலையில் அங்கு போய் தினமும் நின்று, காரில் வெளியே கிளம்பும்போது அவர்கள் பார்வையில் படும்படி வணக்கம் வைத்தால் என்றாவது ஒருநாள், 'யாருப்பா நீ?' என்று கேட்டு மின்னல் தரிசனம் தருவார்கள். அந்த ஒற்றை விநாடியில் நம் வாழ்க்கைக் குறிப்பை ஒப்பித்துவிட வேண்டும்.


இவன் பார்க்க நினைத்த இயக்குநர்கள், ஒன்று படப் பிடிப்பில் இருந்தார்கள்; அல்லது இவன் பார்வைக்குப் படாமல் ரகசிய வழியில் வெளியேறிக்கொண்டிருந்தார்கள். வேலை இல்லாதவனின் பகலைச் சுட்டெரிக்கும் வெயில், இவன் வானத்தில் தினமும் எரிந்துகொண்டேயிருந்தது. புத்தகங்களின் நிழலில் ஒதுங்குவது மட்டுமே இவனுக்கு ஆறுதலை அளித்தது.

கதை, கவிதை, கட்டுரை என்று இவன் எண்ணங்களை எல்லாம் பெரும் பத்திரிகை, சிறு பத்திரிகை என்று பார்க்காமல் எழுதித் தள்ளிக்கொண்டே இருந்தான். பொன் வைக்கும் இடத்தில் பூ வைப்பது போல, அதற்கான சன்மானங்கள் வந்துகொண்டிருந்தாலும், அந்தப் பூக்களின் வாசம்தான் அடுத்த நாளை நோக்கி இவனை நகர்த்திக் கொண்டிருந்தன.

நக்கீரன் குழுமத்தில் இருந்து அப்போது சிறுகதைகளுக்காகவே 'சிறுகதைக் கதிர்' என்று ஓர் இதழ் தொடங்கியிருந்தார்கள். அதில் துணை ஆசிரியராக சேரும் வாய்ப்பு கிடைத்தது இவனுக்கு. சிறுகதைக் கதிர், இவனுக்கான வானத்தையும் சுதந்திரத்தையும் கொடுத்தது. இவன் சிறகை விரித்துப் பறந்தான். அப்போது அதன் அலுவலகம், ராயப்பேட்டை மணிக்கூண்டின் அருகில் அமீர் மகாலுக்கு அடுத்து மீர் பக்ஷி அலி தெருவில் இருந்தது. கீழ்த் தளத்தில் ராட்சத பிரிண்டிங் மெஷின்கள், சரம்சரமாக அவை வெளியேற்றும் அச்சடிக்கப்பட்ட காகிதங்கள், கடைசி நேர நெருக்கடிகள் என பத்திரிகை உலகின் பரபரப்புகளுக்கு இவன் பழகிக்கொண்டாள். சிறுகதைக் கதிர் மாத இதழ் என்பதால், மாதத்தின் கடைசி நான்கு நாட்கள் அலுவலகத்திலேயே தங்க வேண்டி வரும்.

இவனைப் போலவே எல்லோரும் தேநீரும் சிகரெட்டுமாக இரவை, செய்திகளாக நிரப்பிக்கொண்டிருப்பார்கள். அலுவலகம் வெளியே பூட்டப்பட்டு, இவர்கள் வந்து போக வேறு ஒரு வாசல் இருந்தது.

Join / Telegram : @Tamil_Books_Library



அப்படிப்பட்ட ஓர் இரவில் நக்கீரனில் வெளிவந்த செய்தியினால் கோபமடைந்த ரௌடிக் கும்பல் ஒன்று, டாடோ சுமோக்களில் வந்து இறங்கி, பூட்டப்பட்டிருந்த அலுவலகத்தைப் பார்த்து மேலும் கொதிப்படைந்து, திரும்பிப் போனதை இவன் மொட்டைமாடி இருட்டில் இருந்து வேடிக்கை பார்த்திருக்கிறான்.

புலனாய்வுப் பத்திரிகையில் பணியாற்றும் அனுபவத்தின் பின்விளைவுகளை இவன் அறிந்த நாட்கள் அவை. எழுத்தாளர், பத்திரிகையாளர் மாலன் எழுதிய ‘ஆயுதம்’ என்ற சிறுகதைதான் இவன் ஞாபகத்துக்கு வந்தது. ஒவ்வொரு பத்திரிகையாளனும் படிக்கவேண்டிய கதை அது.

Join / Telegram : @Tamil_Books_Library

பத்திரிகையாளன் என்பவன் காலத்தின் மனசாட்சி, ஜனநாயகத்தின் நான்கு தூண்களை தாங்கிப் பிடிப்பவன், விருப்பு வெறுப்பற்று நடுநிலையாக உண்மை சொல்பவன். முதுகுக்குப் பின்னால் இரண்டு கண்கள் முளைத்திருப்பதும், அந்தக் கண்கள் வழியே மக்கள் காணாத உண்மையை வெளிக்கொணர்வதும்தான் பத்திரிகையாளனின் பணி. பல்வேறு துறைகளைச் சார்ந்த பிரபலங்களை இவன் பேட்டி எடுத்தான்.

சிறுகதைக் கதிரில் அப்போது 'முதன்முதலாக' என்று ஒரு புதிய பகுதியைத் தொடங்கியிருந்தார்கள். பல்வேறு துறைகள் சார்ந்த பிரபலங்களிடம் அவர்கள் முதன்முதலாக இயக்கிய காட்சி, பேசிய வசனம், எழுதிய கவிதை... என்று பேட்டி எடுக்க வேண்டும். இவன் திரைத்துறை சார்ந்த பிரபலங்களைப் பேட்டியெடுத்தான்.

அப்படித்தான் அந்த இயக்குநரை இவன் சந்தித்தான். அவரது முதல் படம் மிகப் பெரிய ஹிட்டாகி, இரண்டாவது படத்துக்கான கதை விவாதத்தில் இருந்துகொண்டிருந்த காலம். எழுதப்படாத சினிமாவின் விதியைப் பின்பற்றி தி.நகரில் இருந்த அவரது ஃப்ளாட்டின் வாசலில் அதிகாலை காத்திருந்தான். ஆறரை மணிக்கு அவரது அம்மா வெளியே வந்து இவனைப் பற்றி விசாரித்ததும், வந்த நோக்கத்தைச் சொன்னான். "தம்பி தூங்கிட்டு இருக்கு. எழுந்ததும் சொல்றேன்" என்று அன்பாகப் பேசியதைக் கண்டு ஆச்சரியப்பட்டுப் போனான். எந்த ரகசிய வழியிலும் அந்த இயக்குநர் வெளியேறாமல் ஏழேகாலுக்கு இவனை உள்ளே அழைத்தார். இவனது ஒல்லியான தோற்றத்தைப் பார்த்து வயதைக் கேட்ட பின், "நான் பேட்டி குடுக்கற மனநிலையில் இல்லை. ஆனா, இவ்வளவு சின்னப் பையனா ஆர்வத்தோட கேட்கும்போது தவிர்க்க முடியல. கேளுங்க தம்பி" என்றார்.

இவன், "நீங்க முதன்முதலாக இயக்கிய காட்சி எது?" என்றான். அவர் "நகைக்கடையில் கதாநாயகன் கொள்ளையடித்த காட்சி" என்றார்.

"ரொம்ப நன்றி சார். நான் கிளம்பறேன்" என்றான்.

"அவ்வளவுதானா? பேட்டி முடிஞ்சிருச்சா?" என்றார் ஆச்சரியத்துடன். "ஆமா சார்... இந்தத் தகவல் மட்டும் போதும் சார்" என்று சொல்லிவிட்டு இவன் கிளம்ப எத்தனிக்கையில், "உட்காருங்க தம்பி. டீ சாப்பிட்டுப் போலாம். எந்த ஊரு... என்ன படிச்சிருக்கீங்க?" என்று அவர் கேட்க, இவன் தன்னைப் பற்றி சொல்லத் தொடங்கினான்.

அந்த நேர்காணல் வந்த இதழை அவரிடம் கொடுக்க மீண்டும் சந்தித்தபோது, படித்துப் பார்த்துவிட்டு, "ஷார்ட் அண்ட் ஸ்வீட்" என்று அவர் சொன்னது, இவனை மேகத்தில் மிதக்கவிட்டது. தரை இறங்குவதற்கு முன்பாகவே, "சார் உங்ககிட்ட அசிஸ்டென்டா வேலை

Join / Telegram : @Tamil_Books_Library

செய்ய ஆசைப்படுறேன்” என்றான். “இந்தப் படத்தில் ஏற்கெனவே நிறையப் பேர் இருக்காங்க. அடுத்த படம் ஆரம்பிக்கும்போது வந்து பாருங்க. அது வரைக்கும் ஒரு நண்பனா எப்ப வேணாலும் என்னைச் சந்திக்கலாம்” என்று அவர் சொல்ல, மீண்டும் இவன் தலைக்கு மேல் மேகங்கள் மிதந்தன. இவனுக்கு இருந்த இயல்பான கூச்சத்தால் அவரைச் சந்திப்பதை இவன் தள்ளிப்போட்டுக்கொண்டே இருந்தான்.



அதற்குப் பின் அவரை இவன் சந்தித்தது, அவர் தயாரித்த படத்துக்கு பாடல் எழுதுவதற்காக. அந்தப் படம் ஹிட்டாகி, அடுத்தடுத்து அவர் தயாரித்த படங்களிலும், இயக்கிய படங்களிலும், இவன் பாடல்கள் எழுதினாலும், இன்று வரை, அன்று அவர் தேநீர் கொடுத்துப் பேட்டியளித்த, அந்த மீசை முளைக்காத இளைஞன்தான் இவனென்று அவருக்குத் தெரியாது. அந்த இயக்குநர் இந்திய சினிமாவின் பிரமாண்டத்தை உலக சினிமாவுக்கு அறிமுகப்படுத்தியவர்.

அவர்... இயக்குநர் ஷங்கர்!

Join / Telegram : @Tamil_Books_Library

20

# இவன் நானாகும் அத்தியாயம்

*‘நான் இல்லாமல் போகிறேன்*
*ஆனால் வசந்த காலம்*
*என்னுடைய நினைவுகளுடன் இருந்து*
*கொண்டேதானிருக்கும்!’*

*- இறக்கப்போகிற கடைசி நிமிடத்தில்*
*ஜப்பானிய ஹைக்கூ கவிஞர் பாஷோ*

*அன்புள்ள பாலுமகேந்திரா சாருக்கு...*

*தூரத்தில் இருந்து நீங்கள் வேடிக்கை பார்த்துக்கொண்டு இருக்கிறீர்கள் என்ற நம்பிக்கையில்தான் இத்தனை நாட்களாக நான் ஓடிக்கொண்டிருந்தேன். சட்டென்று நேற்று திரும்பிப் பார்க்கையில் காலம் அகாலமாகி நிற்கிறது. மரணம், ஒரு மோசமான சதுரங்கம். எத்தனை பேர் சுற்றி நின்று பாதுகாத்தபோதிலும், அது எங்கள் பிரியத்துக்குரிய அரசனை அழைத்துச் சென்றுவிட்டது. இப்போதுகூட நீங்கள் வானத்தில் இருந்து வேடிக்கை பார்த்துக்கொண்டு இருக்கிறீர்கள் என்ற நம்பிக்கையில்தான் இதை எழுதிக் கொண்டிருக்கிறேன்.*

*ஐந்தாறு வாரங்கள் கழித்து உங்களுடன் உதவி இயக்குநராகப் பணியாற்றிய அனுபவங்களை எழுதலாம் என இருந்தேன். இப்படி காலத்தை முன்னோக்கி இழுத்து, காணாமல்போனது நியாயமா? இனி ஒவ்வொரு வாரமும் வியாழன் அன்று தொலைபேசியில் என்னை அழைத்து, ‘விகடன் படிச்சிட்டேன்’ என்று வேடிக்கை பார்ப்பவனை விமர்சிக்கும், கம்பீரமான குரலை எந்தக் காற்றின் அலைவரிசை என்னிடம் கொண்டு வரும்?*

Join / Telegram : @Tamil_Books_Library

காலம், உங்களை ஒரு கண்ணாடிப் பெட்டிக்குள் அடைத்து விட்டதாகக் கர்வப்பட்டாலும், காலத்தை வென்று நிற்கப் போகும் உங்கள் படைப்புகளை அதனால் என்ன செய்துவிட முடியும்? மரணத்தின் எந்தச் சுவடுகளும் தெரியாமல் உங்கள் இறுதி உறக்கம் கம்பீரமாக இருந்தது. ‘வாடா முத்துக்குமார், பாண்டிபஜார் வரைக்கும் போயிட்டு வருவோம்’ என்று எந்தக் கணத்திலும் நீங்கள் கூப்பிடலாம் என்ற நம்பிக்கையில் உங்கள் தலைமாட்டிலேயே நின்றுகொண்டிருந்தேன்.

பாண்டிபஜாரின் மரங்கள் அடர்ந்த சாலையும், நடைபாதைக் கடைகளும் உங்களுக்கு அப்படிப் பிடிக்கும். காரிலும், எந்தத் தயாரிப்பாளரும் கிடைக்காமல் நான்கு மாதங்கள் எங்களுக்குத் தரவேண்டிய சம்பளப் பாக்கிக்காக அந்தக் காரை விற்றுவிட்டு பின்பு ஆட்டோவிலுமாக பனகல் பார்க்கின் முனையில் இறங்கி, பாண்டிபஜாரின் வீதியில், என்கை பிடித்து நடந்தபடி எத்தனை கடைகளுக்கு அழைத்துச் சென்றிருக்கிறீர்கள்? திரும்பி வருகையில் வடக்கு உஸ்மான் ரோட்டில் உள்ள நியூ புக் லேண்ட்ஸ் புத்தகக் கடைக்கு அழைத்துச் சென்று, அன்று புதிதாக வந்த அத்தனை கவிதைத் தொகுப்புகளையும் வாங்கி, ‘அன்புடன்’ என்று கையெழுத்திட்டு எனக்குக் கொடுப்பீர்கள்.

என் ஞானத் தகப்பனே! நீங்கள் இருக்கிறீர்கள் என்ற நம்பிக்கையில்தானே, என் தகப்பன் ஏழு வருடங்களுக்கு முன்பு என்னை விட்டுவிட்டு இறந்துபோனான். நீங்களும் பாதியிலேயே விட்டுவிட்டுப்போனால், இனி நான் எங்கு செல்வது? ஒரு கூட்டுப்புழுவாக உங்கள் அலுவலகத்துக்குள் நுழைந்த என்னை, பாட்டுப்புழுவாக மாற்றி, பட்டாம் பூச்சியாகப் பறக்கவிட்டவர் நீங்கள்.

பாலுமகேந்திரா என்கிற மகா கலைஞன் என் மனதில் விதையாக விழுந்து, மரமாக எழுந்தது எப்போது?

‘அழியாத கோலங்கள்’ சிறுவர்களில் நானும் ஒருவனாக இருந்தபோதா? ‘மூன்றாம் பிறை’ பார்த்துவிட்டு, பால்ய காலத்தில் நான் வளர்த்த ‘டைகர்’ எனும் நாய்க்குட்டிக்கு ‘சுப்பிரமணி’ என்று நாமகரணம் சூட்டியபோதா? ‘நீங்கள் கேட்டவை’யின் ‘பிள்ளை நிலா’ என் வானத்தில் உதித்தபோதா? குடிசை வீட்டில் இருந்தபடியே, ஞாயிறு மதியம் தூர்தர்ஷனில் ‘வீடு’ படத்தை ரசித்தபோதா? நான் பிறக்கும் முன்பே இறந்துவிட்ட பாட்டனோடு ‘சந்தியாராக’த்தில் கைகோத்து நடந்தபோதா? ‘வண்ணவண்ண பூக்க’ளில் வண்டாக நுழைந்தபோதா? ‘மறுபடியும்’ ரேவதியின் கண்ணீரில் நனைந்தபோதா? ‘சதிலீலாவதி’ கமலுடன் சிரித்தபடி திரிந்தபோதா? ‘ராமன் அப்துல்லா'வில் நெகிழ்ந்த போதா? ‘அது ஒரு கனாக்கால’த்தில் அலைந்தபோதா?


Join / Telegram : @Tamil_Books_Library

‘தலைமுறைகளில் தொலைந்தபோதா?

காஞ்சிபுரத்தில் நான் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்த காலத்தில் எம்.ஜி.வல்லபன் நடத்திய ‘ஃபிலிமாலயா’ பத்திரிகையில் உங்கள் பேட்டி ஒன்று வந்திருந்தது. அப்போதைய ‘சுபமங்களா’ பத்திரிகையைப் போல மிக நீண்ட பேட்டி அது. நாளைய சினிமா குறித்து, நீங்கள் அளித்திருந்த பதில் இன்னமும் பசுமையாக என் நினைவில் உள்ளது. அந்த வரிகள், ‘நாளைய தமிழ் சினிமாவின் முகங்களை மாற்றியமைக்கப்போகிற இளைஞர்கள், தற்சமயம் தனி முகவரி அற்றவர்களாகத் தங்களைத் தயார்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வருவார்கள். இந்திய வெயிலின் சுட்டெரிக்கும் அனலோடும், தமிழ் யதார்த்தத்தின் புழுதிக்காற்றோடும்! அந்த வரிகள் என்னைப் புரட்டிப்போட்டன. எங்கேயே இருந்த என் துரோணாச்சாரியரின் விரல்களை இந்த ஏகலைவன் இப்படித்தான் பற்றிக்கொண்டான்.

நதி, மேகத்தில் உருவாகி மலையில் அருவியாகி காடுகளில் வெள்ளமாகி எங்கெங்கோ பயணித்து கடைசியில் கடலை வந்தடைவது இல்லையா? அப்படித்தான் உங்களிடம் நான் வந்து சேர எட்டு ஆண்டுகள் பிடித்தன.

Join / Telegram : @Tamil_Books_Library



சூரியனைத் தள்ளி நின்று காதலிக்கும், சூரியகாந்தியைப் போல, என் ஆசானே... இந்தக் காலங்களில் எல்லாம் உங்களை நான்

Join / Telegram : @Tamil_Books_Library

தொடர்ந்துகொண்டே இருந்தேன். 'எண்பதுகளில் கலை இலக்கியம்' என்று முன்றில் பத்திரிகை நடத்திய விழாவில், கோமல் சுவாமிநாதனின் சுபமங்களா நடத்திய நாடக விழாவில், ஃபிலிம் சேம்பரில், ரஷ்ய கலாசார மையத்தில், மேக்ஸ் முல்லர் பவனில், அலையன் ஃபிரான்சிஸில்... என எங்கெங்கோ நடந்த உலகப் பட விழாக்களில் உங்களை நான் தள்ளி நின்றே ரசித்துக் கொண்டிருந்தேன்.

**எ**ன் கவிதைகளைத் தொகுத்து, 'பட்டாம்பூச்சி விற்பவன்' என்ற தலைப்பில், அறிவுமதி அண்ணன் அவரது 'சாரல்' பதிப்பகத்தில் கொண்டுவர நினைத்தபோது, யாரிடம் முன்னுரை வாங்கலாம் என்ற கேள்வி எழுந்தது. நண்பர்கள் சொன்ன எல்லாப் பெயர்களையும் நிராகரித்து , "எங்க டைரக்டர் பாலுமகேந்திரா சார்தான் இதுக்கு முன்னுரை எழுதணும்" என்று அறிவுமதி அண்ணன் சொன்ன போது, "சார் எழுதிக் குடுப்பாரா?" என்று தயங்கியபடி கேட்டேன். "நான் ஒரு அறிமுகக் கடிதம் எழுதிக் கொடுக்கிறேன். நீ நேர்ல போயிப் பாரு" என்றார் அண்ணன்.

இன்னும் நினைவில் உள்ள அந்தக் கடிதம் இப்படித் தொடங்கும்.

'அன்பின் அப்பாவுக்கு,

தங்கள் பிள்ளை மதி எழுதும் கடிதம்.

இவன் என் தம்பி. இவன் கவிதைத் தொகுப்புக்கு முதல் குழந்தையின் பூஞ்சை மேனியில், மருத்துவச்சியின் கைரேகைப் பதிவாக உங்கள் முன்னுரை வேண்டும். உங்கள் உரைநடைக் காதலனாக, இது என் அன்புக் கட்டளை.

இப்படிக்கு தங்கள் அன்புப் பிள்ளை,
மதி.'

அந்தக் கடிதத்தை, அவர் கைகள் நடுங்க நின்றுகொண்டே எழுதினார். கிட்டத்தட்ட 12 ஆண்டுகள், ஏழு படங்கள் என உதவி இயக்குநராக உங்களிடம் வேலை செய்த, மூத்தப் பிள்ளையின் முழு பக்தி அது.

**அ**டுத்த நாள் காலை உங்கள் அலுவலகம் வந்தேன். 'கணையாழி விழாவில் உங்களின் 'தூர்' கவிதையை எழுத்தாளர் சுஜாதா படிச்ச அந்த நிகழ்வில், நான் பார்வையாளனாக இருந்தேன். நிச்சயம் முன்னுரை தர்றேன்" என்றீர்கள்.

கையெழுத்துப் பிரதியை உங்களிடம் தந்துவிட்டு வீட்டுக்கு வந்துவிட்டேன். பேஜர், செல்போன் என்று அறிவியல் முன்னேறியிராத காலம் அது. இப்போது யோசிக்கையில் அது மிகவும் நல்ல காலம்.

Join / Telegram : @Tamil_Books_Library



அன்று இரவே அறிவுமதி அண்ணன் அலுவலகத்துக்கு நீங்கள் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, “நாளை காலை ஏழு மணிக்கு முத்துக்குமாரை என் அலுவலகத்துக்கு வரச் சொல்லுங்கள்’ என்று சொல்லியிருக்கிறீர்கள். அடுத்த நாள் மதியம், சாவகாசமாக அண்ணனின் அலுவலகம் சென்றபோது இந்தத் தகவலை என்னிடம் சொன்னார்கள். இடைப்பட்ட நேரத்தில், என் வாழ்வின் மஞ்சள் வெளிச்சம் நான் இல்லாமல் என் மேல் விழுந்து இருந்தது.

Join / Telegram : @Tamil_Books_Library

'ராமன் அப்துல்லா' படப்பிடிப்பில் பிரச்னையாகி திரையுலகம் துண்டுபட்டு, 'இயக்குநர் இமயம்' பாரதிராஜா தலைமையில் 'படைப்பாளிகள் இயக்கம்' என்று தனியாகச் சங்கமித்த நாள் அது. சென்னை காமராஜர் அரங்கத்தில் இயக்குநர்கள், தயாரிப்பாளர்கள், இசையமைப்பாளர்கள், நடிகர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள்... எனப் பெரும் கலைஞர்கள் சங்கமித்த அந்த விழாவின் தொடக்க உரையில் என் துரோணாச்சாரியரே... நீங்கள் இந்த ஏகலைவனின் 'தூர்' கவிதையை 'இந்தச் சூழலுக்குப் பொருத்தமாக ஒரு கவிதையுடன் என் உரையைத் தொடங்குகிறேன்' என்று வாசித்து, 'இது என் உதவி இயக்குநர் நா.முத்துக்குமார் எழுதிய கவிதை' என்று அறிவித்ததாகப் பின்னர் கேள்விப்பட்டேன்.

**அ**ன்று மாலை உங்களை அலுவலகத்தில் சந்தித்தபோது, "ஏன் காலையிலேயே வரவில்லை? உன்னை மேடைக்கு அழைத்து எல்லோருக்கும் அறிமுகப்படுத்தலாம் என்று திட்டம் இட்டிருந்தேன்" என்று கடிந்துகொண்டீர்கள். இப்படித்தான் இந்த நதி, தான் விரும்பிய கடலை வந்தடைந்தது.

ஆஹா அந்தக் காலம்... அது ஒரு கனாக் காலம்! உலக சினிமாவின் கதவுகளைத் திறந்து என் சிறுவிரல்கள் பிடித்து, என்னை நீங்கள் அழைத்துச் சென்ற நாட்கள் அவை. காலை அகிரா குரோசோவா, மதியம் கிஸ்லோவஸ்க்கி, இரவு மக்ஸன் மக்பல்பஃப் எனத் தேடித் தேடி உலக இயக்குநர்களின் படங்களை, எனக்கு நீங்கள் பயிற்றுவித்த பருவம் அது. சினிமா மட்டுமா? கதை நேரம் தொடருக்காக நீங்கள் படித்த கதைகளை நானும், நான் படித்த கதைகளை நீங்களும் விவாதித்த தருணங்கள் என் கண் முன் நிற்கின்றனவே!

நீங்கள் எங்களை உதவி இயக்குநர்களாகப் பார்க்கவில்லை. உங்கள் பிள்ளைகளாகவே நினைத்து வளர்த்தீர்கள். உங்களைப் போலவே உங்கள் மனைவி அகிலா அம்மாவும், துணைவி மௌனிகாவும் எங்களைத் தத்தெடுத்துக் கொண்டார்கள். என் அன்புத் தகப்பனே... பசி நிரம்பிய மதிய வேளைகளில் டைனிங் டேபிளில் அமரவைத்து, உங்கள் கையாலேயே வறுத்துக்கொடுக்கும் மீன்களின் ருசியை இனி யார் எங்களுக்குத் தரப்போகிறார்கள்? ஈழத்தின் அமிர்தகழியில் பிறந்த உங்களை, தங்கள் பிள்ளையாக நினைத்து தமிழகம் உங்கள் இறுதி ஊர்வலத்தைச் சிறப்பாக நடத்தியதை நினைத்து என் நெஞ்சம் நெகிழ்கிறது.

முதல் முறையாக ஓர் இயக்குநருக்காக தமிழ் சினிமாவின் படப்பிடிப்புகள் நிறுத்தப்பட்டது உங்கள் மரணத்துக்காகத் தான். இதற்காக தயாரிப்பாளர்கள் சங்கம், நடிகர் சங்கம், இயக்குநர்கள் சங்கம், பெப்சி... என அனைத்து சங்கங்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Join / Telegram : @Tamil_Books_Library

*போய் வா என் தலைவா... நீ நிரந்தரமானவன். அழிவதில்லை. எந்த நிலையிலும் உனக்கு மரணமில்லை.*

*இப்படிக்கு...*

*இந்திய வெயிலின் சுட்டெரிக்கும் அனலையும், தமிழ் யதார்த்தத்தின் புழுதிக் காற்றையும், வெள்ளித்திரையில் விதைக்கும் உங்கள் பிள்ளைகள் ஒளிப்பதிவாளர்கள் ஷங்கி மகேந்திராவுக்காக, ராஜராஜனுக்காக, நித்யாவுக்காக, கவிஞர் அறிவுமதிக்காக, இயக்குநர்கள் பாலாவுக்காக, வெற்றிமாறனுக்காக, சுகாவுக்காக, ராமுக்காக, சீனுராமசாமிக்காக, வக்கீல் சுரேஷுக்காக, துரை செந்தில்குமாருக்காக, விக்ரம் சுகுமாரனுக்காக, அடுத்தடுத்து இயக்க இருக்கும் ஞானசம்பந்தனுக்காக, ராஜாவுக்காக, கௌரிக்காக மற்றும் இந்திய சினிமாவை மாற்றியமைக்கப் போகும் உங்கள் சினிமாப் பட்டறை மாணவர்களுக்காக, தூரத்தில் இருந்து உங்கள் வித்தையைக் கற்ற ஏகலைவர்களுக்காக...*

*மற்றும் ஒரு பிள்ளை*

*நா.முதது்ககுமார்.*

Join / Telegram : @Tamil_Books_Library



21

# இளவேனிற் காலம்

*இதற்கு மேல் உருள முடியாது*
*கல் நதியைவிட்டு கரையேறிற்று.*
*இதற்கு மேல் வழ வழப்பாக்க முடியாது*
*கல்லை ஒதுக்கிவிட்டு*
*நதி ஏகிற்று!*

*-கல்யாண்ஜி*

**ப**த்திரிகையில் வேலை செய்தாலும், இவனது தீராக்காதல் சினிமா மீதே இருந்தது. ஒரே நேரத்தில் இரண்டு குதிரைகளின் மேல் சவாரி செய்வது தேசிங்கு ராஜனாலும் முடியாத ஒன்று என்று இவன் கண்டுகொண்ட காலம் அது.

“குண்டுச்சட்டியில் குதிரை ஓட்டுபவன்’ என்றொரு பழமொழி உண்டு. ‘ஒரே இடத்தில் சுற்றிக்கொண்டு இருப்பவன்’ என்று அதற்கு பொருள் சொல்வார்கள். இவனும் அப்படித்தான் நம்பிக்கொண்டிருந்தான். இவன் மூன்றாம் வகுப்புப் படிக்கும்போது, தன் நண்பன் ஒருவனைப் பற்றி குறிப்பிட இந்தப் பழமொழியை, அப்பாவிடம் சொன்னான். அவர் இவனிடம் தெளிவுபடுத்தினார், “அதன் அர்த்தம் அப்படியல்ல... குன்று செடியில் குதிரை ஓட்டுபவன் என்பதுதான் அந்தப் பழமொழிக்குப் பொருள். குன்றின் மீதே குதிரை ஓட்டும் திறமைக்கு எடுத்துக்காட்டாகச் சொல்லப்பட்ட இந்தப் பழமொழி, திறமையின்மைக்கு உதாரணமாக மருவி வழங்கப்படுகிறது!” என்று இவன் தந்தை சொல்ல, அதற்குப் பின்தான், இவன் அறிந்தான், இதைப் போல மருவிப் பொருள்கொண்ட 20,000 பழமொழிகளை அவர் சேகரித்துவைத்திருக்கிறார் என்று.

Join / Telegram : @Tamil_Books_Library

குன்றில் ஏறி குதிரை ஓட்டுவது போலத்தான் இவன் சினிமாக் கனவுகள் இருந்தன. இரண்டு குதிரைகளில் ஒரே நேரத்தில் சவாரி செய்யும் சாகசத்தைத் தவிர்த்துவிட்டு, இவன் சினிமா எனும் கனவுக் குதிரையில் தாவிக் குதித்தான். ஆயினும், அந்தக் குதிரை இவன் வசப்பட பத்திரிகைகளே அந்தக் காலத்தில் துணையாக இருந்தன. 'சிறுகதைக் கதிர்', 'இனிய உதயம்', 'தமிழரசி', 'புதிய பார்வை', 'சுபமங்களா', 'ராஜரிஷி'.. எனப் பல்வேறு பத்திரிகைகளில் ஃப்ரீலான்ஸ் பத்திரிகையாளனாகப் பணியாற்றிக்கொண்டே சினிமாக் குதிரையைத் துரத்திக்கொண்டிருந்தான்.

சம்பளம் கம்மி என்றபோதிலும், முழு நேரப் பத்திரிகையாளனைவிட, ஃப்ரீலான்ஸ் பத்திரிகையாளனுக்கு சுதந்திரம் அதிகம். வாரத்தில் ஒரு நாள் வேலை செய்தால் போதும். மீதி ஆறு நாட்களை எப்படிக் கழிப்பது? இவன் தகப்பன், பள்ளியில் தமிழ் வகுப்பு எடுக்கும் ஆசிரியன். தன் பிள்ளை ஒரு நாளாவது, ஏதோவொரு கல்லூரியில், வகுப்பு எடுக்க வேண்டும் என்பது அவனது தீராத கனவு. தன் கனவையும், தகப்பனின் கனவையும் இவன் நிறைவேற்றத் தலைப்பட்டான்.

இப்படித்தான் நண்பர்களே... இவன் சென்னை பச்சையப்பன் கல்லூரியில், எம்.ஏ., தமிழ் இலக்கியப் பாடப் பிரிவுக்கு விண்ணப்பித்தான். 'பச்சையப்பன் படிக்கட்டும் பைந்தமிழ் பாடும்' என்பார்கள். 'முதலில் பச்சையப்பன் படிக்கட்டும்... அப்புறம் பைந்தமிழ் பாடட்டும்...' என்று அதன் தொனியை மாற்றிச் சொன்ன அந்தக் கல்லூரியின் தத்துவத் துறை பேராசிரியர் பெரியார்தாசனை, இவன் பின்னாட்களில் அறிந்துகொண்டான். அவரது நாத்திகப் பேச்சுகளைக் கேட்பதற்காகவே இவன் தகப்பன் இவனை சைக்கிளில் அமரவைத்து, பனிகொட்டும் இரவுகளில் அழைத்துச்சென்றது இப்போது நினைவுக்கு வருகிறது.

பச்சையப்பன் கல்லூரியில், இவன் படிக்க விரும்பியதன் காரணம், அது பேரறிஞர் அண்ணா படித்த கல்லூரி. அண்ணா மட்டுமா? அரசியல், இலக்கியம், விஞ்ஞானம்... என எந்தத் துறையை எடுத்தாலும் பச்சையப்பன் கல்லூரியில் படித்த மாணவர்கள் அங்கு இருப்பார்கள். ஆர்ம்ஸ்ட்ராங் செல்வதற்கு முன்பே, நிலவில் வடை சுட்ட பாட்டியின் முதல் வடையை வாங்கியவன். பச்சையப்பாஸ் ஸ்டூடன்ட்தான் என்ற கர்வம், பச்சையப்பன் மாணவர்களுக்கு உண்டு. அந்தக் கர்வத்தில் இவன் கலந்துகொள்ள விரும்பினான்.

பச்சையப்பன் கல்லூரியின் தமிழ்த் துறையில் காலை நேர வகுப்பு, மாலை நேர வகுப்பு இரண்டுக்கும் சேர்த்து 50-க்கும் கீழான சீட்டுகளே

Join / Telegram : @Tamil_Books_Library

இருந்தன. அந்த வருடம் 400-க்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் குவிந்திருந்தன. இவன் காலை நேர வகுப்பில் படிக்க விரும்பினான். அதற்கு, கடும் போட்டி. அதே கல்லூரியில் இளங்கலை தமிழ் இலக்கியம் படித்த மாணவர்களுக்குத்தான் முன்னுரிமை அளிக்கப்படும் என்பதை இவன் அறிந்திருந்தான். தவிர, இவன் இளங்கலையில் இயற்பியல் படித்திருந்ததால், வேறு பாடப்பிரிவு என்று நிராகரிக்கப்படும் சாத்தியங்களும் இருந்தன.

அதுவரையில் பத்திரிகையில் இவன் எழுதி வெளிவந்த 500-க்கும் மேற்பட்ட படைப்புகள் அடங்கிய ஃபைலையும், இவனது முதல் கவிதைத் தொகுப்பையும் எடுத்துக்கொண்டு தமிழ்த் துறைத் தலைவர் முனைவர் தெ.ஞானசுந்தரம் அவர்களைச் சந்தித்தான். காஞ்சி பச்சையப்பனில் இவனுக்குத் தமிழ் வகுப்பு எடுத்த பேராசிரியர் எஸ்.குருசாமி இவனை அவரிடம் அறிமுகப்படுத்திவைத்தார். “இவன் நல்லாக் கவிதை எழுதுவான் சார். சயின்ஸ்ல 90 பெர்சன்ட் மார்க் எடுத்துட்டு, தமிழ் படிக்கணும்னு வந்திருக்கான். நிச்சயம் இவனுக்கு நீங்க சீட் கொடுக்கணும்” என்று குருசாமி சார் சொல்ல, முனைவர் தெ.ஞா., இவனை மேலும் கீழுமாகப் பார்த்தார். ‘தம்பி.... மதியம் ரெண்டு மணிக்கு என்னைத் தனியா வந்து பாருங்க” என்று சொல்லிவிட்டு, வகுப்பு எடுக்கப் போனார்.

இவன் கல்லூரியின் கட்டடங்களையும், மரங்கள் அடர்ந்த மைதானத்தையும் சுற்றி வந்தான். பேரறிஞர் அண்ணா, கணிதமேதை ராமானுஜன் என்று எத்தனை எத்தனை மேதைகள் படித்த கல்லூரி இது. எப்படியாவது இங்கு இடம் கிடைக்க வேண்டும் என்று மனது துடித்துக்கொண்டிருந்தது.

சரியாக 2 மணிக்கு முனைவர் தெ.ஞா., முன்பு நின்றான். “தம்பி உங்களை என் பையனா நெனச்சுச் சொல்றேன், ஃபிசிக்ஸ்ல இவ்ளோ மார்க் எடுத்திருக்கீங்க. எதுக்கு தமிழ் படிச்சுக் கஷ்டப்படப் போறீங்க! பேசாம அறிவியல்லயே மேற்படிப்பு தொடருங்க” என்று அவர் சொல்ல, “இல்ல சார், எனக்கு பி.டெக். சீட் கெடைச்சது. அது வேணாம்னு ஒதுக்கிட்டு தமிழ் படிக்கலாம்னு வந்திருக்கேன். சீட் கொடுப்பீங்களா... மாட்டீங்களா? என்று தீர்மானமாகக் கேட்டான்.


அவர், இவன் கண்களை ஒரு சில விநாடிகள் உற்றுப் பார்த்துவிட்டு, இவன் விண்ணப்பத்தைத் தேடி எடுத்து பச்சை இங்க்கில் ஏதோ எழுதி “பிரின்ஸிபாலைப் போய்ப் பார்த்துட்டு ஆபிஸ்ல ஃபீஸ் கட்டிடுங்க. அடுத்த வாரம் வகுப்பு ஆரம்பம்” என்றார்.

Join / Telegram : @Tamil_Books_Library



இவன் நன்றி சொல்லிவிட்டுத் திரும்பும்போது, “ஒரு நிமிஷம் தம்பி” என்று மீண்டும் அருகில் அழைத்தார். இவன், “சொல்லுங்க சார்” என்றான். “சும்மா உங்க உறுதியைச் சோதிக்கத்தான் அப்படிச் சொன்னேன். ஒழுங்காப் படிச்சா தமிழ் எவனையும் தெருவுல நிக்கவெக்காது. ஒய்வா இருக்கும்போது வாங்க. நான் ரசிச்ச நூற்றுக்கணக்கான பாடல்களைக் குறிச்சுக் கொடுக்கிறேன். அதைப் புரிஞ்சுக் கிட்டு மனப்பாடம் பண்ணா மட்டும் போதும். வாழ்ற வரைக்கும் நீங்க பேசியே பொழச்சிக்கலாம்” என்றார். இவன் சட்டென்று அவர் பாதங்களில் விழுந்து ஆசீர்வாதம் வாங்கினான். இவனைத் தூக்கி எழுப்பிய அவர் கண்கள் ஏனோ கலங்கி இருந்தன.

Join / Telegram : @Tamil_Books_Library



Join / Telegram : @Tamil_Books_Library

முதல் நாள் கல்லூரிக்குள் நுழைந்தபோது, வள்ளுவனும் கம்பனும் வானத்தில் இருந்து இவன் மேல் பூக்களைத் தூவினார்கள். இவன் தொன்ம பாட்டன் தொல்காப்பியன் தொடுவானத்தின் தொலைதூரத்துக்கு அப்பால் இருந்து, இவனுக்கு வாழ்த்துத் தந்தி அனுப்பியிருந்தான். கபிலரும் பரணரும் காற்றில் அரூபமாக மிதந்துவந்து இவனை வகுப்பறையில் அமரவைத்தார்கள்.

இவனைப் போல பாக்கியம் செய்தவர்கள் வேறு யாரும் இருக்க முடியாது. தேர்ந்த ஆசான்களிடம் இவன் தமிழ் கற்றான். பேராசிரியரும் கவிஞருமான குருவிக்கரம்பை சண்முகம், பேராசிரியரும் இயக்குநருமான ஏ.எஸ்.பிரகாசம், பேராசிரியர் கவிஞர் மு.பி.பாலசுப்பிரமணியம், பேராசிரியர் விமர்சகர் ராம.குருநாதன், பேராசிரியர் ரா.தட்சிணாமூர்த்தி, பேராசிரியர் ஜெயப்பிரகாசம்... எனப் பல துரோணாச்சாரியார்கள் இவனுக்குச் சொல் வித்தையைக் கற்றுக்கொடுத்தார்கள்.

அவர்கள் கைப்பிடித்து இவன் தொல்காப்பியனின் மரபியல் அறிந்தான்; வள்ளுவனின் வாழ்வியல் உணர்ந்தான்; கம்பனின் விருத்தத்திலும், கபிலனின் குறிஞ்சியிலும், அப்பரின் ஆன்மிகத்திலும், திருஞானசம்பந்தனின் மெய்சிலிர்ப்பிலும், இளங்கோவடிகளின் அறச்சீற்றத்திலும், கலிங்கத்துப்பரணியின் களியாட்டத்திலும், குற்றாலக்குறவஞ்சியின் குரங்காட்டத்திலும், அருணகிரிநாதரின் சந்தத்திலும், சித்தர் பாடல்களின் கோபத்திலும், முங்கி முக்குளித்தான்.

காஞ்சி இலக்கிய வட்டம் மூலமாகவும், இவன் தந்தை மூலமாகவும் ஏற்கெனவே நவீன இலக்கிய எழுத்துகள் இவனுக்குப் பரிச்சயம் ஆகியிருந்தன. இப்போது சங்க இலக்கிய நதியிலும் நீந்தத் தொடங்கினான். இப்படித்தான் இந்த மரம் தன் ஆழத்து வேர்களையும், ஆகாயத்தை உரசும் கிளைகளையும் அறிந்துகொண்டு பூப்பூக்கத் தொடங்கியது.

ஒரு மாணவன் வேதியியல் படித்தால், அந்தப் பாடப் புத்தகம் வேதியியலை மட்டும்தான் கற்றுத் தரும். இப்படித் தான் கணிதமும், இயற்பியலும், கணிப்பொறியும், பொறியியலும், மருத்துவமும் அந்தந்தத் துறையைச் சார்ந்த அறிவை மட்டுமே வளர்க்கும். ஆனால், இலக்கியம் மட்டுமே வாழ்க்கையைச் சொல்லிக்கொடுக்கும். சகமனிதர்கள் மீதான மனித நேயத்தை, தோல்விகளைத் துரத்தும் தன்னம்பிக்கையை, புல் நுனியில் தூங்கும் பனித்துளியின் அழகியலை வேறு எந்தப் பாடம் சொல்லிக்கொடுக்கும்? இவன் கண்ணீர் மல்கி கசிந்துருகிக் காதலித்துத் தமிழ் கற்றான்.

Join / Telegram : @Tamil_Books_Library

*பச்சையப்பன் கல்லூரியைப் பற்றி நினைக்கும்போது அதன் நூலகம் இவன் கண் முன் வருகிறது. அந்துப் பூச்சிகளுக்கு விடுதலை அளித்து இவன் நூற்றுக்கணக்கான புத்தகங்களை அங்கு தேடித் தேடிப் படித்தான். இவன் கல்லூரியில் சேர்ந்த அடுத்த மாதம் நாவலர் போட்டிக்கான அறிவிப்பு, நோட்டிஸ் போர்டில் ஒட்டப்பட்டது. அப்போது சென்னையில் அனைத்துக் கல்லூரிகளுக்கான கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டி... எனப் பல்வேறு கல்லூரிகளில் போட்டிகள் நடக்கும். ஒரு கல்லூரியில் இருந்து இரண்டு மாணவர்கள் மட்டுமே அதில் பங்கேற்க முடியும். அந்த இரண்டு பேரைத் தேர்ந்தெடுப்பதற்காக பச்சையப்பன் கல்லூரியில் 'நாவலர் போட்டி' என்று ஒன்றை நடத்துவார்கள். போட்டிக்கு அரை மணி நேரம் முன்பு ஏதோவொரு தலைப்பு கொடுத்து கவிதையோ, பேச்சோ, ஓவியமோ, அந்தந்தத் துறையில் இரண்டு பேரைத் தேர்ந்தெடுப்பார்கள். இவன் கவிதைப் போட்டிக்குத் தன் பெயரைப் பதிவுசெய்து விட்டு 'என்ன தலைப்பு கொடுப்பார்கள்?' என்ற பதற்றத்துடன் காத்திருக்கத் தொடங்கினான்.*

Join / Telegram : @Tamil_Books_Library

22

# பச்சையப்பனில் இருந்து ஒரு தமிழ் வணக்கம்

“உனக்கு ஒன்றும் தெரியாது என்று தெரிந்துகொள்வதுதான் உண்மையான ஞானம்!”

-சாக்ரடீஸ்

**ப**ச்சையப்பன் கல்லூரியில் நாவலர் தேர்வுக்கான கவிதைப் போட்டிக்கு இவனுக்குக் கொடுக்கப்பட்டிருந்த தலைப்பு ‘சுதந்திரம்’. நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்ட அந்தப் போட்டியில், 63-வது ஆளாக இவன் கவிதை படிக்க வேண்டும். ஒவ்வொருவரும் பக்கம் பக்கமாக மேடையில் ஏறி கவிதை வாசித்துக்கொண்டிருக்க, அளவுக்கு மீறிய அமிர்தமாக அந்த அரங்கம் நஞ்சானது. மேலும் சிலர், படித்த வரிகளையே மூன்று முறை திரும்பத் திரும்பப் படித்து, பார்வையாளர்களைத் தாலாட்டிக்கொண்டிருந்தனர். மதியம் 2 மணிக்கு இவன் முறை வந்து, இவன் பெயரை அழைத்ததும், மேடையில் ஏறி,


புறாக்கள் வளர்க்கும் எதிர்வீட்டுக்காரன்

என்னிடம் இருந்து பறிக்கிறான்

பூனை வளர்க்கும் சுதந்திரம்.

என்று மூன்று வரிக் கவிதையை இவன் படித்துவிட்டுக் கீழே இறங்கியபோது, கைதட்டல்கள் அடங்க வெகுநேரம் பிடித்தது. போட்டி

Join / Telegram : @Tamil_Books_Library



Join / Telegram : @Tamil_Books_Library

முடிவுக்காகக் காத்திருக்காமல், விடுதியில் தங்கியிருந்த நண்பனின் அறைக்குச் சென்று உறங்கிவிட்டான். மூன்றரை மணிவாக்கில், வகுப்புத் தோழன் சேகர் வந்து இவனை எழுப்பி, "'டேய்... இன்னிக்கு நடந்த கவிதைப் போட்டியில் உனக்குத்தான்டா முதல் பரிசு. நீ கல்லூரி நாவலர் ஆயிட்ட..." என்று சொன்னதும் இவன் ஆச்சரியப் பட்டுப்போனான்.

பக்கம் பக்கமாகக் கவிதை படித்தவர்கள் மத்தியில், மூன்றே வரிகள் படித்த இவனைத் தேர்ந்தெடுத்த நடுவர்களுக்கு மானசீகமாக நன்றி சொன்னான். அந்தச் சம்பவம்தான் இவனுக்குச் சுருங்கச் சொல்லும் வித்தையைக் கற்றுத்தந்தது.

இவனைப் போலவே, பேச்சுப் போட்டியில் முதல் பரிசு பெற்றான் அபிவை சரவணன். அவன் கரந்தை தமிழ்ச் சங்கத்தில் முதுகலைத் தமிழ் இலக்கியம் படித்துவிட்டு பச்சையப்பனில் எம்.ஃபில்., படித்துக்கொண்டிருந்தான். டிரஸ்ட்புரத்தில் இருந்த அவனது அறையில், இருவரும் சிகரெட்டும் தேநீருமாக பல இரவு-பகல்களை இலக்கியம் பேசி வழியனுப்பி இருக்கிறார்கள். சரவணின் ஊர் கும்பகோணத்துக்குப் பக்கத்தில் இருக்கும் அபிவிருத்தீஸ்வரம். கல்லூரி விடுமுறை காலத்தில் அவன் ஊருக்கு இவன் சென்றிருக்கிறான். ஊரை ஒட்டி ஓடும் வெட்டாற்றங்கரையில் அமர்ந்து இருவரும் பேசிக்கொண்டிருக்கும்போது வீட்டில் இருந்து சாப்பாடு எடுத்துக்கொண்டு சரவணனின் தம்பி வருவான். அவன் அப்போது ஒன்பதாவதோ பத்தாவதோ படித்துக்கொண்டிருந்தான். பின்னாட்களில், "அண்ணே.. நான் எழுதின கவிதையைப் படிச்சுப் பாருங்கண்ணே" என்று சென்னையில் இவனது அறைக்கு அந்தத் தம்பி வந்தபோது, அவனுக்கு மீசை முளைத்து இருந்தது.

"ரொம்ப நல்லாயிருக்கு தம்பி" என்று உற்சாகப்படுத்தினான். அந்தத் தம்பி ராஜூமுருகன், பின்னர் ஆனந்த விகடனில் நிருபராகி, அதே ஆனந்த விகடனில் 'வட்டியும் முதலும்' தொடர் எழுதி, இன்று 'குக்கூ' என்ற திரைப்படத்தை இயக்கியதைப் பார்த்து இவன் பேருவுவகை கொள்கிறான்!

பச்சையப்பன் கல்லூரியில் படித்த நாட்கள் இவனைப் பட்டை தீட்டின. வகுப்பறைக்கு வெளியே அந்தக் கல்லூரி நிறையச் சொல்லிக்கொடுத்தது. மரத்தடியிலும் கேன்டீனிலும் சந்தித்து அறிமுகமான பிற துறை மாணவர்கள், இவனுக்கு மாநகரத்தின் சேரிப்புரத்துக் கானா பாடல்களை அறிமுகப் படுத்தினார்கள். எளிய ஏழை மக்கள் தங்கள் வாழ்க்கையை விமர்சனத்தோடு கொண்டாடும் பாடல்கள் அவை.

Join / Telegram : @Tamil_Books_Library

*பச்சை மிளகா பழுத்துவிட்டா*

*இனிப்பா இருக்குமா?*

*ரெண்டு காலிருந்தும் சிட்டுக்குருவி*

*நடக்க முடியுமா?*

*நெருப்பு மேலே நடக்கறாங்க*

*படுக்க முடியுமா?*

*-என்று வியாசர்பாடி நண்பன் பாட,*

*நாங்க தினந்தோறும் ரிக்ஷா ஓட்டி*

*பிழைக்கிறோம்*

*பட்ட சாராயத்துக்குப் பெடலுக் கட்டையை*

*மிதிக்கிறோம்*

*-என்று பேசின்பிரிட்ஜ் நண்பன் மறு குரல் எடுப்பான். இப்படித்தான் தோழர்களே, இவன் அடித்தட்டு மக்களின் வாழ்க்கையையும் வலிகளையும் அந்த வரிகளின் ஊடாக அறிந்துகொண்டான்.*

*கல்லூரி நாவலர் ஆனதும் இவன் அனைத்துக் கல்லூரிப் போட்டிகளில் கலந்துகொள்ள ஆரம்பித்தான். ஆஹா... அந்தக் காலம்! லா.ச.ரா-வின் மொழியில் சொல்வதென்றால் கட்டிய வெள்ளி மணிகளின் கிண்கிணியோடு, இவனுக்குள் ஒரு சிற்பக் கதவு மெள்ளத் திறந்த காலம் அது. லயோலா கல்லூரி, கிறிஸ்துவக் கல்லூரி, நியூ காலேஜ், எத்திராஜ், ஸ்டெல்லா மாரீஸ், க்யூ.எம்.சி, எம்.ஐ.இ.டி, ஐ.ஐ.டி, அண்ணா யுனிவர்சிட்டி... என எத்தனையோ மேடைகள். எல்லாக் கல்லூரிக் கவிதைப் போட்டிகளிலும் முதல் பரிசுக் கோப்பையில் இவன் பெயர் பொறிக்கப்பட்டிருந்தது.*

*எல்லாக் கவிதைப் போட்டிகளிலும், அரை மணி நேரத்துக்கு முன்புதான் தலைப்பு கொடுப்பார்கள். அந்தந்தக் கல்லூரியின் மரத்தடியிலோ, மைதானத்திலோ அமர்ந்து போட்டிக்கான கவிதையை எழுதுவான். இந்த மாதிரியான கவிதைப் போட்டிகளில், பார்வையாளராக, போட்டிக்கு வந்திருக்கும் சக மாணவர்கள்தான் இருப்பார்கள். கை தட்டி உற்சாகப்படுத்தினால் நடுவர்கள் அந்தக் கவிதைக்கு அதிக மதிப்பெண்கள் அளித்துவிடுவார்கள் என்பதால், யார் நல்ல வரிகளைப் படித்தாலும் கைதட்டலே கிடைக்காது. காட்டில் பூத்த பூ போல யாராலும் ரசிக்கப்படாமல் அப்படி நிறையக் கவிதைகள்*

Join / Telegram : @Tamil_Books_Library

அரங்கில் உதிர்ந்துகிடக்கும். இவனும் இவனது நண்பர்களும் அந்த இலக்கணத்தை உடைத்தார்கள். எல்லா நல்ல கவிதைக்கும் கைதட்டுவோம். 'தகுதியானது வெல்லட்டும்' என்ற புரிதலை சக போட்டியாளருக்கும் தொற்றவைத்தார்கள்.

இன்றைக்கு இவன் ஓர் இயக்குநர் கதைக்கான சூழலைச் சொன்னதும் அடுத்த நொடியே பாடல் எழுதத் தொடங்குகிறான் என்றால், அன்று அந்தப் போட்டிகளில் எடுத்த பயிற்சிதான் காரணம். இதுதான் தொடர்ந்து 10 ஆண்டுகளாக அதிகப் படங்களில் அதிகப் பாடல்களை எழுதும் பாடலாசிரியராக இவனை முன் நகர்த்தி வந்திருக்கிறது.

பொதுவாக இந்த மாதிரி கவிதை, பேச்சுப் போட்டிகளில் பங்கேற்பவர்கள், 'தாயே தமிழே வணக்கம்' என்று தமிழ்த் தாயை வாழத்தியோ, அல்லது பாரதியார், பாரதிதாசன் பாடலைச் சொல்லியோ, தங்கள் கவிதையையோ, உரையையோ ஆரம்பிப்பார்கள். இவன் அந்தச் சம்பிரதாயங்களை உடைத்து, மேடைக்கு வந்ததும் 'பச்சையப்பன் கல்லூரியில் இருந்து ஒரு தமிழ் வணக்கம்' என்று சொல்லி விட்டு, நேரடியாகக் கவிதைக்குள் வந்துவிடுவான். நாளடைவில் அது கல்லூரி மாணவர்களிடம் பிரபலமாகி, இவன் மேடைக்கு வந்து நின்றாலே, அரங்கத்தில் இருந்து 'பச்சையப்பன் கல்லூரியில் இருந்து ஒரு தமிழ் வணக்கம்' என்று மாணவர்கள் குரல் எழுப்புவார்கள். பின்னாட்களில் அந்தக் கவிதைகளைத் தொகுத்து புத்தகமாக வெளியிட்ட போது, இவன் வைத்த தலைப்பு 'பச்சையப்பன் கல்லூரியில் இருந்து ஒரு தமிழ் வணக்கம்'!



Join / Telegram : @Tamil_Books_Library

இவன் உதிரத்தில் வெப்பமும், கோபமும், கனவுகளும் ஓடிக்கொண்டிருந்த காலம் அது. அந்த மெய்ப்பாடுகள் எல்லாம் இவன் கவிதைகளில் வெளிப்பட்டன. அனைத்திந்திய வங்கித் தொழிலாளர்கள் சங்கம், கல்லூரி மாணவர்களுக்காக சென்னையில் நடத்திய கவிதைப் போட்டியில்,

மாபெரும் அறைகூவலுக்குப் பின்
உலகத் தொழிலாளர்கள்
ஒன்று சேர்ந்தார்கள்!

லெனின் சொன்னான்
“என்னை மன்னித்துவிடுங்கள்!
உங்களுக்கு முன்பாகவே
முதலாளிகள் ஒன்று சேர்ந்துவிட்டார்கள்”

-என்றும்

யார் சொன்னது?
பின்னி ஆலையை மூடிவிட்டார்கள் என்று?
இப்போதும் பின்னி ஆலையில்
நூல் நூற்கும் பணி
நடந்துகொண்டுதான் இருக்கிறது!
சின்ன வித்தியாசம்
நூல் நூற்பது தொழிலாளிகள் அல்ல
சிலந்திகள்!

என்றும் இவன் கவிதை படித்தபோது, ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் எழுந்து நின்று கை தட்டினார்கள். அன்று கேட்ட அந்தக் கை தட்டலின் ஒலிகள்தான் இன்று இவனை ஓடவைத்துக்கொண்டிருக்கின்றன.

‘சொல் புதிது. பொருள் புதிது. ஜோதி மிக்க நவ கவிதை’ என்ற பாரதியாரின் கூற்றுப்படி இவன் கவிதைகளின் வடிவமும் உத்திகளும் மாறிக்கொண்டே வந்தன.

Join / Telegram : @Tamil_Books_Library

*மாடி வீட்டு முட்டாள்*

*மழை வரும்போது*

*குடையை ஏன்*

*திருப்பிப் போட்டிருக்கிறான்?*

*-என்று டிஷ் ஆன்டெனாக்களைப் பற்றி நகைச்சுவையாகக் கவிதை எழுதிய அதே நேரத்தில்,*

*சோற்றுக்கு வரும் நாயிடம்*

*யார் போய்ச் சொல்வது?*

*வீடு மாற்றுவதை!*

*-என்று வாழ்வியலையும் பதிவுசெய்யக் கற்றுக்கொண்டான்.*

*இப்படிக் கவிதைகளும் கனவுகளுமாகத் திரிந்துகொண்டு இருந்தபோதுதான், இவன் வாழ்க்கையை மாற்றிப்போட்ட அந்தச் சம்பவம் நிகழ்ந்தது!*

Join / Telegram : @Tamil_Books_Library

23

# பௌர்ணமி காலம்

என்ன நடக்கிறது என்று தெரியவில்லை
என்ன நடக்கிறது என்று தெரிய வேண்டாம்
மேஜையில் விளிம்பு வரை ததும்பும்
தேநீர் கோப்பையைப்
பதனமாய் வைக்கிறேன்
நடனமாய் மாறியபடி

- கவிஞர் தேவதச்சன் 'இரண்டு சூரியன்' தொகுப்பில் இருந்து

ஞாயிற்றுக்கிழமைகளை இவன் எந்த வேலை இருந்தாலும் மகனுக்காக ஒதுக்கிவிடுவான். அப்படி ஒரு ஞாயிற்றுக் கிழமையில் மகனிடம் இவன் சொன்னான், “நான்தான் பிஸ்கட் பாய்".

மகன் கேட்டான், “ஏம்பா நீங்க பிஸ்கட் பாய்?”

“ஏன்னா... நான் வாசனையா இருப்பேன்.”

“அப்ப நான் யாருப்பா?”

“நீயா... ம்... நீ சாக்லேட் பாய்.”

“சூப்பர்ப்பா.”

“எங்கப்பா வந்து டைகர் பாய்.”

“எதுக்குப்பா தாத்தா மட்டும் டைகர் பாய்?”

“ஏன்னா, அவரு வீரமா இருப்பாரு.”

Join / Telegram : @Tamil_Books_Library

“அது சரி. உங்க அம்மா எந்த கேர்ள்னு சொல்லவே இல்லியே.''

“அதுவா... அவங்க வந்து ஃப்ரூட்டி கேர்ள். ஏன்னா ஸ்வீட்டாப் பேசுவாங்க.”

“அப்ப எங்கம்மா?” என்று மகன் கேட்க, இவன் மனைவியை ஒருமுறை திரும்பிப் பார்த்துவிட்டு, “உங்கம்மாவா? ம்... உங்கம்மா வந்து சில்லி கேர்ள்” என்றான்.

“சில்லி கேர்ள்னா என்னப்பா?” என்று மகன் கேட்க, “சில்லி கேர்ள்னா எப்பவுமே கோபமா, காரமா இருப்பாங்க” என்று இவன் பதில் சொன்னான்.

“உங்கம்மா மட்டும் ஃப்ரூட்டி கேர்ள், எங்கம்மா மட்டும் சில்லி கேர்ளா?” என்று மகன் தாவி வந்து கழுத்தைப் பிடித்துக் கேட்கவும், இவன் மூச்சுத் திணறியபடி “இல்லடா ராஜா, தெரியாம சொல்லிட்டேன்” என்றான்.

“அப்ப எங்கம்மாவை ஐஸ்க்ரீம் கேர்ள்னு சொல்லுங்க. அப்பத்தான் கைய எடுப்பேன்” என்று மகன் மிரட்டவும், “சரிடா உங்கம்மா ஐஸ்க்ரீம் கேர்ள்தான்” என்று இவன் ஒப்புக்கொண்டான். பின்பு கணிப்பொறியில் வீடியோ கேம்ஸ் விளையாடிவிட்டு, “அப்பா... ஏதாவது விடுகதை சொல்லுப்பா” என்று திரும்பி வந்தான்.

“எங்க வீட்டுக் கிணத்துல வெள்ளிக் கிண்ணம் மிதக்குது! அது என்ன?” என்று இவன் கேட்டதும்,


“என்னப்பா அது? என்றான் மகன்.”

“நிலாடா” என்றான்.

“அது எப்பிடிப்பா கிணத்துல மிதக்கும்,” என்று மகன் ஆச்சரியப்பட,

“அடுத்த வாரம் காஞ்சிபுரம் போகும்போது நேர்ல காட்டுறேன்” என்று அப்போதைக்கு சமாதானப்படுத்தினான். கிணறே இல்லாத மாநகரத்தில் நிலவின் பிம்பத்துக்கு இவன் எங்கே போவான்?

Join / Telegram : @Tamil_Books_Library



அடுத்த வாரம் மகன் ஞாபகப்படுத்தி மீண்டும் கேட்க, இவன்

Join / Telegram : @Tamil_Books_Library

காஞ்சிபுரத்தின் கிராமத்து வீட்டுக்கு அழைத்துச் சென்றான். பூர்வீக வீட்டின் கிணற்றடியில் நிலா மேலே வந்து தண்ணீரில் மிதக்கும் வரை அப்பனும் பிள்ளையும் காத்திருந்தார்கள். நிலா வந்ததும் கிணற்றில் மிதக்கும் வெள்ளிக்கிண்ணத்தை மகனுக்குக் காட்டினான். மகனை உறங்கவைத்துவிட்டு மீண்டும் கிணற்றடிக்கு வந்து, நிலவின் பிம்பத்தையே பார்த்துக் கொண்டிருந்தான்.

இவன் மகனும் இவனும் நிலவின் பிம்பத்தை எட்டிப்பார்த்த அதே கிணற்றை, இவன் தகப்பனும் இவனும் 30 வருடங்களுக்கு முன்பு எட்டிப் பார்த்திருக்கிறார்கள்.

வருடத்துக்கு ஒருமுறை அந்தக் கிணற்றில் தூர் வாருவதற்காகப் படிக்கட்டுகளில் கால் வைத்து, இவன் அப்பா உள்ளே குதித்து பெரும் பெரும் ஆச்சரியங்களை கயிற்றில் தொங்கும் வாளியின் மூலமாக இவனுக்குச் சேற்று சகதியுடன் வெளியே அனுப்பிவைப்பார். கிராமத்தில் மட்டுமல்ல, இன்னும் நகரத்தில் அந்நிய ஆள் வீட்டுக்குள் வந்தால், பெண்கள் கதவுக்குப் பின்னிருந்தே பேசுவதை இவன் கவனித்து இருக்கிறான். இரண்டையும் இணைத்து 'தூர்' என்றொரு கவிதை எழுதினான்.

அந்தக் கவிதை...

தூர்

வேப்பம் பூ மிதக்கும்
எங்கள் வீட்டு கிணற்றில்
தூர் வாரும் உற்சவம்
வருடத்துக்கு ஒரு முறை
விசேஷமாக நடக்கும்

ஆழ் நீருக்குள்
அப்பா முங்க முங்க
அதிசயங்கள் மேலே வரும்.

கொட்டாங்குச்சி, கோலி, கரண்டி
துருப்பிடித்தக் கட்டையோடு உள் விழுந்த
ராட்டினம்,
வேலைக்காரி திருடியதாய்

Join / Telegram : @Tamil_Books_Library

*சந்தேகப்பட்ட வெள்ளி டம்ளர்,*
*சேற்றுக்குள் கிளறி*
*எடுப்போம் நிறையவே!*

*'சேறுடா சேறுடா' வென*
*அம்மா அதட்டுவாள்*
*என்றாலும்*
*சந்தோஷம் கலைக்க*
*யாருக்கு மனம் வரும்?*

*படை வென்ற வீரனாய்*
*தலைநீர் சொட்டச் சொட்ட*
*அப்பா மேலே வருவார்.*

*இன்று வரை அம்மா*
*கதவுக்குப் பின்னிருந்துதான்*
*அப்பாவோடு பேசுகிறாள்.*

*கடைசி வரை அப்பாவும்*
*மறந்தேபோனார்*
*மனசுக்குள் தூர் எடுக்க.*

*மேற்கண்ட கவிதையை பச்சையப்பன் கல்லூரி நாட்களில் கணையாழி பத்திரிகைக்கு அனுப்பிவிட்டு வகுப்புக்குச் சென்றிருந்தான். அடுத்த மாத கணையாழி இதழில் அந்தக் கவிதை வெளிவந்திருந்தது. அது கணையாழியின் 33-வது ஆண்டு மலர். 'கணையாழி தசரா அறக்கட்டளை' என்ற அமைப்பிடம் கைமாறிய இதழ் அது. முனைவர் மா. ராஜேந்திரன் ஆசிரியர் பொறுப்பை ஏற்றிருந்தார். அந்த ஆண்டு மலரை, சென்னை ராணி சீதை மன்றத்தில் ஒரு விழா எடுத்து வெளியிட தீர்மானித்து இருந்தார்கள். அதற்கான அழைப்பிதழ் இவன் முகவரிக்கும் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.*

***அ**ன்று காலையில் இருந்தே இவனுக்குக் காய்ச்சல் கொதித்துக்கொண்டிருந்தது. ஆனாலும் கணையாழி விழாவுக்குப் போக ஆசைப்பட்டான். தட்டுத்தடுமாறி எழுந்து, விழாவுக்குச் சென்று, எட்டாவது வரிசையில் ஏதோ ஓர் இருக்கையில் அமர்ந்தான்.*

Join / Telegram : @Tamil_Books_Library

எழுத்தாளர்கள் ஜெயகாந்தன், அசோகமித்திரன், இந்திரா பார்த்தசாரதி, கி.கஸ்தூரிரங்கன், சுஜாதா, இன்குலாப், பாரதி கிருஷ்ணகுமார், கமல்ஹாசன் ஆகியோர் கலந்துகொள்ள விழா தொடங்கியது.

விழாவில் எழுத்தாளர் சுஜாதா பேசும்போது "கணையாழி இதழ்ல வர்ற கவிதைகளை, கடந்த 10 வருஷமா நான்தான் தேர்ந்தெடுத்துட்டு வர்றேன். இதை ஒரு சுகமான சுமையா ஏத்துக்கிட்டு செய்யறேன். தமிழ்க் கவிதைகளின் அடுத்தடுத்தக் கட்ட வளர்ச்சிகளைத் தெரிஞ்சுக்க இது எனக்கு உதவியா இருக்கு. இந்தக் கணையாழி இதழ்லகூட ஒரு கவிதை வந்திருக்கு. தமிழில் வெளிவந்த ஆகச்சிறந்த 25 கவிதைகளைப் பட்டியலிடச் சொன்னால், நிச்சயம் இந்தக் கவிதையை அதில் நான் சேர்ப்பேன்!" என்று சொல்லத் தொடங்க, இவன் யாரோ ஒருவரின் கவிதையைப் படிக்கப்போகிறார் என்று காய்ச்சலின் சோர்வுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

"அந்தக் கவிதையைக் கணையாழி வாசகர்களுக்குப் படித்துக்காட்ட விரும்புகிறேன்" என்று சுஜாதா தொடர்ந்ததும், இவன் நிமிர்ந்து உட்கார்ந்தான். அந்த நொடியில்தான் இவன் வாழ்க்கையை மாற்றிப்போட்ட சம்பவம் நிகழ்ந்தது. சுஜாதா இவனது 'தூர்' கவிதையை வாசிக்க ஆரம்பித்தார். வாசித்து முடித்ததும் அரங்கம் கை தட்டல்களால் அதிர்ந்தது. சுஜாதா மேலும் உற்சாகமாகி "கணையாழி, யார் எழுதுறாங்க? எந்த ஊரு... அப்படியெல்லாம் பார்த்து கவிதைகளைத் தேர்ந்தெடுப்பது இல்லை. பிரபலம், அறிமுக எழுத்தாளர் என்ற வேறுபாடு கணையாழிக்குக் கிடையாது. படைப்பின் தரம்தான் முக்கியம். இந்தக் கவிதையை முத்துக்குமார்னு ஒரு கவிஞர் எழுதியிருக்காரு. இவரு யாரு எங்க இருக்காருனுகூட எனக்குத் தெரியாது" என்று சொல்ல, விழா முடிந்ததும் அவரைத் தனியே சந்தித்து 'அந்தக் கவிதையை எழுதினது நான்தான்' என்று அறிமுகப்படுத்திக்கொள்ள விரும்பிய இவன், பார்வையாளர் வரிசையில் இருந்து கையை உயர்த்தினான். அதைக் கவனித்த சுஜாதா, "நீங்களா இந்தக் கவிதையை எழுதினது?" என்றார். இவன் 'ஆமாம்' என்றபடி தலையாட்டினான். சுஜாதா மேலும் பரவசமாகி "கை தட்டுங்கள் இந்தக் கவிஞனுக்கு!" என்று குதூகலித்தார். அரங்கம் மீண்டும் அதிர்ந்தது. அப்போதுதான் அந்த அதிசயம் நிகழ்ந்தது.

முன் வரிசையில் அமர்ந்திருந்த கோட் சூட் போட்டிருந்த ஒருவர், மேடைக்குச் சென்று சுஜாதாவின் காதுகளில் ஏதோ கிசுகிசுக்க, சுஜாதா உணர்ச்சிவசப்பட்டு, "இந்தக் கவிதை எழுதிய முத்துக்குமாருக்கு இவர் 1000 ருபாய் கொடுக்கிறார். வாங்க முத்துக்குமார்! வந்து வாங்கிக்கங்க!" என்று இவனை அழைக்க, இவன் மேடை ஏறினான். பெயர் தெரியாத அந்த அன்பர், இவன் கையில் 50 ருபாய் நோட்டுகள் 20 கொடுத்தார். இவன் அந்த நோட்டுகளை எண்ண ஆரம்பித்தான்.

Join / Telegram : @Tamil_Books_Library



'அன்பளிப்பாகக் கொடுத்தப் பணத்தை எண்ணுகிறானே!' என்று அரங்கம் அதிர்ச்சியானது. அதிலிருந்து தனியே 500 ரூபாயைப் பிரித்தெடுத்து, மைக் முன் சென்று "நான் கனையாழியோட வளர்ச்சி நிதிக்காக இந்த 500 ரூபாயை நன்கொடையாகக் கொடுக்கிறேன்" என்று அறிவித்தபோது, பார்வையாளர்கள் எழுந்து நின்று கை தட்டினார்கள். இவன் எழுத்தாளர் சுஜாதாவை நன்றியுடன் பார்த்தான். அவர், இவனை ஆரத் தழுவிக்கொண்டார்!

Join / Telegram : @Tamil_Books_Library

24

# பசித்த புலியின் வேகம்

*மனம் நினைவுகூரும்*

*அந்த முள் பிசகாத நிமிஷத்தில்*

*கவிதை பிறக்கிறது.*

*இது சிருஷ்டி ரகசியம்!*

*- நகுலன்*

*('நினைவுப் பாதை' நாவலிலிருந்து...)*

எழுத்தாளர் சுஜாதா இவன் மேல் திருப்பிவிட்டிருந்த புகழின் வெளிச்சம் தாங்காமல் இவன் திக்குமுக்காடினான்.

பச்சையப்பன் கல்லூரிக்குள் நுழையும்போதே, தமிழ்த் துறைப் பேராசிரியர்கள் இவனைச் சூழ்ந்துகொண்டு வாழ்த்து தெரிவித்தார்கள். தத்துவத் துறைப் பேராசிரியர் பெரியார்தாசன், இவன் வகுப்புக்கே தேடி வந்து வாழ்த்து சொன்னபோது இவன் அவரிடம், “சார்... உங்க பையன் வளவனும் நானும் ஒண்ணா கவிதைப் போட்டியில் கலந்துப்போம்” என்றான்.

“அப்படியா! அவன் கவிதையெல்லாம் எழுதுவானா?!” என்று ஆச்சரியப்பட்டார்.

இந்தக் காலகட்டங்களில் இவன் காற்றில் மிதக்கும் பறவையின் இறகைப்போல திரிந்துகொண்டே இருந்தான். அப்படி இவன் இறகு, சென்னை தி.நகரில் இருந்த 73, அபிபுல்லா சாலையில் தரையிறங்கியது. அது, அண்ணன் அறிவுமதியின் அலுவலகம். அப்போது அவர் ‘உள்ளேன் ஐயா’ என்ற படத்தைத் தொடங்கிவிட்டு, கலைப்புலி எஸ்.தாணுவின் ‘சிறைச்சாலை’ படத்துக்கு வசனமும் பாடல்களும்

Join / Telegram : @Tamil_Books_Library

எழுதிக்கொண்டிருந்தார். ஏற்கெனவே அவர், இவனுக்கு காஞ்சிபுரம் இலக்கிய வட்டம் மூலம் அறிமுகமாகி இருந்ததால், அண்ணனின் அரவணைப்புக்குள் அடைக்கலமானான்.

அறிவுமதி அண்ணன், இவனுக்கு ஆண் தாயானார். 73, அபிபுல்லா சாலை, இவனுக்கு பல்வேறு முகவரிகளைத் திறந்துவைத்தது. அந்த ராஜபாட்டையில் அறிவுமதி அண்ணனின் கைபிடித்து நடந்துபோனான்.

“நீ இயல்பாவே நல்ல கவிஞன். பாடல்கள் எழுதப் பயிற்சி எடுத்துக்கோ. அது உனக்குச் சுலபமா கை வரும்” என்று அறிவுமதி அண்ணன் ஆசை காட்ட, இவன் விளையாட்டாக எழுத ஆரம்பித்து, புலி வாலைப் பிடித்த கதையாக இன்று வரை தொடர்ந்துகொண்டிருக்கிறான். பசித்த புலி ஒன்றின் வேகத்தோடு இவன் திரிந்த காலங்கள் அவை.

அறிவுமதி அண்ணனின் அலுவலகத்திலேயே ‘உள்ளேன் ஐயா’ படத்தின் இசையமைப்பாளர் சாந்தகுமாரும் தங்கியிருந்தார். தினமும் ஐந்து, ஆறு மெட்டுகளை அவர் போட்டுவைத்திருக்க, கல்லூரி முடிந்து மாலை வேளைகளில் இவன் அவரது மெட்டுகளுக்குப் பாடல் எழுதிக் கொடுப்பான். மெலடி மெட்டுகளுக்கு எத்தகைய வார்த்தைகளைப் பயன்படுத்த வேண்டும், துள்ளிசை மெட்டுகளுக்கு எப்படிப்பட்ட வார்த்தைகளைப் பயன்படுத்த வேண்டும், மரபுக் கவிதைக்கும் திரையிசைப் பாடல்களுக்கும் உள்ள வித்தியாசங்கள் என்னென்ன... என்று சாந்தகுமார் அண்ணனும், அறிவுமதி அண்ணனும் இவனுக்குப் புரியவைத்தார்கள். இப்படி முதல் பாடல் எழுதி திரையில் வெளிவருவதற்கு முன்பாகவே, இவன் 3,000-க்கும் மேற்பட்ட அவரது மெட்டுகளுக்கு பாடல்கள் எழுதிப் பயிற்சி பெற்றான்.

அறிவுமதி அண்ணனின் அலுவலகம், கவிதைப் பறவைகளின் வேடந்தாங்கல். அங்குதான் இவன் நேசித்த பல கவிஞர்களையும் எழுத்தாளர்களையும் சந்தித்தான். அவர்களில் முக்கியமானவர், கவிஞர், கலை இலக்கிய விமர்சகர் இந்திரன்.

கவிஞர் இந்திரன் கோடம்பாக்கத்தில் குடியிருந்தார். வங்கிப் பணி முடிந்து அவர் மாலை வீட்டுக்கு வருகையில், இவன் அன்று எழுதிய புத்தம்புதுக் கவிதையுடன் வாசலில் காத்திருப்பான். அவரும் ஆர்வத்துடன் இவன் கவிதையைப் படித்துவிட்டு, அந்தக் கவிதை தமிழ்க் கவிதை வரலாற்றில் ஏன் புதியதாக இருக்கிறது அல்லது ஏன் பழையதாக இருக்கிறது என்று தர்க்கரீதியாக தன் விளக்கத்தை முன்வைப்பார்.

Join / Telegram : @Tamil_Books_Library


அறிவுமதி அண்ணன் இவனை கவியரங்கங்களுக்கு அறிமுகப்படுத்தினார். கவிக்கோ அப்துல் ரகுமான், கவிஞர் மு.மேத்தா, கவிஞர் இன்குலாப், கவிஞர் தணிகைச் செல்வன், கவிஞர் ஈரோடு தமிழன்பன், கவிஞர் சுரதா... என பல்வேறு கவிஞர்களின் தலைமையில் இவன் கவிதை படித்தான்.

ஒவ்வொரு கவிஞரிடம் இருந்தும் இவன் வெவ்வேறு வித்தைகளைக் கற்றான். கவிக்கோ அப்துல் ரகுமான், கஜல் கவிதைகளில் வித்தகர். 50 வருடங்களுக்கு முன்பு எழுதிய கவிதைகளைக்கூட பத்திரப்படுத்தி வைத்திருப்பார். கவிஞர் மு.மேத்தா எளிமையான அங்கதத்துடன் வரிகள் படைத்து கைதட்டல்களை பாக்கெட்டில் அடைத்துக் கொள்வார். கவிஞர் இன்குலாபும் தணிகைச் செல்வனும் இருக்கும் மேடைகளில் அனல் பறக்கும். ஈரோடு தமிழன்பனின் உச்சரிப்பும் உவமைகளும் ஒன்றுடன் ஒன்று போட்டி போடும். உவமைக் கவிஞர் சுரதாவை இவன் சந்தித்தது ஒரு பேருந்து பயணத்தில். அப்போது அவர் சென்னையில் இருந்த ஒவ்வொரு சிலைக்கும் கவியரங்கம் நடத்திக்கொண்டு இருந்தார். அவருடன் இணைந்து இவன் ஒவ்வொரு சிலையின் வரலாற்றையும் அறிந்துகொண்டு கவிதை படைத்தான்.

அப்போது சென்னை தாம்பரம் கிறிஸ்துவக் கல்லூரியில் 'வனம்' என்றோர் அமைப்பு, பேராசிரியர் பாலுச்சாமி என்கிற பாரதிபுத்திரன் தலைமையில் இயங்கிவருவது இவன் கவனத்துக்கு வந்தது. வெள்ளிக்கிழமைதோறும் மாலை 4 மணிக்கு பேராசிரியர் பாரதிபுத்திரன் தலைமையில், கிறிஸ்துவக் கல்லூரியில் படிக்கும் கவிதை எழுதும் மாணவர்களும், பேராசிரியர்களும், வெளியில் இருந்து வரும் கவிதை ஆர்வலர்களும், கிறிஸ்துவக் கல்லூரியின் மரங்கள் அடர்ந்த வனத்தில் வட்டமாக அமர்ந்து, தாங்கள் எழுதிய கவிதைகளை வாசிக்கும் நிகழ்வு அது.

'வனம்', இவன் கவிதைப் பார்வையை மேலும் விரிவு படுத்தியது. வாரம் தவறாமல், வெள்ளியன்று பச்சையப்பன் கல்லூரியில் இருந்து புறப்பட்டு வனத்தில் கலந்துகொள்வான். இவன் எழுதிய கவிதையை உரத்தக் குரலில் படித்துக் காட்டியதும், "முத்து... இப்படி ஒரு கவிதையைப் படிச்சிருக்காரு. இதைப் பத்தி நீங்க என்ன நினைக்கிறீங்க?" என்று பாரதிபுத்திரன் விமர்சனத்தை ஆரம்பித்துவைக்க, ஒவ்வொருவரும் தங்கள் கருத்தைச் சொல்வார்கள்.

Join / Telegram : @Tamil_Books_Library



அப்படி ஒரு வனத்தின் சந்திப்பில் இவன் ஒரு கவிதையைப் படித்தான். எல்லோரும் சிறப்பாக இருக்கிறது என்று கருத்துத் தெரிவிக்க, தாடி வைத்த ஓர் இளைஞன் மட்டும், “இந்தக் கவிதை எனக்குப் புடிக்கல’ என்று அதற்கான காரணங்களை விளக்கிக்கொண்டிருந்தான். அந்த இளைஞன் கிறிஸ்துவக் கல்லூரியில் தமிழ் இலக்கியம் படிக்கும் மாணவன் என்று இவன் பின்னர் அறிந்துகொண்டான்.

அடுத்த வார ‘வனம்’ சந்திப்பில், இவன் மீண்டும் ஒரு கவிதையைப் படித்தான்.

Join / Telegram : @Tamil_Books_Library

நான் ஏன் நல்லவனில்லை
என்பதற்கான
மூன்று குறிப்புகள்.

ஒன்று
நான் கவிதை எழுதுகிறேன்.
இரண்டு
அதைக் கிழிக்காமல் இருக்கிறேன்.
மூன்று
உங்களிடம் படிக்கக் கொடுக்கிறேன்!'

-என்று படித்து முடித்ததும், எல்லோரும் அமைதியாக இருந்தார்கள். ஒருசிலர் “இந்தக் கவிதை என்ன சொல்கிறது என்று புரியவில்லை” என்றார்கள்.



Join / Telegram : @Tamil_Books_Library

அப்போது இவன் சென்ற வாரம் பார்த்த தாடி வைத்த இளைஞன் பேசத் தொடங்கினான். "இந்தக் கவிதை தமிழில் எழுதப்பட்ட ஆகச் சிறந்த கவிதைகளில் ஒன்று" என்று அதற்கான விளக்கத்தை அவன் விளக்கிக்கொண்டிருந்தான்.

'வனம்' முடிந்ததும், இவன் அவனிடம் சென்று அறிமுகப்படுத்திக்கொண்டான். அந்த நண்பன், இவனை தன் விடுதி அறைக்கு அழைத்துச் சென்றான். இவனைப் போலவே அவனது அறையும் புத்தகங்களால் நிரம்பியிருப்பது கண்டு, இவனுக்கு அவன் மேல் மதிப்பு கூடியது.

அடுத்தடுத்த வனத்தின் சந்திப்புகளில், அந்த நட்பு வலுப்பெற்றது. வெள்ளி மாலை 'வனம்' முடிந்து, சனி... ஞாயிறு என அவன் அறையிலேயே இவன் தங்கத் தொடங்கினான். கவிதைகளும் ரஷ்ய இலக்கியமுமாகக் கழிந்த பொழுதுகள் அவை.

அவன் பின்னாட்களில் தங்கர் பச்சானிடமும், இந்தி இயக்குநர் ராஜ்குமார் சந்தோஷியிடமும், பாலு மகேந்திராவிடமும் பணியாற்றி, 'கற்றது தமிழ்', 'தங்க மீன்கள் என்று இரண்டு படைப்புகளை உலக சினிமாவுக்கு தமிழ் சினிமாவின் பங்களிப்பாக அளித்தான்.

அந்த நண்பன் 'ராமசுப்பு' என்று இவன் அன்போடு அழைக்கிற இயக்குநர் ராம்!

Join / Telegram : @Tamil_Books_Library

25

# துப்பறிந்த காலம்

*‘நீங்கள் இயக்கிய ‘சைக்கோ’ திரைப்படத்தில் இடம்பெற்ற பாத்ரூம் கொலைக் காட்சியைப் பார்த்த பிறகு, ஒரு மாதமாக என் மகள் குளிக்கவே இல்லை!’ என்று ஒரு தாய் என்னிடம் சொன்னாள். நான் அவளிடம் சொன்னேன், ‘தயவுசெய்து உங்கள் மகளை சலவைக்குப் போடுங்கள்’!*

*- ஹாலிவுட் இயக்குநர் ஆல்பர்ட் ஹிட்ச்காக்*

**க**ணையாழி பத்திரிகையின் அடுத்த இதழின் அட்டையிலேயே இவன் புகைப்படத்தை வெளியிட்டு, சுஜாதா, இவனுடைய ‘தூர்’ கவிதையைப் படித்த விழாவைப் பற்றிய கட்டுரை வந்திருந்தது. அந்த வாரத்தில் இவன் கல்லூரிக்குக் கிளம்பிக்கொண்டிருந்த ஒரு மழை நாள் (வெயில் நாளாகவும் இருக்கலாம்) காலையில், எழுத்தாளர் பட்டுக்கோட்டை பிரபாகர் இவனை தொலைபேசியில் அழைத்து வாழ்த்து தெரிவித்தார்.

‘பி.கே.பி.’ என்று வாசகர்களால் அழைக்கப்படும் பட்டுக்கோட்டை பிரபாகர் அவர்களை, ஏற்கெனவே இவன் நன்கு அறிவான். பட்டுக்கோட்டை பிரபாகரும் எழுத்தாளர்கள் சுபாவும் சேர்ந்து நடத்திய ‘உங்கள் ஜூனியர்’, ‘உல்லாச ஊஞ்சல்’ பத்திரிகைகளில் இவன் நிறைய கவிதைகள் எழுதியிருக்கிறான். அதுமட்டுமல்லாமல் அவர்கள் இணைந்து தயாரித்த தொலைக்காட்சி நாடகத்துக்கு அருண்மொழிதான் இயக்குநர். கே.வி.ஆனந்த் ஒளிப்பதிவு செய்த அந்தத் தொலைக்காட்சி நாடகத்துக்கு இவன் உதவி இயக்குநர். அதன் பணிகளுக்காகவும் இவன் அடிக்கடி அவருடன் பழக நேர்ந்தது.

Join / Telegram : @Tamil_Books_Library

பட்டுக்கோட்டை பிரபாகர் இவனிடம் தொலைபேசியில் கேட்டார், “‘உங்களைச் சந்திக்கணுமே முத்துக்குமார். வீட்டுக்கு வர முடியுமா?”

இவன் சந்தித்தான்.

“நான் ஒரு படம் டைரக்ட் பண்ணப்போறேன். என்கிட்ட அசிஸ்டென்டா சேர்றீங்களா?"

இவனுக்கு, கல்லூரி வகுப்பு நினைவுக்கு வந்தது. “நான் பச்சையப்பன் கல்லூரியில் எம்.ஏ., தமிழ் இலக்கியம் படிச்சிட்டு இருக்கேன் சார். அதான் யோசிக்கிறேன்” என்றான்.

“அதைப் பத்தி கவலைப்படாதீங்க. இப்பதான் பிள்ளையார் சுழி போட்டிருக்கேன். ஷூட்டிங் போக நிறைய டைம் இருக்கு. அதுவரைக்கும் கிளாஸ் போயிட்டு மதியத்துக்கு மேல டிஸ்கஷனுக்கு வந்தா போதும்” என்று பெருந்தன்மையுடன் சொன்னதும், வாழ்க்கை இவனை மீண்டும் இரண்டு குதிரைகளில் சவாரி செய்ய வைத்தது.

பி.கே.பி-யின் அலுவலகம் திருவான்மியூரில் இருந்தது. காலையில் கல்லூரி வகுப்புகளை முடித்துவிட்டு, அமைந்தகரையில் இருந்து சைக்கிளில் சைதாப்பேட்டை வழியாக திருவான்மியூர் செல்வான் இவன். இன்றுபோல் போக்குவரத்து நெரிசல் இல்லாத காலம் அது. இவன் எழுதிய பல கவிதைகள், இப்படியான சைக்கிள் தனிமையில்தான் பிறந்திருக்கின்றன.

பி.கே.பி., இயக்குநர் கே.பாக்யராஜ் அவர்களிடம் உதவி இயக்குநராக வேலை பார்த்தவர். பாக்யராஜ் சாரிடம் வேலை செய்த பவானி ரங்கராஜும், இவர்களுடன் கதை விவாதத்தில் கலந்துகொண்டார். ‘முந்தானை முடிச்சு’ திரைப்படத்தில் முருங்கைக்காய் காமெடி சீனில் வருவாரே அவர்தான் அந்த ரங்கராஜ். ‘சின்னவீடு’ திரைப்படத்தில் திரையரங்குக் காட்சியில், பாக்யராஜுக்கும் கல்பனாவுக்கும் நடுவில் இருந்த இருக்கையில் வந்து உட்கார்ந்தவரும் இவர்தான்.

பி.கே.பி.யும் ரங்கராஜும், பாக்யராஜிடம் கற்ற திரைக் கதையின் பால பாடங்களை இவனுக்குக் கற்றுத்தந்தார்கள். இயல்பாகவே இவன் நிறைய வாசிக்கும் பழக்கம் கொண்டவன் என்பதால், பி.கே.பி., அவர் எழுதிய ஆயிரத்துக்கும் மேற்பட்ட பாக்கெட் நாவல்களை இவனிடம் கொடுத்து ஒவ்வொரு நாவலையும் படித்துவிட்டு ஒரு பக்கத்துக்குள் ‘synopsis’ எனப்படும் கதைச் சுருக்கத்தை எழுதச் சொன்னார். ஒரு நாளைக்கு ஐந்து நாவல்கள் என்று இவன் எழுதித்தள்ளினான்.

ஒவ்வொரு நாவலும் ஒவ்வொரு விதம்; அநேகமாக எல்லா நாவல்களிலும் பரத்தும் சுசீலாவும் துப்பறிந்தார்கள். பி.கே.பி-க்கு,

Join / Telegram : @Tamil_Books_Library

எழுத்தாளர் சுஜாதாவைப் போல வசீகரமான மொழிநடையும், வார்த்தைச் சிக்கனமும் கைவந்திருந்ததால், வாசகர்கள் மத்தியில் சக்கைபோடு போட்ட நாவல்கள் அவை.


இவனது பள்ளிப் பருவத்தில் 'அன்னை நூலகம்' என்ற பெயரில், இவன் தந்தை வாடகை நூல் நிலையம் ஒன்றை காஞ்சிபுரத்தில் நடத்திக்கொண்டிருந்தார். அவர் ஆசிரியராக வேலை பார்த்ததால் மாலை நேரத்திலும், விடுமுறை நாளிலும் மட்டுமே நூலகம் இயங்கும். சனி, ஞாயிறுகளில் இவனும் அப்பாவும் அந்த வாரத்தில் வந்த வார, மாத இதழ்கள், பாக்கெட் நாவல்கள் போன்றவற்றை ஒயர் கூடையில் சுமந்தபடி சைக்கிளில் சென்று உறுப்பினர்களின் வீடுகளுக்கு டோர் டெலிவரி செய்வார்கள். சுஜாதாவும், பாலகுமாரனும், பி.கே.பி.யும் பரபரப்பாகப் படிக்கப்பட்ட காலம் அது.

எழுத்தாளர் ஜெயமோகன் ஒரு கட்டுரையில் எழுதியிருந்ததைப் போல, சுவாரஸ்யம் மிக்க வணிக எழுத்துக்களே வாசகர்களிடம் இன்றும் படிக்கும் ஆர்வத்தைத் தூண்டிக்கொண்டிருக்கின்றன. உயரங்களை நோக்கிச் செல்வதற்கும் ஏதோ ஓர் ஏணியின் முதல் படிக்கட்டு வேண்டி இருக்கிறது அல்லவா? நாம் எவ்வளவுதான் படித்தாலும் கரும்பச்சை சிலேட்டில் கைபிடித்து 'அ'னா 'ஆ'வன்னா எழுதச் சொல்லிக்கொடுத்த முதல் வகுப்பு ஆசிரியர்களை மறக்காததைப் போலத்தான் 'pulp fiction' எனப்படும் இந்த வகை எழுத்துக்களை இவன் பார்க்கிறான்.



Join / Telegram : @Tamil_Books_Library

கனவுகளின் தொடர் சங்கிலியின் ஒரு கண்ணியாக, சிறு வயதில் இவன் ஒரு துப்பறிவாளனாக மாற ஆசைப்பட்டான். அதற்குக் காரணம் இவன் பார்த்த 007 ஜேம்ஸ்பாண்ட் படங்களும், படித்த பாக்கெட் நாவல்களும்தான். இப்படித்தான் இவன் வடுவூர் துரைசாமி ஐயங்காருடன் துப்பறிந்தான். தமிழ்வாணனின் சங்கர்லாலைச் சந்தித்தான். தேவனின் சாம்புவுடன் உலா போனான். சுஜாதாவின் கணேஷ்-வசந்த் கை பிடித்தான். புஷ்பா தங்கதுரையின் சிங்குடன் சிநேகமானான். ராஜேஷ்குமாரின் விவேக், ரூபலாவின் ரசிகன் ஆனான். சுபாவின் நரேன், வைஜயந்தியின் வழித்தடங்களைத் தொடர்ந்தான். அந்த வாசிப்பு அனுபவம்தான் இவனை பரத்-சுசிலாவுடன் பி.கே.பி.யிடம் பணியாற்ற வைத்தது.




பி.கே.பி எழுதும் முறை அன்று இவனுக்கு வியப்பாகத் தெரிந்தாலும், அனுபவத்தால் அந்த லாகவம் இன்று இவனுக்கு வசப்பட்டு இருக்கிறது. கதை விவாதத்தில் பேசிக்கொண்டிருக்கும்போதே, "'நீங்க டிஸ்கஸ் பண்ணிட்டு இருங்க. விகடனுக்கு தொடர் அனுப்பணும். இன்னிக்குதான் டெட் லைன். அரை மணி நேரத்தில் வந்துடறேன்" என்று கூறிவிட்டு பி.கே.பி. எழுதத் தொடங்குவார். ஒவ்வொரு வாரத்திலும் இப்படி பல அரை மணி நேரங்களை இவன் சந்தித்திருக்கிறான்.

Join / Telegram : @Tamil_Books_Library

*சினிமா என்பது, ஏணிகளும் பாம்புகளும் அடுத்தடுத்து வரும் ஒரு ராட்சத பரமபதம். பி.கே.பி. எடுக்க நினைத்த அந்தப் படம், ஏதோ சில காரணங்களால் நின்றுபோனது. தொலைக்காட்சியில் மெகா தொடர் அறிமுகம் ஆன காலம் அது. தூர்தர்ஷனில் 'ஜுனூன்' எனும் இந்தி டு தமிழ் டப்பிங் தொடர், தமிழர்களின் உரையாடலை மாற்றியமைத்து வெற்றி நடை போட்டுக்கொண்டிருந்தது. இரண்டு தமிழர்கள் சந்தித்துக்கொண்டால், 'வாப்பா வந்துட்ட... அதுவும் காலைல. சாப்பிடலாம் காபி ரொம்ப சூடா...' என்றும், 'கூப்புடற நீ... அதுவும் அன்பா! சொல்ல மாட்டேன் நான் வரலேன்னு' என்றும் உரையாடிக்கொண்டார்கள். இப்படியாக செந்தமிழ், சங்கத் தமிழுக்குப் பிறகு, ஜுனூன் தமிழ் கோலோச்சியது.*

*ஜுனூன் தமிழைத் தாண்டி, ஜில்லாத் தமிழில் நெடுந் தொடர் தயாரிக்க யு டி.வி. நிறுவனம் முடிவெடுத்தது. அதற்கான கதை, திரைக்கதை, வசனம் எழுதும் பொறுப்பை பி.கே.பி. ஏற்று, பிள்ளையார்சுழி போட்டார். அந்தத் தொடரில் வரும் கதாபாத்திரங்களான ரவிராஜும் குமர குருவும், அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு இவன் கனவுகளில் வந்து துரத்தப்போகிறார்கள் என்று இவன் அன்று அறியவில்லை!*

Join / Telegram : @Tamil_Books_Library

26

# குட்டிப் புத்தரின் கேள்வி

*வாழ்க்கை, ஒரு மகாநதியைப் போல ஓடிக்கொண்டிருக்கிறது. நான் அதன் கரையில் நின்று, என் கண்ணுக்கு பட்டவற்றைச் சொல்லிக்கொண்டிருக்கிறேன்.*

*-எழுத்தாளர் வண்ணநிலவன்*

இதை எழுதிக்கொண்டிருந்தபோது இவன் மகன் இவனிடம் வந்து, "எப்ப பார்த்தாலும் என்னமோ எழுதிட்டே இருக்கீங்களேப்பா. அப்படி என்னதான் எழுதுறீங்க?" என்று கேட்க, இவன் அவன் தலையை அன்பாகக் கோதிவிட்டு, "அப்பா, என்னோட வாழ்க்கை வரலாறை எழுதிட்டு இருக்கேன்" என்றான்.

"புரியலப்பா. வாழ்க்கைன்னா என்னா? வரலாறுன்னா என்ன?" என்று மகன் கேட்கவும் இவன் உண்மையில் திடுக்கிட்டுப்போனான்.

என்ன பதில் சொல்வது? என்று இவன் திணறிக்கொண்டு இருக்கையில், எல்லாப் பிள்ளைகளையும் போலவே கேட்ட கேள்வியை மறந்துவிட்டு விளையாடப்போனான் மகன்.

கல் எறிந்த குளம் போல அலை அலையாக இவனுக்குள் சிந்தனை வட்டம் விரிந்துகொண்டே இருந்தது. உண்மையில், வாழ்க்கை என்பதுதான் என்ன? வரலாறு என்பதுதான் என்ன?


இருப்பதற்காக வருகிறோம்
இல்லாமல் போகிறோம்

-என்று எழுத்தாளர் நகுலன் சொன்னதுதான் வாழ்க்கையா?

Join / Telegram : @Tamil_Books_Library

அல்லது 'எவற்றின் நடமாடும் நிழல்கள் நாம்?' என்ற மௌனியின் குரல்தான் வாழ்க்கையா? அல்லது 'I think, therefore I am' என்று ஃபிரெஞ்சு பேரறிஞன் ரெனே டெஸ்கார்த்தே சொன்னதுதான் வாழ்க்கையா?

சட்டென்று 'சிறகில் இருந்து பிரிந்த இறகு ஒன்று, காற்றின் தீராத பக்கங்களில் ஒரு பறவையின் வாழ்வை எழுதிச் செல்கிறது' என்று ஈழத் தமிழ்க் கவிஞன் பிரமிள் எழுதியதும் நினைவுக்கு வந்தது.



"ஏய் இக்பால்! சாகும் வரை உன் பிணத்தை நீதான் சுமக்க வேண்டும்" என்ற உருதுக் கவிஞன் இக்பால் வரிகளில் மூழ்கி இவன் மேலும் குழம்பினான்.

வாழ்க்கையைப் பற்றி யோசிக்கும்போதே இப்படித் தடுமாறும்போது, வரலாற்றைப் பற்றி இவன் என்ன யோசிக்க?

இவன் என்ன வாழ்ந்தான்? இவனுக்கு என்ன வரலாறு? இதையெல்லாம் எழுதி இன்று ஆகப்போவது என்ன? என்னும் பல கேள்விகளை போல உறங்கிக்கொண்டிருந்தான். இவன் பேப்பரையும் பேனாவையும் ஒதுக்கிவிட்டு, கடவுளின் கால்களை அமுக்கப்போனான்.

"சார்... இந்த வார சேப்ட்டர் இன்னும் வரல. இப்ப அனுப்பினாத்தான் ஓவியம் வரைஞ்சு லே-அவுட் பண்ண வசதியா

Join / Telegram : @Tamil_Books_Library

இருக்கும்” என்று விகடன் நிருபரின் குரல் இடைவிடாது தொலைபேசியில் ஒலிக்க, இவன் மீண்டும் எழுதத் திரும்பினான்.



பி.கே.பி. கதை, திரைக்கதை, வசனம் எழுதிய ‘பரமபதம்’ என்ற அந்தத் தொடரை, நடிகை குட்டிபத்மினியின் அண்ணன் வெங்கடேஷ் சக்கரவர்த்தி இயக்கினார். நடிகர் சிவகுமார், முக்கியமான கதாபாத்திரம் ஏற்றிருந்தார். சினிமா தொடர்பான கதை அது. தினமும் அந்தத் தொடரின் கதாபாத்திரங்களான குமரகுரு, அவருக்கு வில்லத்தனம் செய்யும் ரவிராஜ் என்று யோசிப்பதிலேயே இவன் காலம் கழிந்தது.

மெகா தொடருக்கு கதை எழுதுவது, ராட்சஸ இயந்திரத்துக்குத் தீனி போடுவது போல. ஒவ்வொரு நாளும் புதுப்புதுக் கதாபாத்திரங்களை யோசிக்க வேண்டும். தொடர் முடிகையில் சஸ்பென்ஸில் நிறுத்த வேண்டும். பி.கே.பி., துப்பறியும் நாவல்களில் கரைகண்டிருந்ததால் அதைத் திறம்படச் செய்தார். அன்றைய நாளின் வேலையை எப்படிப் பிரித்துக்கொள்வது, அவற்றை நேர அட்டவணைக்குள் எப்படி முடிப்பது என்பதை எல்லாம் அவரிடம் இருந்துதான் இவன் கற்றுக்கொண்டான்.

Join / Telegram : @Tamil_Books_Library

ஒரு பக்கம் இவன் படித்துக்கொண்டிருந்த எம்.ஏ., தமிழ் இலக்கியத்துக்கான தேர்வு நெருக்கடிகள். மறுபக்கம் 'பரமபதம்' தொடருக்கான காட்சி விவரணைகள் என இரண்டும் சேர்ந்து இவனை விரட்டிக்கொண்டே இருக்க, ஒரே சமயத்தில் இரண்டு குதிரைகளில் பயணிக்கும் வலியை மீண்டும் உணர்ந்தான்.

ஒரு வெயில் நாள் காலையில் (அது மழை நாளாகவும் இருக்கலாம்) இவன் பி.கே.பி-யிடம், "சார்.... நான் வேலையைவிட்டு நிக்கலாம்னு இருக்கேன். எக்ஸாம் வருது. படிக்கணும்" என்றான். இவன் திடீரென்று விலகுவது அவருக்கு வருத்தமாக இருந்தும், "பெஸ்ட் ஆஃப் லக்" என்றார்.

பின்னாட்களில், இவன் பாலுமகேந்திரா சாரிடம் உதவி இயக்குநராகப் பணியாற்றியபோது பி.கே.பி. எழுதிய இவனுக்கு மிகவும் பிடித்த நான்கைந்து சிறுகதைகளை டைரக்டரிடம் படிக்கக் கொடுத்தான். அவருக்கும் அந்தக் கதைகள் பிடித்துப்போக, பி.கே.பி-யை வரவழைத்து இயக்குநரிடம் அறிமுகப்படுத்தினான். அந்தக் கதைகள் அவர் இயக்கிய 'கதை நேரம்' தொடரில் ஒளிபரப்பானது.

இஷ்டப்பட்டு வேலையை விட்ட பின்பு, இவன் இரவு பகலாகப் படிக்கத் தொடங்கினான். கவிதைப் போட்டி, கதை விவாதம், மாலையில் அறிவுமதி அண்ணனின் அலுவலகத்தில் பாட்டுப் பயிற்சி என்றே இவன் நேரம் ஓடிக்கொண்டிருந்ததால், கம்பனும், வள்ளுவனும், தொல்காப்பியனும் இவனைவிட்டுத் தற்காலிகமாக விலகியிருந்தார்கள். ஏற்கெனவே இவன் எம்.ஏ., முதலாம் ஆண்டில் எந்தத் தேர்வும் எழுதவில்லை. திரும்பவும் அவர்களின் கைபிடித்து கவிதை வழி நடக்க, இவன் படாத பாடுபட்டான். தேர்வுகள் நெருங்கிக்கொண்டிருந்தன.

தமிழ்த் துறைத் தலைவர் தெ.ஞானசுந்தரம் இவனைப் பார்த்து அக்கறையுடன் கேட்டார், "கவிதை, கதைன்னு படிக்காம விட்டுட்ட... முதல் ஆண்டுக்கும் சேர்த்து மொத்தம் 10 பேப்பர். பாஸ் ஆயிடுவியா?"

"நிச்சயம் ஃபர்ஸ்ட் கிளாஸ்ல பாஸ் ஆவேன் சார்" என்று நம்பிக்கையுடன் பதில் சொன்னான். இவன் சொன்ன அந்த வார்த்தைகளை அப்படியே இவனால் காப்பாற்ற முடிய வில்லை. தேர்வு முடிவுகள் வெளிவந்தபோது ஃபர்ஸ்ட் கிளாஸுக்குப் பதிலாக கல்லூரியிலேயே முதல் மாணவனாக இவன் தேர்ச்சி பெற்றிருந்தான்.

Join / Telegram : @Tamil_Books_Library

27

# இவன் அவனாகும் அத்தியாயம்

*கீழைக்காட்டு வேம்பு கசந்தது, அம்மாவின் சோகம் கேட்டுத்தான்!*

*- கவிஞர் த.பழமலய் ('சனங்களின் கதை' தொகுப்பில் இருந்து)*

இந்தப் பையனைக் காப்பாற்றுங்கள். அவன் ஏன் இப்படி இருக்கிறான்? அவன் இன்னும் தன்னைச் சின்னப் பையனாகவே நினைத்துக்கொண்டிருக்கிறானா என்ன? அவனிடம் யாராவது போய், “நீ சிறுபிள்ளை இல்லை; உனக்கு வயதாகிவிட்டது” என்று தயவுசெய்து சொல்லாதீர்கள். அவனது பால்ய காலத்தைப் படம் வரைந்து காட்டி அந்த மாயக்கோட்டுக்குள் உங்களையும் இழுத்து விடுவான்.

பால்ய கால நினைவுகள் மிகவும் சிக்கலானவை. உண்மையில், கண்ணாடியைப் பார்க்கும்போதெல்லாம் நீங்கள் உங்கள் குழந்தைப் பருவத்தைத்தான் விரும்பிப் பார்க்கிறீர்கள் என்பது உங்களுக்கும் தெரியும். நீங்கள் கண்ணாடியைப் பார்க்கும்போது உங்களை மட்டுமா பார்க்கிறீர்கள்? தயவுசெய்து இதை வாசிப்பதை நிறுத்திவிட்டு அருகில் இருக்கும் கண்ணாடியில் உங்கள் பிம்பத்தை உற்றுப் பாருங்கள்.

பிம்பம் என்பது என்ன? அது நினைவுகளின் நிழற்கூடு. எந்த நினைவுகளும் அற்று உங்கள் பிம்பத்தை நீங்கள் கண்ணாடியில் பார்த்தீர்கள் என்றால், நீங்கள் அதிர்ஷ்டசாலி. அந்தப் பையனின் பால்ய வலையில் இருந்து நீங்கள் தப்பித்துவிட்டீர்கள். ஆனால் அப்படி எல்லாம் நீங்கள் தப்பிக்க முடியாது. ஏனென்றால், நீங்கள் அவனைக் காப்பாற்ற வந்திருக்கிறீர்கள், தப்பித்து ஓட அல்ல. அவனுக்கு இருக்கும் முதல் பிரச்னையே, அவன் எதற்கெடுத்தாலும் எளிதில் உணர்ச்சிவசப்பட்டுவிடுகிறான். கன்னங்களில் நீர்க்கோடு வந்து விழுகிறது.

Join / Telegram : @Tamil_Books_Library



அவன் எதற்கு அழுகிறான் என்ற காரணத்தை நீங்கள் அவ்வளவு சுலபமாகக் கண்டுபிடித்துவிட முடியாது. அதுபோலவே அவன் எதற்குச் சிரிக்கிறான் என்பதையும். முதல்முறையாக அவன் தாய் இறந்தபோது, அந்த வலி தெரியாமல் அழுதான். அதற்குப் பிறகு அவன் ஸ்கேல், ரப்பர், பென்சில், நெல்லிக்காய் சேர்த்து வைத்திருந்த ஜாமென்ட்ரி பாக்ஸ் தொலைந்தபோது தெரிந்து அழுதான். ஆசையாக வளர்த்த நாய்க்குட்டி இறந்ததற்கு அழுததையும், புத்தகத்தில் மறைத்துவைத்த மயில் இறகைப் போல் முதல் காதல் தொலைந்ததற்கு அழுததையும், கல்லூரியின் இறுதி நாளில் பிரியத்துக்குரிய நண்பர்களைப் பிரிந்ததற்கு அழுததையும், அவன் அழுகையின் கணக்கில் சேர்க்காதீர்கள். அது எல்லோருக்குமான அழுகை.

அவன் பிரச்னையே வேறு. பால்கனி ரோஜாச் செடி பட்டுப்போனால் அழுவான். அவன் பிள்ளை, இவன் கன்னத்தில் முத்தம் கொடுத்து, “நீங்கதான்ப்பா இந்த உலகத்திலேயே பெஸ்ட் அப்பா” என்று சொன்னால் அழுவான். இப்படித்தான் சில மாதங்களுக்கு முன்பு மறைந்த இயக்குநர் இராசுமதுரவனின் ‘மாயாண்டி

Join / Telegram : @Tamil_Books_Library

குடும்பத்தார்' திரைப்படத்தை ஏதோ ஒரு தொலைக்காட்சியில் பார்த்து விட்டு அவன் அழுதுகொண்டே இருந்தான். "இந்தப் படத்தைப் பார்க்காதீங்க. அழுவீங்கனு சொன்னேன்ல" என்று மனைவி முறைத்ததும், அவன் கண்ணீரைக் கட்டுப்படுத்திக்கொண்டான்.

இப்படி... பல படங்களைப் பார்த்து அழுவதும், அவன் மனைவி முறைப்பதும் அவர்களுக்கு வாடிக்கை. ஊரின் டென்ட் கொட்டாயில் மணல் குவித்து அமர்ந்து படம் பார்க்கையில் அத்தைகளுடனும், பக்கத்து வீட்டு அக்காக்களுடனும் அழுத அனுபவங்களை அவன் இன்னும் நெஞ்சில் சேர்த்து வைத்திருக்கிறான். அவன் தகப்பன் இறந்தபோது அழுத கதை தனிக் கதை. அது தீராக் கதை.

**ஆ**ண் பிள்ளைகள் அழக் கூடாது என்று யாரும் அவனுக்கு அறிவுரை சொல்லிவிடாதீர்கள். ஏனென்றால், எளிதில் உணர்ச்சிவசப்படக்கூடிய அவன் கோபப்படக் கூடியவனாகவும் இருக்கிறான்.

"கண்ணீரில் ஆண்பால், பெண்பால் என்று ஒன்று உண்டா?" என்று கிறுக்குத்தனமாகக் கேட்டு உங்கள் மேல் எரிந்து விழுவான்.

ஆண்கள் அழும் தருணங்களைப் பட்டியலிட்டுச் சொல்வான். 'ஆண், பெண் என்று எல்லாக் குழந்தைகளுமே பூமிக்கு வருகிறபோது அழுதுகொண்டேதான் வருகின்றன. அது புரியாத முட்டாள் உலகம், அவர்களைச் சிரித்துக் கொண்டே வரவேற்கிறது' என்று தத்துவம் பேசுவான். 'ஷாஜகானின் புன்னகையை யாரும் கணக்கில் எடுத்துக்கொள்ளவில்லை. ஷாஜகானின் கண்ணீர்த்துளிகள் தான் வரலாற்றில் தாஜ்மகாலானது' என்று கவிதை பேசுவான்.

அவனிடம் கவனமாக இருங்கள். உங்கள் சகோதரியோ, மகளோ, திருமணமாகி உங்களைவிட்டுப் பிரிந்த தருணத்தில், மொட்டைமாடித் தனிமையிலோ, தோட்டத்து மாமரத்தின் அடியிலோ மௌனமாகக் கதறி அழுத உங்கள் கண்ணீர்த் துளிகளை, அவன் கண்ணாடியாக்கி உங்கள் முன் காட்டுவான்.

இது சம்பந்தமாக அவன் இன்னொரு கவிதை சொல்வான். அதைக் கேட்டால் நீங்கள் மீண்டும் அழுவீர்கள். எழுத்தாளர் அம்பை மொழிபெயர்த்த 'சந்தால்' பழங்குடி இனப்பெண் எழுதிய கவிதை அது. அந்தக் கவிதையில் ஒரு பெண் தனக்கு எப்படிப்பட்ட மாப்பிள்ளை வேண்டும் என்று தன் தகப்பனிடம் சொல்கிறாள்:

அப்பா,

உன் ஆடுகளை விற்றுத்தான்

Join / Telegram : @Tamil_Books_Library

*நீ என்னைப் பார்க்க வர முடியும்*
*என்ற தொலைதூரத்தில்*
*என்னைக் கட்டிவைக்காதே!*

*மனிதர்கள் வாழாமல்*
*கடவுள்கள் மட்டும் வாழும் இடத்தில்*
*மணம் ஏற்பாடு செய்யாதே!*

*காடுகள் ஆறுகள் மலைகள் இல்லா ஊரில்*
*செய்யாதே என் திருமணத்தை!*

*நிச்சயமாக*
*எண்ணங்களைவிட வேகமாய்*
*கார்கள் பறக்கும் இடத்தில்*
*உயர் கட்டடங்களும் பெரிய கடைகளும் உள்ள இடத்தில்*
*வேண்டாம்!*

*கோழி கூவி பொழுது புலராத*
*முற்றமில்லாத வீட்டில்*
*கொல்லைப்புறத்திலிருந்து சூரியன் மலைகளில்*
*அஸ்தமிப்பதைப் பார்க்க முடியாத வீட்டில்*
*மாப்பிள்ளை பார்க்காதே!*

*இதுவரை ஒரு மரம்கூட நடாத,*
*பயிர் ஊன்றாத,*
*மற்றவர்களின் சுமையைத் தூக்காத,*
*'கை' என்ற வார்த்தையைக்கூட எழுதத் தெரியாதவன்*
*கையில் என்னை ஒப்படைக்காதே!*

*எனக்குத் திருமணம் செய்ய வேண்டுமென்றால்*
*நீ காலையில் வந்து அஸ்தமன நேரத்தில்*
*நடந்தே திரும்பக்கூடிய இடத்தில் செய்து வை!*

Join / Telegram : @Tamil_Books_Library

இங்கே நான் ஆற்றங்கரையில் அழுதால்
அக்கரையில் உன் காதில் கேட்டு
நீ வர வேண்டும்!'



கவிதையைப் படிக்கையில் கனத்த மௌனம் கண்ணீர்த் துளியாக விழியோரம் திரள்கிறதா? உண்மையில் ஆண்களின் கண்ணீரும் உயர்வானது. அது பெண்களுக்காகச் சிந்தப்படும் எனில், அதி உயர்வானது.

ஒவ்வொரு அடுக்கடை கம்மல்களிலும்
உலர்ந்துகொண்டிருக்கிறது
ப்ரியயில்லாமல் கழட்டிக்கொடுத்த
ஒரு பெண்ணின் கண்ணீர்த் துளி'

-என்று அவன் எப்போதோ எழுதிய கவிதையைப் போலவே அவனது நெஞ்சிலும் ஏராளமான கண்ணீர்த் துளிகள் உலர்ந்துகொண்டிருக்கின்றன.

அந்தப் பையனைக் காப்பாற்றுங்கள். அவன் ஏன் இப்படி இருக்கிறான். அவன் இன்றும் தன்னைச் சின்னப் பையனாகவே நினைத்துக் கொண்டிருக்கிறானா என்ன? அவனிடம் போய் யாராவது “நீ சிறு பிள்ளை இல்லை. உனக்கு வயதாகிவிட்டது” என்று தயவுசெய்து சொல்லாதீர்கள். அவனது பால்ய காலத்தைப் படம் வரைந்து காட்டி அந்த மாயக்கோட்டுக்குள் உங்களையும் இழுத்துவிடுவான்!

Join / Telegram : @Tamil_Books_Library

28

## பட்டாம்பூச்சி விற்ற கதை

ஒரு தேர் சக்கரத்தின் அளவு பூர்ண சந்திரன், இன்று ஒரு வீட்டுக் கூரையின் மேல் உதயமானான். தீப்பிடித்துவிட்டதோ என்று நினைத்தேன்!

- தி.க.சிவசங்கரன்
('தி.க.சி-யின் நாட்குறிப்புகள்' நூலிலிருந்து...)

‘வீட்டைக் கட்டிப்பார்... கல்யாணம் பண்ணிப்பார்' என்று சொல்வார்கள். அந்தப் பழமொழியில் பின் இணைப்பாக ‘கவிதைப் புத்தகம் வெளியிட்டுப் பார்' என்பதையும் சேர்த்துக்கொள்ள வேண்டும். இன்று, இவனுடைய கவிதைப் புத்தகங்களை வெளியிட நிறைய பதிப்பகங்கள் இவனை அணுகுகின்றன. முன்புக்கும் முன்பு இவன் ஏறி இறங்காத பதிப்பகங்கள் இல்லை.

“கவிதைப் புத்தகம் வெளியிடுவதைவிட ரெண்டு கழுதை வாங்கி நிறுத்துனா, புத்தக மூட்டையையாவது சுமக்கும். இதுல எல்லாம் லாபம் இல்லே தம்பி; பேசாம கவிதை எழுதுறதை விட்டுட்டு சமையல் குறிப்பு, ஜோதிடக் குறிப்பு, மருத்துவக் குறிப்புனு எழுதிட்டு வாங்க. தாராளமா நம்ம பதிப்பகத்திலேயே வெளியிடலாம்” என்று ஒரு பதிப்பாளர், முகத்தில் அறைந்ததுபோல் சொன்னார்.

வெந்நீர் தயாரிப்பதைத் தவிர, இவனுக்கு வேறு எந்தச் சமையலும் தெரியாது. இவன் கட்டம் வரைந்தால் அது வட்டமாகவும், வட்டம் வரைந்தால் அது சதுரமாகவும் மாறிவிடுவதால் ஜோதிடக் குறிப்பைத் தவிர்த்துவிட்டான். மருத்துவக் குறிப்புகள் என்று தலைப்பிட்டு அடிக்கோடிட்ட போது அறையெங்கும் மருந்து வாசம் கசிவதைக் கண்டு

Join / Telegram : @Tamil_Books_Library

மிரண்டுபோய் புத்தகம் விற்காவிட்டாலும் பரவாயில்லை என்று மீண்டும் கவிதைக்கே திரும்பினான்.

இவன் 10-ம் வகுப்புப் படிக்கும்போது அதுவரை எழுதிய கவிதைகளைத் தொகுத்து 'தூசிகள்' எனும் தலைப்பில் புத்தகமாக வெளியிடும் ஆசை வந்தது. அது ஆசை அல்ல, பேராசை என்று ஒவ்வொரு பதிப்பகமும் இவனுக்கு நிரூபித்தன. ஏழு கடல் தாண்டி, ஏழு மலை தாண்டி, பச்சைக் கிளியின் கழுத்து சிமிழுக்குள் இவனுக்கான பணப்பையைப் பதிப்பாளர்கள் தொலைத்துவிட்டிருந்தனர்.

இன்று கவிதைப் புத்தகங்கள் ஓரளவுக்கு விற்கின்றன. கவிதைப் புத்தகங்களை வெளியிட, நிறைய பதிப்பகங்கள் உற்சாகமாக முன்வருகின்றன. 80-களில், பிரபலம் அல்லாதவர் கவிதைத் தொகுப்பை வெளியிடுவது தற்கொலைக்குச் சமம்.

பொண்டாட்டி, பிள்ளைகளின் நகைகளை அடகுவைத்து, ஆடு-மாடுகளை விற்று, வட்டிக்கு வாங்கி... என நிறைய கவிஞர்கள் தங்கள் முதல் தொகுப்பைச் சொந்தமாக வெளியிட்டு, நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் கொடுத்தது போக, விற்காத புத்தகங்களை, கட்டுக்கட்டாக வீட்டில் அடுக்கிவைத்திருப்பதை இவன் அருகில் இருந்து பார்த்திருக்கிறான்.



Join / Telegram : @Tamil_Books_Library

ஆசை யாரை விட்டது? இவன் அப்பாவிடம் நச்சரிக்கத் தொடங்க, அவர் வட்டிக்குக் கடன் வாங்கி, நகைகளை அடகுவைத்து ‘தூசிகள்’ என்ற இவன் முதல் கவிதைத் தொகுப்பை அச்சிட்டு, காஞ்சி இலக்கிய வட்டம் மூலமாக வெளியீட்டு விழாவும் நடத்தினார். உண்மையில் அந்தப் புத்தகம்தான் இவனுக்குப் பேர் வாங்கிக் கொடுத்தது.

அப்போது எல்லாம் இவன் ‘காஞ்சி. நா.முத்துக்குமரன்’ என்ற பெயரில் எழுதுவான். உள்ளங்கை அளவுக்குச் சிறியதாக இருந்த இவன் முதல் புத்தகத்தில், இவ்வளவு நீளமான பெயரை அட்டையில் வைக்க இடம் இல்லை என்று அச்சுக்கோப்பவர் இவன் பெயரை நா.முத்துக்குமார் என்று சுருக்கி இருந்தார். இப்படியாக அந்தப் புத்தகம் இவனுக்குப் பேர் வாங்கிக் கொடுத்துவிட்டு, நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் அன்பளிப்பாகக் கொடுத்தது போக கட்டுக்கட்டாக வீட்டின் பரண் மேல் கிடந்தது. உண்மையில் தூசிகளின் இருப்பிடம் பரண்கள்தானே!



Join / Telegram : @Tamil_Books_Library

**த**ன் முயற்சியில் சற்றும் மனம் தளராத விக்கிரமாதித்தனைப் போல பச்சையப்பன் கல்லூரியில் எம்.ஏ., முடித்த பிறகு, மீண்டும் இவன் இரண்டாவது கவிதைத் தொகுப்பை வெளியிட நினைத்தான். எழுத்தாளர் சுஜாதா இவனது 'தூர்' கவிதையை வாசித்த பிறகு, பரவலாகப் பல பத்திரிகைகளில் இவனது கவிதைகள் வெளிவந்து கவனிக்கப் பட்டன. அவற்றுக்கு எல்லாம் 'பட்டாம்பூச்சி விற்பவன்' என்ற தலைப்பிட்டு ஒரு சில பதிப்பங்களை அணுகினான். காலம், அப்போது முன்னேறியிருந்ததால் கவிதைகளை விட்டுவிட்டு 'கணிப்பொறி கற்பது எப்படி?' என்று எழுதித் தரச் சொன்னார்கள். எலிப்பொறியின் தொழில்நுட்பம்கூடத் தெரியாத இவன், 'கணிப்பொறியை எப்படிக் கற்றுத்தரப் போகிறோம்?' என்று மலைத்துப்போனான்.

"கவலைப்படாதே தம்பி, என்னுடைய 'சாரல்' பதிப்பகம் மூலமாக உன் புத்தகத்தை வெளியிடுகிறேன். கொஞ்சம் காத்திரு" என்று அறிவுமதி அண்ணன் ஆறுதல் சொன்னார். அவரது நிதிநிலைமையும் அப்போது மோசமாகத்தான் இருந்தது.

அறிவுமதி அண்ணன் கொஞ்சம் பணம் கொடுக்க, கவிஞரும் திரைப்படப் பாடலாசிரியருமான நந்தலாலா, "பேப்பர் வாங்கும் செலவை நான் பார்த்துக்கொள்கிறேன்" என்று சொல்ல, அறிவுமதி அண்ணன் நண்பரும், இவன் கவிதைகளின் ரசிகருமான, 'பூவுலகின் நண்பர்கள்' தேவநேயன், இவனை தன் பைக்கில் அமரவைத்து அடகுக் கடைக்கு அழைத்துச் சென்று கழுத்துச் சங்கிலியைக் கழட்டிக் கொடுக்க, கல்லூரி கவியரங்கத் தோழன் தமீம் அன்சாரி தன் சொந்த அச்சகத்தில் கடனுக்கு அச்சடித்துக் கொடுக்க, 'பட்டாம்பூச்சி விற்பவன்' புத்தகம் வெளியானது.

'சமர்ப்பணம், புத்தகம் வெளியிட முடியாமல் தவிக்கும் சக கவிஞர்களுக்கு...' என்று அதன் முதல் பதிப்பில் இவன் வலியுடன் குறிப்பிட்டிருந்தான்.

**ஒ**ரு பைசா செலவு செய்யாமல், 'பட்டாம்பூச்சி விற்பவன்' வெளியீட்டு விழா வெகு விமரிசையாக நடந்தது. அதற்குக் காரணம், இவனது குரு பாலுமகேந்திரா. "இந்தப் புத்தகத்தை பாரதிராஜா வெளியிட்டால் நன்றாக இருக்கும்" என்று சொல்லி இயக்குநர் இமயம் பாரதிராஜா அலுவலகத்துக்கு அழைத்துச் சென்று இவனை அறிமுகப்படுத்த, "பாலு... அன்னைக்கு 'தூர்' கவிதையைப் படிச்சப்போ, 'யார் இந்த முத்துக்குமார்?'னு விசாரிச்சேன். கண்டிப்பா நான் வந்து வெளியிடுறேன். இந்த வெளியீட்டு விழாவுக்கான எல்லா செலவையும் நானே பார்த்துக்கிறேன்" என்று இயக்குநர் பாரதிராஜா இவனை ஆச்சரியங்களுக்குள் தள்ளினார்.

Join / Telegram : @Tamil_Books_Library

*புத்தகத்தை வெளியிட்டு, இவன் கவிதைகளைப் பற்றி, "எங்கள் ஊர்ப் பக்கங்களில் ஓலைச்சுவடியில் நூலை நுழைத்து ஜோதிடம் பார்ப்பார்கள். சிலருக்கு நல்லது வரும்; சிலருக்கு கெட்டது வரும், இந்தப் புத்தகத்தில் கண்ணை மூடிக்கொண்டு எந்தப் பக்கத்தைப் பிரித்தாலும் நல்ல கவிதைகள்தான் வரும். அதிலும் அக்கா-தங்கை உறவைப் பற்றி ஒரு கவிதையில் படிக்கும்போது, எனக்கு எங்க அக்கா ஞாபகம் வந்திருச்சு" என்று கண் கலங்கி அவர் பேசியதை இவனால் மறக்க முடியாது.*

*புத்தகத்தின் பிரதியைப் பெற, மேடைக்கு வந்த இவன் அம்மாவைப் பெற்ற ஆயா, பாரதிராஜாவிடம் "எம் பேரன்தாங்க, பத்திரமாப் பார்த்துக்கங்க" என்று சொல்ல, "இந்தக் கவிஞனின் பாட்டி என்னைக் கண்கலங்க வைத்து விட்டாள். இதுதான் நம் தமிழ் மண்ணின் பாசம்" என்று மேலும் உணர்ச்சிவசப்பட்டார்.*

*எல்லாவற்றுக்கும் மேலாக, மேடையிலேயே "எனக்கு* 200 *புத்தகங்கள் வேணும்" என்று அதற்கான காசோலையை பாரதிராஜா கொடுத்தபோது, இவன் மேலும் ஆச்சரியப் பட்டான். அன்பின் அடைமழையை சின்னஞ்சிறு குடை எப்படித் தாங்கும்? அதற்கு அடுத்த வாரத்துக்குள் அவரது அலுவலகத்துக்கு வந்த அத்தனை இயக்குநர்களுக்கும் இவன் புத்தகத்தில் கையெழுத்திட்டு இயக்குநர் பாரதிராஜா கொடுக்க... இவன் கவிதை, திரையுலகில் உலா வரத் தொடங்கியது.*

*இன்று வரை விற்பனையில் சாதனை படைத்துக் கொண்டிருக்கும் அந்தப் புத்தகத்தின் ஆணிவேருக்கு இத்தனை கரங்கள் நீர் ஊற்றியிருக்கின்றன.*

Join / Telegram : @Tamil_Books_Library

29

# அவையிடத்து முந்தியிருப்பச் செயல்

*ரத்தமும் சதையும் அல்ல... இதயம்தான்*

*எங்களை தந்தை மகனாக இணைத்தது!*

*- எழுத்தாளர் ஓரான் பாமுக்*

**எம்**.ஏ., முடித்ததும், பச்சையப்பன் கல்லூரியிலேயே இவன் எம்.ஃபில்., சேர்ந்தான். சேர்ந்த ஒரு மாதத்திலேயே இவன் எப்போதோ எழுதியிருந்த தேர்வுக்கான முடிவு வந்திருந்தது. ‘யுனிவர்சிட்டி கிரான்ட்ஸ் கமிஷன்’ எனப்படும் யு.ஜி.சி. தேர்வில் இவன் ஃபெல்லோஷிப்புடன் தேர்வு பெற்றிருந்தான். இவன் பிஹெச்.டி., ஆய்வு செய்வதற்கு, ஐந்து வருடங்களுக்கு யு.ஜி.சி. ஸ்காலர்ஷிப் கொடுத்திருந்தது.

முதல் மூன்று வருடங்களுக்கு ஜூனியர் ரிசர்ச் ஃபெல்லோஷிப்பாக மாதம் 5,400 ரூபாய், கடைசி இரண்டு வருடங்களுக்கு சீனியர் ரிசர்ச் ஃபெல்லோஷிப்பாக மாதம் 6,000 ரூபாய் என இவனுக்கு ஸ்காலர்ஷிப் கிடைத்தது. சென்னையில் கால் ஊன்றவும், கனவுகளின் கரம் பிடிக்கவும் இவன் கற்ற கல்வி மீண்டும் இவனுக்குக் கை கொடுத்தது.

பச்சையப்பன் கல்லூரியில் பி.ஹெச்டி., செய்வதைவிட, சென்னைப் பல்கலைக்கழகத்தில் செய்தால் ஸ்காலர்ஷிப் கிடைப்பது இன்னும் சுலபமாக இருக்கும் என்று தமிழ்த் துறைத் தலைவர் தெ.ஞானசுந்தரம் இவனை வழிநடத்தினார். மேலும், சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் மொழித் துறைத் தலைவர் டாக்டர் வ.ஜெயதேவன் அவர்களிடம் தரச் சொல்லி, சிபாரிசு கடிதம் ஒன்றையும் கொடுத்து அனுப்பி வைத்தார்.

இவனுடைய கவிதைத் தொகுப்புகளை வாசித்துப் பார்த்த வ.ஜெயதேவன், அவரது மேற்பார்வையிலேயே இவனை பிஹெச்.டி,

Join / Telegram : @Tamil_Books_Library

செய்யச் சொன்னார். ஆய்வுக்கான புத்தகங்கள் தொடங்கி குண்டூசி வாங்குவது வரை யு.ஜி.சி இவனுக்கு நிதி உதவி அளித்தது.

**‘த**மிழ்த் திரைப்படப் பாடல்கள் ஓர் ஆய்வு’ என்ற தலைப்பைப் பதிவுசெய்து, ஆய்வு செய்யத் தொடங்கினான். பேசும்படம் காலம் தொடங்கி, 2000 ஆண்டு வரையிலான பாடல்களை ஆய்வுக்கு எடுத்துக்கொண்டான். ஊர் ஊராகச் சென்று பழைய பாடல் புத்தகங்களைச் சேகரிக்கத் தொடங்கினான். மூட்டை மூட்டையாக இவன் அறையில் பாட்டுப் புத்தகங்கள் குவிந்தன. தமிழின் முதல் பாடலாசிரியர் மதுரகவி பாஸ்கரதாஸ் தொடங்கி கவிஞர் பழநிபாரதி வரை இவன் ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட காலகட்டத்தில் பாடல்கள் எழுதியிருந்தனர்.



Join / Telegram : @Tamil_Books_Library

தேசபக்திக் காலகட்டம், புராணப் படங்கள் மிகுந்த தெய்வ பக்திக் காலகட்டம், சமூகப் படங்கள் காலகட்டம்... என ஒவ்வொரு காலகட்டத்திலும் எழுதப்பட்ட பாடல்களையும் பாடலாசிரியர்களையும் அவதானிக்கத் தொடங்கினான். எத்தனை எத்தனை கவிஞர்கள்! அவர்களின் பாடல் வரிகளில்தான் எத்தனை எத்தனை வண்ணங்கள்! குடும்பம், இயற்கை, தத்துவம், காதல்... என பல்வேறு குழல்களில், 'பாடல்' எனும் பேராறு இவனைக் கை நீட்டி அழைத்தது. இவன் அதனுள்ளே குதித்து மூழ்கிப்போனான்.

சென்னைப் பல்கலைக்கழகத்தின் தமிழ் மொழித் துறை கட்டடம் கடற்கரையைப் பார்த்தபடி இருக்கும். அதுவரையில் மாலையில் மட்டுமே பார்த்து ரசித்துக்கொண்டிருந்த கடலை, பல்கலைக்கழகத்தில் சேர்ந்த பிறகு காலையிலும் இவன் தரிசிக்கத் தொடங்கினான்.

கடலுக்குத்தான், எத்தனை முகங்கள்; எத்தனை வடிவங்கள்! காலையில் பொன் அள்ளி இறைப்பதும், நண்பகலில் கானல் நீரில் தகிப்பதும், பிற்பகலில் மௌனங்களை இறைச்சலாக மொழிபெயர்ப்பதுமாக கடலை, அருகில் இருந்து அறிந்து கொண்ட காலங்கள் அவை.

தமிழ் மொழித் துறைத் தலைவரும், இவனது ஆய்வு வழிகாட்டியுமான வ.ஜெயதேவன், தமிழகத்தின் மிகச் சிறந்த தமிழ் அறிஞர்களுள் ஒருவர். அகராதி இயல் துறையில் பெரும் புலமைகொண்டவர். சென்னைப் பல்கலைக் கழகத்துக்காக நிறைய அகராதிகளைப் புதுப்பித்திருக்கிறார். அவர், இவன் ஆய்வுக்கு மட்டுமல்ல; இவன் ஆளுமைக்கும் வழிகாட்டியாக இருந்தார்.

இவன் இயல்பாகவே கூச்ச சுபாவம் கொண்டவன். சிறு வயதில் இருந்தே தாய் இல்லாமல் தனியே வளர்ந்ததால் தயங்கித் தயங்கித்தான் பேசுவான். பல்கலைக்கழகத்தில் சேர்ந்த முதல் நாளே, இவனது தயக்கத்தை தெரிந்துகொண்ட வ.ஜெயதேவன், இவனைத் தனியாக அழைத்து, "தம்பி. நாளையில இருந்து எம்.ஏ., முதலாம் ஆண்டு தமிழ் மாணவர்களுக்கு, நீங்கள் 'படைப்புக் கலை' பற்றி வகுப்பு எடுக்கிறீங்க. வகுப்பறையில் மாணவர்களோட பேசப் பேச உங்க கூச்சம் காணாமல் போயிடும். உங்களால் குறைந்தபட்சம் 10 மாணவர்கள் கவிஞர்களா மாறினா, அது பல்கலைக் கழகத்துக்குப் பெருமைதானே!" என்று உற்சாகப்படுத்தினார்.

10 மாணவர்கள் இல்லை... இவன் அங்கு வகுப்பு எடுத்த ஐந்து ஆண்டுகளில் 60 மாணவர்கள், கவிஞர்கள் ஆனார்கள். முதலில் புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றி வகுப்பு எடுத்தான். எழுத்துக் காலகட்டம், வானம்பாடி காலகட்டம், கவியரங்கு காலகட்டம் என ஒவ்வொரு காலகட்டத்தையும் உதாரணங்களோடு விளக்கினான்.

Join / Telegram : @Tamil_Books_Library

ரியலிசம், நியோ-ரியலிசம், ஸ்ட்ரெக்சரலிசம், சர்ரியலிசம், போஸ்ட்மார்டனிசம், மேஜிக்கல் ரியலிசம்... என ஒவ்வொரு இசங்களையும் வகுப்பில் விளக்கினான். அதற்கான உதாரணக் கவிதைகளை வாசித்துக்காட்ட மாணவர்கள் உற்சாகமானார்கள். ஒவ்வொரு வகுப்பிலும் ஒரு கவிஞர் என எடுத்துக்கொண்டு, அந்தக் கவிஞர் பற்றிய குறிப்புகளைச் சொல்லி, அவர் எழுதிய அத்தனை கவிதைகளையும் வாசித்துக் காட்டுவான். இப்படி நிறைய நவீனக் கவிஞர்களை மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தியிருக்கிறான்.

வாரத்தில் ஒரு நாள் கவிதை நேரம். இவன் ஒரு தலைப்பு கொடுப்பான். அந்தத் தலைப்பில் மாணவர்கள் கவிதை எழுத வேண்டும். அப்படி ஒருநாள் 'கயிறு' என்று தலைப்புக் கொடுத்ததும், ஒரு மாணவன் எழுதிய கவிதையை இவனால் மறக்க முடியாது. அந்தக் கவிதை...

பின்னேறுவதால்

முன்னேறுகிறார்கள்

கயிறு திரிப்பவர்கள்!

ஒரு நாள் இவன் தமிழ்த் துறையில் இருந்து வகுப்பு எடுக்கக் கிளம்பிக்கொண்டிருந்தபோது எதிரே இவன் அப்பா வந்துகொண்டிருந்தார். "இங்க என்னப்பா பண்றிங்க?" என்றான் இவன். "சும்மா ஒரு மீட்டிங் விஷயமா மெட்ராஸ் வந்தேன். நீ கிளாஸ் எடுக்கிறேன்னு கேள்விப்பட்டேன். எப்படி நடத்துறேனு பார்க்க வேண்டாமா?" என்று அவர் சிரித்தபடி சொல்ல, இவன் கை-கால்கள் நடுங்க ஆரம்பித்தன. அதைக் கவனித்த இவன் தந்தை, "சும்மா சொன்னேன்டா. பயப்படாத, நீ கிளாஸ் முடிச்சிட்டு வா. நான் லைப்ரரியில் வெயிட் பண்றேன்' என்று சிரித்தபடி கடந்து போனார்.

காலச்சக்கரம் பின்னோக்கி சுழல, இவன் மீண்டும் சிறுவனானான். மூன்றாம் வகுப்புப் படிக்கையில் டைஃபாய்டு காய்ச்சல் காரணமாக பள்ளிக்கு ஒரு வாரம் லீவு போட்டு விட்டு இவன் வீட்டில் இருந்த காலம். காய்ச்சல்விட்டு உடல் ஓரளவுக்குத் தேறிக்கொண்டிருந்தது. ஆசிரியரான இவனது தந்தை அவரது பள்ளிக்கூடத்துக்குக் கிளம்ப, "இன்னிக்கு நானும் உங்ககூட உங்க ஸ்கூலுக்கு வரப் போறேன்' என்று அடம்பிடித்து சைக்கிளில் ஏறி அமர்ந்தான்.

அப்பாவின் பள்ளிக்கூடம், இவன் பள்ளிக்கூடத்தைவிடச் சின்னதாக் இருந்தது. வாசலில் நின்றிருந்த செங்கொன்றை மரத்தில் இருந்து உதிர்ந்துகிடந்த பூக்களும், பள்ளியின் பின்பக்கம் விரிந்துகிடந்த


Join / Telegram : @Tamil_Books_Library

பனைமரக் காடுகளுமாக அப்பாவின் பள்ளிக்கூடம் அப்பாவைப் போலவே அழகாகவும் நெருக்கமாகவும் இருந்தது.

‘தமிழ் ஐயாவோட பையன்டா!’ என்று மாணவர்கள் இவனைச் சூழ்ந்துகொண்டார்கள். அப்பா எல்லோரையும் அதட்டிவிட்டு, வகுப்பு எடுக்கத் தொடங்கினார். முன் பெஞ்சில் அமர்ந்து அவரையே பார்த்துக்கொண்டிருந்தான். கை விரல்களிலும், மூக்கின் நுனியிலும், காதோரத்து முடிகளிலும் சாக்பீஸ் துகள் படிந்த அப்பா, இன்னும் இவனுக்கு நெருக்கமானார்.

காலச்சக்கரம் முன்னோக்கி சுழல, இவன் பல்கலைக் கழகத்து வகுப்பறைக்குள் நுழைந்தான். அப்பா, நூலகத்தில் காத்துக்கொண்டிருக்கிறார் என்ற பதற்றத்துடனே அன்றைய வகுப்பு முடிந்தது.

நூலகத்தில் இருந்த அப்பாவை, கேன்டீனுக்கு அழைத்துச் சென்று தேநீர் வாங்கிக் கொடுத்தான். “வாடா, கொஞ்சம் காலாற கடற்கரை வரைக்கும் நடந்துட்டு வரலாம்” என்றார் அப்பா. மதிய நேரத்துக் கடல் மதிய நேரத்து கடல் போலவே இருந்தது.



Join / Telegram : @Tamil_Books_Library

*எப்போது கடற்கரைக்குச் சென்றாலும்*

*குறிப்பிட்ட தூரத்துக்கு மேல்*

*சென்றதே இல்லை.*

*அலைகளிடம் பயம் இல்லை*

*பயம் அப்பாவிடம்தான்!*

என்று சிறு வயதில் இவன் எழுதிய கவிதை நினைவுக்கு வந்தது. இருவரும் முடிவிலா அலைகளில் நின்றார்கள். அப்பா வழக்கம் போல் இவன் கைகளைப் பிடித்துக் கொண்டார்.

திரும்பி வந்து பேருந்துக்காகக் காத்திருக்கையில், "நல்லாதான்டா கிளாஸ் எடுக்கிற" என்றார் அப்பா.

"நீங்க லைப்ரரியிலதானே இருந்தீங்க. நான் கிளாஸ் எடுத்ததை எப்ப பார்த்தீங்க?" என்றான் ஆச்சரியத்துடன்.

"நான் எங்கடா லைப்ரரிக்குப் போனேன். நான் வந்தா நீ டென்ஷன் ஆயிடுவேனு உன் கிளாஸ் ஜன்னலுக்குப் பின்னாடி மறைஞ்சு நின்னு பார்த்திட்டு இருந்தேன்" என்றார் அப்பா.

கை விரல்களிலும், மூக்கின் நுனியிலும், காதோரத்து முடிகளிலும் சாக்பீஸ் துகள் படிந்த இவன், அப்பாவுக்கு இன்னும் நெருக்கமாகி இருப்பான் என்று தோன்றியது!

Join / Telegram : @Tamil_Books_Library

# 30

## ஆனந்த யாழின் அவநாதம்

நிஜம்தான் தாங்க முடியாத பாரம். அந்தப் பாரத்தை இறக்கிவைக்க அல்ல, எவ்வளவு எடை என்று பார்த்துக் கொள்ளத்தான் இதை உங்களுக்கு எழுதுகிறேன். வெயிலில் உலர்த்துவது என்று ஆகிவிட்டது. எல்லா இடத்திலும்தானே வெயில் விழும். ஆனால், இங்கே மட்டும்தான் விழும் என்பது போல் ஒவ்வொருத்தரும் கொடியில் ஓர் இடத்தில் தொங்கப்போடுவது நமக்குப் பிடித்திருக்கிறது இல்லையா?

- எழுத்தாளர் வண்ணதாசன்
(‘ஒரு சிறு இசை’ தொகுப்பில் இருந்து)

**எ**ப்போதும் காற்றில் மிதக்கும் இறகாக இவன் தன்னை நினைத்துக்கொள்வான். காற்றில் மிதக்கும் இறகுக்கு, இலக்கும் இல்லை; எந்தவித முன் தீர்மானமும் இல்லை. இன்னும் சொல்லப்போனால், அதற்கென்று தனிப்பட்ட திசையும் இல்லை. காற்றின் திசையே அதன் திசை.

காற்றின் போக்கில் அலைந்து திரிவதில்தான் எத்தனை சுகம். தூரத்துக் கண்களுக்கு அந்த இறகு தரை இறங்குவதைப் போல் தென்பட்டாலும், மீண்டும் லயமான சிறு காற்றின் மோதலில் தத்தித்தாவி விண்ணில் அலைவதைப் போல் இவன் பயணம் ஓடிக்கொண்டிருந்தது.

Join / Telegram : @Tamil_Books_Library



பாலுமகேந்திரா, தமிழ்நாடு திரைப்படப் படைப்பாளிகள் சங்கத் தொடக்க விழாவில் இவனின் 'தூர்' கவிதையை வாசித்த சம்பவமும், பாரதிராஜா இவனது 'பட்டாம்பூச்சி விற்பவன்' கவிதைத் தொகுப்பை வெளியிட்டு நெகிழ்ச்சியாகப் பேசிய சம்பவமும் திரையுலகினர் மத்தியில் இவனை நேசமிக்கக் கவிஞனாக நெருக்கப்படுத்தியது. எல்லாவற்றுக்கும் மேலாக, அன்றைய காலகட்டத்தில் பணியாற்றிய அத்தனை உதவி இயக்குநர்களும் இவனைத் தங்களில் ஒருவனாக அடையாளம் கண்டார்கள்.

பாரதிராஜாவிடம் உதவி இயக்குநராகப் பணிபுரிந்த ஐந்துகோவிலான, பாலசேகரனிடம் உதவி இயக்குநராக இருந்த அஜயன் பாலா, அகத்தியனிடம் உதவி இயக்குநராக இருந்த வீரபாண்டியன்... எனப் பல நண்பர்கள் இவன் கவிதைகளை நெஞ்சில் சுமந்து தங்களுக்குத் தெரிந்த இயக்குநர்களிடம் இவன் பாடல் எழுத சிபாரிசு செய்தார்கள்.

அந்த நாட்களில் எத்தனையோ ஆச்சரியங்களை, எத்தனையோ அனுபவங்களை, எத்தனையோ இடர்ப் பாடுகளை இவன் சந்தித்தான். இவனின் கவிதைகளை வாசித்துவிட்டு, சிலர் இவனைப் பாடல் எழுத அழைப்பார்கள். ஒல்லியாக, கட்டம் போட்ட சட்டையுடன், இயல்பான கூச்சத்துடன் பேசும் இவனுடைய தோற்றத்தைப் பார்த்ததும்,

Join / Telegram : @Tamil_Books_Library

“கவிஞருக்கு எந்த ஊரு?” என்ற முதல் கேள்வி எழும்.

இவன், “காஞ்சிபுரம்” என்பான்.

“மதுரை, தஞ்சாவூரு, கோயம்புத்தூரு, நாகர்கோவில் பக்கம்தான் கவிஞர்கள் உருவாகியிருக்காங்க. காஞ்சிபுரத்துக்காரங்களுக்கு வாழ்க்கை அனுபவம் கம்மிதானே... என்ன சொல்றீங்க கவிஞர்?” என்று சீண்டுவார்கள்.

“தொண்டை மண்டலம் சான்றோர் உடைத்து என்ற பழமொழியை நீங்க கேள்விப்பட்டது இல்லையா சார்?” என்று இவன் புன்னகையோடு பதில் சொல்வான்.

“டியூன் இன்னும் ரெடியாகலை. அடுத்த வாரம் சொல்லி அனுப்புறோம்” என்ற பதிலுடன் உரையாடல் முடியும்.

இவன் தோற்றத்தில் இருந்த எளிமையே, இவனுடைய பலமாகவும் பலவீனமாகவும் அந்தக் காலத்தில் இருந்தது. இன்று வரை இவன் வரிகளிலும் வாழ்க்கையிலும் எளிமையையே கடைப்பிடித்து வருகிறான். அதற்குக் காரணம் இவன் அறிந்த மாமனிதர்கள் எளிமையாகவே வாழ்ந்து, எளிமையாகவே இறந்தும்போனதுதான்.

‘மக்களுக்குப் புரியாத வகையில் இலக்கியம் செய்கிறவன், அந்தப் படைப்பை திரைச்சீலை போர்த்தி மூடிவிடுகிறான். இயற்கை, மக்களுக்குத் தேவையான அனைத்தையும் எளிமையாகவே படைத்திருக்கிறது. மண் எளிது: விண் எளிது: காற்று எளிது: தீ எளிது!’ என்னும் மகாகவி பாரதியாரின் வார்த்தைகள்தான் இன்று வரை இவன் பாடல்களின் தாரக மந்திரம்.

அறிவுமதி அண்ணன் அலுவலகத்தில் பாட்டுப் பயிற்சியில் ஈடுபட்டிருந்த ஒருநாள், அறிவுமதி அண்ணன் இவனைத் தன் அறைக்கு அழைத்து, “தம்பி சீமான் தொலைபேசில இருக்கான். உங்கிட்ட பேசணுமாம்” என்று சொல்ல, இவன் தொலைபேசியை வாங்கி “ஹலோ” என்றான்.

“தம்பி, நான் இயக்குநர் சீமான் பேசறேன். தம்பி ஐந்துகோவிலான் உன்னோட ‘பட்டாம்பூச்சி விற்பவன்’ புத்தகத்தைக் கொடுத்தான். எங்கடா இருந்த இவ்வளவு நாளு? அண்ணன் இப்ப ‘வீர நடை’னு ஒரு படம் இயக்கிட்டு இருக்கேன். இன்னிக்குத்தான் பாடலுக்கான மெட்டு அமைச்சோம். நாளைக்குக் காலையில அலுவலகத்துக்கு வா. உன் முதல் பாடலை அண்ணன் படத்துக்கு எழுதிக் குடு” என்று உரிமையோடு சொல்லிவிட்டு தொலைபேசியை அவர் வைத்ததும், இவன் அன்பின் காற்றில் அலையும் இறகு ஆனான். இப்படித்தான் நண்பர்களே... இவனுடைய பாட்டுப் பயணம் மிக இயல்பாகத் தொடங்கியது.

Join / Telegram : @Tamil_Books_Library

*சீமான் அண்ணனை இவன் ஒரிரு முறை சந்தித்து இருக்கிறான். அப்போது அவர் ‘பாஞ்சாலங்குறிச்சி’ என்ற திரைப்படத்தை முடித்துவிட்டு ‘இனியவளே’ படத்தை இயக்கிக்கொண்டிருந்தார். அந்தப் படத்தில் கவிஞர் தாமரையைப் பாடலாசிரியராக அறிமுகப்படுத்தியிருந்தார்.*

*சீமான் அண்ணனிடம் இருந்து இப்படி உரிமையும் அன்பும் கலந்த அழைப்பை இவன் எதிர்பார்க்கவில்லை. அன்று இரவு முழுவதும் தூங்கவே இல்லை என்று இவன் பொய் சொல்ல விரும்பவில்லை. அண்ணனைச் சந்திக்கும் ஆவலில் அமைதியாக உறங்கிப்போனான்.*

*வழக்கமான சினிமா அலுவலகம் போல் இல்லாமல், சீமான் அண்ணனின் அலுவலகம், இவன் வீட்டைப் போலவே எளிமையாக இருந்தது. ஒரு பக்கம் நாட்டுக் கோழிகளை உறித்து, ராமநாதபுரக் கைப்பக்குவத்தில் உப்புக்கறி தயாராகிக்கொண்டிருக்க, மறுபக்கம் சுற்றிலும் தம்பிகள் புடைசூழ சீமான் அண்ணன் படம் பார்ப்பதைப் போலவே கதை சொல்லிக்கொண்டிருந்தார்.*

*இவனைப் பார்த்ததும், “என்ன… இப்படி எழுதிப்புட்ட? இவ்வளவு நேரம் உன் கவிதையைப் பத்தித்தான் பேசிட்டு இருந்தோம். முதல்ல சாப்புடு. அப்புறம் பாட்டுக்கான சூழல் சொல்றேன்” என்றார்.*

*கதாநாயகி அறிமுகப் பாடல் அது. பட்டியல் போடும் பாடல் உத்தி அப்போது பிரபலமாக இருந்ததால், தனக்குப் பிடித்தவற்றைக் கதாநாயகி பட்டியலிட வேண்டும். அதற்கடுத்த இரண்டு வாரங்களும் இவன் சீமான் அண்ணனை, பாடல் வரிகளுடன் அவரது வீட்டிலும் அலுவலகத்திலும் மாறி மாறிச் சந்தித்தான்.*

*எல்லோரும் செங்கல் அடுக்கி வீடு கட்டுவார்கள். சீமான் அண்ணனின் வீடு அன்பால் கட்டப்பட்டிருந்தது. கம்யூன் வாழ்க்கையைப் பற்றி இவன் கேள்விப்பட்டிருக்கிறான். உண்மையில் அதை அங்குதான் சந்தித்தான். சீமான் அண்ணனின் தம்பி ஜேம்ஸ், அவரிடம் பணியாற்றிய உதவி இயக்குநர்கள், பி.சி. ஸ்ரீராமிடம் பணியாற்றிய ஒளிப்பதிவாளர் செழியன் மற்றும் வேறு சில இயக்குநர்களிடம் பணியாற்றிய உதவி இயக்குநர்கள்… என 20-க்கும் மேற்பட்டவர்கள் அங்கு தங்கியிருந்தார்கள். காசு இருந்தால் சமையல் தடபுடலாக நடக்கும். இல்லாவிட்டால், கவிதைகளும் கதைகளும்தான் அவர்களை அடுத்த நாளை நோக்கி நம்பிக்கையுடன் அழைத்துச் செல்லும். அன்று தொடங்கி வெற்றிபெற்ற பாடலாசிரியராகி, இவனுக்கு என்று தனி அலுவலகம் ஒன்று அமையும் வரை, சீமான் அண்ணன் வீட்டில் இருந்துதான் பாடல்கள் எழுதிக்கொண்டிருந்தான். அந்தக் காலங்கள் மறக்க முடியாதவை.*

Join / Telegram : @Tamil_Books_Library

*சீமான் அண்ணனின் 'வீர நடை' படத்தில் இடம்பெற்ற இவனது முதல் பாடல் 'முத்துமுத்தாய்ப் பூத்திருக்கும் முல்லைப் பூவைப் புடிச்சிருக்கு...' என்று இவன் பெயருடனே தொடங்கும். அந்தப் பாடலில் இவன் பல உவமை, உருவகங்களைக் கையாண்டான். இன்று வரை தமிழ்த் திரைப்பாடல்களில் அதிக உவமை, உருவகங்கள் கொண்ட பாடல் அதுதான் என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.*

*அணுஅணுவாக அந்தப் பாடலின் வரிகளை ரசித்து சீமான் அண்ணன் தேர்ந்தெடுத்தார். "டேய்.... தம்பி பிரமாதமா எழுதி இருக்கான்டா. நூறு ரூவா அவனுக்குக் குடுடா" என்று சீமான் அண்ணன் சொல்ல, தயாரிப்பு நிர்வாகி நூறு ரூபாய் எடுத்துக் கொடுத்தார். "டேய்.... அதைவிட இந்த வரி சிறப்பா இருக்குடா. கணக்குப் பார்க்காம 500 ரூவா எடுத்துக் குடுடா" என்று சீமான் அண்ணன் அதட்ட, இவன் முதல் பாடலுக்குப் பெற்ற சன்மானம் அன்றைக்கு உச்சத்தில் இருந்த கவிஞர்கள் வாங்கிய தொகையைவிட அதிகமாக இருந்தது.*



Join / Telegram : @Tamil_Books_Library

பாடல் பதிவின்போது இவன் எழுதிய வரிகளைப் படித்துப் பார்த்த அந்தப் படத்தின் இசையமைப்பாளர் தேனிசைத் தென்றல் தேவா, “எங்க இருந்தாலும் இந்த ஆர்மோனியப் பெட்டிக்கு முன்னாடி வந்துதான் ஆகணும். திறமைக்குத் திரை போட முடியாது” என்று பரவசப்பட்டார்.

அந்தப் பாடலில் இவன் எழுதிய, ‘நட்சத்திரக் கால் பதிக்கும் வாத்துக் கூட்டம் புடிச்சிருக்கு’, ‘காதல் தோல்விதானோ யார் அறியக்கூடும்? ஆட்டுத்தாடி புடிச்சிருக்கு’, ‘மண்ணில் விழுந்தாலும் என்றும் உயிர் வாழும் மலையருவி புடிச்சிருக்கு’, ‘கைப்பிடி நீண்ட குடை போன்ற பனைமரம் புடிச்சிருக்கு’... எனப் பல வரிகளை அடுத்தடுத்து அவரிடம் இசையமைக்க வந்த பல இயக்குநர்களிடம் பாடிக்காட்டி, இவன் முதல் படம் வெளிவருவதற்கு முன்பே, கிட்டத்தட்ட 40 படங்களுக்கு மேல் பாடல்கள் எழுதவைத்தார் தேவா.

முதல் பாடலுக்குப் பிறகு இசைஞானி இளையராஜா தொடங்கி இசைப்புயல் ஏ.ஆர்.ரஹ்மான் வரை பாடல் எழுதிய அனுபவங்களை ‘கண் பேசும் வார்த்தைகள்’, ‘ஹிட் ஸாங்’ என இரண்டு தொகுப்புகளின் வழியாக இவன் பதிவு செய்திருக்கிறான்! வேடிக்கை பார்ப்பவனின் தொடர்ச்சியாக வாசகர்கள் அந்தப் புத்தகங்களை வாசித்துப் பார்க்கலாம்.

இவன் இந்தக் கட்டுரைகளில் என்ன வேடிக்கை பார்த்தான்? இவன் எழுதிய ஒரு கவிதைதான் நினைவுக்கு வருகிறது.

சுடலையிலே வேகும் வரை

சூத்திரம் இதுதான் கற்றுப்பார்!

உடலைவிட்டு வெளியேறி

உன்னை நீயே உற்றுப்பார்!

ஆனால், அப்படியெல்லாம் போகிறபோக்கில் வாழ்க்கையை வேடிக்கை பார்த்துவிட முடியுமா?

பனித்துளியின் நுனியில் பிரதிபலிக்கிறது சூரியன். இன்னும் கொஞ்ச நேரத்தில் பனித்துளி உருகிவிடும் என்பது சூரியனுக்குத் தெரியும். தான் கரைந்துவிடுவோம் என்பது பனித்துளிக்கும் தெரியும். ஆனாலும், சூரியனைச் சிறைப்பிடித்த அந்த ஒரு கணத்தின் பெருமிதமே பனித்துளியின் வாழ்க்கை!